அர்ப்பணம்...

காற்றில் கலந்த தேவச் செய்திகளை புத்தகமாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றோம். இப்புத்தகத்திற்கு ஓய்வு வேண்டாம். நீங்கள் படித்து முடித்தவுடன் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் கொடுத்து உதவிடுங்கள். கிறிஸ்துவின் வசனம் எல்லோரையும் சென்றடைய அது உதவியாக இருக்கும்.

மேலும் நீங்கள் கூடிவருகிற சபையில் ஒவ்வொரு வாரமும் நடைபெறும் வேதபாட வகுப்புகளில் 15 நிமிடங்கள் ஒதுக்கி இப்புத்தகத்தில் உள்ள ஒரு செய்தியை வாசித்து தியானம் செய்யுங்கள். அப்படிச்செய்யும்போது நீங்கள் ஒரு வருடத்தில் 52 செய்திகளையும் வாசித்து தியானம் செய்ய முடியும்.

கர்த்தருடைய செய்திகளை நாம் கேட்கும்போது காலமெல்லாம் சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்று அநுபவிக்கும் பாக்கியத்தைப் பெறுவோம்.

வேதம் சொல்கிறது: "இந்தத் தீக்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும் கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது" வெளிப்படுத்தல் 1:3.

தேவச் செய்திகள் அடங்கிய இப்புத்தகத்தை வாசியுங்கள், கேளுங்கள், அதைக் கைக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

ஆண்டவரின் பணியில்,
B.Arjunan & Glory

Order From

World Literature Publications
P.O.Box.5, Batlagundu -624 202, South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Phone:04543 263278 Mobile :9443558041

Sharon Print System, Madurai -2 Phone 99439-33357

ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2009

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

கிறிஸ்துவின் வசனம்

ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்

2009

செய்தியாளர்
B.அர்ஜூனன்

Published by
The Word of Christ

Vol.4

THE WORD OF CHRIST

God's Message of Radio & Television is
Presented by
Church of Christ

2009

Preacher
B.ARJUNAN

Published by
THE WORD OF CHRIST

Copyright: 2019
The Word of Christ Publications
First Printing, Tamilnadu - 2019
This Printing - 1000 Copies

பொருளடக்கம்

1. கிறிஸ்துவுக்காக... - For Christ...
2. மூலைக்கல் - Cornerstone
3. உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும்... - Even You, Atlest In This Your Day...
4. கோடரி - Axe
5. சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது - All Things Work Together For Good
6. நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டும் - Wise Unto That Which Is Good, And Simple Concerning Evil
7. நம்முடைய நம்பிக்கை எத்தகையது? - How Is Our Hope?
8. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார் - Christ Lives In Me
9. நிலைத்திரு - Standfast
10. இரட்சிப்பின் வஸ்திரம் - Garment of Salvation
11. ஒரு வேளை போஜனம் - One Morsel of Meat
12. உலக ரட்சகர் - The Saviour of the World
13. இரண்டு மனு - Two Requests
14. இரட்சிக்கும் தேவன் - Saving God
15. சிநேகிதர் - Friends
16. பாரம்பரியம் - Tradition
17. பிறவிக்குருடனின் விசுவாசம் - The Faith of Born Blind
18. ஜீவ வழி - The Way of Life
19. நேரமில்லை - No Time
20. யேகோவாயீரே - Jehovahjireh
21. நீ என்னை நேசிக்கிறாயா? - Do You Love Me?
22. கட்டுப்பாடும் கட்டளையும் - Agreement and Commandment
23. பொறுமை - Patience
24. ஜீவ ஊற்று - Fountain of Life
25. கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான் - Blessed Is That Man Who Makes The Lord His Trust
26. கிறிஸ்து சகல அதிகாரம் படைத்தவர் - Christ Has All Power
27. கிறிஸ்துவின் உண்மையான ஊழியன் - A Faithful Minister of Christ

28. கிறிஸ்து நமக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார் - Christ Left Us An Example
29. பிரிந்துபோகாதிருங்கள் - Do Not Be Separated
30. ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் - Take Heed That You Despise Not Any One
31. நீங்கள் ஆயத்தமா? - Are You Ready?
32. தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி - A Chosen Generation
33. மனுஷருடைய கோபம் - The Wrath of Man
34. கள்ளப்போதகர்கள் - False Teachers
35. பரிசுத்த வேதாகமம் - The Holy Bible
36. மாதிரியை நோக்குங்கள் - Note The Example
37. அழைக்கப்பட்டவர்கள் அநேகர் - For Many Are Called
38. சொல்லிமுடியாத ஈவு - Unspeakable Gift
39. தேவ மனிதன் - The Man of God
40. ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்? - How can I, Except some man should guide me?
41. நான் பாத்திரன் அல்ல - I Am Not Worthy
42. ஆவி ஆத்துமா சரீரம் - Spirit and Soul and Body
43. விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் - I Have Kept the Faith
44. கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள் - You Are The Epistle of Christ
45. அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில்... - When He was In The Days of His Flesh...
46. ஜாக்கிரதையாயிருங்கள் - Be Serious
47. சிந்தை - Mind
48. தேவன் பிரிவினையை ஏற்றுக்கொள்ளார் - God Won`t Accept Division
49. தேவன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்? - Why Did God Create Woman?
50. கர்த்தருடைய ஊழியக்காரன் - The Servant of The Lord
51. எல்லாம் உம்மாலே கூடும் - All Things Are Possible Unto Thee
52. நான் இப்பொழுது ஒரு கிறிஸ்தவன் - Now I Am A Christian

1. கிறிஸ்துவுக்காக...

For Christ...

உங்கள் யாவருக்கும் இயேசுவின் பரிசுத்தமான நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவருக்காக நாம் வாழுகிறோமா? கிறிஸ்துவுக்காக வாழுகிறவர்கள் குறைவாகவே காணப்படுகின்றனர். உலக உறவு அவர்களை அதிகமாக கவர்ந்தபடியால் அதற்கு அடிமைகளாக மாறி, அத்தோடு ஒன்றிப்போய் விடுகின்றனர். ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் அப்படிப்பட்டவர் அல்ல, ''அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்'' என்றார் (பிலி.3:11). இன்றைக்கு நான் கிறிஸ்துவுக்காக இதை விட்டேன் அதை விட்டேன் என்று சொல்லுகிறவர்களை நாம் அதிகமாக பார்க்கமுடியவில்லை. அப்படியே அவர்கள் அவைகளை கிறிஸ்துவுக்காக விட்டு விட்டாலும், உலகமும் உறவும் அவர்களை விட்டு விடவில்லை. காரணம் ஏன்? ஏதோ ஒரு வகையில் தேவனுக்கு விரோதியான பிசாசானவன், அப்படிப்பட்டவர்களை ஆண்டுகொண்டுவருகிறான்.

அவனுடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட அப்போஸ்தலனாகிய பவுலை உற்று நோக்கிப்பாருங்கள். அவர் சொல்லுகிறார்; ''கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ, இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங் களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்'' என்றார் (ரோம.8:36-39). ஜீவனை கொடுக்கிற அன்பிலும் பெரிதான அன்பு வேரே ஏதுவுமில்லை. ஆண்டவர் இயேசு நம்மை பாவத்திலிருந்து மீட்கும்படியாக, தம்முடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். இப்படி ஒப்புக்கொடுத்த அந்த அன்பிலிருந்து நம்மைப் பிரிப்பவன் யார்? என்ற கேள்வியை எழுப்புகிறார் அப்போஸ்தலனாகிய பவுல்.

முதலாவது **உபத்திரவமோ** என்று எழுதுகிறார். அவர் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் அநுபவித்த உபத்திரவத்திற்கு அளவே இல்லை. அவர் கொரிந்து சபைக்கு எழுதும்போது; ''அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா?

நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். அநேகந்தரம் பிரயாணம்பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்; பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன். இவை முதலானவைகளை யல்லாமல், எல்லாச் சபைகளைக்குறித்தும் உண்டாயிருக்கிற கவலை என்னை நாள்தோறும் நெருக்குகிறது'' என்றார் (2கொரி.23-28). பவுலுக்கு வந்த உபத்திரவம்போல நமக்கு வந்திருக்க வாய்பில்லை. அந்த அளவுக்கு உபத்திரவத்தை அநுபவித்தார். மேலும், ''நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிற தில்லை; துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்துபோகிறதில்லை. கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் சரீரத்தில் சுமந்துதிரிகிறோம்'' என்றார் (2கொரி.4:8-10).

யாரிடம் கேட்டாலும் கணக்கிலடங்கா காரியங்களைச் சொல்லி வேதனைகொள்வார்கள். பவுல் பட்ட உபத்திரவங்களையும், பாடுகளையும், எண்ணிப்பார்க்கும்போது, நமக்கு உடம்பெல்லாம் சிலிர்க்கிறது. இவையெல்லாம் கிறிஸ்துவுக்காக பவுல் தனது சரீரத்திலே அநுபவித்தார். இயேசுவின் அன்பை நினைக்கும்போது நாம் எம்மாத்திரம்? அவருடைய அன்பிற்கு ஈடாக நாம் எதைக் கொடுக்க முடியும்? அன்பு சகோதரனே, சகோதரியே, இச்செய்தியை வாசிக்கிற நண்பரே, நீ கிறிஸ்துவுக்காக வாழுவாயானால் அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றும் குப்பையுமாக எண்ணு. அப்பொழுது சகலத்தையும் ஆண்டு இரட்சிக்கும் இயேசு உனக்கு எப்பொழுதும் துணை நிற்பார். பவுலை கொலைசெய்யும்படி யூதர்களில் நாற்பதுபேருக்கும் அதிகமானவர்கள் சபதம்பண்ணிக் கொண்டு அவனுக்குப் பதிவிருந்து சேனாபதியின் உத்தரவுக்காக காத்திருந்தார்கள். இதை அறிந்த சேனாபதி நூற்றுக்கு அதிபதிகளில் இரண்டுபேரை அழைத்து செசரியா பட்டணத்திற்குப் போகும்படி இரு நூறு காலாட்களையும், எழுபது குதிரை

வீரரையும், இருநூறு ஈட்டிக்காரரையும், இராத்திரியில் மூன்றாம்மணி வேளையிலே, ஆயத்தம்பண்ணுங்கள் என்று சொல்லி தேசாதிபதியாகிய பேலிக்ஸிடம் பத்திரமாக அனுப்பிவைத்தான். தம்முடைய ஊழியத்திற்காக பவுலை பிரித்தெடுத்த கர்த்தர் அவனை அவர்களுடைய கைக்கு தப்புவித்தார். பவுலுடைய ஜீவிய நாட்களில் எருசலேம் துவக்கிச் சுற்றிலும், இல்லிரிக்கம் தேசம் வரைக்கும், கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறார். அவருடன் இருந்தவர்களும் அப்படிப்பட்ட சிந்தையுள்ளவர்களாவே இருந்திருக்கிறார்கள். பூமியிலே ஒருமனப் பட்டவர்களாக இருந்து ஒருகாரியத்தைச் செய்யும்போது அது கைகூடிவரும்.

நாம் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்யும் போதும், கிறிஸ்துவுக்காக உலகத்தை வெறுத்து தள்ளும்போதும் அப்படிப்பட்ட சிந்தையுள்ள நபர்களை தேவன் நமக்கு ஏற்படுத்துகிறார். ஒருமனப்பட்டவர்களாக அவருடைய ஊழியத்தை செய்வதற்கு இப்பூமியில் ஒரு தருணத்தைப் பெறுகிறோம். பவுலுடைய வாழ்க்கையில் பிரிஸ்கில்லாளையும், ஆக்கில்லாவையும் பார்க்கிறோம். இவர்களுக்கும் பல பாடுகள் இருந்திருக்கும் அப்படியிருந்த போதிலும் ''அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்;'' என்கிறார் பவுல் (ரோம.16:4). கிறிஸ்து நமக்காக ஜீவனைக் கொடுத்ததுபோல நாமும் ஒருவருக்காக ஒருவர் ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாக இருக்கிறோம். இப்படிப்பட்ட சிந்தை இருக்கும்போது ஐக்கியம் உறுதிப்படும். யாவரும் கர்த்தரை அறிகிற அறிவில் வளரமுடியும். திராட்சத்தோட்டத்தில் வேலை செய்கிறவர்களில் பெரியவன் சிறியவன் என்று இல்லை, தமக்குத் தெரிந்த வேலைகளைச் திராட்சத்தோட்டத்தில் செய்வார்கள்.

அதைப்போல பிதாவாகிய தேவனுடைய சபையாகிய திராட்சத் தோட்டத்தில் வேலைசெய்கிறவர்களில் முதன்மையானவர்கள் என்று யாரும் இல்லை. ''என் உடன்வேலையாட்களாகிய மாற்குவும், அரிஸ்தர்க்கும், தேமாவும், லூக்காவும் உமக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்'' என்று பிலேமோனுக்கு எழுதுகிறார் (பிலேமோன் 24). உடன் வேலையாட்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார். உடன் வேலையாட்கள் என்று சொல்லும்போது தானும் ஒருவேலைக்காரன் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறதை நாம் உற்றுநோக்கவேண்டும். சபைக்கு முதன்மையாகவும், உயிர்த்தெழுதலில் முதன்மையாக இருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவை சபைக்கு தேவன் தலையாக ஏற்படுத்தியிருக்கிறார். அவருக்குள் நாம் அசைகிறோம், பிழைக்கிறோம் ஜீவிக்கிறோம். நாம் அவருடைய இரத்தத்தினாலே பாவங்கள் நீங்கி சுத்தமாக்கப்பட்டுள்ளோம்.

பவுலுடைய வாஞ்சை இப்படியாக இருந்தது; ''எனக்கு

லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும் படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கு...'' என்று பிலிப்பியருக்கு எழுதுகிறார் (பிலி. 3:7-9).

இன்றைக்கு இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால் எனக்கு பெருத்த நஷ்டம் என்று சிலர் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியொரு நஷ்டவந்தால் ஏன் பொருத்துக் கொள்ளக்கூடாது? நாம் நிலையான வாழ்வை நினைக்கும்போது, மெய்யான சத்தியத்தையும், அவர் மூலமாக நித்தியத்தில் இருக்கும் தேவனையும், பரலோக வாழ்வையும் அநுபவிக்கப்போகிறோம் என்ற சந்தோஷத்தை எண்ணிப் பார்க்கும்போது நம்முடைய லாபத்தை இழந்தால் என்ன? **கிறிஸ்துவே என் வாழ்வு, கிறிஸ்துவே என் பேச்சு, கிறிஸ்துவே என் மூச்சு** என்று வாழ்ந்த பவுலுடைய வாழ்வை நாம் புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் தொடந்து வாசிக்கவேண்டும். ''கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்''என்றார் (பிலி.1:21). அநேகர் கிறிஸ்து எனக்கு ஜீவன் என்று சொல்லுகின்றனர். ஆனால் சாவைக்குறித்து பயப்படுகின்றனர். அன்று அவர் சிலுவையில் மரிக்க பயப்பட்டிருப்பாரேயானால் நம்முடைய நிலை என்னவாகும்? சற்று சிந்தியுங்கள்!

பவுலைப் பாருங்கள்: ''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்'' என்றார் மேலும், அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ என்கிறார். அவருடைய வாஞ்சை எத்தகையது பார்த்தீர்களா? நீங்கள் கிறிஸ்துவுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது உலகப் பொருட்களுக்காகவும், உலக உறவுக்காகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? பவுலும் நம்மைப்போல மாம்சத்தில் வாழ்ந்தார். அவருக்கும் உறவுகள் இருந்தது. ஆனால் அவர் உறவுக்காகவும், உலகிற்காகவும் வாழாமல் கிறிஸ்துவுக்காக வாழ்ந்தார். உங்களுடைய ஜீவியம் கிறிஸ்துவுக்காக இருக்கட்டும். அரே உலக இரட்சகர். அவரால் கூடாதது ஒன்றுமில்லை. அவர்சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். அந்த வல்லவரை பற்றிக்குகொண்டு கிறிஸ்துவுக்காக வாழுங்கள்.

கேள்வி நேரம்

கிறிஸ்துவானவர் யாருக்காக வாழ்ந்தார்?

தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்றவே இப்பூமிக்கு கடந்துவந்தார் என பரிசுத்த வேதாகமத்தின் துணைகொண்டு அறிகிறோம். ஒரு முறை இயேசுவானவரை பன்னிரண்டாம் வயதில் பஸ்கா பண்டிகையின்போது காணாததினாலே அவரைத் தேடிக்கொண்டே அவருடைய தாய் தகப்பன் எருசலேமுக்குத் திரும்பிப்போனார்கள். ''அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி; மகனே ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும் நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர்: நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார்'' (லூக்.2:48,49). முப்பத்து மூன்றறை வருடம் வாழ்ந்து மரித்த நம் ஆண்டவர் ஒவ்வொரு மணித்துளிகளையும் பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். மேலும் அவர் சொல்லுகிறார். ''நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்படிக்கு இப்படி நடக்கும்'' என்றார் (யோவா.14:31). ஆகையால் பிதாவாகிய தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழும்பச்செய்தார். நீங்களும் கிறிஸ்துவுக்காக வாழ உங்களை ஒப்புக்கொடுங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

2. மூலைக்கல்
Cornerstone

''**க**ர்த்தராகிய ஆண்டவர் உறைக்கிரதாவது; இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்; அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான **மூலைக்கல்லாயிருக்கும்,** விசுவாசிக்கிறவன் பதறான்'' என்று ஏசா.28:16-ல் ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டபடியே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மூலைக்கல்லாக கொடுக்கப்பட்டார். அவர் முதலாவது எருசலேமிலே தம்முடைய பணியைத்துவங்கினார். பிதாவாகிய தேவனால் முன்குறிக்கப்பட்ட படியே அவருடைய ராஜ்யமாகிய சபை முதலாவது எருசலேமிலே ஆரம்பிக்கப்பட்டது. ஏனெனில், அது தேவனுடைய நகரம் என்றும், தாவீதின் நகரம் என்றும் அழைக்கப்பட்டது. ''அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது'' என்று லூக்கா24:47-ல் சொல்லப்பட்டபடி எருலேம் தொடங்கி அவருடைய ராஜ்யத்தின் சுவிசேஷம்

உலகமெங்கும் எடுத்துச்செல்லப்பட்டது. இயேசு கிறிஸ்துவே அதற்கு மூலைக்கல்லாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து யூதா கோத்திரத்தில் தோன்றினார் என்ற செய்தி உலகம் அறிந்த உண்மை. யூதமக்களோ இயேசுவை ஏற்றுக்கொள்ளாமல் புறம்பே தள்ளினர்.

ஜனங்களுக்கு அவர் உவமையாக பேசும்போது; ''அவர் அவர்களைப் பார்த்து: வீடு கட்டுகிறவர்கள் **ஆகாதென்று தள்ளின கல்லே**, மூலைக்குத் தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தின் கருத்தென்ன?'' என்ற கேள்வியை எழுப்பினார் (லூக்.20:17). இயேசுவானவர் தேவனுடைய குமாரனாக, மனிதனை இரட்சிக்கும்படியாக, அநேக நன்மைகளை செய்கிறவராக வந்தபோதும் தேவனுடைய ஜனங்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. சில கிராமங்களில் அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இயேசு: அவர்களை நோக்கி; உங்களால் ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்கு தலைக்கல்லாயிற்று என்று எழுதியிருக்கிற வேதவாக்கியத்தை நினைவுபடுத்தினார். அந்த ஜனங்களோ வேதவாக்கியங்களின் கருத்தை உணராமலும் தேவனுடைய வார்த்தைக்குப் பயப்படாமலும் அவரை ஆகாதென்று தள்ளினர். பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி வகைதேடி ஜனங்களை தூண்டிவிட்டு பிலாத்துவிடம் ஒப்படைத்தனர்.

பிலாத்து ''அவர்களை நோக்கி: ஜனங்களைக் கலகத்துக்குத் தூண்டிவிடுகிறவனாக இந்த மனுஷனை என்னிடத்தில் கொண்டுவந்தீர்கள்; நான் உங்களுக்கு முன்பாக விசாரித்தபோது, இவன்மேல் நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. உங்களை ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆனபடியால் இவனை தண்டித்து, விடுதலையாக்குவேன் என்றான். பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்தபடியால் அப்படிச்சொன்னான். ஜனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக்கேட்டார்கள்'' (லூக்.23:14-18). இப்படியே அவரை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தார்கள்.

அவரை எருசலேமிலே மூலைக்கல்லாக வைத்த பிதாவாகிய தேவன் அவரை உயர்த்தினார். ஆகாதென்று தள்ளின கல்லே மூலைக்கு தலைக்கல்லாயிற்று. ''அந்தக் **கல்லின்மேல் விழுகிறவன் எவனோ அவன் நொறுங்கிப்போவான்**...'' என்று லூக்.20:18-ல் சொல்லப்பட்டபடி அநேர் முதல் நூற்றாண்டில் அவருடைய ஜீவனுள்ள மார்க்கத்தை அழிக்க நினைத்தனர்

ஆனால் அவர்களோ, நொறுங்கிப்போனார்கள். அதுமட்டுமல்ல, கமாலியேல் என்ற பரிசேயன் ஆலோசனை சங்கத்தில் எழுந்து தேவனால் உண்டாயிருந்ததேயானால், அதை ஒழித்துவிட உங்களால் கூடாது; தேவனோடே போர்செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான். ஆம், அன்பானவர்களே இந்த மார்க்கத்தை அழிக்கும்படியாக இம்மட்டும் எத்தனையோபேர் எழும்புகிறார்கள். ஆனால், நாளடைவில் அவர்கள் இருக்கும் இடம் தெரியாமற்போய்விடுகிறார்கள்.

ஏனென்றால், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான் என்று கர்த்தர் சொன்னபடியே நொறுங்கிப்போனார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் சவுலாக இருந்தகாலத்தில் இம்மார்க்கத்திற்கு விரோதமாக செயல்பட்டான் அப்பொழுது கர்த்தர் ''முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்'' (அப்.9:5). முள்ளில் உதைத்தால் உதைக்கிறவர்களுக்குத்தான் வேதனை, அது அவனைக் குத்தும். அதைப்போல அவரால் ஏற்படுத்தப்பட்ட ஜீவனுள்ள மார்க்கத்தை எதிர்த்தவர்கள் நொறுக்கப்பட்டார்கள்.

மேலும், நாம் லூக்கா20:18-ல் தொடந்து வாசிக்கிறோம், அது எவன்மேல் விழுமோ அவனை **நசுக்கிப்போடும்** என்றார். இது தீர்க்கதசியாகிய தானியேலில் சொன்னபடி எல்லா ராஜ்யங்களையும் நசுக்கிப்போட்டு நிலைநிற்கிறது. ''அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்'' என்று தானியேல்2:44-ல் சொல்லப்பட்டபடி எல்லா ராஜ்யங்களையும் நசுக்கிப் போட்டது. அத்தோடு எல்லா ராஜ்யங்களும் நொறுங்கிப்போயின.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவினால் எருசலேமிலே 3000 அங்கத்தினருடனே ஆரம்பிக்கப்பட்ட ஆவிக்குரிய ராஜ்யம் இன்றும் வெற்றிநடைபோடுகிறது. அதைவிசுவாசித்து ஏற்றுக்கொள்கிறவர்களை கர்த்தர் இரட்சித்து தம்முடைய ராஜ்யமாகிய சபையிலே சேர்த்துவருகிறார். இந்தக்கல்லின் மீது விசுவாசம் வைக்கிறவன் வெட்கப்பட்டுப்போவதில்லை. ''அந்தப்படியே: இதோ, தெரிந்து கொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல்

விசுவாசமாயிருக்கிறவன் **வெட்கப்படுவதில்லை** என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது'' என்று பேதுரு தமது நிருபத்தில் எழுதுகிறார் (1பேது.2:6).

நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை விசுவாசிப்பீர்கள் என்றால் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால், அவர் ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தா, அல்பாவும், ஓமெகாவும் என்று திருவுளம்பற்றுகிறார். அவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்கிறவன் பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் விடுதலையடைகிறான். ஆகையால் பவுல் ரோமாபுரி சபையாருக்கு எழுதும்போது ''கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது என்கிறான் (ரோம.1:16). அது உங்களுக்கும் பெலனைக் கொடுக்கக்கூடியது. எப்பொழுது என்றால்? நீங்கள் விசுவாசிக்கும்போது! தங்களுடைய சுயத்தினால் அநேக காரியங்களை செய்து நாளடைவில் வெட்கப்பட்டு தலைகுனிந்து நிற்கிற அநேகரை நாம் அநுதின வாழ்க்கையில் காண்கிறோம். மூலைக்கல்லாகிய கிறிஸ்துவை நீங்கள் விசுவாசிக்கும்போது அப்படி வெட்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

ஏசாயா சொல்லும்போது; ''அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக் கல்லாயிருக்கும் என்று எழுதுகிறார். அநேகருக்கு சோதனை வந்தவுடன் சோர்ந்துபோகின்றனர். ஆண்டவருக்கும் சோதனை வந்தது; எப்பொழுது? ஞானஸ்நானம் பெற்ற பின்பு வந்தது. ''அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்''(மத்.4:1). தேவனுடைய அனுமதியினால் இது நடைபெற்றது. யோபுவை பிசாசு சோதிக்கும்போது தேவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டான். அதைப்போல பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவரால் வனாந்தரத்திற்கு கொண்டுசெல்லப்பட்டார். அவர் பரீட்சிக்கப்பட்ட கல். கட்டிடம் கட்டுகிறவர்கள் கற்களை முதலாவது சரிசெய்கிறார்கள் அதன்பின்பே கட்டிடத்தில் வைத்துக்கட்டுகிறார்கள். பிதாவாகிய தேவன் மூலைக்கல்லை பரீட்சிக்க ஒப்புக்கொடுத்தார். இந்த சோதனையில் ஆண்டவர் பிசாசை ஜெயித்தார். இன்றைக்கு உங்களுக்கும் எனக்கும் அநேக பரீட்சை வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை சகித்து ஏற்றுக்கொண்டு அதை ஜெயிக்கவேண்டும். சோதனைகளை சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என வேத வசனம் நமக்குப்போதிக்கிறது.

மேலும், இயேசுவானவரை தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கல் அது ஜீவனுள்ள கல் என வேதம் போதிக்கிறது. ''மனுஷரால்

தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற **ஜீவனுள்ள கல்லாகிய** அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்'' என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.2:4,5). அவர் மீது உங்களுடைய வாழ்க்கை கட்டடத்தை துவங்கவேண்டும். ஏனெனில் அவர் ஜீவனுள்ள கல்லாக இருக்கிறார். நீங்களும் ஜீவனுள்ள கற்களாக மாறவேண்டும். ''மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்'' என்கிறார் (வெளி.1:18). அவருடைய கல்லறை மட்டும் இன்றும் திறந்தே இருக்கிறது. அவரை தேடிப்போனவர்களுக்கு தேவதூதர்கள் சொன்ன பதில் என்ன? உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறது என்ன? என்றார்கள்.

ஆம், அன்பானவர்களே, அவர் இதோ, சதாகாலங்களிலும் ஜீவனுள்ள மூலைக்கல்லாக உயிரோடிக்கிறார். ''ஆகையால்,நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து அப்போஸ்தல தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள்'' என்று மிக தெளிவாக பவுல் எபேசு சபைக்கு எழுதுகிறார் (எபே.2:19-21). நீங்களும் இவ்விதமாக பிதாவாகிய தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மூலைக்கல்லாகிய அவர் மீதும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மீதும் கட்டப்பட பிரயாசப்படுங்கள்.

கேள்வி நேரம்

முதல் நூற்றாண்டு சீஷர்கள் மூலைக்கல்லாகிய இயேசுவில் விசுவாசமுள்ளவர்களாயிருந்தார்களா?

சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள். மேலும் அவர்கள் ''அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும்

உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' என அப்.2:42-ல் காண்கிறோம். ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். அவர்களைப்போல நீங்களும் இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

3. உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும்... Even You, Atlest In This Your Day...

நம்மை உண்டாக்கிய தேவன் நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவோ நாட்களை கூட்டி வழங்கிவருகிறார். இதை நீங்கள் எப்போதாவது சிந்தித்ததுண்டா? நமக்கு இருக்கும் வேலைகளை செய்வதற்கே நேரமில்லை பின்பு இவைகளை எங்கே சிந்திக்க நேரம் இருக்கிறது என்பீர்கள். நாட்கள் நம்முடையதல்ல அது கர்த்தருடையது. நமக்கு கிடைத்த ஒவ்வொரு நாட்களையும் நாம் எவ்விதம் பயன்படுத்துகிறோம். சிலர் பொழுது போகவில்லை என்பர். அநேகர் நேரம் போதவில்லை என்பர். உங்களுடைய வாழ்க்கையில் நேரம் எப்படி போய்க்கொண்டிருக்கிறது? தேவன், இஸ்ரவேல் ஜனங்களை நேசித்து, எருசலேமை தம்முடைய நகரமாக தேர்ந்தெடுத்து, அநேக தீர்க்கதரிசிகளின் மூலம் தம்முடைய வார்த்தைகளைக் கொடுத்துக்கொண்டு வந்தார். இறுதியில் தம்முடைய குமாரனையே அனுப்பினார். அதுமட்டும் மனந்திரும்பாமலும், அநேக அற்புதங்களைக் கண்டும் விசுவாசிக்காமலும், இருந்த அந்த ஜனங்களைக் கண்ட கர்த்தர்; ''சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர் விட்டழுது, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயனால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது'' என்றார் (லூக்.19:41,42).

உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் என்று கர்த்தர் சொல்வதற்கான காரணம் என்னவென்று நாம் தியானிக்கும்போது, எவ்வளவோ நாட்களை இஸ்ரவேலர் வீணாக்கிக்கொண்டே வந்திருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. மனந்திரும்பும்படியாக தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு எச்சரித்து வந்தும், அவர்கள் வணங்காகமுத்துள்ளவர் களானபடியால் தங்களுடைய இருதயத்தை வைரமாக்கினார்கள். ஆகையால் சத்துருக்களுக்கு அவர்களை ஒப்புக்கொடுத்தார்.

பலமுறை எருசலேம் மதிற்சுவர்கள் இடிக்கப்பட்டு, அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டது. நெகேமியா போன்றோரால் எடுத்து கட்டப்பட்டது.

தேவாலயங்கள் பழுது பார்க்கப்பட்டது. இந்த எருசலேமைப் பார்த்து: உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் என்றார். பேதுரு தீர்க்கதரிசிகளைக் குறித்து சொல்லும்போது; ''உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென் பதையும் ஆராய்ந்தார்கள்'' என்று 1பேது.1:10,11 -வசனங்களில் வாசிக்கிறோம்.

தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்து கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை செய்திருக்கும்போது நமக்கு கிடைத்த இந்த நாளிலாகிலும் இவைகளைக் குறித்து நாம் தியானிக்க வேண்டாமா? ''நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே, உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே'' என்று யாக்கோபு4:14-ல் வாசிக்கிறோம். மனிதன் ஒரு நாள் பிறப்பதை அறியான். ஆனால் மனிதர்கள் ஜோசியரையும், கைரேகை பார்ப்பவர்களையும் அநுதினமும் நாடுகிறார்கள். எந்த ஒரு ஜோசியனுக்கும் நாளைக்கு என்ன நடக்கும் என்பது தெரியாது. அப்படி ஒருவன் சொல்வானேயானால் ஏன் சுனாமி எச்சரிப்பை அவன் சொல்லவில்லை, பூகம்பங்களை அவன் சொல்லவில்லை ஏன்? அப்படி சொல்லியிருப்பானே யானால் அநேகர் காப்பாற்றப்பட்டு இருப்பார்கள் அல்லவா? அன்பு சகோதரனே, சகோதரியே நீங்கள் சற்று சிந்திக்க வேண்டும். தேவன் மனிதனை தம்முடைய சாயலாக சிருஷ்டித்தார். ஆகையால் உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் விட மனிதனை அவர் அதிகம் நேசித்தார். அவன் கெட்டுப்போய்விடக்கூடாது என்பதற்காகவே அநேக போதனைகளை அவனுக்கு கொடுத்துக்கொண்டே வருகிறார். எந்த ஒரு தகப்பனும் தான் பெற்றெடுத்த மகனுக்கு துரோகம் செய்வானா? ஆண்டவரும்கூட உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? என்றார்.

அடுத்தபடியாக, **உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயனால் நலமாயிருக்கும்** என்றார். இது சமாதானத்துக்கு ஏற்றகாரியங்களை சிந்திக்கும் காலம். போனது போகட்டும் நடக்கவிருக்கும் காரியங்களை சிந்தியுங்கள். அவைகளுக்கு ஏற்றபடியாக உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் சமாதானத்துக்கு ஏற்றகாரியங்களை

சிந்திக்காதபடியால் சண்டைகளும், வன்முறைகளும், யுத்தங்களும் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. தேவன் தெரிந்து கொண்ட எருசலேம் நகரம் சந்திக்காத யுத்தமில்லை என்றே சொல்லவேண்டும். அத்தனை யுத்தங்களை சந்தித்த எருசலேம் பட்டணம் சமாதானத்துக்கு ஏற்றவைகளை சிந்திக்க தவறிவிட்டது. ஆனால் நினிவே பட்டணத்தை நாம் கவனிப்போமானால், அந்த பட்டணத்து அக்கிரமம் தேவ சமுகத்தை எட்டினது, அதற்கு விரோதமாய்ப் பிரசங்கிக்கும்படி யோனா அனுப்பப்பட்டார். மூன்றுநாள் பிரயாண விஸ்தாரமான மகா பெரிய நகரமான நினிவேயில் யோனா பிரவேசித்து, ஒருநாள் பிரயாணம்பண்ணி; இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான்.

அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படி கூறினார்கள்; பெரியோர்முதல் சிறியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தைவிட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் முடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத் தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான்.

அந்தப்படியே அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். நினிவேயின் மக்களுக்கு இரங்கின தேவன் உங்களுக்கும் எனக்கும் இரக்கம் செய்ய முடியும். எப்பொழுது என்றால் நாம் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நினைத்து மனந்திரும்பும்போது, ஒரு வீட்டில் சமாதானமும் சந்தோஷமும் எப்பொழுது இல்லாமற்போகிறது? சண்டையும் சச்சரவுகளும் வரும்போது சமாதான குறைவு ஏற்படுகிறது. ''ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (மாற்.3:25). ஒருவன் கெட்டுப்போவதற்கு மற்றொருவன் வந்து அதற்கு விரோதமாக செயல்பட வேண்டிய அவசியமில்லை. அதில் உள்ள ஒருவர் அதற்கு விரோதமாக செயல்பட்டால் போதும் அந்த வீடு நிலைநிற்காமற்போய்விடும். ஆகையால் தான் கர்த்தர் தம்முடைய சீஷர்களை ஊழியத்திற்கு

அனுப்பியபோது, ''ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது அதை வாழ்த்துங்கள். அந்த வீடு பாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவர்கள்மேல் வரக்கடவது; அபாத்திரமாயிருந்தால், நீங்கள் கூறின சமாதானம் உங்களிடத்திற்குத் திரும்பக்கடவது'' என்றார் (மத்.10:12,13).

குடும்பங்கள் சமாதானம் அடையவும், கர்த்தருடைய சீஷர்களால் ஆசீர்வதிக்கப்படவும் தம்முடைய சீஷர்களை உலகமெங்கும் அனுப்பினார். இவர்களை ஏற்றுக்கொண்டு நாடும், குடும்பங்களும் இன்றளவும் ஆசீர்வதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அன்பான தேவ ஜனமே, நீங்கள் கர்த்தரால் அனுப்பப்படும் தேவதாசர்களை அன்போடு ஏற்றுக்கொண்டு அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து சமாதானத்துக்கானவைகளை சிந்தியுங்கள். அப்பொழுது அது உங்களுடைய ஜீவியத்திற்கு நலமாயிருக்கும். பட்டயத்தை எடுக்கிறவன் பட்டயத்தினால் மடிந்துபோவான். சமாதான பட்டயத்தை எடுத்துக்கொள்வாயானால் நாடும், வீடும், நீங்களும் சமாதானம் பெறுவீர்கள்.

மேலும், **இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது** என்கிறார். ஆம், அவைகள் நம் கண்களுக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. எப்படியென்றால், ''தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்'' என்று பவுல் குறிப்பிடுகிறார் (2கொரி.4:4). அதிமுதலாக கர்த்தருக்கு விரோதமாக செயல்படும் பிசாசு இக்காரியத்தை செய்கிறான். ஜனங்கள் நலமான காரியங்களை பார்க்கக் கூடாதபடி மறைக்கப்பட்டிருக்கிறார்கள். இன்று அநேகர் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் அறியாமல் இருளில் மூழ்கிப்போய் கிடப்பதற்கு இதுவே காரணம்! உலகம் உலகத்தைப் பார்க்கிறது, உலகத்தை சிநேகிக்கிறது. ஆனால், உலகத்தில் வந்த சத்தியபரராகிய இயேசுவையும், அவர் மனிதனை மீட்க தம்மையே சிலுவையில் ஒப்புக்கொடுத்த அந்த மாபெரும் சம்பவத்தையும் நினைக்க தவறிவிட்டது.

''காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்'' என வேதம் போதிக்கிறது (2கொரி.4:18). ஆகையால், காணப்படாத பரலோக வாழ்வை நோக்கிப்பார்த்து, உங்களுக்கு கிடைத்த இந்த நாட்களில் உங்கள் சமாதானத்துக்கு ஏற்றவைகளை அறிந்து கொள்ளுங்கள். உங்கள் வீடும், நாடும் சமாதானம் அடைய கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவைகளை உங்களுடைய இருதயமாகிய பலகையில் எழுதிக்கொண்டு உங்களுக்கு

கிடைத்த இந்நாளில் நினிவே பட்டணம் மனந்திரும்பியதைப்போல உடனே உங்களுடைய பொல்லாத வழியைவிட்டு மனந்திரும்புங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கேள்வி நேரம்

இந்நாட்களைப்பார்க்கிலும் முன்நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லாமா?

''இந்நாட்களைப்பார்க்கிலும் முன் நாட்கள் நலமாயிருந்தது என்று சொல்லாதே; நீ இதைக்குறித்துக் கேட்பது ஞானமல்ல'' என பிரசங்கி சொல்லுகிறான் (பிர.7:10). பொதுவாக ஜனங்கள் இஸ்ரவேல் மக்களைப்போல நாங்கள் எகிப்திலே இருந்திருந்தால் நலமாயிருக்கும் என்பார்கள். இது சோம்பேரி தனத்தைக்குறிக்கிறது. எல்லா நாட்களும் நல்ல நாட்களே. வாரத்தின் ஏழு நாட்களையும் தேவனாகிய கர்த்தர் உண்டாக்கினார். அவர் உண்டாக்கினவற்றில் பழுது ஒன்றுமில்லை. நாம் நலமான காரியங்களைச் செய்தால் அது நமக்கு நல்லநாளாகவேயிருக்கிறது. நாம் தீயவைகளுக்கு முதலிடம் கொடுத்து தீயகாரியங்களைச் செய்யும்போதும் தீயவைகளை யோசிக்கும்போதும் அது நமக்கு மோசமான நாட்களாக தோன்றுகிறது. மனிதனுடைய பிறப்புமுதல் அவனுடைய மரணம் வரையிலும் நாட்கள் நன்றாகவே இருக்கிறது. நாட்களை குறைசொல்லுவதோ, அவைகளை குறைத்து மதிப்பிடுவதோ நம்முடைய வேளையல்ல. ''நாளைதினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே; ஒருநாள் பிறப்பதை அறியாயே'' என வேதம் போதிக்கிறது (பிர.27:1). கர்த்தர் கொடுத்த ஒவ்வொருநாளுக்கும் நன்றி சொல்லி தேவனைத் துதியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

4. கோடரி - Axe

கோடரி கதையைப் பற்றி கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஒரு விறகு வெட்டி கோடரி ஒன்றை தவறவிட்டான் அப்பொழுது ஒரு தேவதை வந்து ஒரு தங்கக் கோடரியை எடுத்துக்கொடுத்தது, அது என்னுடையது இல்லை என்றான். பின்பு ஒரு வெள்ளி கோடரியை எடுத்துக்கொடுத்தது, அதுவும் என்னுடையது அல்ல என்றான். அதன்பின்பு இரும்புக் கோடரியை அந்தத் தேவதை எடுத்துக் கொடுத்தது இதுவே என்னுடையது என்றான். இது ஒரு கதை. இதை வழி வழியாக கேட்டு வந்திருக்கிறோம். ஆனால் பரிசுத்த வேதாகமம் உண்மையில் நடந்த ஒரு சம்பவத்தை நமக்குப்போதிக்கிறது.

அது என்னவென்றால், ''தீர்க்கதரிசிகளின் புத்திரர் எலிசாவை நோக்கி: இதோ, நாங்கள் உம்முடன் குடியிருக்கிற இந்த இடம் எங்களுக்கு

நெருக்கமாய் இருக்கிறது. நாங்கள் யோர்தான்மட்டும் போய் அவ்விடத்தில் ஒவ்வொருவர் ஒவ்வொரு உத்திரத்தை வெட்டி, குடியிருக்க அங்கே எங்களுக்கு ஒரு இடத்தை உண்டாக்குவோம் என்றார்கள். அதற்கு அவன்: போங்கள் என்றான். அவர்களில் ஒருவன்: நீர் தயவு செய்து உமது அடியாரோடேகூட வரவேண்டும் என்றான். அதற்கு அவன்: நான் வருகிறேன் என்று சொல்லி, அவர்களோடேகூடப் போனான்; அவர்கள் யோர்தான் நதியருகே வந்தபோது மரங்களை வெட்டினார்கள். ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது; அவன்: ஐயோ என் ஆண்டவனே, அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான். தேவனுடைய மனுஷன் அது எங்கே விழுந்தது என்று கேட்டான்; அவன் அந்த இடத்தைக் காண்பித்தபோது, ஒரு கொம்பை வெட்டி, அதை அங்கே எறிந்து, அந்த இரும்பை மிதக்கப் பண்ணி, அதை எடுத்துக்கொள் என்றான்; அப்படியே அவன் தன் கையை நீட்டி அதை எடுத்துக்கொண்டான்'' (2இரா.6:1-7).

இச்சம்பவத்தில் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம் என்னவென்றால், தீர்க்கதரிசிகளின் புத்திரர்கள் **தங்கள் சொந்தக்கைகளாலே வேலைசெய்திருக்கிறார்கள்** என்று முதல் இரண்டுவசனங்களில் படிக்கிறோம். பவுலும் அதையே தெசலோனிக்கேய சபைக்கு எழுதுகிறார் ''ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே'' என்கிறார் (2தெச.3:10). ஆக, ஒரு மனிதன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாது. இன்றைக்கு அநேகர் வேலைசெய்யாமலே சாப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் தங்கள் சொந்த வேலையைச்செய்து, சொந்த சாப்பாட்டை சாப்பிடவேண்டும். நெகேமியாவின் காலத்தில் அலங்கங்கள் கட்டப்படும்போது; ''அலங்கத்திலே கட்டுகிறவர்களும், சுமைசுமக்கிறவர்களும், சுமையேற்றுகிறவர்களும், அவரவர் ஒரு கையினாலே வேலைசெய்து, மறுகையினாலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்'' என்று நெகேமியா4:17-ல் வாசிக்கிறோம். இக்கட்டான சூழ்நிலையில் தங்களுக்கு எந்த நேரத்திலும் ஆபத்து வரும் என்று அறிந்து ஒரு கையிலே வேலை செய்துகொண்டு மறுகையிலே ஆயுதம் பிடித்திருந்தார்கள்.

இப்படி இரவு பகலாக கஷ்டப்பட்டபடியால் ஐம்பத்திரண்டு நாட்களுக்குள்ளாக கட்டிமுடிக்கப்பட்டது. ஒருவேளை அவர்கள் சோம்பலாக இருந்திருப்பார்கள் என்றால் எப்படி முடிந்திருக்கும்? இன்றைக்கு பலர் சபை கட்டிடத்தை யாராவது கட்டிக்கொடுத்தால் நலமாயிருக்கும். அமெரிக்க சகோதரர்கள் யாராவது உதவமாட்டார்களா? என ஏங்கிக்கொண்டு ஊழியம் செய்யும் அநேகர் உண்டு. இச்செய்தியை வாசிக்கும் அன்பான சகோதரனே,

சகோதரியே நமக்கு வேண்டிய காரியங்களை நாமே பார்த்துக் கொள்ளவேண்டும். எலிசாவின் நாட்களில் தங்களுக்கு வேண்டிய உத்திரத்தை தாங்களே வெட்டினார்கள், கட்டினார்கள். அதைப்போல நெகேமியா காலத்தில் அலங்கங்களை பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கட்டினார்கள். நாமும் நமக்கு வேண்டியவற்றை நாமே பார்த்துக்கொள்ளவேண்டாமா?

ஆகாயத்துப் பட்சிகளை கவனித்துப்பாருங்கள் என்று நமது ஆண்டவர் சொல்லியிருக்கிறார். நாங்கள் ஒரு முறை எங்கள் வீட்டு தோட்டத்திற்கு வந்துபோகிற இரு குருவிகளை கவனித்தோம் அவைகள் தங்கள் அலகுகளால் கொய்யாமரத்தில் நல்ல ஒரு இடத்தை தேர்வு செய்து ஒரு கூட்டை கட்டஆரம்பித்தது. பின்பு முட்டையிட்டு, அடைக்காத்து, குஞ்சுபொரித்து அதற்கு வேண்டிய உணவுகளை கொடுத்துப் பராமரித்தது. இத்தனை காரியங்களையும் அந்த இரண்டு குருவிகளே செய்து கொண்டது. மற்ற குருவிகள் விட்டுச் சென்ற கூட்டை அவைகள் பயன்படுத்தவுமில்லை, மற்றகுருவிகள் வந்து நமக்கு உதவி செய்யும் என்று அக்குருவிகள் காத்திருக்கவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை. அதைப்போல யாராவது நமது குஞ்சுகளுக்கு உணவு கொடுக்கட்டும் என்று மற்ற குருவிகளை நம்பி தங்களுடைய குருவிகளை விட்டு செல்லவும் இல்லை. என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா! குருவிகளே தங்களுடைய தேவைகளை தாங்களே சோம்பலில்லாமல் தேடிக்கொள்ளும்போது அவைகளைப் பார்க்கிலும் விசேஷித்த விதத்தில் படைக்கப்பட்ட மனிதர்கள் மட்டும் சோம்பலாக இருக்கலாமா? பவுல் சொல்லுகிறார்: ''ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்'' என்கிறார் (2தெச.3:8). நீங்கள் எப்படி சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறீர்கள்? உங்களுடைய சாப்பாடு உங்களுடைய கையின் பிரயாசமா அல்லது மற்றவர்கள் சேர்த்துவைத்ததா? சிந்தியுங்கள்.

இரண்டாவது, தீர்க்கதரிசிகளின் புத்திரர்களில் ஒருவன் மரம் வெட்ட கடந்து செல்லும்போது ஒரு தேவ மனிதன் தங்களோடு இருந்தால் நலமாக இருக்கும் என்று கருதி எலியாவை நோக்கி: **நீர் தயவு செய்து உமது அடியாரோடேகூட வரவேண்டும்** என்றான். அன்பானவர்களே, நாம் பல இடங்களுக்கு கடந்து செல்கிறோம். ஒரு தேவ மனிதனை அங்கு அழைத்து சென்று இருக்கிறோமா? அல்லது நலமான காரியங்களுக்கு அவர்களை அழைத்து ஆலோசனை கேட்டிருக்கிறோமா? இல்லை. அதற்கு என்ன காரணம்? நமக்கு தெரியாததா, நாமே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வோம் என்ற துணிவு. ஒரு முறை சிறுவாணி அணைக்குச் சென்ற ஒரு குழுவினர்

எல்லாவற்றையும் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்பிக் கொண்டிருக்கும்போது அவ்வழியாக வந்த ஒரு காட்டு யானை அவர்களை துரத்த ஆரம்பித்தது அப்பொழுது அவரவர் தங்கள் உயிர் தப்பினால் போதும் என்று ஓட ஆரம்பித்தனர். ஒரு குடும்பத்தார் தங்களுடைய மகளையும் விட்டு விட்டு ஓட ஆரம்பித்தனர். துரத்தி வந்த யானை தன் துதிக்கையால் அந்த பிள்ளையை பிடித்து ஒரே அடியாக அடித்து தூக்கி வீசியது. மரக்கிளைகளில் விழுந்த அந்த பிள்ளை அந்த இடத்திலே பரிதாபமாக இறந்துவிட்டது.

அந்தப் பிள்ளையின் பெற்றோர்கள் மரத்தின் பின்புறத்திலிருந்தபடி ஒளிந்து கொண்டு பார்க்க முடிந்ததேயொழிய அவர்களால் தங்கள் பிள்ளையை காப்பாற்ற முடியவில்லை. ஏன்? அங்கு அவர்கள் ஆண்டவரை நோக்கி கூப்பிடவில்லை. மற்றொன்று அங்கே ஒரு தேவமனிதன் அவர்களை வழிநடத்தவில்லை. ஆகையால் இந்த விபரீதம் நடந்தது என நான் கருதுகிறேன். ஒரு முறை இயேசு லாசரு மரித்த பின்பு அந்த கிராமத்திற்கு போனார். அங்கே அவனுடைய சகோதரி மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து, ''ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்'' என்றாள் (யோவா.11:21). இவளுக்கு இயேசுவின் மீது அந்த அளவிற்கு நம்பிக்கை. அவளுடைய நம்பிக்கை வீண்போகவில்லை. லாசருவை எழுப்பி உயிர் உள்ளவனாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தினார். கர்த்தரால் எல்லாம் கூடும்.

மேலும், தீர்க்கதரிசிகளின் புத்திரரில் ஒருவன் ஒரு உத்திரத்தை வெட்டி விழுத்துகையில் கோடரி தண்ணீரில் விழுந்தது அப்பொழுது அவன்: **ஐயோ என் ஆண்டவனே,** அது இரவலாக வாங்கப்பட்டதே என்று கூவினான். அவன் தேவமனிதனை நோக்கி: ஐயோ என் ஆண்டவனே என்றான். அந்நாட்களில் தீர்க்கதரிசிகளிடம் தங்களுடைய கோரிக்கைகளை சொல்லுவார்கள். ஆகையால் இவன் எலிசாவிடம் இதை தெரிவித்தான். தேவ மனிதன் அந்த கோடரியை அற்புவிதமாக மிதக்கப்பண்ணினான். எந்த கோடரியை அந்த மனிதன் இழந்தானோ அதே கோடரியை திரும்பவும் பெற்றுக்கொண்டான். நாங்கள் 1995-ல் வீடு கட்டும்போது வாங்கிப்போட்ட சில அந்தர் கட்டட கம்பிகள் லாரியில் வரவில்லை நாங்கள் அந்த கடைக்காரரிடம் கேட்கும்போது அவைகளை அனுப்பிவிட்டதாக சொல்லி விட்டார். கஷ்ட காலத்தில் இருந்த நாங்கள் மிகவும் வேதனைப்பட்டோம். நாட்கள் உருண்டோடியது. நாம் என்ன செய்வது வேறே கம்பிகள் வாங்க பணம் போதாதே என்ற கவலையோடு கர்த்தரை நோக்கி ஜெபிக்க ஆரம்பித்தோம். என்ன நடந்தது தெரியுமா? அந்த கடைக்காரர் எங்களோடு போன் மூலம் தொடர்புகொண்டு எங்களிடம் மன்னிப்புகேட்டு, உங்களுக்காக என்னுடன்

போனில் பேசியவர் யார்? அவரால் நான் தூங்கமுடியாமல் இரவு முழுவதும் கஷ்டப்பட்டேன் என்று சொல்லி எங்களுக்கு வந்து சேர வேண்டிய கம்பிகளை அனுப்பிவைத்தார். கர்த்தர் நமக்காக பேசுகிறவர். இழந்ததை மீட்டுக்கொடுக்கிறவர்.

அன்பானவர்களே, யோர்தானிலே தவறிவிழுந்த கோடரி எலிசாவினால் மீட்டு தரப்பட்டது. அங்கே தேவ மனிதன் எலிசா இருந்தான். அந்த கோடரியை இரவலாக வாங்கினவன் சந்தோஷப் பட்டான். **உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கவந்த ஆண்டவர் இயேசு இந்த யோர்தான் நதியிலே யோவானால் ஞானஸ்நானம் பெற்று கரையேறியவுடன் இவர் என் நேசகுமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன் என்று பிதாவானவர் சாட்சிகொடுத்தார்.** இயேசு சொல்கிறார்: ''பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன். அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும் நான் இழந்துபோகாமல், கடைசிநாளில் அவைகளை எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமாயிருக்கிறது. குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார் (யோவா.6:37-40).

கோடரியைப் போல நீங்கள் மீட்கப்பட வேண்டுமானால் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவரும், பிரதான ஆசாரியரும், உலகத்தை நியாயந்தீக்கக்கூடிய நியாயாதிபதியுமாகிய இயேசுவுக்குச் செவி கொடுங்கள். அவர் உங்களை பாவத்திலிருந்து மீட்பார். அப்பொழுது நீங்கள் காக்கப்படுவீர்கள். உங்களுடைய விசுவாசத்தை உலகத்தில் வைக்காமல், உங்களை படைத்த கர்த்தர் மீது நம்பிக்கை வையுங்கள்.

கேள்வி நேரம்

ஒருவன் இரட்சிக்கப்பட இயேசுவிடம் வரவேண்டுமா?

ஆம், தம்மிடம் வருவோரை அவர் புறம்பே தள்ளாதவர். ''வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள்

ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது'' என்றார் (மத்.11:28,29). உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட இயேசுவிடம் உங்களை ஒப்புக்கொடுங்கள். இரவலாக வாங்கப்பட்ட கோடரியை எலிசா மீட்டுக்கொடுத்தார். அதைப்போல ஆண்டவர் இயேசு உங்களுடைய ஆத்துமாக்களை காப்பார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

5. சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது
All Things Work Together For Good

யாருக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது? துன்மார்க்கருக்கு என்று நீங்கள் சொல்லுவீர்கள். அப்படியல்ல, பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; ''அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' என்றார் (ரோ.8:28). இதை தன்னுடைய வாழ்க்கையில் அனுபவித்தவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஒரு முறை அவர் கப்பல் பயணத்தில் கட்டுண்டவராக இருந்தபோது இருநூற்றெழுபத்தாறு பேரை நோக்கி: ''அநேகநாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்றுமழையும் அடித்துக் கொண்டிருந்தபடியினால், இனி தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று. அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப் புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது. ஆகிலும், திடமனதாயிருங் களென்று இப்பொழுது உங்களுக்குத் தைரியஞ் சொல்லுகிறேன்.

கப்பற்சேத மேயல்லாமல் உங்களில் ஒருவனுக்கும் பிராணச்சேதம் வராது. ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று, பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும் இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவுபண்ணினார் என்றான்'' (அப்.27:20-24). பவுலின் வாழ்க்கையில் கப்பற்சேதத்தில் வந்த பாடுகள் அவனுடைய வாழ்க்கையில் நன்மைக்கு ஏதுவாக நடந்ததுமல்லாமல் அவனுடனேகூட கப்பற்பயணத்தின்போது யாத்திரை பண்ணின அனைவரையும் தப்புவித்தார். இப்படிப்பட்ட சம்பவங்கள் அவரால் அழைக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே நடந்தேறுகிறது.

சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்க வேண்டுமானால் நாம் முதலாவது அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டும். பேதுரு மற்றும் யாக்கோபு, யோவான் இவர்களை தம்முடைய ஊழியத்திற்கு கர்த்தர் அழைக்கும்போது அவர்கள் மீன்பிடிக்கிறவர்களாக இருந்தனர். ''இயேசு சீமோனை நோக்கி: பயப்படாதே, இதுமுதல் நீ மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார். அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்'' (லூக்.5:10,11). அந்தப்படியாக எல்லோருமே சுவிசேஷத்தினால் அழைக்கப்படுகிறார்கள். பேதுரு, யாக்கோபு, யோவான் போன்றோர் அப்போஸ்தலர்களாக அழைக்கப்பட்டார்கள். ஒருவேளை நீங்கள் ஒரு விசுவாசியாக அழைக்கப்பட்டிருக்கலாம். எல்லோருமே நித்தியமான வாழ்வுக்கு அழைக்கப்படுகிறோம் என்பது உண்மை.

அப்படி அழைக்கப்பட்டவர்களில் ஞானிகள் இல்லை, கல்விமான்கள் இல்லை. சிலர் எனக்கு கல்வி அறிவு இல்லை, பணவசதியில்லை என்று சாக்குபோக்கு சொல்லுகின்றனர். பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதின கடிதத்தில் ''நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்'' என்று எழுதுகிறார் (1கொரி.1:26,27).

மேலும், பவுல் எழுதும் கடிதங்களிலே ''தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனாகிய பவுலும், சகோதரனாகிய சொஸ்தெனேயும், கொரிந்துவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும், எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது'' என்று எழுதுகிறார் (1கொரி.1:1,2). அழைக்கப் பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள்ளாக பரிசுத்தமாக்கப்படுகிறார்கள். நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாக இருப்பீர்களென்றால் உங்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கிறதென்று அறிந்துகொள்ளுங்கள். ஆபிரகாம் தான் அழைக்கப்பட்டபோது சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று அறிந்து தன் தேசம், இனம், தகப்பனுடைய வீடு இவை எல்லாவற்றையும் விட்டு தேவன் அழைத்த இடத்திற்கு கடந்து சென்றான்.

மேலும், பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்கிறார். உங்களுடைய அன்பு எத்தகையது? அன்பில்லாதவன் தேவனை அறியான் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்று 1யோவான்4:8-ல் வாசிக்கிறோம். நம்முடைய கர்த்தரும் ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை'' என்கிறார் (மாற்.12:30). உங்களுடைய அன்பு இப்படிப்பட்டதாக இருக்கிறதா? ''உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை'' (1யோவா.2:15). நாம் தேவனிடத்தில் அன்புகூரும்போது சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெறும்.

அழைக்கப்பட்ட பேதுரு மீண்டும் மீன்பிடி வேலைக்குச் சென்றான் கர்த்தர் அவனை சந்தித்து; ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான். என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார்'' (யோவா.21:15).

அன்பாக இருந்தால் என்ன செய்யவேண்டும் அழைக்கப்பட்ட வேலையை செய்ய வேண்டும். இங்கே பேதுரு தாம் விட்டுவந்த வேலைக்கே சென்றான். அந்த வேளையில் அவனை மீண்டும் கர்த்தர் சந்தித்து என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா என்று கேட்டு என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். நீங்கள் தேவனிடத்தில் அன்புள்ளவர்களாக இருந்தால் அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, முதலாவது அதன்படி செய்யுங்கள். இதுவே அவரில் நீங்கள் அன்புகூருகிறதற்கான அடையாளம்.

ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தபடியால் அவனை ஆசீர்வதிக்கும்போது; ''நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள் என்றும், நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (ஆதி.22:16-18).

முழு இருதயத்தோடு தேவனிடத்தில் அன்புகூர்ந்த ஆபிரகாம் தன் குமாரனை தேவனுக்கு கொடுக்கதாமதம் பண்ணவில்லை. ஆகையால் திரும்பவும் பாவனையாக பெற்றான்.

சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெற ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். தேவன் சகலத்தையும் சிருஷ்டித்து அது நல்லது என்று கண்டார் என ஆதியாகம புத்தகத்தில் படிக்கிறோம். சகலத்தையும் மனிதனுடைய நன்மைக்காகவே படைத்தார். கசப்பான பாவற்காயையும், இனிப்பான கரும்பையும் தேவன் படைத்தார். இவை இரண்டுமே மனிதனுக்கு தேவையான ஒன்றுதான். இதில் பாவக்காய் தேவை இல்லை என்று ஒரு மனிதன் ஒதுக்கமுடியாது. இரண்டுமே அவன் சாப்பிடுவதால் உடல் நலம் பெறுகிறான். தேவன் மனிதனுக்கு நலமானவைகளை ஏற்படுத்தியிருக்கிறார் என்று அறிகிறோம். ஆனால் தேவனால் உண்டாகாமல் உலகத்தில் உண்டான சிலவற்றை அப்போஸ்தலனாகிய யோவான் எழுதியிருக்கிறார். அது என்னவென்றால் ''மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவை களல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்'' (1யோவா.2:16,17).

யோசேப்பின் சகோதரர்கள் யோசேப்பின் மீது பொறாமை கொண்டு அவனை தூக்கி இஸ்மவேலரிடத்தில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவனோ தேவனுடைய இரக்கத்தினால் எகிப்திலே உயர்த்தப்பட்டான். பஞ்சகாலத்தில் தானியங்கொள்ளவந்த தன் சகோதரர்களை அடையாளங் கண்டு அவர்களுக்கு விரோதமாக செய்யாமல், ''நீங்கள் எனக்குத் தீமைசெய்ய நினைத்தீர்கள்; தேவனோ, இப்பொழுது நடந்துவருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப்பண்ணினார்'' என்றான் (ஆதி.50:20).

அவரால் அழைக்கப்பட்டவர்களுக்கும் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கும் சகலமும் நன்மைக்கேதுவாகவே நடக்கிறது. ''நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுகாலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்'' என்கிறார் தாவீது (சங்.37:39). உங்களுடைய வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கேதுவாக நடைபெற சுவிசேஷத்தினால் அழைத்த அவரை ஏற்றுக்கொண்டு அவரில் அன்புகூருங்கள். அப்பொழுது உங்களுடைய வாழ்க்கையில் சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்.

கேள்வி நேரம்

தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறவர்கள் துன்பப்படுகிறார்களே அது எப்படி?

உண்மைதான் ''கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிறயாவரும் துன்பப்படுவார்கள்'' என பவுல் 2தீமோ.3:12-ல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அதே வசனத்தின் முற்பகுதியில் ''நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், அந்தியோகியா இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார் என்கிறார்.

எவ்வளவோ பாடுகளையும் துன்பங்களையும் பவுல் அநுபவித்தபோதும் அவைகளிலிருந்து கர்த்தர் என்னை விடுவித்தார் என குறிப்பிடுகிறார். ஆம், அன்பானவர்களே பாடுகளையும் துன்பங்களையும் ஒவ்வொரு தேவனுடைய மனுஷனும் அநுபவித்தே ஆகவேண்டும். ஒருவன் என்பின்னே வரவிரும்பினால் அவன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார். பாடுகள் இல்லாத வாழ்க்கையில் பரலோகம் இல்லை என்றே சொல்லுவேன். நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூட பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம் என்ற நம்பிக்கையோடு தேவமக்கள் இப்பூமியில் அழைக்கப்படுகிறார்கள். உங்களுடைய அழைப்பு எப்படிப்பட்டதாயிருக்கிறது. இயேசுவின் மாதிரியை பின்தொடருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

6. நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டும்
Wis Unto That Which Is Good, And Simple Concerning Evil

நன்மைக்கு ஞானிகளும், தீமைக்குப் பேதைகளுமாயிருப் போமானால், சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார் என அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதின புத்தகத்தில் 16-ம் அதிகாரம் 20-ம் வசனத்தில்

வாசிக்கிறோம். சாத்தானை ஜெயிக்க வேண்டுமானால், இரண்டு காரியங்களை கைக்கொள்ள வேண்டும். ஒன்று நன்மைக்கு ஞானிகளாயும், தீமைக்கு பேதைகளாயும் இருக்கவேண்டும். இரண்டிலுமே ஞானிகளாக இருப்பவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதம் நன்மைக்கு ஞானிகளாக இருக்கவேண்டுமென போதிக்கிறது. ''நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்'' என்கிறார் பவுல் (கலா.6:9). பொதுவாக நன்மைசெய்கிறவர்கள் நன்மைசெய்து, நன்மைசெய்து என்னத்தைக் கண்டோம் நன்மைசெய்து கெட்டபெயர்தான் வருகிறது என்று சலித்துக் கொள்வார்கள். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மரம் செடி கொடிகளை கவனித்துப் பாருங்கள் அவைகள் பூக்களையும் காய்களையும் கனிகளையும் கொடுத்துக்கொண்டே இருக்கின்றன. அவைகளைப்பறிப்பவர்களும் பறித்துக்கொண்டே இருக்கின்றனர்.

அந்த மரமோ செடியோ கொடியோ தங்களுடைய வேலைகளை செய்யாமல் இல்லை. அது தேவனால் என்ன நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற தவறுவதில்லை. அன்பு வாசகரே, நாம் இதை சிந்திக்கவேண்டும். தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் மட்டும் நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோய் அந்த வேலையைச் செய்ய தவறிவிடுகிறான். நாம் சோர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். இதிலே விசேஷம் என்னவென்றால் ''நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கடவோம்'' என்கிறார் (கலா.6:10). பொதுவாக விசுவாச குடும்பங்களை விசாரிக்க தவறிவிடுகின்றனர். ஏனென்றால் அவர்கள் விசுவாசிகளாயிற்றே என்று நினைத்து அவர்களை சபை ஊழியர்களும், சபை விசுவாசிகளும் சில வேளைகளில் விசாரிப்பதில்லை. விசுவாசகுடும்பத்தார் சபையில் நிலைத்திருக்கும் போது அநேக நன்மைகளை செய்வார்கள். பிதாவாகிய தேவன் கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். அதைப்போல நலமான காரியங்களை சபையில் செய்துவரும் விசுவாசகுடும்பங்களை சபையார் விசாரிக்கவேண்டும்.

''நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை'' (யாக்.1:17). அவர் நல்லோர்மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். ஆனபடியினாலே நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து

நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். கிறிஸ்துஇயேசுவுக்குள் மறுபடியும் பிறந்த ஒவ்வொருவரும் நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருக்க வேண்டும்.

இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார் என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார். ஒருவேளை நன்மைசெய்ய அறிந்தும் அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் என்று யாக்கோபு சொல்லுகிறார். ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே நன்மைசெய்கிறதில் ஞானிகளாக இருங்கள். ''ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்'' (எபே.2:10). நீங்கள் தேவனுடைய சித்தத்தை பூமியில் நிறைவேற்றுகிறவர்களாக இருப்பீர்களானால் நன்மைசெய்ய நாடுங்கள்.

''இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப்பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாகவைக்கவும் அவர்களுக்கு கட்டளையிடு'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (1தீமோ.6:17-19). இந்த நல்ல ஆலோசனையை ஒவ்வொரு ஐசுவரியவானும் பற்றிக்கொள்வது அவசியம். ஆகையால் இச்செய்தியை வாசிக்கும் அன்பு சகோதரரே, பிரசங்கி சொல்வதைப்போல ''மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்'' என்கிறான் (பிர.3:12). நீங்கள் உயிரோடிருக்கும் காலங்களில் நன்மைசெய்யுங்கள்.

''நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்கு பேதைகளுமாயிருக்க வேண்டும்'' (ரோம.16:19). சிலவேளைகளில் நமக்கு வரக்கூடிய கோபத்தினால் மற்றவர்கள் செய்யும் தீமைக்கு தீமையை செய்துவிடுகிறோம். இது எதைக்காட்டுகிறது நம்முடைய சுபாவகுணத்தைக் காட்டுகிறது. கர்த்தருக்குள் வந்தவுடன் சுபாவம் சாகவேண்டும். நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல்

வாஞ்சையாயிருங்கள்'' என்று பேதுரு எழுதுகிறார் (1பேது.2:3). ஆனபடியினாலே வசனம் என்னபோதிக்கிறதோ அந்தப்படியாக நம்மை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும். தீமைக்கு பேதைகளாக அதாவது அதைப் பற்றி அறியாதவர்களாக இருப்பதே நல்லது. உங்களுக்கு ஒருவர் தீமைசெய்துவிட்டால், ''தீமைக்கு தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து; ஆசீர்வதியுங்கள்'' என 1பேது.3:9-ல் வாசிக்கிறோம்.

உண்மையிலே அவருடைய அழைப்பையும் அவருடைய திட்டத்தையும் நாம் எண்ணிப் பார்ப்போமானால், தேவன் நம்மை அற்புதமான திட்டத்திற்கு அழைத்திருக்கிறார். அதை நாம் நினைக்கும்போது இவ்வுலககாரியங்கள் தூசியும், குப்பையுமாக இருக்கிறது. நாம் நன்மையானவற்றை அநுபவிக்கப்போகிறபடியால் தீமைசெய்கிறவர்களுக்கு நாம் நன்மையே செய்ய வேண்டும். மேலும் பேதுரு சொல்லுகிறார்; ''கிறிஸ்துவுக்கேற்ற உங்கள் நல்ல நடக்கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களை அக்கிரமக்காரரென்று உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லுகிற விஷயத்தில் வெட்கப்படும்படிக்கு நல்மனச்சாட்சியுடையவர்களாயிருங்கள். தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்கு சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்'' என்கிறார் பேதுரு (1பேது.3:16,17).

நன்மை செய்வதினால் ஒருவேளை பாடுகள் உங்களுக்கு வந்தால் அதை சந்தோஷமாக எண்ணுங்கள். நாம் தீமைசெய்து பாடுபடுவதினால் ஒரு நன்மையும் இல்லை. எப்படியெனில், நாம் செய்த தவறுக்கு ஏற்ற துன்பத்தை நாம் அநுபவிக்கிறோம். முதல் நூற்றாண்டு காலத்தில் ஆண்டவருடைய சீஷர்கள் சுவிசேஷத்தினிமித்தம் அநேக பாடுகளை அநுபவித்தனர். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப் பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனை சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய், தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். இப்படியே தொடர்ந்து சுவிசேஷம் அறிவிக்கப் பட்டிருக்குமானால் இன்று உலக முழுவதும் உள்ள ஜனங்கள் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடைந்திருப்பார்கள். முதல் நூற்றாண்டு சீஷர்களைப்போல இயேசுவின் நிமித்தமாக என்ன பாடுகள் வந்தாலும் சோர்ந்து போகாமல் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் பிரசங்கிக்க ஆயத்தமாகுங்கள்.

நீங்கள் நன்மைக்கு ஞானிகளாகவும், தீமைக்கு பேதைகளாகவும் இருந்தால் ''சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள்

கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்'' (ரோ.16:20). அநேகர் சாத்தானை ஜெயிக்கமுடியாமல் அவனுக்கு அடிபணிந்து விடுகின்றனர். பலர் அவன் கொண்டு வரும் மாம்ச இச்சைகளுக்கு கீழ்ப்படிந்து, சத்தியத்தை விட்டு வெகுதூரம் சென்று கர்த்தரை மறுதலித்துவிடுகிறார்கள். சாத்தானை ஜெயிக்கவேண்டுமானால் நீங்கள் கர்த்தரிலும் அவருடைய உபதேசத்திலும் நிலைத்திருக்க வேண்டும். ''உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்'' (ஆதி.13:15).

ஆண்டவர் சாத்தனை ஜெயிப்பார் என்பது முதன் முதலில் தீர்க்கதரிசனமாக சொல்லப்பட்டிருந்தது. அந்தப்படியே சாத்தானை ஆண்டவர் இயேசுகிறிஸ்து ஜெயித்தார். எப்படியென்றால்; ''பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்ததையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்'' (எபி.2:14,15). பிதாவாகிய தேவன், சாத்தான் என்றும் பிசாசு என்றும் சொல்லப்படும் பாவத்திற்கு அதிபதியானவனை தம்முடைய குமாரன் மூலமாக அவருடைய மரணத்தினாலே அவனை ஜெயித்தார். தேவன் சத்தியபரர் ஆனபடியால் அவர் அவனை சத்தியத்தின்படியே ஜெயித்தார்.

கேள்வி நேரம்

தீமைக்கு பேதைகளாக இருப்பது சாத்தியமா?

சாத்தியமில்லாத ஒன்றைக்குறித்து வேதாகமம் போதிக்காது. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப்பிரியம். தீமையைப் பற்றி அறியாதிருப்பதே நலம். நன்மை செய்கிறவன் தேவனால் உண்டாயிருக்கிறான் தீமைசெய்கிறவன் தேவனைக் காணவில்லை. நீங்களும் நானும் பிசாசு கொண்டுவருகிறதான தீமைகளை ஜெயிக்கவேண்டுமானால், ஜெபம் மட்டும் போதாது, நாம் நன்மைக்கு ஞானிகளாக இருந்துகொண்டு சோர்ந்துபோகாமல் நன்மை செய்யவேண்டும். அத்தோடு தீமைக்கு தீமைசெய்யாமல் நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் ஆகையால் ஆசீர்வாதங்களை சுதந்தரிக்க போகின்றவர்கள் என்ற எண்ணத்தோடு யாவருக்கும் நன்மைசெய்து கிறிஸ்துவின் சுவிசேஷ வசனத்திற்கு சாட்சிகளாக, நிருபங்களாக செயல்படும்போது பரலோகத்தின் தேவன், சாத்தானை ஆண்டவர் இயேசுவின் கீழே நசுக்கிப்போட்டதுபோல உங்களுடைய கால்களின் கீழே

நசுக்கிப்போடுவார். அப்பொழுது நீங்களும் சாத்தானையும் அவன் கொண்டுவரும் சகல பாவத்தையும் தீமைகளையும் ஜெயிப்பீர்கள்.

''நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்'' என 1யோவான்4:4-ல் வாசிக்கிறோம். இதை நீங்கள் நம்புகின்றீர்களா? இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்? நீங்கள் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களாக இருந்து பிசாசையும் அவனால் வரும் பாவத்தையும் ஜெயிக்க தேவன் உங்களுக்கு உதவி செய்வார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

7. நம்முடைய நம்பிக்கை எத்தகையது? How Is Our Hope?

உங்களுடைய நம்பிக்கை எத்தகையது? ஆபிரகாமுடைய நம்பிக்கை கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறதாயிருந்தது. கர்த்தருடைய தூதனானவர் ஆபிரகாமை நோக்கி: ''நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்த படியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்'' (ஆதி.22:18). இன்றைக்கு கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய சுயபெலத்தின் மீது நம்பிக்கை வைத்து, கர்த்தரையும் அவருடைய உபதேசங்களையும் மறுதலிக்கிறவர்களாக இருக்கின்றனர். ''கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவர்களைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். கர்த்தர் ஆபிராமுக்குச் சொன்னபடியே அவன் புறப்பட்டுப்போனான்'' (ஆதி.12:1-4).

கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்த ஆபிரகாம், முப்பெருங்காரியங்களை முதலாவது இழக்கவேண்டியவனாகயிருந்தார். அதில் அவனுடைய தேசம். அவன் தன் தேசத்தை அதிகமாக நேசித்திருந்திருப்பானேயானால் காணாத தேசத்தை கண்டிருக்க மாட்டான். கர்த்தர் உன் தேசத்தை விட்டு போ என்று சொன்னவுடன் அதை விட்டுப்போக அவன் யோசிக்கவில்லை. அநேகர் அதை எப்படி நான் விடமுடியும், நான் பல வருடங்களாக வாழ்ந்த தேசம், அங்கே இருப்பது எனக்கு மிகவும் வசதியாக

இருக்கிறது என்றுதான் சொல்லுவார்கள். ஆனால், ஆபிரகாமோ கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான். இரண்டாவது உன் இனத்தையும் விட்டுவிடு என்று சொல்லுகிறார். பொதுவாக இனத்தை யாரும் விட்டுவிடமாட்டார்கள். இனம் ஜனம் பந்துக்கள் யாவரும் பந்தியை சுற்றிலும் இருக்கவேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தன் இனத்தையும் விட்டுப்புறப்பட்டுப்போனான். மூன்றாவது, தனக்குச் சொந்தமான தன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டுப்போனான். ஒரு மனிதனுக்கு முகவரியே அவனுடைய தகப்பன் வீடுதான் அதையும் விட்டுவிட்டு சென்றான். மனிதர்கள் எதையும் விட்டுக்கொடுப்பார்கள். ஆனால், தன் தகப்பனுடைய வீட்டை யாரும் விட்டுக்கொடுக்கமாட்டார்கள்.

ஏனென்றால், அதுவே அவர்களுடைய சுதந்தரம். தன் தகப்பனுடைய வீட்டிலே வாழ்ந்தற்க்கு அடையாளமாக கொஞ்சமாவது இருக்கவேண்டும் என்று விரும்புவார்கள். ஆனால் ஆபிரகாம் அதையும் இழக்க கடுகளவும் யோசிக்கவுமில்லை, சிந்திக்கவுமில்லை. கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டுப்போனான். கர்த்தர் மேல் வைத்த அவனுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருந்தது பார்த்தீர்களா? அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் இப்படியாக வாசிக்கிறோம், ''ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போது; உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்'' (அப்.7:5). அதைப் பற்றிக்கொண்டு விசுவாசிகளின் தகப்பனானான்.

ஆபிரகாமைப்போல எலியா தீர்க்கதரிசியும் ஒரு நம்பிக்கையுள்ள தேவமனிதன். ஆகாப் என்ற ராஜா தனக்கு முன்னிருந்த எல்லாரைப்பார்க்கிலும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தான். ஆகையால் ''கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா ஆகாபை நோக்கி: என் வாக்கின்படியே அன்றி இந்த வருஷங்களிலே பனியும் மழையும் பெய்யாதிருக்கும் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நிற்கிற நான் அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்'' (1இராஜா.17:1). அந்தப்படியே மழையில்லாதிருந்தது. பின்பு, ''அநேகநாள் சென்று, மூன்றாம் வருஷமாகையில், கர்த்தருடைய வார்த்தை எலியாவுக்கு உண்டாகி: நீ போய் ஆகாபுக்கு உன்னைக் காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார். அப்பொழுது எலியா ஆகாபுக்குத் தன்னைக் காண்பிக்கப்போனான்; பஞ்சமோவெனில் சமாரியாவிலே கொடிதாயிருந்தது'' (1இராஜா.18:1,2).

அந்நாட்களில் பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பது பேரையும், தோப்பு விக்கிரகத்தின் தீர்க்கதரிசிகள் நானூறுபேரையும் தன்னிடத்தில் கூட்டிக்கொண்டு வரும்படி எலியா கேட்டுக்கொண்டார். நீங்கள் எந்தமட்டும் இரண்டு நினைவுகளால் குந்திக்குந்தி நடப்பீர்கள்; கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள்; பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான். பின்பு எலியா கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூற்றைம்பது பேர். இப்போதும் இரண்டு காளைகளை எங்களிடத்தில் கொண்டுவரட்டும் ஒரு காளையை அவர்கள் தெரிந்து கொண்டு, நெருப்புப் போடாமல் அவைகளை துண்டித்து விறகுகளின்மேல் வைக்கக்கடவர்கள் . பின்பு உங்கள் தேவனுடைய நாமத்தை சொல்லி கூப்பிடுங்கள், நானும் என் தேவனுடைய நாமத்தை சொல்லி கூப்பிடுவேன் என்று சொன்னான். அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான். அவர்கள் காலைதொடங்கி மத்தியானமட்டும் பாகாலின் நாமத்தை சொல்லிக் கூப்பிட்டார்கள்; ஆனாலும் ஒரு சத்தமும் பிறக்கவில்லை, மறு உத்தரவு கொடுப்பாரும் இல்லை.

எலியா கர்த்தரை நோக்கி: கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான். அப்பொழுது: கர்த்தரிடத்திலிருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள். பின்பு பாகாலின் தீர்க்கதரிசிகளை அழித்துப் போட்டார்கள். எலியா ஆகாபை நோக்கி: நீர் போம், போஜனபானம்பண்ணும், பெருமழையின் இரைச்சல் கேட்கப்படுகிறது என்றான். ஆகாப் போஜனபானம் பண்ணப்போனான்; பின்பு எலியா கர்மேல் பர்வதத்தினுடைய சிகரத்தின்மேல் ஏறி, தரையிலே பணிந்து, தன் முகம் தன் முழங்காலில் பட குனிந்து, தன் ஊழியக்காரனை நோக்கி: நீ போய்ச் சமுத்திரமுகமாய்ப் பார் என்றான்; அவன் போய்ப் பார்த்து, ஒன்றும் இல்லை என்றான்; நீ இன்னும் ஏழுதரம் போய்ப் பார் என்றான். ஏழாந்தரம் இவன்: இதோ, சமுத்திரத்திலிருந்து ஒரு மனுஷனுடைய உள்ளங்கை அத்தனைச் சிறிய மேகம் எழும்புகிறது என்றான்; அப்பொழுது அவன் நீ போய், ஆகாபை நோக்கி; மழை உம்மை தடைசெய்யாதபடிக்கு இரதத்தைப் பூட்டி, போய்விடும் என்று சொல் என்றான்.

ஆகாபுடைய நாட்களில் மழைபெய்யாதபடி அடைத்துப்போடவும் மறுபடியும் மழை பெய்யும்படி செய்யவும் கர்த்தரை நோக்கி

ஜெபித்துக்கொண்டான். அவன் கர்த்தர்மேல் வைத்த நம்பிக்கையினாலே இவ்விதமாக செய்தான். இது குறித்து யாக்கோபு கூறும்போது; ‘‘எலியா என்பவன் நம்மைபோலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான் அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது’’ (யாக்.5:17,18). இதை நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியானால், நீங்களும் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தும் கருத்தாய் ஜெபியுங்கள். நம்மைப்போல பாடுள்ள ஒரு மனுஷனுடைய ஜெபத்தைக்கேட்டு கர்த்தர் இவ்விதமாக செய்திருக்கும்போது; கர்த்தர் உங்களுடைய ஜெபத்திற்கும் பதில் கொடுப்பார்.

ஆண்டவர் இயேசுவை நோக்கி: ராஜாவின் மனுஷரில் ஒருவன், ‘‘தன் குமாரன் வியாதியாயிருக்கிறான் மரண அவஸ்தை படுகிறான் அவனைக் குணமாக்கும்படிக்கு வரவேண்டுமென்று இயேசுவை வேண்டிக்கொண்டான். அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள் அடையாளங்களையும், அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார். அவனோ ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்குமுன்னே வரவேண்டும் என்று வேண்டிக்கொண்டான். இயேசு அவனை நோக்கி: நீ போகலாம் உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன அந்த வார்த்தையை நம்பிப்போனான்’’ (யோவா.4:49,50). நம்பிக்கை என்றால் அது இப்படிப்பட்டதாகத்தானிருக்கவேண்டும். இயேசுவின் வார்த்தையை அப்படியே நம்பவேண்டும். இன்னும் வேண்டிக் கொண்டபடி நடைபெறவில்லையே என்போமானால் அது நடைபெறாமலே பேய்விடும். நடைபெறும் என்ற நம்பிக்கையோடு செல்லும்போது அது நடைபெறுகிறது. எப்படியென்றால் அது கர்த்தர் சொன்ன வார்த்தை அதை நம்பிப்போவதால் அப்படியே நடைபெறுகிறது.

மேலும், குறிப்பாக உபவாசத்தோடு ஒரு காரியத்திற்காக நாம் ஜெபிக்கும்போது அந்த ஜெபம் கேட்கப்பட்டு, கர்த்தர் விடுதலையைக் கட்டளையிடுகிறார். எடுத்துக்காட்டாக எஸ்தர் தன் தாதிமாரோடு உபவாசம் செய்து ஏறெடுக்கப்பட்ட ஜெபம் கேட்கப்பட்டது. இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது? நீங்கள் ஆபிரகாமைப்போல கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து இவ்வுலக சம்பத்துக்களை இழக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா? கர்த்தருடைய வார்த்தை ஒருவனை இரட்சிக்கும். உலக சம்பத்துக்கள் ஒருவனையும் இரட்சிக்காது. எலியா என்பவன் நம்மைப்போல

பாடுள்ளவனாயிருந்து கருத்தாய் ஜெபித்தபடியால் அவனுடைய ஜெபம் கேட்கப்பட்டது. இயேசுவை நோக்கி வந்தவர்கள் நம்பிக்கையோடு வந்து குணமாக்கப்பட்டார்கள். அவருடைய வார்த்தையின்படியே செய்து அநேக அற்புதங்களைக் கண்டார்கள். ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது'' (எபி.11:1). உங்களுடைய நம்பிக்கையும் இப்படிப்பட்டதாக பிரயாசப்படுங்கள்.

கேள்வி நேரம்

சீஷர்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருந்தது?

சீமோன் பேதுரு: ''ஐயரே, இராமுழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப்படியே அவர்கள் செய்து, தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள்'' (லூக்.5:5,6). ஆண்டவருடைய வார்த்தையின்படி வலையைப் போட்டபடியால் வலை கிழிந்துபோகத் தக்கதான மீன்கள் கிடைத்தது. நாமும் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவோமானால் திரளாய் ஆசீர்வதிக்கப்படுவோம். சிலவேளைகளில் சீஷர்களால்கூட சில காரியங்களை செய்யமுடியாமற் போய்விட்டது. ஆகையால் அவர்கள் ஆண்டவர் தனித்திருக்கும்போது ஆண்டவரே, பிசாசை துரத்திவிட எங்களால் ஏன் கூடாமற்போயிற்று என்று கேட்டார்கள் அதற்கு இயேசு; உங்கள் அவிசுவாசத்தினாலேதான்; கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம்போம்; உங்களால் கூடாதகாரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த ஜாதிப் பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது என்றார்'' (மத்.17:19-21). கடுகு விதையளவு விசுவாசம் அதாவது நம்பிக்கை நமக்குத் தேவை.

8. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்
Christ Lives In Me

கிறிஸ்துவே நமக்குள் பிழைத்திருப்பதற்கு நாம் செய்ய வேண்டுவதென்ன? முதலாவது கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட வேண்டும். அது எப்படி முடியம் என்று நீங்கள் கேட்பீர்கள். பவுல் இப்படியாக சொல்லுகிறார்: ''நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து:

தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது'' என்கிறார் (கொலோ.2:20-23). அப்படியானால் பாரம்பரிய வழிபாடுகளுக்கு நீங்கள் மரித்தவர்களாக இருக்கின்றீர்களா? அல்லது பாரம்பரிய பழக்கவழக்கங்கள் இன்னும் உங்களுடைய வாழ்க்கையில் இருக்கிறதா? இவைகள் எல்லாம் மாம்சத்தைப்பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோ ஜனப்படாது. நாம் கிறிஸ்துவோடு பிழைத்திருப்பதற்கு சுயஇஷ்டமான போதனைகளை முதலாவது புறம்பே தள்ளவேண்டும்.

''இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' என்ற 2கொரி.5:17-ன்படி அவனுடைய வாழ்வு ஒரு புதுவாழ்வாக இருக்க, பழையவைகள் எல்லாம் முற்றிலும் அழிக்கப்படவேண்டும். பாருங்கள்: பவுலுடைய வார்த்தையைக் கேட்டவர்களில் ''....அநேகர் வந்து, தங்கள் செய்கைளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள். இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது'' (அப்.19:18-20). கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொண்ட இந்த மாயவித்தைக்காரர்கள் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசுக்கு தங்களுடைய மாயவித்தை சம்பந்தமான புத்தகங்களை விற்பனை செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச்செய்யாமல் தாங்கள் இவ்வளவு காலமாக ஏமாற்றப்பட்டும், மற்றவர்களையும் ஏமாற்றிக்கொண்டும் வந்த அந்த பாரம்பரிய கட்டுகளை சுட்டெரிக்க யோசிக்கவில்லை, அவைகளை உடனே சுட்டெரித்துப்போட்டார்கள். நாம் அவரோடுகூட சிலுவையில் அறையப்பட சுயம் சுட்டெரிக்கப் படவேண்டும்.

''இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடுகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்து மிருப்போம்;'' (2தீமோ.2:11). நீங்கள் அவரோடுகூட மரித்தவர்களாக இருக்கின்றீர்களா? நானும் எனது நண்பனும் ஒரு முறை சிலுவையில் மரிக்கும்படியாக திட்டமிட்டோம். நாங்கள் சத்தியத்தை அறியாத நாட்களில் இவ்விதமாக முடிவு எடுத்தோம். பின்பு தேவனால் வசனத்தின் மூலம் எச்சரிக்கப்பட்டு நாம்

கிறிஸ்தவர்களாக வாழவேண்டும் என்று தீர்மானித்து, இன்றுவரை அவர் எங்களில் பிழைக்கும்படியாக வாழ்ந்துவருகிறோம். ஆகையால் அன்பானவர்களே, உலகவழிபாடுகளுக்கு மரித்தவர்களாகவும், கிறிஸ்துவோடு வாழும்படியாக பிழைத்தவர்களாகவும் உங்களை எண்ணிக்கொள்ளுங்கள். ''கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்'' (கலா.5:24). எது சிலுவையில் அறையப்படவேண்டும்? ஒரு கிறிஸ்தவனை பாவத்திற்கு கொண்டு செல்லும் அவனுடைய மாம்சத்தின் இச்சை. அதை அவன் முதலாவது சிலுவையில் அறையவேண்டும். நீங்கள் உங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறீர்களா?

கிறிஸ்துவோடுகூடச் சிலுவையில் அறையப்பட்ட பவுல் இப்படியாக தொடர்ந்து சொல்லுகிறார். ''...ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்...'' என்கிறார் (கலா.2:20). கிறிஸ்துவோடு மரித்த ஒவ்வொருவரும் அவரோடு பிழைத்திருக்கிறார்கள். அவர்கள் அல்ல அவர்களுக்குள் கிறிஸ்துவே பிழைத்திருக்கிறார். அதுவே உண்மை. அன்பானவர்களே, கிறிஸ்துவோடுகூட மரித்து பின்பு பிழைத்திருந்தால் இனி நான் அல்ல என்றே சொல்லுங்கள். அவ்விதமாக உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை அவருக்கு ஒப்புக்கொடுங்கள் அவர் உங்களுடைய சரீரமாக இருக்கட்டும். ''நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்'' (எபே.5:30). அவருக்கு உரியவைகளாகிய உங்களுடைய மாம்சத்தையும் எலும்புகளையும் அவர் ஆண்டு கொள்ள அவருக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் ஒரு இடத்திற்கு கடந்து செல்லும்போது உங்கள் மூலமாக கிறிஸ்து வெளிப்படவேண்டும். இதுகுறித்து பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய கடிதத்தில் வாசிக்கிறோம்.

''கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிச் சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போ கிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்'' என்கிறார் (2கொரி.2:14,15). நீங்கள் எப்படிப்பட்ட வராயிருக்கிறீர்கள்? உங்கள் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படும் படியாக, மகிமையான கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வாசனை வெளிப்படுத்து கிறீர்களா? நாம் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். இயேசு சொல்கிறார்: ''நான் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க

வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது'' என்றார் (யோவா.15:12). அவரை தரித்துக்கொண்ட ஒரு கிறிஸ்தவன் அவருடைய கற்பனையின்படி அன்பாயிருக்கவேண்டும். மேலும் பவுல்: ''...நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்''என்கிறார் (கலா.2:20).

நீங்கள் யாருக்காக பிழைத்திருக்கிறீர்கள்? சிலர் தங்களுடைய பிள்ளைகளுக்காக உயிர்வாழ்வதாக சொல்லுகிறார்கள். சிலர் தாங்கள் நேசிக்கிற விலங்குகளுக்காக வாழ்வதாக சொல்கிறார்கள். இப்படி பலர் பலவிதமாக சொல்லுகிறார்கள். இச்செய்தியை வாசிக்கிற அன்பான சகோதரனே, சகோதரியே நீ யாருக்காக இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? பவுல், என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்கிறார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிபடி ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. உங்களுடைய விசுவாசம் எத்தகையது?

தாவீது சொல்கிறார்: ''நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்'' (சங்.118:17). கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை எண்ணிப்பார்ப்போமானால், காலம் போதாது. அவ்வளவாய் நமக்கு நன்மை செய்திருக்கிறார்! இப்பொழுதும் செய்துகொண்டும் இருக்கிறார் . இதை யாரும் மறுக்கமுடியாது. அன்பானவர்களே, நாம் இருப்பதே தேவனுடைய சுத்த கிருபை. ஒவ்வொருநாளும் அவருடைய கிருபையால் வாழ்கிறோம். ஆகாய விரிவு அவருடைய கரத்தின் கிரியைகளை நமக்கு அறிவிக்கிறது. ஒவ்வொன்றும் தேவனுடைய வல்லமைகளை வெளிப்படுத்துகிறது. தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நாமும் அவருடைய அதிசயங்களை விவரிக்கவேண்டாமா?

தாவீது இஸ்ரவேலின் இரண்டாவது ராஜா அவன் பாடும்போது 'ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்' என்கிறார். அவர் ஒரு ராஜாவாக இருந்தபோதும் தனக்குமேல் ஒரு ராஜா இருக்கிறார் என்பதை அறிந்தவராய் ராஜாவாகிய என் தேவனே என்று பாடுகிறார். ஆகையால் தான் பவுலும்கூட ''கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்'' என்றார் (2கொரி.4:10). இயேசு நம்முடைய பாவத்தை சிலுவையில் சுமந்து தீர்த்தார். இதை அறிந்த அப்போஸ்தலர்கள் அவருடைய

மரணத்தை சுமப்பதில் சோர்ந்துபோகாமல் சுமந்துதிரிந்தனர். இச்செய்தியை வாசிக்கிற நீங்களும் நானும் இயேசுவை சுமக்க ஆயத்தமாவோம். அப்பொழுது அவர் நமக்குள்ளே பிழைத்திருப்பார்.

நம்மை நாமே கேட்டுக்கொள்வோம்: 1. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் பிரிந்திருக்கலாமா?** கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? -(1கொ.1:13). **2.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் என்னிடம் வருவோரை புறம்பாக்கலாமா?** இயேசு சொல்கிறார்: என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை -(யோவா.6:37). **3.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் பாவம் செய்யலாமா?** அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை - (1பேது.2:22).

4. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் மற்றவர்களுக்கு தீமைசெய்யலாமா?** அவர் நன்மைசெய்கிறவராயும்,... -(அப்.10:38). **5.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் என்னைத்தானே தாழ்த்தாமல் இருக்கலாமா?** அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரண பரியந்தம் -(பிலி.2:8).

6. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் வியாதியுள்ளவர்களைக் கண்டு மனதுருகாமலிருக்கலாமா?** இயேசு திரளான ஜனங்களைக் கண்டு அவர்கள் மேல் மனதுருகி - (மத்.14:14). **7.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் பிசாசை ஜெயிக்காமலிருக்கலாமா?** இயேசு: அப்பாலே போ சாத்தானே - என்றார் (மத்.4:10). கிறிஸ்துவே நமக்குள் பிழைத்திருந்தால், **நாம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழமுடியும்.**

''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்'' என்று வேதம் போதிக்கிறது (1யோவா.5:12). நீங்கள் குமாரனை (கிறிஸ்துவை) உடையவர்களாக இருக்க அவருடைய கற்பனைக்குக் கீழ்ப்படிந்து அவரை ஏற்றுக்கொள்ளுங்கள்.

கேள்வி நேரம்

சாகிறவனுடைய சவை கர்த்தர் விரும்புகிறாரா?

கஷ்டங்கள், பிரச்சனைகள் வந்தவுடன் மனிதன் மரணத்தை விரும்புகிறான் அல்லது அதைத் தேடிக்கொள்கிறான். அவனுக்கோ மனந்திரும்ப மனதில்லை. வேதம் சொல்கிறது: ''மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்'' (எசேக்.18:32).

கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள தற்கொலை பாறை (Suicide Point) என்ற இடத்தில் அநேகர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். என்ன காரணம்? இத்தோடு எல்லாம் முடிந்து விட்டது, நம்மை நேசிக்க யாரும் இல்லை, இந்த உலகத்தில் இருப்பதைவிட மரிப்பதே மேல் என்று முடிவு எடுத்து தங்களை மாய்த்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதனும், மனுஷியும் மனந்திரும்ப வேதம் எதிர்பார்க்கிறது. நான் தேவனுக்கு விரோதமாக என்ன காரியம் செய்யதுணிந்தேன்? ஏன் எனக்கு இந்த அவலநிலை என்று சொல்லி மனந்திரும்பும்போது, இரட்சிப்பின் வழியை கர்த்தர் அவர்களுக்குக் காண்பிப்பார்.

9. நிலைத்திரு
Stand fast

அப்போஸ்தலனாகிய பவுல் சுவிசேஷ ஊழியத்தில் உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது ''நீ கற்று நிச்சயத்துக் கொண்டவைகளில் நிலைத்திரு'' என்று எழுதுகிறார் (2தீமோ.3:14). தீமோத்தேயு எதைக் கற்றுக்கொண்டு எதில் நிலைத்திருந்தான். இயேசு கிறிஸ்துவை பற்றும் விசுவாசத்தினாலே, பரிசுத்த வேதாகமத்தை, சிறுவயது முதல் கற்று ஆதி கிறிஸ்தவர்களைப்போல அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம்பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்து, பவுலினிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவித்தான். இன்றைய நாட்களில் உள்ள கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட முதல் நூற்றாண்டு கிறிஸ்துவின் சபையாரைப்போல உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். தவறான கொள்கைகளையும், மாய்மாலமான காரியங்களையும் கற்றுக்கொண்டு அவைகளில் நிலைத்திருப்பதால் என்ன பயன்?

''இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களைநோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்'' (யோவா.8:31,32). அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருந்தால் மட்டுமே அவருக்கு சீஷராக முடியும். அவருடைய உபதேசத்தில் நிலைத்திராமலும், அவருடைய மாதிரியின்படி நடவாமலும், ஒரு கிறிஸ்தவனாக ஒரு கிறிஸ்தவளாக இருப்பது கூடாதகாரியம். கிறிஸ்துவினுடைய உபதேசத்தை நாம் புதிய ஏற்பாட்டில் படிக்கிறோம். ''நீங்கள்

என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார். எனக்கும் சீஷராயிருப்பீர்கள்'' என்றார் (யோவா.15:7,8). அவருடைய வார்த்தைகள் நம்மில் நிலைத்திருக்கும்போது நம்முடைய ஜெபம் கேட்கப்படுகிறது. பிதாவாகிய தேவன் மகிமைப்படுகிறார். நாமும் கிறிஸ்துவுக்கு சீஷர்களாகிறோம்.

ஒருமுறை ஒரு வாலிபன் இயேசுவை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர் நீ ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக்கொள் என்றார். அவன் எவைகளை என்று கேட்டான். அதற்கு கர்த்தர் கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ்செய்யாதிருப்பாயாக போன்ற கட்டளைகளைச் சொன்னார். அந்த வாலிபன் இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான். அதற்கு அவர்: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால், போய், உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது பரலோகத்தில் உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும். பின்பு என்னைப் பின்பற்றிவா என்றார்.

அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தைகளைக் கேட்டபொழுது, துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான். இன்று அநேகர் கிறிஸ்துவில் நிலைத்திராமற்போவதற்கு அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொள்ளாமையே காரணம். தங்களுடைய எண்ணத்தையும், விருப்பத்தையும் செயலாற்ற நினைக்கும்பொழுது அவருடைய உபதேசம் அவைகளைக் கண்டிக்கிறது, அதைப் பொறுக்க மனதில்லாமல் போய்விடுகின்றனர். ''....பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை'' என்ற சங்.1:5-ன்படி பின் வாங்கிப்போகிறார்கள்.

நாம் தியானித்த மேற்கண்ட வாலிபனும் சிறுவயது முதல் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தும் இயேசு சொன்ன உபதேசத்தை ஏற்றுக்கொள்ள மனதில்லாமலும் மிகுந்த ஆஸ்தியை இழக்க விரும்பாமலும் துக்கத்தோடே சென்றுவிட்டான். ஆனால் ''கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப்போல் இருப்பார்கள்'' (சங்.125:1).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு சகோதரரே, ஆதி கிறிஸ்தவர்கள் இவ்விதமாய் நிலைத்திருந்தார்கள். ''அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடுகள்

தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி, தேவனைத் துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்'' (அப்.2:46). இப்படிப்பட்ட அந்நியோந்நியத்தில் இன்றைய கிறிஸ்தவர்களாகிய நாம் நிலைத்திருந்து அவருடைய ராஜ்யம் பரவ நாம் பாடுபட வேண்டாமா? தாவீது ராஜா கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்தார். அவர் சங்.23:6-ல் ''என் ஜீவனுள்ளநாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும். நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்தநாட்களாய் நிலைத்திருப்பேன்'' என்கிறார்.

அவருடைய நம்பிக்கை எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா? இவ்வசனத்தில் தாவீதின் தீர்மானம் வெளிப்படுகிறது. அவர் ஒரு அரசனாக இருந்தும் தன்னுடைய வாழ்வின் முழுநேரத்தையும் அரண்மனையிலே செலவிடாமல் தேவ சமூகத்தில் இருப்பதையே தெரிந்துகொண்டார். உங்களுடைய தெரிந்துகொள்ளுதல் எப்படிப்பட்டதாக இருக்கிறது. அவர் எழுதின சங்கீதமாகிய பாடல்களையே நாம் அதிகமாக பாடி தேவனை ஆராதித்து வருகின்றோம். சிலர் சபைக்குச் செல்ல நேரமில்லை, ஜெபிக்கக்கூட நேரமில்லை என்பார்கள். இது எதைக் காட்டுகிறது அவர்கள் தேவ சமூகத்தில் நிலைத்திராததையே காட்டுகிறது. தாவீதைப்போல ஆசீர்வதிக்கப்பட விரும்புகிற நாம் அவரைப்போல கர்த்தருடைய சபையிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பதையே தெரிந்து கொள்வோம்.

ஆண்டவர் இயேசு சொல்கிறார்: ''என் மாம்சத்தைப் புசித்து என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்'' என்றார் (யோவா.6:56). அவருடைய மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் நினைவு கூராமலும் அவைகளில் பங்குகொள்ளாமலும் வீட்டிலே இருந்துகொண்டு நானும் ஒரு கிறிஸ்தவன் என்று சொன்னால் கிறிஸ்தவர்களாகிவிடமுடியாது. வாரத்தின் முதல் நாளில் கிறிஸ்துவானவர் என்ன செய்தார்? எங்கு இருந்தார்? அவரால் விலைக்கு வாங்கப்பட்ட நீங்கள் உங்கள் சரீரத்தினாலும் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்தவும் அவருடைய மரணத்தை நினைவுகூரவும் சபையாக கூடிவர வேண்டியது எத்தனை அவசியம்.

ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனென்று வாசிக்கின்றோம். நாமும் ஆபிரகாமின் குமாரர்களும் குமாரத்திகளுமாயிருப்பதற்கு விசுவாசத்தில் வல்லவர்களாக மாறவேண்டாமா? காணாததை நம்புவதே விசுவாசம். ''விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும்,

ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாகவும் தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்'' என எபேசு கிறிஸ்தவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார் (எபே.3:17-19). ஒவ்வொருவரும் அன்பிலேவேரூன்றி நிலைபெற வேதாகமம் எதிர்பார்க்கிறது. அன்பு இல்லாதவன் தேவனை அறியான் தேவன் அன்பாகவே இருக்கிறார்.

கடலின் ஆழத்தை அறிவோம். மலைகளின் உயரத்தை அறிவோம். ஆனால் தேவனுடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் இன்னதென்பதை ருசித்துப்பார்க்க, வேதாகமத்தை நாடி. ஆண்டவருடைய உபதேசத்தை கருத்தாக கைக்கொண்டு, பிதாவின் சித்தம் செய்யவேண்டும். இன்றைக்கு சிலர் தாங்கள் வரங்களை பெற்றுவிட்டதாகவும், தேவனை பார்த்துவிட்டதாகவும் பெருமையடித்துக்கொள்வர். வேதம் போதிக்கிறது; தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். ஆனால் அன்பு ஒருக்காலும் ஒழியாது. ''இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது'' (1கொரி.13:13). அன்பிற்கு ஈடு இணை ஏதும் இல்லை இந்த உலகத்தில். தேவனுடைய அன்பிலே நிலைத்திருந்தால் அநேகரை நாம் ஆதாயம் செய்யலாம்.

நம்முடைய சுயபக்தியினாலோ அல்லது சுயபெலத்தினாலோ நாம் கிறிஸ்தவத்தில் நிலைநிற்க முடியாது. விசுவாசத்தினால் மட்டுமே நிலைத்திருக்க முடியம். ''விசுவாசத்தினாலே வராதயாவும் பாவமே'' என ரோ.14:23-ல் வாசிக்கிறோம். விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாய் இருப்பது கூடாத காரியம். கொரிந்து சபைக்கு பவுல் எழுதும்போது ''விழித்திருங்கள் விசுவாசத்திலே நிலைத்திருங்கள். புருஷராயிருங்கள், திடன்கொள்ளுங்கள்'' என்று எழுதுகிறார் (1 கொரி.16:13). விசுவாசத்தில் நிலைத்திருந்த நம் முற்பிதாக்களின் பட்டியலை எபிரெயர் 11-ம் அதிகாரத்தில் படிக்கின்றோம். இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள்.

நாமோ அப்படி இல்லாதபடி அவைகளை உற்றுநோக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ''அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவ

முகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம் விட்டுப்போனவுடனே, தன் சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான்'' (யாக்.1:22-24). அநேகர் வசனத்தை கேட்கிறார்கள் ஆனால் அவைகளில் நிலைத்திருப்பதில்லை. இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே தேவனுடைய வசனத்தைப் பற்றிக்கொண்டு அதில் நிலைத்திருங்கள். அப்பொழுது ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

கேள்வி நேரம்

பூரணப்பிரமாணத்தில் நிலைத்திருக்கிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதம் என்ன?

முற்பிதாக்களோடும், இஸ்ரவேலர்களோடும், தீர்க்கதரிசிகளோடும், பேசிக்கொண்டு வந்த தேவன் கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாய் வெளிப்பட்டார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டும் உலகங்களை உண்டாக்கினார் என நாம் அறிவோம். ''நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சத்தின் திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணினார்'' இம்மார்க்கத்தில் சுயாதீனப்பிரமாணம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இது குறித்து யாக்கோபு சொல்லும்போது; ''சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்'' என்று எழுதுகிறார் (யாக்.1:25). முழுவேதாகமுமே இந்த பூரணப்பிரமாணத்தை நோக்கியதாக இருக்கிறது. இவைகள் வரும் மட்டும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. அது நிழலாக இருந்தது. நிஜம் வந்தவுடன் நிழலுக்கு வேலை இல்லாமற்போய்விட்டது. ஆகையால் இப்பிரமாணத்தை உற்றுநோக்குங்கள் அப்பொழுது ஆசீவதிக்கப்படுவீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

10. இரட்சிப்பின் வஸ்திரம்
Garment of Salvation

அநுதினமும் விதவிதமான வஸ்திரத்தை உடுத்திக் கொள்ள பிரயாசப்படுகின்ற சகோதரனே, சகோதரியே அன்பு வாசகரே, கர்த்தர் கொடுக்கின்றதான இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்திக்கொள்ள பிரயாசப்படு. ''அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்'' என்ற ஏசா.61:10-ன்படி நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வெளிப்பட்டார். அவர் நீதியை மார்க்கவசமாக அணிந்து,

இரட்சிப்பென்னும் சீராவைத் தமது சிரசில் தரித்து, நீதி சரிக்கட்டுதலென்னும் வஸ்திரங்களை உடுப்பாக உடுத்து, வைராக்கியத்தைச் சால்வையாகப் போர்த்துக் கொண்டார். மேலும் ''அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போலவும், அருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப்போல துப்புரவாகவும் இருந்தது; அவருடைய சிங்காசனம் அக்கினி ஜீவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது'' (தானி.7:9). இப்படிப்பட்ட ஆண்டவர் இரட்சிப்பின் வஸ்திரத்தை உங்களுக்கும் எனக்கும் கொடுக்கும்படியாக பூமிக்குக் கடந்து வந்தார்.

இப்பூமியில் கிறிஸ்துவானவர் முப்பத்து மூன்றரை வருட காலம் தேவனுடைய திருப்பணியை நிறைவேற்றி பிதாவிடம் தம்முடைய ஆவியை ஒப்புவித்தார். தேவனோ அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை உயிரோடு எழுப்பினார். மூன்றரை வருட காலமாக அவர் கொடுத்த இரட்சிப்பின் வஸ்திரத்தை (வசனத்தை) பெற்றுக் கொள்ளாமல், அழிந்து போகும் வஸ்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அவருடைய உடையின்பேரில் சீட்டுப்போட்டு பங்கிட்டுக் கொண்டார்கள். இன்றைய கிறிஸ்தவமும் இரட்சிப்பின் வஸ்திரமாகிய அவருடைய வசனத்தைப் பற்றிக்கொள்ளாமல், அவர் பெயரைச் சொல்லி சம்பாதிக்கும் பொருட்களையே பங்கிட்டு கொள்வதில் முழு கவனத்தையும் செலுத்துகிறார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து கர்த்தர் கூறும் வசனத்தைக் கவனியுங்கள்: ''உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்'' என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.3:18).

நம்முடைய ஆதி தகப்பனுங்கூட பாவம் செய்ததினால் ஏதேன் தோட்டதை விட்டு தேவனால் அனுப்பப்பட்டான். இருந்தபோதிலும் அவனை அப்படியே தேவன் விட்டுவிடாமல் ''தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்'' (ஆதி.3:21). அந்தப்படியே இன்றும் பாவம் செய்கிற தம்முடைய ஜனத்தைப் பார்த்து நீ உடுத்திக் கொள்வதற்கு வெண்வஸ்திரங்களை என்னிடத்தில் கேட்டு வாங்கிக்கொள் என்கிறார். இவ்வஸ்திரத்தை பெற்று உடுத்தியிருந்தால்தான் உங்களுக்கு இரட்சிப்பு, இல்லையேல் உங்களுடைய விசுவாசமும், நம்பிக்கையும் விருதாவாக போய்விடும். வெள்ளை அங்கிகளை போட்டுவிட்டால் வெண்வஸ்திரம் தரித்துவிட்டதாக அர்த்தமாகாது, ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்'' என்கிறார் பேதுரு (1பேது.1:15).

கர்த்தர் கூறும் உவமையிலே: ''விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு; சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய் அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான். அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்'' (மத்.22:11-14). இன்றைக்கும் அநேகர் தங்களுடைய அழைப்பைப் பற்றி கரிசனை இல்லாமல் ஏதோ வயிறு நிறைந்தால் போதும் என்று இருக்கின்றனர். கலியாண வீட்டிற்கு கலியாண வஸ்திரம் தரித்திராமல் சென்ற மனிதனும் அப்படித்தான் நினைத்திருப்பான் ஆனால் அவனுடைய ஆசை நிராசையாய் போய் புறம்பான இருளிலே தள்ளப்பட்டான். இரட்சிப்பின் வஸ்திரத்தை உடுத்தாமல் (வசனத்தை ஏற்றுக்கொள்ளாமல்) ஒருவரும் இரட்சிக்கப்பட முடியாது.

மற்றொரு உவமையிலே: ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள் என்றும் ''இளைமகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூரதேசத்துக்குப் புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழிந்துப்போட்டான்.... பின்பு அவனுக்குப் புத்தி தெளிந்தபோது அவன்... நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் என்று சொல்லி மனந்திரும்பினான் அவன் தகப்பன் அவனை ஏற்றுக்கொண்டு அவனுக்கு உயர்ந்த வஸ்திரத்தை உடுத்தினான். அதைப்போல மனந்திரும்பி வருகிற ஒவ்வொருவருக்கும் இரட்சிப்பின் வஸ்திரமாகிய பரிசுத்த வஸ்திரத்தை கர்த்தர் தரிப்பித்து, அவருடைய சபையிலே சேர்த்துக்கொள்ளுகிறார். இவ்வஸ்திரத்தைப் பெற்றுக்கொள்ள எந்த கடைக்கும் போகவேண்டியதில்லை. கல்லான உங்களுடைய இருதயத்தை திறந்து தேவனிடம் மனந்திரும்பி ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது இந்த உவமையில் நாம் பார்த்தபடி மனந்திரும்பின இளைய மகனுக்கு தரிப்பித்த உயர்ந்த வஸ்திரமாகிய இரட்சிப்பின் பரிசுத்த வஸ்திரத்தைக் கொடுப்பார்.

இவ்வஸ்திரம் எதற்கு என்று நீங்கள் கேட்கலாம். உங்களை பாதுகாக்கவே. கர்த்தர் மோசேயின் காலத்தில் ''உன் சகோதரனாகிய ஆரோனுக்கு, மகிமையும் அலங்காரமுமாய் இருக்கும் பொருட்டு , பரிசுத்த வஸ்திரங்களை உண்டு பண்ணுவாயாக என்றார் (யாத்.28:2). அந்தப்படியே ஆராதனையின்போது அவன் உடுத்திக்கொள்வதற்கு பரிசுத்த வஸ்திரங்களை உண்டாக்கினான். மேலும் கர்த்தர் மோசேயை நோக்கி: ''உன் சகோதரனாகிய

ஆரோனும் அவனோடே கூட அவன் குமாரரும் எனக்கு ஆசாரிய ஊழியம் செய்யும்படிக்கு, நீ அந்த வஸ்திரங்களை அவர்களுக்கு உடுத்தி, அவர்களை அபிஷேகஞ் செய்து, அவர்களைப் பிரதிஷ்டை பண்ணி, அவர்களை பரிசுத்தப்படுத்துவாயாக... ஆரோனும் அவன் குமாரரும் பரிசுத்த ஸ்தலத்திலே ஆராதனை செய்ய ஆசரிப்புக் கூடாரத்திற்குள் பிரவேசிக்கும்போதும் பலிபீடத்தண்டைக்குச் சேரும்போதும், அக்கிரமம் சுமந்து அவர்கள் சாகாதபடிக்கு, அவைகளைத் தரித்திருக்கவேண்டும்'' (யாத்.28:41-43). இவ்வசனத்தை கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

அவர்கள் சாகாதபடிக்கு அந்த பரிசுத்த வஸ்திரங்களை தேவ சமூகத்தில் தரித்திருந்தார்கள். இன்று ''தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறோம்'' (1பேது.2:9). நாம் இரட்சிப்பின் வஸ்திரத்தை தரித்துக்கொள்ளவேண்டியது எத்தனை அவசியம்.

பவுல் எபேசு சபைக்கு எழுதும்போது; ''சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்'' என்று எழுதுகிறார் (எபே.6:14). ஒவ்வொருவரும் வசனமாகிய சத்தியத்தை உடுப்பாக உடுத்தியிருக்க வேண்டும். ''சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' என்றார் இயேசு (யோவா.8:32). கிறிஸ்துவே சத்தியம், அவருடைய வசனமே சத்தியம், அதுவே பரிசுத்த இரட்சிப்பின் வஸ்திரம்.

ஆக, அவரையும் அவருடைய வசனத்தையும் தரித்துக் கொள்வோம். வெறும் வெண் அங்கி அல்லது வெள்ளை ஆடை நம்மை இரட்சிக்காது அது நம்முடைய உடம்பை மட்டுமே மறைக்கும் வஸ்திரம். யோவேல் தீர்க்கன் தம்முடைய ஜனங்களை நோக்கிச் சொல்லும்போது; ''நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் இடத்தில் திரும்புங்கள்'' என்கிறான் (யோவே.2:13). சிறு பிள்ளைகள் ஏதாவது ஒன்று வாங்கிக்கொடுக்காவிட்டால் மணலில் படுத்து உருளுவார்கள் அல்லது தங்களுடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்வார்கள். அதைப்போல தேவனுடைய ஜனங்கள் தங்களுடைய தேவைகள் சந்திக்கப்படும்படியாக வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டும் இரட்டுடுத்திக்கொண்டும் புழுதியை போட்டுக்கொண்டும் திரிந்தார்கள். இதை விரும்பாத தேவன் அவர்கள் இருதயத்திலிருந்து மனந்திரும்ப எதிர்பார்த்தார். நம்மிடமும் அதையே எதிர்பார்க்கிறார்.

வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்தில் வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற கூட்டத்தைப் பற்றிப் படிக்கிறோம். மூப்பர்களில் ஒருவன் யோவானைப் பார்த்து இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு அவன் ''ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்; இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தில் தோய்ந்து வெளுத்தவர்கள்'' என்றான் (வெளி.7:14).

இன்று நீங்களும் நானும் இந்த ஆட்டுக்குட்டியாகிய இயேசுவின் இரத்தத்தினாலே பாவமற கழுவப்பட வேண்டும். அப்பொழுது ''இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்'' (1யோவா.1:7). உங்களுடைய பாவங்கள் கழுவப்பட ஆண்டவர் உங்களுக்காக சிந்தின இரத்தத்தை விசுவாசித்து, இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று உங்கள் வாயினால் அறிக்கையிட்டு, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தமாக்கப்படுவீர்கள்.

அவருடைய வல்லமையுள்ள வசனம் உங்களை மறுபடியும் ஜெநிப்பிக்கும் ''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' என எபி.12:14-ல் வாசிக்கிறோம். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே! ஆகையால் அவருடைய வசனத்தினாலே உங்களை பரிசுத்தப்படுத்திக்கொள்ளுங்கள். கர்த்தர் தாமே பரிசுத்த வஸ்திரங்களைக் கொடுக்கவும், அதை பாதுகாக்கவும் உதவி செய்வாராக!

கேள்வி நேரம்

நாம் காக்கப்பட இரட்சிப்பின் வஸ்திரம் அவசியமா?

மிகவும் அவசியம். ''இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான்'' என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.16:15). எதை எதையோ உலகத்தில் பாதுகாத்து, நாம் பாதுகாக்க வேண்டிய நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை பாது காக்கத் தவறிவிடுகின்றோம். ஆகையால், இதோ, திருடனைப்போல வருவேன் என்று திருவுளம் பற்றும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்திற்கு செவிகொடுத்து, அவர் கொடுக்கிறதான இரட்சிப்பின் வஸ்திரமாகிய வெண் வஸ்திரங்களை வாங்கி தரித்துக்கொண்டு ஆரோனைப்போல ஆசாரிய ஊழியம் செய்ய முன்வாருங்கள்.

இரட்சிப்பின் வஸ்திரங்களைப் பெற்றுக்கொண்ட தேவபிள்ளைகள் ஆண்டவருடைய வசனத்திற்கு செவிகொடுத்து, வசனத்தினால் உங்களை வேலியடைத்துப் பாதுகாத்துக்கொள்ளுங்கள். யூதா 21,23 வசனங்களின்படி ''தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள். மேலும், ...மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தை வெறுத்துத் தள்ளுங்கள்''.

உங்களுடைய இரட்சிப்பு காக்கப்படவும், இயேசுவின் இரண்டாம் வருகையின் போது பரிசுத்த வஸ்திரம் தரித்தவர்களாக இருக்கவும் தேவன் உங்களுக்கு உதவி செய்யும்படியாக ஜெபிக்கிறோம்.

11. ஒரு வேளை போஜனம்
One Morsel of Meat

போஜனமானது நமக்கு தேவையான ஒன்றுதான். ஆனால் நாம் போஜனத்திற்காக வாழக்கூடாது. அநேகருடைய கூற்று 'ஒருச்சான் வயிற்றுக்குத்தான் இந்த பிழைப்பு' என்பதாகும். ஆனால் நாம் வயிற்றுக்காகவும், ஒரு வேளை போஜனத்திற்காகவும் வாழக்கூடாது. பரிசுத்தவேதாகமத்தில் யாக்கோபின் பிள்ளைகள் ஏசா, யாக்கோபு ஆகிய இருவரைக் குறித்துப் படிக்கின்றோம். இவ்விருவரும் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள், ஒரே நேரத்தில் பிறந்தவர்கள். எல்லாம் ஒன்றாயிருந்தும் ஆசீர்வாத விஷயத்தில் யாக்கோபே ஆசீர்வதிக்கப்படுகிறான். ஏசா மூத்தவனாக இருந்தும் ஞானத்தில் முதிர்ச்சியில்லாமல் ''ஒரு வேளைபோஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டான்'' (எபி.12:16).

அதனால் அவன் தன்னுடைய ஆசீர்வாதத்தை இழந்தான். பின்பு அவன் ஆசீர்வாதத்தை பெற விரும்பியும் அது அவனுக்குக் கிடைக்கவில்லை. இந்நாட்களிலும் சேஷ்டபுத்திரபாகத்தை வாங்கும் தேசாந்திரிகள் தேசத்தில் மலிந்து கிடக்கிறார்கள். இவர்கள் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப்போல பதிவிருந்து ஒருவேளை போஜனம் கொடுத்து தங்கள் காரியத்தை சாதிக்கின்றார்கள். இதை அறியாது ஏசாவைப் போல ஒருவேளை போஜனத்திற்காக அடிபணிந்து தங்கள் உரிமையை அதாவது (சுதந்திரத்தை) இழந்து போகின்ற கூட்டம் இன்றும் இருக்கத்தான் செய்கிறது. இதை நினைக்கும்போது எத்தனை வேதனையாயிருக்கிறது.

ஆதி முதல் இன்று வரை சாத்தான் கையாளும் தந்திரமான வித்தை இந்த போஜனம் தான். ஏவாளுக்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சத்தை காண்பித்து

''நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார் என்றான்'' (ஆதி.3:5). இதைக்கேட்ட ஏவாள் அதைப் பறித்து புசித்து தன் கணவனுக்கும் கொடுத்து இருவரும் தேவ கட்டளையை மீறி பாவத்துக்குட்பட்டனர். இதே சாத்தான் இயேசுவிடம் வந்து அவரையும் ஏமாற்றப் பார்த்தான்: ''நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக; மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே'' என்று சொல்லி அவனுடைய தந்திரமான வார்த்தைகளுக்கு மறுமொழிகொடுத்தார் (மத்.4:2-4).

இங்கே இயேசுவிடம் சாத்தானின் சூழ்ச்சி பலிக்கவில்லை. ஆனால் அவருடைய பிள்ளைகளிடம் புசிக்கும்படியான ஆசையை தூண்டிவிட்டு, அதற்கு கீழ்ப்படியப்பண்ணினான். இதற்கு அடிபணிந்த தேவ மக்களை பாவம் பற்றிக்கொண்டது. இன்றைக்கும் தேவனுடைய கட்டளைகளை மீறி நடக்கக்கூடியவர்கள் பாவத்தின் கீழ் அடிமைகளாகின்றனர்.

என் அருமை சகோதரனே, சகோதரியே ''வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார்'' என்று பவுல் கொரிந்துசபைக்கு எழுதுகிறார் (1கொ.6:13). தேவன் கொடுக்கும் நிலையான போஜனத்தை நோக்குங்கள். ''அழிந்துபோகின்ற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்'' (யோவா.6:27). நித்தியம் வரை நம்மை வழி நடத்தக்கூடியவர் இயேசுவானவர்.

இவர் கொடுக்கிறதான போஜனமும், தண்ணீரும் நம்மனைவரையும் திருப்தி செய்யக்கூடியதாக இருக்கிறது. தம்மிடம் வருவோரை அன்போடு ஏற்று இன்றும் என்றும் போஷிக்கிறவராயிருக்கிறார். அவர் பட்சபாதமுள்ளவரல்ல. ஆனால் மனுஷன் பட்டபாதமுள்ளவனாகவும், தன்னையும் தன் குடும்பத்தையும் திருப்தி செய்கிறவனாகவும், ஒருவேளை போஜனம் கொடுத்து ஊரை ஏமாற்றுகிறவனாகவும் இருக்கிறான். அவன் கொடுக்கின்ற போஜனம் அழிந்து போகும். அவனும் அழிந்து போவான். என்றுமே அழியாத நம் இயேசுவையும் அவருடைய வசனத்தையும் பற்றிக்கொண்டு சுயாதீனமுள்ளவர்களாக இருந்து மனுஷர்களுக்கு அடிமைகளாகாதிருக்கப் பிரயாசப்படுங்கள்.

விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட போஜன விஷயத்தில் அநேகர் பெலவீனப்பட்டு அவைகளில் பங்கு கொண்டு சிலரைப் பிரியப்படுத்த முற்படுகின்றனர். என் சகோதரரே, கூத்தாடும் மக்களோடு சேர்ந்து கூத்தாடி ஒரு வேளை போஜனத்தை சாப்பிட்டு நம்மை தீட்டுப்படுத்தலாகாது. ''எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்தி விருத்தியை உண்டாக்காது'' என்கிறார் பவுல் (1கொரி.10:23). தகுதியாயிராத, பக்திவிருத்தியை உண்டாக்காதவைகளுக்கு விலகி நம்மைக் காத்துக் கொள்ளவேண்டிய எவ்வளவு அவசியமான ஒன்று. ''போஜனமானது நம்மை தேவனுக்கு உகந்தவர்களாக்கமாட்டாது'' (1கொரி.8:8). தானியேல் என்ற தேவ மனிதனை அறிவோம். அவனுடைய காலத்தில் அவனும் அவனோடிருந்த யூத புத்திரர் மூவரும் சேர்ந்து ராஜாவின் போஜனத்தினாலும் அவன் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தங்களை தீட்டுப் படுத்தலாகாதென்று, தங்கள் இருதயத்திலே தீர்மானம் பண்ணிக்கொண்டு, ராஜாவின் போஜன பதார்த்தங்களை விலக்கி வைத்தார்கள்.

ஆனால் இன்று நண்பனுக்காகவும், உற்றார் உறவினர்களுக்காகவும் ஒரு வேளை சாப்பிட்டு விட்டேன் அல்லது ஒருவேளை குடித்து விட்டேன் என்று சொல்லுகிறவர்கள் உண்டு. ''சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல'' இவர்களுடைய மனதும் கிறிஸ்துவைப்பற்றிய உண்மையினின்று விலகும்படி, இப்படிப்பட்டவர்கள் மூலமாக வஞ்சிக்கப்படுகிறார்கள். பிரியமான சகோதரரே, சாத்தானாலே, நாம் மோசம் போகாதபடிக்கு மிகுந்த எச்சரிப்புள்ளவர்களாக இருக்கவேண்டும். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே. அவன் பெலவீனமானவர்களைக் கொண்டு பலமுள்ளவர்களை வேட்டையாடுகிறான். இவ்விஷயத்தில் தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற இந்த நான்கு புருஷரும் தங்களைக் காத்துக்கொண்டு தேவனுக்கு உகந்தவர்களாகவே ஜீவித்தனர். ராஜாவின் போஜனத்தினால் தங்களை தீட்டுப்படுத்தாது காத்துக்கொண்டனர்.

நீங்கள் அந்தவிதமாக விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிக்கிற விஷயத்தில் தீட்டுப்படாமல் உங்களை காத்துக்கொண்டு வருகின்றீர்களா? அதனால் என்ன என்று மெத்தனமாக சொல்லிவிடாதீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள். தேவனுடைய பிள்ளைகள். அதை ஒருநாளும் மறந்துபோகவேண்டாம்.

நாம் புசிக்க வேண்டிய ஒரு போஜனமுண்டு நாம் குடிக்க வேண்டிய ஒரு பானமும் உண்டு. நம்முடைய பிதாக்கள் வனாந்திரத்திலே மன்னாவைப் புசித்தும் மரித்தார்கள். நாம் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்து வந்த ஜீவ

அப்பமாகிய இயேசுவையும், அவர் நம்முடைய பாவங்களுக்காக சிந்திய அவருடைய இரத்தத்தையும் பானம் பண்ணவேண்டும். ''என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான். நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்'' என்கிறார் நமது ஆண்டவர் இயேசு (யோவா.6:56). இன்று இயேசுவையும் அவருடைய சுவிசேஷத்தையும் பிரசங்கிக்கிற ஒவ்வொருவரும் அவர் கொடுக்கிறதான போஜனத்தையும் பானத்தையுமே ஜனங்களுக்குக் கொடுக்க வேண்டும். அதை விடுத்து சரீரபோஜனத்தை கொடுத்து ஆள் சேர்ப்பது, ஒரு வேளை போஜனம் கொடுத்து கூட்டம் நடத்துவதும் ஆண்டவருடைய திருப்பணியல்ல. ஜனங்கள் அந்த போஜனத்திற்காக வருவார்கள். ஒருமுறை ஆண்டவரைப் பார்த்து அவருடைய சீஷர்கள் போஜனம்பண்ண வேண்டிக்கொண்டார்கள்.

அதற்கு அவர்: ''நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது'' என்றார் (யோவா.4:34). பார்த்தீர்களா? இந்தவிதமான ஆவிக்குரிய பசிதாகம் ஒவ்வொருவருக்கும் எழும்பவேண்டும். இன்று நீங்களும் நானும் அவருடைய சித்தத்தின்படி வாழுவோம் என்றால் நாமும் அவருடைய கிரியையை முடிப்பதே நம்முடைய போஜனமாக கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட எண்ணம் நமக்கு இருக்குமானால், நாம் ஒருவேளை போஜனத்திற்கு ஏசாவைப்போல அடிபணிய வேண்டிய அவசியமில்லை.

இஸ்ரவேரை 40 வருடமாக வனாந்திரத்திலே அநுதினமும் போஷித்த கர்த்தர் இன்றும் மாறாதவராகவே இருக்கிறார். அன்று மோசேயும், ஆரானும் அவர்களுக்குப் போஜனங்கொடுக்கவில்லை. அதைப்போல இன்று மூப்பர்களும் ஊழியக்காரர்களும் சபையை போஷிக்கவில்லை. ''கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறார்'' (எபே.5:29). அப்படியிருக்க யாரும் போஜனம் கொடுத்து சபையை வளர்க்க வேண்டிய அவசியமில்லை. ஒரு வேளை ஜனங்கள் விடாய்த்துப்போவார்கள் என்று அறிந்து போஜனம் கொடுப்பதில் தவறு ஒன்றுமில்லை. கர்த்தரும் மூன்று நாட்களாக சாப்பிடாமல் தம்மைப் பின்பற்றி வந்த ஜனங்களுக்கு போஜனம் கொடுத்தார் என்று மத்.15:32-ல் வாசிக்கிறோம்.

அவர்களுடைய நிலைமையை கர்த்தர் அறிந்து போஜனம் கொடுத்தார். நாமும் அந்தப்படி போஜனம் கொடுப்பதில் தவறில்லை. ''ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது; உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர் காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால்

பிரயோஜனமென்ன? என்று வசனம் நமக்குப் தெளிவாக போதிக்கிறது (யாக்.2:15,16) இப்படிப்பட்ட சமயங்களில் வஸ்திரம் கொடுத்தும் போஜனம் கொடுத்தும் உதவி செய்வோமேயானால் கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம். இதுவே ஆண்டவருடைய சிறப்பான ஊழியமாகும். இச்செய்தியை கேட்கிற அன்பு சகோதரனே சகோதரியே நீ ஏசாவைப்போல ஒருவேளை போஜனத்திற்காக உன் சேஷ்டபுத்திரபாகமாகிய உன் இருதயத்தை விற்றுப்போடாதே. உன் ஆத்துமா விலையேறப்பெற்றது. உன் ஆவி ஆத்துமா சரீரத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடு அவர் அதை நேசித்து போஷித்து காப்பார். அப்பொழுது நீ ஆசீர்வாதமாயிருப்பாய்.

கேள்வி நேரம்

ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதா?

''ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று'' 2தெச.3:10-ல் வாசிக்கின்றோம். ஆக, வேலை செய்கிறவன் போஜனம்பண்ண தகுதியுள்ளவன். வேலை செய்ய மனதில்லாதவன் போஜனம்பண்ண தகுதியற்றவன். ஆனால் ஏமாற்றுக்காரர்கள் நிறைந்த உலகத்தில் வேலை செய்ய மனதில்லாதவன் போஜனம்பண்ணுகிறான். வேலை செய்கிறவன் போஜனம்பண்ண நேரமில்லாதிருக்கிறான். வீண் அலுவற்காரர்கள் அமைதலோடே வேலை செய்து தங்கள் சொந்தச் சாப்பாட்டை சாப்பிடவேண்டும் என வேதம் போதிக்கிறது. அடுத்தவர்களை அடித்து அந்த சாப்பாட்டை சாப்பிடுவதால் என்ன பயன்?

''இப்படிச் சகோதரருக்கு விரோதமாய் பாவஞ் செய்து, பலவீனமுள்ள அவர்களுடைய மனச்சாட்சியை புண்படுத்துகிறதினாலே, நீங்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் பாவஞ்செய்கிறீர்கள்'' என்று பவுல் எச்சரிக்கிறார் (1கொரி.8:13). மேலும், ''அமைதலோடே வேலை செய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்தி சொல்லுகிறோம் என பவுல் கூறுகிறார் (2தெச.3:12). இப்புத்திமதியை ஏற்று நடக்க முற்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

12. உலக ரட்சகர்
The Saviour of the World

உலகத்தில் எத்தனையோ இரட்சகர்கள் தோன்றினார்கள். பின்பு மறைந்தார்கள். ஆனால் உலகத்தை சிருஷ்டித்தவரும், தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டவரும், முதலாம் நூற்றாண்டில் மனிதனோடு மனிதனாக

வாழ்ந்தவரும், ஜனங்களுக்குள்ளே அநேக அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்தவருமாகிய இயேசுகிறிஸ்து, மனிதனுடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்பு உயிர்த்தெழுந்து இன்றும், என்றும், சதாகாலமும் ஜீவிக்கிறவராயிருக்கிறார். இவரே உலக ரட்சகர். இவரை நீங்கள் முதலாவது அறிந்துகொள்ளுங்கள்.

''பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் (இயேசு) மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' என்று பரிசுத்த வேதாகமத்தில் உள்ள எபி.1:1,2 வசனங்களில் வாசிக்கின்றோம். சர்வத்தையும் உண்டாக்கின இயேசு கிறிஸ்து சர்வ வல்லவராக இருக்கிறார். உலகத்தில் முதலாவது உருவாக்கப்பட்ட குடும்பம் ஆதாமின் குடும்பம் என்பதை நாம் நன்கு அறிவோம். இக்குடும்பத்தை எதிராளியாகிய பிசாசு வஞ்சித்தான். ஆகையால் கர்த்தர் சாத்தானை சபித்து ''உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்'' என்றார் (ஆதி.3:15). தாம் உண்டாக்கின குடும்பத்தை, சாத்தான் வஞ்சித்த நாளிலே கர்த்தர் சாத்தானை நோக்கி: அவர் (இயேசு) உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்.

உலகம் உண்டான காலத்திலே, உலகத்தின் எதிராளியாகிய பிசாசை ஜெயித்து அவர் உன் தலையை நசுக்குவார் என்று தேவன் முன்னுரைத்தார். ''ஆதலால் பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அதாவது (இயேசுவும்) அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்'' (எபி.2:14,15). இயேசு மாம்சத்தில் நம்மைப்போல வந்ததின் நோக்கம் மரணபயத்தில் அடிமையான நம்மை மீட்டு இரட்சிக்கவே என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவர் ஒரு மத போதகர் அல்ல, மானிட வர்க்கத்தை இரட்சிக்க வந்தவர்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் போது தேவதூதன்: ''இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்கு

தாவிதின் ஊரிலே பிறந்திருக்கிறார்'' என்று அறிவித்தான் (லூக்.2:10,11). இச்செய்தி உலகிற்கே கிடைத்த முதலாவது நற்செய்தி என்றே சொல்லவேண்டும். முற்பிதாக்களின் காலத்தில் கர்த்தர் தாம் தெரிந்து கொண்ட ஜனங்களை மட்டும் இரட்சிக்க ரட்சகர்களை அக்கோத்திரங்களில் எழுப்பி வந்தார் என்று பழையஏற்பாட்டில் படிக்கிறோம். அந்நாட்களில் ''இஸ்ரவேல் புத்திரை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்தினியேல் என்னும் ரட்சகனை அவர்களுக்கு எழும்பப்பண்ணினார்'' (நியா.3:9). ஆனால், இயேசுவினுடைய பிறப்பின்போது எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்று தேவதூதன் சொன்னான். இச்செய்தி யூதர்களுக்கு மட்டுமா? அல்லது கிறிஸ்தவர்களுக்கு மட்டுமா? எல்லா ஜனத்துக்கும் என்று பார்க்கிறோம். காரணம் அவர் உலக இரட்சகர். இயேசுவின் சீஷர்களும் கூட இயேசுவைக் குறித்து சாட்சிபகரும்போது ''பிதாவானவர் குமாரனை அதாவது (இயேசுவை) உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம்'' என்றார்கள் (1யோவா.4:14).

தீர்க்கதரிசிகள் இயேசுவை குறித்து சொல்லும்போது; ''உன் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக'' என்று மோசே முன்னுரைத்தான் (உபா.18:15). அந்தப்படியே ''இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்'' என்று ஏசாயா தீர்க்கன் சொன்னான் (ஏசா.7:14). சிமியோன்: ''அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து... புற ஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்'' (லூக்.2:28-32). இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானன் இயேசுவை: ''இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி'' என்றான் (யோவா.1:29).

மேலும், ''கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவருக்குப் பாதைகளைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், பள்ளங்களெல்லாம் நிரப்பப்படும், சகல மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படும், கோணலானவைகள் செவ்வையாகும், கரடானவைகள் சமமாகும் என்றும், மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்றும், வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாகும் என்று ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிற பிரகாரம், அவன் யோர்தான் நதிக்கு

அருகான தேசமெங்கும் போய், பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப்பிரசங்கித்தான்'' (லூக்.3:3-6). இன்று ''நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் என்று யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.2:2).

உன்னதமான தேவனுக்கு ஊழியம் செய்த அநேக தீர்க்கதரிசிகள் உலகரட்சகர் இயேசுவைக்குறித்து உரைத்த தீர்க்கதரிசனங்கள் அந்தப்படியே நிறைவேறியிருக்க இன்று இரட்சிக்க மாட்டாத, மறுமொழி கொடுக்காத, நூதனமான தெய்வங்களை உண்டாக்கி அவைகளே நம்மை இரட்சிக்கும் என்றால் அது நம்மை இரட்சிக்குமா? மாம்சமான யாவரும் தேவனுடைய இரட்சிப்பைக் காண்பார்கள் என்று சொன்ன தீர்க்கதரிசியின் வார்த்தைப்படியே இன்று உலகமெங்கும் உலகரட்சகர் இயேசு பிரசங்கிக்கப்பட்டு வருகிறார். அன்பான நேயரே, இயேசுவின் பிறப்பு, மரணம், அடக்கம், உயிர்தெழுதல் ஒரு மூலையில் நடந்த சங்கதியல்ல உலகம் அறிந்த உண்மை. ''அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்'' என்று யோவா.1:10-12-ல் வாசிக்கிறோம்.

பிரியமானவர்களே, உலகத்தில் இருக்கிற நம்மையும் நம் குடும்பத்தையும் இரட்சிக்க வந்தவர் இயேசு ஒருவரே. ''திருடன் அதாவது (பிசாசு) திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்'' என்கிறார் (யோவா.10:10). இன்று அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்டால் அவரும் உம்மை ஏற்றுக் கொள்வார். அப்பொழுது நீ தேவனுடைய பிள்ளையாக மாறுவாய். ''அநுக்கிரககாலத்திலே நான் உனக்கு செவிகொடுத்து, இரட்சணிய நாளிலே உனக்கு உதவி செய்தேன் என்று சொல்லியிருக்கிறாரே; இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணியநாள்'' (2கொரி.6:2). மேலும், ''நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்'' என்கிறார் (யோவா.8:24). இன்று நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ள தடை ஏதாவது உண்டா? ''எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப்படான்; சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான்.

இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா; அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது'' என்கிறான் சங்கீதக்காரன் (சங்.33:16,17). சகல பாவங்களையும் நீக்கி நம்மை இரட்சிக்க வல்லவர் இயேசு கிறிஸ்து ஒருவரே. அவரே தேவனால் முன் குறிக்கப்பட்டவர். ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்'' என்கிறார் பவுல் (1தீமோ.1:15). ''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப் படுவதற்காகவே அவரை அனுப்பினார். அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று'' என்று யோவா.3:16-18-ல் வாசிக்கிறோம். நீங்கள் ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்படாதிருக்க தேவனால் முன் குறிக்கப்பட்ட உலக ரட்சகரை விசுவாசத்து அவர் மூலமாக கிடைக்கிறதான இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கேள்வி நேரம்

நாம் இரட்சிக்கப்பட வேறு வழி இல்லையா?

பொதுவாக ஒரு வழி இருக்குமானால் அந்த வழியாகவே எல்லோரும் போகும்படி விரும்ப மாட்டார்கள். ஏதாவது வேறு வழி உண்டா என்று கேட்பார்கள் அல்லது குறுக்குவழி ஏதாவது உண்டா என்றும் கேட்பார்கள். இப்படிக்கேட்கிறவர்களை நாம் சந்தித்திருக்கிறோம். உலகத்திலே நாம் இரட்சிக்கப்படும்படி ஒரே வழி மட்டுமே உண்டு. அது இயேசு ஏற்படுத்தின வழியாகும். ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருனும் பிதாவினிடத்தில் வரான் என்றார்'' (யோவா.14:6). ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' என்று பேதுரு தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார் (அப்.4:12). ஆகையால் ''இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக் கொள்ளுவோம்'' என்கிறார் எபிரெய ஆசிரியர் (எபி.2:4).

''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜீவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்'' (2தெச.1:7,8). இக்கடைசி காலத்தில் வாழ்கின்ற நமக்கு இது எச்சரிப்பாகவும் எழுதப்பட்டுள்ளது. இயேசுவானவர் மீண்டும் வரப்போகிறார். பாவிகளை இரட்சிக்க அல்ல, இரட்சிக்கப்பட்ட தம்முடைய மந்தையை மீட்கவும் மீட்டு பிதாவினிடத்தில் ஒப்புக் கொடுக்கவும் வருகிறார். அவருடைய வருகைக்கு முன் நீங்கள் அவரை ஏற்று அவருடைய மந்தையில் சேர்க்கப்பட பிரயாசப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

13. இரண்டு மனு
Two Requests

மனு என்றவுடன் நம்முடைய ஞாபகத்திற்கு வருவதெல்லாம், பல முறை நம்முடைய கோரிக்கைகளை தெரிவிக்க அரசுக்கு மனு செய்திருப்போம், அந்த மனுவை பரீசிலித்து நடவடிக்கை எடுத்திருப்பார்கள் என்பதே. அதைப்போல மூவாயிரம் நீதிமொழிகளையும், ஆயிரத்து ஐந்து பாட்டுக்களையும் எழுதிய சாலொமோன் ராஜா, யாக்கோபின் குமாரனாகிய ஆகூர் உபதேசித்த வாக்கியங்களை நமக்கு நினைவுபடுத்துகிறார். என்னவெனில்; ''இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்; நான் மரிக்கும்பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும். மாயையையும் பொய்வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும்'' என்று வேண்டிக்கொள்கிறான் (நீதி.30:7-9).

இன்று நம்முடைய வேண்டுதல் எப்படிப்பட்டதாயிருக்கிறது? சகலத்தையும் அனுபவித்த சாலொமோன் இவைகளை நினைப்பூட்டுவதற்கான காரணம் என்ன? சாலொமோனைப்போல ஆண்டு அனுபவித்தவர்கள் உலகில் எவரும் இருக்க முடியாது. ''எனக்கு முன் எருசலேமிலிருந்த எல்லாரைப் பார்க்கிலும் நான் பெரியவனும் திரவிய சம்பன்னனுமானேன்; என் ஞானமும் என்னோடே கூட இருந்தது. என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான் அவைகளுக்குத் தடை பண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை; நான் செய்த

முயற்சிகளிலெல்லாம் என் மனமகிழ்ச்சி கொண்டிருந்தது; இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றினாலும் எனக்கு வந்த பலன். என் கைகள் செய்த சகல வேலைகளையும், நான் பட்ட எல்லாப் பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை'' என்கிறான் (பிர.2:9-11). எல்லாவற்றையும் அனுபவித்த பின்பு மாயை மாயை எல்லாம் மாயை என்று அறிகிறான் சாலொமோன் ஞானி. பொதுவாக ஒரு காரியத்தை அனுபவிக்காத வரை அது எப்படியிருக்கும். அவைகள் நமக்கு இருந்தால் நலமாயிருக்கும் என்பார்கள்.

அவைகள் கிடைத்து, அனுபவித்த பின்பு இவ்வளவு தானா? அப்படியொன்றும் விசேஷம் இல்லையே என்று சொல்லிக்கொள்ளுவார்கள். பரம ஏழை, பணக்காரனைப் பார்த்து நாம் இப்படியில்லையே என்று ஏங்குவதைப்போலும். அதேவேளையில் பணக்காரன் தன்னுடைய வேலைகளை பார்க்கமுடியாமல் ஒரு சதாரண கூலிக்காரனாக இருந்திருந்தாலும் பரவாயில்லை, நிம்மதியாக தூங்கலாம் என்று நினைப்பதைப்போலும் இருக்கிறது. மொத்தத்தில் எல்லாம் மாயையாக இருக்கிறது அல்லவா? இதைத்தான் ஆகூர் வசனித்து சொன்னான். மாயையும் பொய்வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும் என்றான். மாயையை நம்பி அலைந்திரிகிற மானிடனே உன் தேவனிடம் திரும்பு.

உலகில் மாயைக்கு அடிபணியாதவர்களே இல்லை என்று சொல்லலாம். எல்லாரும் மாயைக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள். ''மனுஷன் படும் எல்லாப் பிரயாசமும், பயன்படும் எல்லாக் கிரியையும், அயலானுடைய பொறாமைக்கு ஏதுவாயிருக்கிறதை நான் கண்டேன்; இதுவும் மாயையும் மனதுக்குச் சஞ்சலமாயிருக்கிறது'' என்கிறான் பிரசங்கி (பிர.4:4). மாயையான உலகத்தில் நாம் காண்கின்ற எல்லாமே ஒரு நாள் மாறிப்போகும். இப்படி மாறிப்போகும் இந்த மாயையைக் கண்டு மனிதன் பொறாமை கொள்கிறான். மனிதனுக்கு மனிதன் பொய்சொல்லி பொருள் சம்பாதித்து அயலானுக்கு மேலாக வளர பிரயாசப்படுகிறான். இது அவனுக்கே கண்ணியாக அமைகிறது. ''பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம் போலிருக்கும்'' என்று நீதி.21:6-ல் படிக்கிறோம். இதைஅறிந்தும் பொய்பேசுகிறவர்கள் தங்களுடைய ஜீவியத்தை மாற்றிக்கொள்ளுவதில்லை. இதற்கு என்ன காரணம்? எப்படியாவது வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்பதே அவர்களுடைய குறிக்கோள். யார் எப்படிப்போனால் என்ன நாம் வாழ்க்கையில் முன்னேற்றமடைய வேண்டும் என்று சொல்லி தங்களுடைய பொய்யான காரியங்களில் நிலைத்திருக்கிறார்கள்.

அது அவர்களுடைய வாழ்க்கையில் அழிவைக்கொண்டுவரும். சூரியனுக்கு கீழ் பலன் ஒன்றுமில்லை ''பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' என்று எச்சரிப்பின் சத்தமாக வெளி.21:8-ல் வாசிக்கிறோம். நீங்கள் எப்படிப்பட்டவர்? பொய் பேசுகின்றவரா? அல்லது உண்மைபேசுகின்றவரா? உங்களை மாற்றி அமைத்துக்கொள்ள ஒரு அருமையான தருணம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். ஆகையால் அநுதினபடியை ஆண்டவர் சமூகத்திலிருந்து பெற்றுக்கொள்ள அநுதினமும் வேண்டிக்கொள்ளுங்கள். ''நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்'' என்று அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடுகிறார் (1யோவா.1:6). அநேகர் சத்தியத்தின்படி நடக்கிறோம், சத்தியத்தின்படி நடக்கிறோம் என்று சொல்வார்கள் ஆனால் அவர்களுடைய வாயிலிருந்து புறப்படுகிறவைகள் எல்லாம் பொய்யாயிருக்கும். சொல்லாலே அல்ல, செயலாலே நிரூபிக்க வேண்டும். சொல்லி விடுவது சுலபம். ஆனால் செயலில் காட்டுவது மிகவும் கடினம். ஆண்டவர் இயேசுவை நோக்கிப்பாருங்கள். அவர் தாம் உபதேசித்தபடியாக வாழ்ந்தார். இன்று நீங்கள் அவருடைய சீஷர்களாயிருந்தால் அவரைப்போல மாறுங்கள். முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த அனனியா தன் மனைவி அறிய நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, ஒரு பங்கைக் கொண்டு வந்து அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தான்.

பேதுரு அவனை நோக்கி, ''பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்ற பின்பும் அதின் கிரயம் உன் வசத்திலிருக்கவில்லையோ? நீ உன் இருதயத்திலே இப்படிப்பட்ட எண்ணங்கொண்டதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான். அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்கவே, விழுந்து ஜீவனை விட்டான். இவைகளைக் கேள்விப்பட்ட யாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று'' (அப்.5:3-5). பொய் சொல்லுகிறவர்களை தேவன் தண்டியாமல் விடார்.

ஆகூருடைய இரண்டாம் மனு ஒரு சராசரி மனிதனுடைய வாழ்வை பற்றியதாக இருக்கிறது. உலக மக்களின் விருப்பம் வாழ்ந்தால் பணக்காரனாக வாழ வேண்டும் அல்லது கொடிய தரித்திரனாக வாழ வேண்டும். நடுத்தர வாழ்வை விரும்புவதில்லை, சாலொமோன் ஒரு சீமானாயிருந்தான். ''நாள் ஒன்றிற்குச் சாலொமோனுக்குச் செல்லும் சாப்பாட்டுச் செலவு, முப்பது மரக்கால் மெல்லிய மாவும் அறுபது மரக்கால் மாவும்,

கலைமான்களையும், வெளிமான்களையும், வரையாடுகளையும் கொழுமையான பறவைகளையும் தவிர, கொழுக்கப்பட்ட பத்து மாடுகளும், மேய்ச்சலிலிருந்து வந்த இருபது மாடுகளும், நூறு ஆடுகளுமாம்'' (1இரா.4:22,23). மேலும் அவனுக்கு திரளான செல்வமும் இருந்தது. அவனுக்கு நிகரான ராஜாக்கள் அந்நாட்களில் இல்லை அதைப்போல அவனுக்கு இருந்த ஞானத்தைப்போல அவனுக்கு முன்னும் அவனுக்குப் பின்னும் ஒருவருக்குமில்லை. இப்பேர்பட்ட ஞானத்தைபெற்ற ஞானி, ஆகூருடைய உபதேச வாக்கியத்தை எழுதும்போது: தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக, நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும் என்கிறார்.

ஐசுவரியத்தை யாரும் வேண்டாம் என்று சொல்ல மாட்டார்கள். மனிதன் வாழ்வதே அதற்காகத் தான். இங்கு ஐசுவரியத்தை எனக்கு கொடாதிருப்பீராக என்று சொல்வதன் காரணம் தான் என்ன? நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கு என்று குறிப்பிடுகிறார். அந்தப்படியே கர்த்தர் இஸ்ரவேலருக்கு எச்சரிப்பை கொடுத்திருந்தார் என்னவெனில் ''நீ புசித்துத் திருப்தியாகி, நல்ல வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருக்கும்போதும், உன் ஆடு, மாடுகள் திரட்சியாகி, உனக்கு வெள்ளியும், பொன்னும் பெருகி, உனக்கு உண்டானவையெல்லாம் வர்த்திக்கும்போதும், உன் இருதயம் மேட்டிமையடையாமலும், உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்திலிருந்து புறப்படப் பண்ணியவரும்... என் சமார்த்தியமும் என் கைப்பெலனும் இந்த ஐசுவரித்தை எனக்குச் சம்பாதித்தது என்று நீ உன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளாமலும் இருக்க எச்சரிக்கையாயிரு'' என்ற ஒரு எச்சரிப்பின் சத்தத்தைக்கொடுத்திருந்தார் (உபா.8:12-17). அநேக சமயங்களில் கர்த்தரை அலட்சியப்படுத்துவதற்கு இந்த ஐசுவரியமே மூலகாரணமாயிருக்கிறது. ஆகையால்தான் ஐசுவரியத்தை கொடாதிருப்பீராக என்கிறான்.

தரித்திரத்தையும் வேண்டாம் என்று சொல்வதற்கு முக்கிய காரணம். ஒருவேளை தான் தரித்திரப்படுகிறதினால் திருடி தன் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டு விடும் என்ற அச்சம். ''திருட்டுத் தண்ணீர் தித்திக்கும்'' (நீதி.9:17). ஆனால் ''திருப்தியடைந்தவன் தேன் கூட்டையும் மதிப்பான்'' (நீதி.27:7). ஒருவன் திருப்தியடைந்தவனாக இருப்பானேயானால் அவன் திருட வேண்டிய அவசியமில்லை. புறஜாதிகள் மத்தியில் வாழ்ந்த ஒரு பெயர் கிறிஸ்தவரைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். அவன் தோட்டங்களுக்கு

போடப்பட்டிருந்த இரும்பு முள்வேலிகளை களவு செய்து விற்று பிழைத்து வந்தானாம். இதை தோட்டக்காரர் கண்டுபிடித்து அந்த முள் வேலியை அவன் தலையில் சுமத்தி உங்கள் ஆண்டவருக்கும் இப்படித்தான் முட்கிரீடம் சூட்டினார்கள் என்று அவனை அடித்து ஏளனம் செய்தார்களாம். இதனால் அங்கு தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலைக்கு ஆளாகாதபடிக்கு என் படியை எனக்கு அளந்து என்னைப்போஷித்தருளும் என்கிறார் யாக்கோபின் குமாரனாகிய ஆகூர்.

கேள்வி நேரம்

தேவன் ஜெபத்திற்கு பதில் கொடுப்பாரா?

ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகும். நம்முடைய கோரிக்கைகளை தேவனுக்கு ஜெபத்தின் மூலமாகத் தெரியப்படுத்துவதாகும். இதிலே முதலாவது நம்பிக்கை வேண்டும். அந்த நம்பிக்கை உங்களில் உருவாக நீங்கள் அவருடைய பிள்ளையாக மாறவேண்டும். அப்பொழுது உங்களுடைய வேண்டுதலுக்கு தேவன் செவிகொடுப்பார். நாம் தேவனிடத்தில் வேண்டிக்கொண்டவைகளைப் பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசிக்க வேண்டும். அப்படியென்றால் அந்த அளவு உங்களில் விசுவாசமும் நம்பிக்கையும் பெருக வேண்டும்.

அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும்போது: ''நாம் எதையாகியலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்'' என்கிறார் (1யோவா.5:14,15). இந்தவிதமான நம்பிக்கை இருந்தால் தேவன் உங்களுடைய ஜெபத்திற்கு பதில் கொடுப்பார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

14. இரட்சிக்கும் தேவன்
Saving God

உலகத்திலே அநேக தேவர்களும், தேவிகளும் இருந்தாலும் நம்மை இரட்சிக்கிறவர் தேவனே. அநேக இரட்சகர்கள் தோன்றி மரித்து விட்டார்கள். ஆனால் உலக இரட்சகர் இயேசுவோ ''மரித்தேன், ஆனாலும் இதோ, சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்'' என்று திருவுளம் பற்றுகிறார். நாம் காண்கின்ற வானமும், பூமியும் அதிலுள்ள யாவும் இவர் மூலமாய் உண்டாயிற்று. இப்புவியில் ஒருவன் இரட்சிக்கப்பட இயேசுவையும்

அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக் கொள்ளவேண்டும். இரட்சிப்பு என்றால் காக்கப்படுதல், மனிதன் பூமியில் எதை எதையோ காக்கிறான் முடிவில் தன்னைக் காக்க மறந்துபோகிறான். இங்கு நாம் காண்கின்ற யாவும் ஒரு நாள் அழிந்துபோகும் ஆனால் மனிதனுடைய ஆத்துமா ஒருக்காலும் அழியாதது அதை நித்திய நித்தியமாக காக்க (இரட்சிக்க) ஒரே வழி இயேசுவே.

தாவீது அரசன் கூறுவதைப் படியுங்கள்; ''எந்நாளும் ஆண்டவருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் நம்மை இரட்சிக்கிற தேவன் அவரே'' என்கிறார் (சங்.68:19). அன்று முதல் இன்று வரை மனிதன் குறுக்கு வழியையே தேடுகிறான். கடினமான காரியங்களை செய்யவும், ஏற்றுக்கொள்ளவும் மறுக்கிறான். இயேசுவை பின்தொடர்ந்த சீடர்களும், இயேசுவின் உபதேசத்தைக் கேட்டு ஆச்சரியப்பட்டு ''இது கடினமான உபதேசம், யார் இதைக் கேட்பார்கள்'' என்றார்கள் (யோவா.6:60). ஆனால் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து பரமேறி சென்றவுடன் இது கடினமான உபதேசம் என்று சொன்ன அதே அப்போஸ்தலர்களே, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கித்து அநேகரை இரட்சிப்புக்கு நேரே வழி நடத்தினார்கள். தாவீது சொல்வது போல் ஆண்டவர் நம்மேல் பாரஞ்சுமத்தினாலும் அவர் நம்மை இரட்சிக்கிறவர். ஆகையால் அவருடைய உபதேசங்கள் இலகுவானவைகள். ''என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்கிறார்'' (மத்.11:29,30).

ஆண்டவர் கொடுக்கின்ற உபதேசத்தை நம்மேல் ஏற்றுக் கொண்டு, அவரிடத்தில் கற்றுக் கொள்ளும்போது மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பெற்றுக்கொள்வோம். அப்பொழுது நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். இவைகளை பெற்றுக்கொள்ளாமல், தங்களுடைய பாரங்களை சுமந்துகொண்டு ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் காப்பாற்றும் என்று அநுதினமும் கூப்பிடுகிற ஜனங்களை அதிகமாக காண்கிறோம். எங்களுக்கு கடிதம் எழுதுகிறவர்கள் கூட வசனத்தை புரிந்துகொண்டேன், இவ்வளவுமேலான ஆசீர்வாதங்கள் வசனத்தில் இருக்கிறதா? என்று ஆச்சரியப்படுவதில்லை. மாறாக சகோதரரே, அதிகமான கடன் சுமையில் மாட்டிக்கொண்டேன் எனக்காக என்குடும்பத்திற்காக ஜெபியுங்கள் என்று கடிதம் எழுதக்கூடியவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். முதலாவது ஆண்டவர் கொடுக்கும் உபதேசத்தை ஏற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது சகல காரியங்களிலிருந்தும் விடுதலையாவீர்கள்.

அந்நாட்களில் பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பரும், இயேசுவை பரியாசம் பண்ணி ''மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத் தான் இரட்சித்துக் கொள்ள திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம்'' என்றனர் (மத்.27:42). இதைப் பார்த்த பரலோகத்தின் தேவன் ''அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்'' (அப்.2:24). அவரை பரியாசம் பண்ணினவர்கள் தலை கவிழ்ந்து வெட்கப்பட்டார்கள். ''ஒன்றுக்கும் உதவாத தெய்வத்தை உருவாக்கி, விக்கிரகத்தை வார்ப்பிக்கிறவன் எப்படிப்பட்டவன்? இதோ, அவனுடைய கூட்டாளிகளெல்லாரும் வெட்கமடைவார்கள்; தொழிலாளிகள் நரஜீவன்கள் தானே; அவர்கள் எல்லோரும் கூடிவந்து நிற்கட்டும்; அவர்கள் ஏகமாய்த் திகைத்து வெட்கப்படுவார்கள்''என்ற வார்த்தையின்படி நடந்தது (ஏசா.44:10,11). சிலுவையில் அறையப்பட்ட இயேசு உயிர்த்தெழாமலிருப்பதற்கு அவர் ஒரு விக்கிரகமல்ல, அவர் என்றும் ஜீவிக்கிறவர். ஆகையால் அவர் உயிர்த்தெழுந்து நாற்பது நாள் அநேகருக்குக் தாம் உயிருள்ளவராக காணப்பட்டார்.

இப்படிப்பட்ட உன்னதமான ஆண்டவரை விட்டு மனிதன் ''தனக்கு கேதுருக்களை வெட்டுகிறான்; ஒரு மருத மரத்தையாவது, ஒரு கர்வாலி மரத்தையாவது, தெரிந்து கொண்டு, காட்டு மரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான்; அல்லது அசோக மரத்தை நடுகிறான், மழை அதை வளரச் செய்யும், மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும் போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான்; நெருப்பை மூட்டி அப்பமும் சுடுகிறான்; அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டு பண்ணி, அதைப் பணிந்து கொள்ளுகிறான். ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான்; ஒரு தண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங்காய்ந்து; ஆ ஆ அனலானேன்; நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி; அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரக தெய்வமாகச் செய்து, அதற்கு முன் விழுந்து அதை வணங்கி: நீ என் தெய்வம், என்னை இரட்சிக்க வேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான்'' (ஏசா.44:14-17). இதை அநேக பெயர் கிறிஸ்தவர்களும்கூட செய்கிறார்கள். மேலும், தங்கள் விக்கிரகமாகிய மரத்தைச் சுமந்து, இரட்சிக்க மாட்டாத தேவனைத் தொழுது கொள்ளுகிறவர்கள் அறிவில்லாதவர்கள் என்று ஏசாயா குறிப்பிடுகிறான்.

ஏனென்றால் அவைகளுக்கு மூக்கிருந்தும் முகராது, காது இருந்தும் கேளாது, வாயிருந்தும் பேசாது, கண்கள் இருந்தும் பாராது, கால்கள் இருந்தும்

நடக்காது அவைகளை தூக்கிக்கொண்டு போகவேண்டும். அவைகளைப் பண்ணுகிறவர்களும் அவைகளை நம்புகிறவர்களும் அவைகளைப்போலவே இருக்கிறார்கள். நாம் இந்த உலகத்தில் இரட்சிக்கப்படும்படிக்கு ''வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய (இயேசுவுடைய) நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' என்று பேதுரு தமது பிரசங்கத்தில் குறிப்பிடுகிறார் (அப்.4:12).

தாவீது அரசன் கூறும் மற்றுமொரு வாக்கியம்; ''நம்முடைய தேவன் இரட்சிப்பை அருளும் தேவனாயிருக்கிறார்; ஆண்டவராகிய கர்த்தரால் மரணத்திற்கு நீங்கும் வழிகளுண்டு'' (சங்.68:20). மரணபிடியிலிருந்து காப்பாற்ற தேவனாலே மட்மே முடியும். ஆம், இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே, அது இயேசுவிடம் உண்டு ''ஒருவன் என் வார்த்தையைக் கைக் கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்கிறார்'' (யோவா.8:51). அவருடைய வார்த்தையைக் கைக் கொள்ளும் போது நாம் மரணத்திலிருந்து விடுவிக்கப்படுகிறோம். அவர் ''மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடைய வராயிருக்கிறார்'' (வெளி.1:18). அந்த அதிகாரமுடையவராயிருந்தபடியினாலே மரித்து நான்கு நாட்களான லாசருவின் கல்லறையைப் பார்த்து லாசருவே வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். மரித்து அடக்கம் செய்யப்பட்ட லாசரு இயேசுவின் சத்தத்தைக்கேட்டு வெளியேவந்தான்.

மரித்துப்போன லாசருவை எழுப்பின கர்த்தர் இன்று உயிரோடு இருக்கிற நம்மையும் நம் குடும்பத்தாரையும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். ஏசாயா தீர்க்கன் மூலம் கர்த்தர் உரைக்கும்போது; ''என் இரட்சிப்பு தாமதிப்பதுமில்லை'' என்கிறார் (ஏசா.46:13). சதாகாலமும் ஜீவிக்கிற அவரை நோக்கி நாம் கூப்பிடும்போது அவர் உடனே நம்மை இரட்சிக்கிறார். அப்போஸ்தலநடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் 3000பேர் இரட்சிக்கப்பட்டார்கள். அவர்கள் பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு இருதயத்திலே குத்தப்பட்டவர்களாக சகோதரே, நாங்கள் என்னசெய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள் ''பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்றான் (அப்.2:38) அந்தப்படியாக திருமுழுக்கு பெற்று இரட்சிக்கப்பட்டார்கள்.

''பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப் பாருங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள் நானே தேவன், வேறொருவரும்

இல்லை'' (ஏசா.45:22). ஆம் பிரியமான நேயரே, வானத்திற்கும், பூமிக்கும் தேவனாகிய கர்த்தரை அல்லது வேறொரு நாமம் இல்லை. நாம் இரட்சிக்கப்பட அவரையே நோக்கிப் பார்க்கவேண்டும். ஆகாயத்துப் பூண்டுகளும், காட்டு மிருகங்களும், நாட்டு மிருகங்களும் அவரையே நோக்கி கூப்பிடுகின்றன அவைகளை அவர் போஷிக்கிறார். மனிதர்களாகிய நாமும் அவரை நோக்கி பார்த்து இரட்சிக்கப்படுவோம். நாம் அவருக்கு போஜனம் கொடுக்க முடியாது. அவர் நம்மைப்போல ஒரு மனுஷன் அல்ல. ''எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானது போல, மனுஷர் கைகளால் பணிவிடை கொள்ளுகிறது மில்லை'' (அப்.17:25). நம்மை உண்டாக்கின தேவன் நம்முடைய கைகளில், பணிவிடையை எதிர்பாராமல் நம்மையே எதிர்பார்க்கிறார்.

இதை அறியாது அநேகர் தேவனுக்கென்று விசேஷ படையல், நேர்த்திக் கடன் என்று சொல்லி தங்களுடைய உடமைகளைக் கொடுத்து சரிக்கட்ட நினைக்கின்றனர். சகல மனிதரையும் ஒரே இரத்தத்தினால் தோன்றப்பண்ணின அவர் இவ்விதமான பலிகளையும், படையல்களையும் ஏற்றுக்கொள்ளார். ''அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர் போலிருந்தார். இப்பொழுதோ மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்'' (அப்.17:30). அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. நீங்களும் இன்றே உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி அவரை ஏற்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள் (மாற்.16:16). இரட்சிக்கும் தேவன் தாமே உங்களை இரட்சிப்பாராக!

கேள்வி நேரம்

இரட்சிக்கும் தேவனை அறியாதவர்கள் முடிவு என்னவாகும்?

இப்பூமியில் தன்னை உண்டாக்கினவரை அறிந்து கொள்ள வேண்டியது ஒவ்வொருவரும் செய்யவேண்டிய முதல் வேலையாகும். எனக்கு தெரியாது, எனக்கு யாரும் சொல்லவில்லை என்று ஒருவரும் சொல்லக்கூடாது. குழந்தை பிறந்தவுடன் அதற்கு பேசவும் நடக்கவும் கற்றுத் தருகிறார்கள். அது பழகியவுடன் தானே நடக்க ஆரம்பித்துவிடுகிறது, பேச ஆரம்பித்துவிடுகிறது. அதைப்போல, நாமும் பிதாவாகிய தேவனை, நம்மை உண்டாக்கினவரை அறிந்துகொள்ளவேண்டும். அதுவும் ஜீவனுள்ள தேவனை அறிந்து கொள்ளவேண்டும்.

அப்படி அறியாத பட்சத்தில் வேதம் கூறுவதைக் கவனியுங்கள்: ''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜ்வாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். ...அவர்கள் கர்த்தருடைய சந்திதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்'' (2தெச.1:7-10). நீங்கள் உங்களை இரட்சிக்க வந்த ஆண்டவர் இயேசுவையும் அவரை அனுப்பிய பிதாவாகிய தேவனையும் அறிந்துகொள்ளுங்கள்.

15. சிநேகிதர்
Friends

உலகத்திலே நமக்கு சிநேகிதர் அவசியம். ஆனால் அந்த சிநேகிதர் எப்படிப்பட்டவராயிருக்க வேண்டும். அந்த உண்மையுள்ள சிநேகிதர் யாராயிருக்க முடியும் என்பதைக் குறித்து நாம் ஆராய இருக்கிறோம். பரிசுத்த வேதாகமம் ''உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை'' என போதிக்கிறது (யாக்.4:14). இன்றைய நாட்களில் அநேகர் உலக சிநேகத்தையே விரும்புகின்றனர். இதற்கு என்ன காரணம் என்று நாம் பார்க்கும்போது உலகம் தன்னுடையதைச் சிநேகிக்கிறது. அவன் அவைகளால் ஈர்க்கப்பட்டு அடிமையாகிறான். ''செல்வம் அநேக சிநேகிதரைச் சேர்க்கும்'' என்ற நீதி.19:4-ம் வசனத்தின்படி பணமிருக்கும் இடத்தில் அநேக நண்பர்கள் இருக்கிறார்கள். உல்லாசமாக பல இடங்களுக்கு கடந்துசெல்கிறார்கள். இந்த விதமான ஐக்கியம் நாளடைவில் தேவனுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட கொண்டு செல்கிறது. ஆகையால் உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை என காண்கிறோம். சிலர் நம்மைப் பற்றி தெரிந்துகொள்ள உன் நண்பன் யார் என்று சொல்லு பின்பு உன்னைப் பற்றி சொல்வேன் என்பார்கள். அது உண்மைதான் நம்முடைய ஐக்கியத்தை வைத்து நம்முடைய குணங்களை அறிந்து கொள்ள முடியும்.

நம்முடைய சிநேகிதர் எப்படிப்பட்டவராயிருக்க வேண்டும்? முதலாவது அவர்கள் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தவரை தொழுதுகொள்பவராயிருக்க வேண்டும். யோபுக்கு மூன்று சிநேகிதர் இருந்தார்கள் என யோபு2:11-ல் வாசிக்கிறோம். அவர்கள் யோபு ஆராதிக்கிற தேவனை ஆராதிக்கக் கூடியவர்களாய் இருந்தார்கள். ஆனால், இந்த மூன்று

சிநேகிதரால் யோபு மிகவும் நெருக்கப்பட்டு ''உபாதிக்கப்படுகிறவனுக்கு அவனுடைய சிநேகிதனால் தயை கிடைக்க வேண்டும்; அவனோ சர்வ வல்லவருக்குப் பயப்படாதே போகிறான். என் சகோதரர் காட்டாறுபோல மோசம் பண்ணுகிறார்கள். ஆறுகளின் வெள்ளத்தைப் போலக் கடந்து போகிறார்கள்'' என்று அங்கலாய்க்கிறார் (யோபு6:14,15). இப்படிப்பட்ட சகோதரர்களை யோபு சிநேகிதர்களாக பெற்றிருந்தும் இவர்களுக்காக ஜெபிக்கத் தவறவில்லை. ''யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார் (யோபு.42:10). இன்றைக்கும் சிலருடைய சிநேகிதர்கள் இப்படியே இருக்கிறார்கள்.

இரண்டாவது, சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிக்க வேண்டும். தாவீதுக்கு அப்படிப்பட்ட சிநேகிதன் ஒருவன் இருந்தான். அவனை நீங்கள் நன்கு அறிவீர்கள். தன் தகப்பனாகிய சவுல் தாவீதைக் கொல்ல வகை தேடிக்கொண்டிருக்கும் போது ''யோனத்தான் தாவீதை மிகவும் சிநேகித்தபடியினால்... தன் உயிரைச் சிநேகித்தது போல சிநேகித்தான்'' (1சாமு.20:17). இதை அறிந்த சவுல் தன் மகன் யோனத்தானை அழைத்து ''இரண்டகமும் மாறுபாடுமுள்ளவளின் மகனே, நீ உனக்கு வெட்கமாகவும், உன் தாயின் மானத்திற்கு வெட்கமாகவும், ஈசாயின் மகனைத் தோழனாகத் தெரிந்து கொண்டிருக்கிறதை நான் அறியேனோ? ஈசாயின் மகன் பூமியின் மேல் உயிரோடிருக்கும் நாள் வரையும் நீயானாலும் உன் ராஜ்யபாரமானாலும் நிலைப்படுவதில்லை; இப்பொழுதே அவனை அழைப்பித்து, என்னிடத்தில் கொண்டு வா, அவன் சாக வேண்டும் என்றான்'' (1சாமு.20:30,31). தாவீதை தன் உயிரைப்போல சிநேகித்த யோனத்தானுக்கு தன் தகப்பன் சொன்ன வார்த்தை மனநோவாயிருந்தது.

அவனோ தன் தகப்பனாகிய சவுலுடைய கைக்கு தாவீதை தப்புவித்துக்கொண்டு வந்தான். இவர்களுடைய சிநேகதத்தை சவுலாலும் பிரிக்க முடியாதிருந்தது. ''சிநேகிதன் எல்லாக் காலத்திலும் சிநேகிப்பான்'' நீதி.17:17 என்ற வசனத்தின்படி மரண பரியந்தமும் யோனத்தான் தாவீதை சிநேகித்தான். மேலும் ''சிநேகிதருள்ளவன் சிநேகம் பாராட்ட வேண்டும்; சகோதரனிலும் அதிக சொந்தமாய்ச் சிநேகிப்பவனும்முண்டு'' நீதி.18:24 என்ற திருவசனத்தின்படியேயும் சிநேகித்தான். இப்படிப்பட்ட சிநேகம் கர்த்தருக்குப் பிரியமானது. உங்களுக்கும் இப்படிப்பட்ட சிநேகிதர் உண்டா?

மூன்றாவது, சிநேகிதன் பொறாமை கொள்ளக்கூடாது. சிலர் நல்ல சிநேகமாக இருப்பார்கள். நாளடைவில் பிரிந்து போவார்கள். அவர்கள் இணைந்து ஆரம்பித்த தொழிலும் முறிந்துபோகும். இதற்கு காரணம் பொறாமையே என காண்கிறோம். யாக்கோபின் பிள்ளைகளை அறிவீர்கள்.

இவர்கள் ''பொறாமை கொண்டு யோசேப்பை எகிப்துக்குக் கொண்டுபோகும் படியாக விற்றுப்போட்டார்கள்'' (அப். 7:9). தங்கள் தகப்பன், யோசேப்பை அதிகம் நேசித்ததினால் சகோதரர்கள் அவன் மேல் பொறாமை கொண்டனர். இன்றைய நாட்களிலும் அநேக குடும்பங்களில் இதை நாம் பார்க்கமுடிகிறது.

இயேசு கிறிஸ்து உலகத்தில் உள்ள ஒவ்வொருவரையும் சிநேகித்து இரட்சிக்க வந்தார் என்பதை அறிவோம். ஆனால் யூதமக்களோ ''பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்கள் என்று பிலாத்து அறிந்தான்'' என்று மத். 27:17-ல் வாசிக்கின்றோம். வசனம் போதிக்கிறது ''அன்பானது பிறனுக்குப் பொல்லாங்கு செய்யாது; ஆதலால்...களியாட்டும் வெறியும், வேசித்தனமும், காமவிகாரமும், வாக்குவாதமும், பொறாமையும், உள்ளவர்களாய் நடவாமல் பகலிலே நடக்கிறவர்கள் போலச் சீராய் நடக்கக் கடவோம்'' என்கிறார் பவுல் (ரோம. 12:10-13).

உண்மையுள்ள சிநேகிதர் யார்? அவருடைய குணாதிசயங்கள் என்ன? அவர் எப்படிப்பட்டவர்? அவரை சிநேகிக்க நாம் என்ன செய்யவேண்டும்? போன்ற கேள்விகள் எழும்புகிறதல்லவா, அவர் சொல்லுகிறார்: ''என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப்பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாய பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்'' (நீதி. 8:20,21). தேவன் நம்முடைய உண்மையுள்ள சிநேகிதராக என்றும் விளங்குகிறார். நாம் அவரை சிநேகிக்கும் போது மெய்ப்பொருளைச் சுதந்தரித்துக்கொள்வோம். இந்த பொய்யான உலகத்திலும், பொய்யான சிநேகத்திலும் வாழ்கின்ற நாம் அவைகளை களைந்து மெய்ப்பொருளை சுதந்தரித்துக்கொள்ள மெய்யான சிநேகிதரான தேவனையும் அவர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் சிநேகிப்போம். அவர் நம்முடைய தேவைகளை சந்தித்து நீதியிலும், நியாயத்திலும் நடத்துகிறவர். அவர் ஒரு நாளும் உங்களை கைவிடாதவர். ''நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேச்சலைக் கண்டடைவான்'' என்கிறார் (யோவா. 10:9).

இயேசு கிறிஸ்து பரலோகத்தின் வாசலாகவும், வழியாகவும் இருக்கிறார். அவர் மூலமாகவே அல்லாமல் வேறொருவராலும் பிதாவாகிய தேவனை காண முடியாது. அவர் ஆண்டவராயிருந்தும் தம்முடைய சீஷர்களைப் பார்த்து ''இனி நான் உங்களை ஊழிக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறிய மாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன்'' என்றார்

(யோவா. 15:15). ஒரு சிநேகிதனோடே பேசுவதுபோல எல்லாவற்றையும் ஆண்டவர் சீஷர்களுக்கு அறிவித்தார். அவருடைய மார்பிலே சாய்ந்துகொண்டு அவருடைய போதகத்தைக் கேட்டனர்.

மேலும், ''ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை'' என்ற யோவா. 15:13-ம் வசனத்தின்படியே தம்மை சிநேகிக்கிறவர்களுக்காக தமது ஜீவனையே சிலுவையில் ஒப்புக் கொடுத்தார். இந்தவிதமான அன்பை நாம் ஒருவரிடத்திலும் காண முடியாது. தேவன் மோசேக்கு கொடுத்த கட்டளைகள் யாவையும் உபதேசிக்கவும், அதன்படி நடக்கவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலருக்கு கருத்தாய் போதித்தான்.

அவர் தந்த மாதிரியின்படியே ஆசரிப்புக் கூடாரத்தையும் எழுப்பினான். ''ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல, கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார் (யாத். 33:2-11). அதைப் போல நம் ஆண்டவரும், தம்முடைய சீஷர்களோடு முகமுகமாய்ப் பேசி ''நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்'' என்றார் (யோவா. 15:14). அந்தப் படியே சீஷர்கள் நிலைத்திருந்து எருசலேம் துவக்கி சுவிசேஷத்தை உலகமெங்கும் பிரசித்தப்படுத்தினார்கள். இன்று நீங்களும் நானும் சீஷர்களிடத்திலே ஆண்டவர் ஒப்புவித்த அந்த புதிய உபதேச சட்டத்திற்கு கீழ்படிந்து அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தால் நாமும் அவருடைய சிநேகிதர்களாயிருப்போம்.

யோபு தன் சிநேகிதர்களுக்காக வேண்டுதல் செய்தபோது அவர்களுடைய மீறுதல்களை கர்த்தர் மன்னித்தார் என்று நாம் தியானித்தோம். அதைப்போல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக வேண்டுதல் செய்யக்கூடியவராயிருக்கிறார். ''நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே'' (யோவா. 17:9). மேலும் ''நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்'' (1யோவா. 2:1). இப்பேர்பட்ட சிநேகிதர் நமக்கு இருக்கும்போது நாம் ஏன் கவலைப்படவேண்டும்.

உங்கள் கவலைகளை அவர் மீது வைத்து அவரை உண்மையோடு சிநேகியுங்கள். அவர் உங்களை சிநேகித்து உங்களுக்காக தம் ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்தவர். ஒருவரும் செய்யக்கூடாத காரியத்தை செய்து பாவத்திலிருந்து நம்மை மீட்டெடுத்தவர். இச்செய்தியை

வாசிக்கிற அன்பான சகோதரனே, சகோதரியே இந்த மெய்யான தேவனையும் அவர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் விசுவாசித்து உங்களை சிநேகித்து உங்களுக்காக தமது ஜீவனையே ஒப்புக்கொடுத்த இயேசுவையும் அவருடைய நித்திய கட்டளைகளையும் பற்றிக் கொள்ளுங்கள். ''என்னைச் சிநேகிக்கிறவர்களை நான் சிநேகிக்கிறேன்'' என்ற வசனத்தின்படியே கர்த்தர் தாமே உங்களை சிநேகித்து ஆசீர்வதிப்பாராக!

கேள்வி நேரம்

தேவனை அறியாத மக்களோடு சிநேகம் கொள்ளலாமா?

வேதாகமம் முழுமையும் அவருடைய பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்ளவேண்டுமென்று போதிக்கிறது. தேவனை ஆராதித்துக்கொண்டும், அவரை வானத்திற்கும் பூமிக்கும் மேலான தேவனாக கொண்டும் வந்த ஒவ்வொருவரும் அப்படிப்பட்ட பிள்ளைகளோடு ஐக்கியம் கொண்டுள்ளனர். ஒரு சிலர் அந்நிய ஸ்திரீகளை விவாகம் பண்ணி வீழ்ந்துபோனார்கள் என்று காண்கிறோம்.

பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய நிரூபத்தில் ''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே'' என்கிறார் (2கொ.6:14-16).

தேவனுடைய மனுஷன் தேவனை அறியாத பேலியாளின் மக்களோடு ஐக்கியமாக சிநேகமாக இருக்க வேதம் அனுமதிப்பதில்லை. இதை மீறி நடப்பவர்கள் பலவிதமான உபத்திரவத்திற்குள்ளாக தள்ளப்படுகிறார்கள். தேவனால் கைவிடப்படுகிறார்கள். உங்களுடைய தீர்மானம் என்ன? உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

16. பாரம்பரியம்
Tradition

பாரம்பரிய கட்டுகள் இன்றும் மனிதனை ஆட்டிப் படைக்கின்றது. இப் பாரம்பரியங்களில் சிக்குண்டோர் ஏராளம். பாரம்பரியம் ஒரு மனிதனை பரலோகம் கொண்டு செல்லாது. மாறாக அது பாதாளத்திற்கு கொண்டு செல்லும்.

பாரம்பரியம் மாமிசத்தை பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றுக்கும் பயன்படாது. ஆகையால் பாரம்பரியம் உடைக்கப்பட வேண்டிய ஒன்று. அது அழிக்கப்பட வேண்டியதும்கூட.

வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவை பார்த்து: ''உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கை கழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள் (மத்.15:2). அதற்கு அவர் ''நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?'' என்றார் (மத்.15:3). தேவனுடைய கற்பனையில் சொல்லப்பட்ட கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் தாங்களாக ஏற்படுத்திய வீணான போதனைகளை ஜனங்களுக்குப் போதிக்க முற்பட்டார்கள். அவர்களுடைய போதகமானது தேவனுடைய கற்பனையில் சொல்லப்பட்ட உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்ற கட்டளையை தள்ளி விட்டு, தகப்பனையாவது, தாயையாவது நோக்கி உனக்கு நான் செய்யத்தக்க உதவி உண்டோ, அதைக் கொர்பான் என்னும் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி அவனுடைய கடமை தீர்ந்தது என்று போதிக்க ஆரம்பித்தனர். இந்த மாயக்காரரை குறித்து கர்த்தர் ''இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது'' என்றார் (மத்.15:8).

உதட்டினால் கர்த்தரிடத்தில் சேர்ந்து அவருக்கு இருதயத்தை கொடுக்காத கோடான கோடி ஜனங்கள் இப்பூமியில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது என்று கர்த்தர் சொல்லுகிறார். ''எப்படியெனில் இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலை பாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய் சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கை கழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார் (மத்.15:19,20). மனிதனுடைய போதனைக்கும் ஆண்டவருடைய போதனைக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் இங்கு காண முடிகிறது. மனிதன் கை கழுவாமல் சாப்பிடுகிறது மனிதனை தீட்டுப்படுத்தும் என்கிறான். ஆனால் ஆண்டவரோ இருதயத்திலிருந்து புறப்பட்டு வருபவைகளே மனுஷனை தீட்டுப்படுத்தும் என்கிறார்.

பவுல் இதைக் குறித்து விளக்கும்போது ''மாயமான தாழ்மையினாலும், தேவ தூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளில் துணிவாய் நுழைந்து, தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள்

பந்தயப் பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப் பாருங்கள். நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும், போதனைகளின் படியும் நடந்து தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்து போகுமே இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனைகளையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர் கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது'' என்கிறார் (கொலோ2:19-23).

பாரம்பரியமாக அனுசரித்து வந்து விட்டோம். இப்பொழுது இதையெல்லாம் எப்படி விட்டு விடுவது என்ற எண்ணமுண்டாகின்றது. அங்கே எங்கள் உறவினர்கள் இருக்கிறார்கள், அங்கே எங்களுக்கு நிரந்தர சங்கம் இருக்கிறது, அங்கே எங்களுக்கு நிரந்தர கல்லறை இருக்கிறது. இப்படி அடுக்கிக் கொண்டே உங்கள் மனம் போகக் கூடும். ஆண்டவர் சீஷர்களை அழைக்கும்போது அவர்களில் சிலர் மீன் பிடிக்கிறவர்களாயிருந்தனர். ''இயேசு அவர்களை நோக்கி என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் தங்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள்'' (மாற்.1:17,18). அந்தப்படியே இன்னும் சிலர் வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருக்கிறதைக் கண்டு உடனே அவர்களையும் அழைத்தார். அப்பொழுது அவர்கள் தங்கள் தகப்பனை கூலியாட்களோடு படகிலே விட்டு, இயேசுவின் பின்னே சென்றார்கள். நாமும் அந்தப்படியே அழைக்கப்பட்டுள்ளோம். நாம் சாக்குபோக்கு சொல்லிக் கொண்டு பாரம்பரியத்தில் நிலைநிற்க முற்படக்கூடாது. கர்த்தர் அதை விரும்பவில்லை. ''சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்'' (யோவா.8:22). ஒவ்வொருவரையும் சத்தியமே விடுதலை செய்யும். பாரம்பரியம் ஒருநாளும் ஒருபோதும் ஒருவரையும் விடுதலைசெய்யாது.

எசேக்கியா ராஜாவைப் பற்றி படித்திருப்பீர்கள். ''அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந்நாட்கள் மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள். அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இல்லை. அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து,

கர்த்தர் மோசேக்கு கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார். அவன் போகிற இடம் எங்கும் அவனுக்கு அனுகூலமாயிற்று (2இரா.18:4-7). மோசே எழுதின கற்பனைகளைக் கைக் கொண்ட எசேக்கியா ராஜா, இஸ்ரவேலர் வைத்து தூபங்காட்டி வந்த அந்த மோசே உண்டு பண்ணின, வெண்கல சர்ப்பத்தை உடைக்க பயப்படவில்லை. அது பாரம்பரியமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது என்று கண்டான். மோசே அந்நாட்களிலே கர்த்தருடைய கட்டளைபடி அதை உருவாக்கினான். ஆனால் அது அத்தோடு முடிந்து போய்விட்டது கொள்ளிவாய் சர்ப்பத்தினால் கடிபட்டவர்கள் அதை நோக்கிப் பார்த்துப் பிழைத்தார்கள்.

அந்த நாட்களுக்குப் பின்பு அதை நோக்கி பார்த்து அவர்கள் பிழைக்கவில்லை. ஆகவே அக்கால கட்டத்தோடு அது முடிவுக்கு வருகிறது. ஆனால் இஸ்ரவேலரோ, அதை எசேக்கியா காலம் மட்டும் வைத்து அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள். இது கர்த்தருக்கு விரோதமான பாவம் அல்லவா? இன்றும் இப்படியே அநேகர் பாரம்பரியமாக வீணானவைகளை வைத்துக்கொண்டு மூதாதையரை நினைவுகூரும்படியாக செய்கிறார்கள். அதற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கவும், அதற்காக உபவாசம் இருக்கவும், தங்களை கீரிக்கொள்ளவும், வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்ளவும் செய்கிறார்கள். இப்பாரம்பரியம் ஒருவனையும் காப்பாற்றாது. ஆகையால் பாரம்பரியத்தை எசேக்கியாவைப்போல உடைத்துப்போட தயங்காதிருங்கள்.

என்னுடைய தகப்பனார் கடந்த காலத்தில் வீணான விக்கிரக படங்களை வைத்து நமஸ்கரித்து வந்தார். நான் கர்த்தரை ஏற்றுக்கொண்டவுடன் இவையெல்லாம் தவறு என்று சொல்லிக்கொண்டு வந்தேன். அதை அவர்கள் ஏற்க மறுத்தனர். இந்த பாரம்பரியத்தை உடைப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்று அப்படங்களை எடுத்து சுட்டெரித்து அழித்துப்போட நினைத்தேன். ஆனால் அதற்குள்ளாக என் சகோதரனோ அதை எனக்கு முன்னமே செய்துவிட்டான். அதைப் பார்த்த என் தகப்பனார் கண்ணீர் வடித்தார். நீங்கள் ஏன் அழுகிறீர்கள். அதற்கு ஒன்றுமில்லை என்றேன். அதன் பின்பு அவரும் இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்தார். என் பிரிமான சகோதரரே, பாரம்பரியம் இருக்கும்வரை அது வளர்ந்துகொண்டே போகும் எசேக்கியாவைப்போல அதை முடிவுக்கு கொண்டு வருவோமானால் அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். அதை செய்வீர்களா? முதல் நூற்றாண்டு காலத்தில் பவுலின் ஊழியத்தில் தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.

''இது எபேசுவிலே குடியிருந்த யூதர் கிரேக்கர் அனைவருக்கும் தெரிய வந்தபோது, அவர்களெல்லாரும் பயமடைந்தார்கள்; கர்த்தராகிய

இயேசுவின் நாமம் மகிமைப்பட்டது. விசுவாசித்தவர்களில் அநேகர் வந்து, தங்கள் செய்கைகளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக் காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டு வந்து, எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள். அவைகளின் கிரயத்தைத் தொகை பார்த்து ஐம்பதினாயிரம் வெள்ளிக் காசாகக் கண்டார்கள்'' (அப்.19:17-19). கர்த்தரை விசுவாசித்த மாயக்காரர்களின் செய்கையை நாம் இங்கு காண்கிறோம். பாரம்பரியமாக மாயவித்தைகளினால் பிழைத்து வந்து, அநேகரை மாயக்கட்டுகளினாலே வஞ்சித்த இவர்கள் அவர்களுடைய பாரம்பரிய பழக்கவழக்கங்களை பாதுகாத்து வைக்காமல் அதை தாமதமின்றி சுட்டெரித்தனர். அதை விற்பனை செய்திருந்தால் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசை அவர்கள் பார்த்திருக்கக்கூடும். மாறாக அவர்கள் அப்படிச்செய்யாமல் அதை அழித்தார்கள்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நண்பரே, பாரம்பரியங்களை நாம் விட்டு விடுவதோடல்லாது அவைகளை அழித்துப் போட வேண்டும். அப்படிச் செய்யும் போது அவைகள் மறுபடியும் வளர்வதற்கு வழியில்லாமற்போகும். இதை இந்த மாயவித்தைக்காரர்கள் சரியாகச் செய்தார்கள். ஆகையால் அன்பானவர்களே, ''நீங்கள் நிலை கொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்'' 2தெச.2:15-ல் சொல்லப்பட்ட பவுலின் கூற்றுப்படி. பாரம்பரியங்களை தள்ளிவிட்டு வேதாகமத்திற்கு திரும்புவோம்.

கேள்வி நேரம்

பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு நாம் விலகவேண்டுமா?

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே சபையாருக்கு இப்படியாக எழுதுகிறார்: ''மேலும் சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக் கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலக வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்'' என்கிறார் (2தெச.3:6). ஜீவனுள்ள மார்க்கத்தில் இருக்கிற நாம் ஜீவனுள்ள வசனங்களின்படி ஒவ்வொருநாளும் நடக்கவேண்டும். அப்படி நடக்கும் பட்சத்தில் அதற்கு விரோதமான வகையில் எந்த ஒரு சகோதரன் நடந்தாலும் அப்படிப்பட்டவர்களை விட்டு விலகும்படியாக கட்டளையைப் பெற்றிருக்கிறோம். இதில் முகதாட்சணியம் பார்க்கவேண்டிய அவசியமில்லை.

அநேகர் தங்களை தாங்களே கெடுத்துக்கொள்ளும்படியாக பிசாசின் வஞ்சகமான உபதேசங்களுக்கு செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகியும்,

மறுதலித்தும்போய்விடுகின்றனர். இதில் குறிப்பாக பாரம்பரியங்களுக்கு அடிபணிந்து திருமணம், வேலைவாய்ப்பு, உறவு இவைகளை மையமாக வைத்திருப்பவர்கள் வெகுசீக்கிரத்தில் உண்மையான மார்க்கத்தை விட்டு விலகிப்போகிறார்கள். இவர்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இவர்களோடு கலவாதிருக்கவும்வேண்டும். இப்படிப் பட்டவர்களை பிதாவாகிய தேவன் ஏற்றுக்கொள்ளார். இவர்களைக் குறித்து யூதா, மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்கள் என்கிறார். இவர்களுக்கு என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு விலகி உங்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

17. பிறவிக்குருடனின் விசுவாசம்
The Faith of Born Blind

கண்பார்வையுள்ளவர்களே ஆண்டவரை விசுவாசியாமற் போய்விடுகிறார்கள். ஆனால் யோவான் எழுதின சுவிசேஷ புத்தகம் ஒன்பதாம் அதிகாரத்தில், ஒரு பிறவிக்குருடனைப் பற்றி படிக்கிறோம். ஆண்டவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்றார்கள் அதற்கு இயேசு; அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான் என்றார். இன்றைக்கு அநேகர் இவன் என்ன பாவம் செய்தானோ இப்படி இருக்கிறான் அல்லது இவன் தகப்பன் என்ன பாவம் செய்தானோ இவன் நாயைப்போல் அழைகிறான் என்று பலவிதமான வார்த்தைகளாலே சொல்லி தூற்றுவார்கள். இந்தப் பிறவிக்குருடனுடைய விஷயத்தில் ஆண்டவருடைய பதில் மிக சிறப்பானதாக இருந்தது. தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான். ஆம் அன்பான நேயரே, குறைபாடுகளோடு பிறந்த எந்த ஒரு நபரையும் அலட்சியமாக எண்ணிவிடாதே. அவனை உண்டாக்கின தேவன் அவனுக்காக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்திருப்பார்.

இந்த பிறவிக்குருடனிடத்தில் வந்த ஆண்டவர் இயேசு, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி; நீ போய், சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்பதற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்படியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த் திரும்பிவந்தான். அப்பொழுது அயலகத்தாரும், அவன் குருடனாயிருக்கையில் அவனைக் கண்டிருந்தவர்களும்; இவன் உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்த

வனல்லவா என்றார்கள் சிலர் அவன்தான் என்றார்கள். வேறு சிலர்; அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள். அவனோ; நான் தான் அவன் என்றான். இன்றைய உலகம் மோசம்போய்விட்டால் ஐயோ மோசம் போய்விட்டான் என்பார்கள். மிகவும் சிறப்பானவனாக வளர்ந்துவிட்டால் இவனுக்கு எப்படி இவ்வளவு செல்வாக்கு வந்தது என்று பேச ஆரம்பித்துவிடுவார்கள்.

அதைப்போல, யோவான் 9:10-ம் வசனத்தில் இந்த பிறவிக்குருடனை ஜனங்கள் விடவில்லை. உன் கண்கள் எப்படித் திறக்கப்பட்டது என்றார்கள். அவன் அவர்களுக்கு பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என்கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான். கவனித்தீர்களா, தான் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தை மற்றவர்கள் மத்தியில் சொல்ல அவன் தயங்கவில்லை. மேலும் கர்த்தர் தமக்கு என்ன கட்டளையிட்டாரோ அதை அப்படியே செய்து கழுவி பார்வையடைந்தான். அநேகர் பலவிதமான போராட்டங்களோடு தேவனுடைய சமுகத்தை நாடி வருகிறார்கள். அவர்களைப் பார்த்து ஐயா நீங்கள் ஒழுங்காக வேதம் வாசிக்கிறீர்களா என்று கேட்டால் ஓ வாசிக்கிறேன் என்பார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் அவர் ஒழுங்காக வேதம் வாசித்தால் தேவன் அவர்களுடைய வாழ்வில் பெரிய காரியங்களை செய்திருப்பார். வேதத்திலுள்ள அநேக மகத்துவமான காரியங்களையும் புரிந்துகொண்டிருப்பார்கள். ஆனால் அதைச் செய்யாமல் அனுதினமும் கவலையோடு கர்த்தரை தேடுகிறதை நாம் காண்கிறோம். இந்த பிறவிக்குருடனுக்கு கர்த்தர் சொன்ன காரியத்தை, அவன் விசுவாசத்தோடு சென்று, அதன்படி செய்து பார்வையடைந்தான்.

யோவான் 9:15-ம் வசனத்தில் பரிசேயரும் அவனை நோக்கி: நீ எப்படிப் பார்வையடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன்: சலிக்காமல் அவர் என் கண்களின்மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன் என்றான். இந்த குருடன் அவர்களைப் பார்த்து பயப்படவில்லை, மாறாக கர்த்தர் இவனுக்குச் செய்ததை மறுபடியுமாக அப்படியே அறிக்கையிட தயங்கவில்லை. என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா? நம்மிடம் திரும்ப திரும்ப ஒரு காரியத்தை கேட்டால் போதும் கோபம் வந்துவிடும். ஆனால் இவனோ மிக பொறுமையாக பதில் சொன்னான்.

யோவான் 9:17-ம் வசனத்தில் மறுபடியும் அவர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு அவன் அவர் தீர்க்கதரிசி என்றான். அவர்களோ இவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை நம்பாமல்

இவனுடைய தாய்தகப்பனிடம் போய் கேட்போம் வாருங்கள் என்று சொல்லி, அவனுடைய தாய் தகப்பனை நோக்கி: இவன் குருடனாய் பிறந்தான் என்று சொல்லுகிறீர்களே, அவன் இவன்தானா? இவனேயானால் இவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் இவன் எங்கள் குமாரன் தான். இவன் குருடனாய் பிறந்தான். ஆனால் இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரியாது என்று சொன்னார்கள்.

ஏனென்றால், யூதர்களுக்கு பயந்தபடியினாலும், எவனாவது இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கைபண்ணினால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்க வேண்டுமென்று யூதர்கள் கட்டுப்பாடு செய்திருந்தார்கள். ஆகையால் அது எங்களுக்குத் தெரியாது என்று சொன்னார்கள். இந்தக் கட்டுப்பாடு பிறவிக்குடனுக்கும் தெரியும். ஆனால் அவன் இயேசுவை அறிக்கையிட தன் தாய்தகப்பனைப்போல் யூதர்களுக்குப் பயப்படவில்லை. ஏனென்றால் குருடனாய் பிறந்த அவன் இப்பொழுது காண்கிறான் அந்த பாக்கியத்தை ஆண்டவர் இயேசுவின் மூலம் பெற்றான். ஆண்டவர் இயேசுவின் மூலம் நன்மைகளை பெற்ற அநேகர் அவரை அறிக்கையிட பயப்படுகின்றனர். அதை நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. பேதுருகூட இயேசுவோடு மூன்றரை வருடம் இருந்தவன் கடைசிவேளையில் ஆண்டவருடைய எச்சரிப்பைப்பெற்றும், மூன்று முறை மறுதலித்தான் என காண்கிறோம். காரணம் என்ன? சரீர பயம் நம்மையும் சிலுவையில் அறைந்துவிடுவார்கள் என்ற அச்சம். ''மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன்''என்கிறார் (மத்.10:32).

யோவான்9:24-ம் வசனத்தில் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து; இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்றார்கள். அவன் பிரதியுத்தரமாக: அவர் பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும் என்றான். சரியாக பதில் கொடுத்தான். சிலர் இயேசுவைப் பற்றி தவறான பொய்ப் பிரச்சாரங்களை செய்து வருகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் அவர்செய்த நன்மைகளை எண்ணிப்பார்க்கவேண்டும் அதைவிடுத்து, அவர் எப்படி பரிசுத்தமாக இந்த உலகத்தில் வாழ்ந்திருக்க முடியும், அவர் எப்படி தேவனுடைய குமாரனாக இருக்க முடியும் என்றெல்லாம் வாதிடுவது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்காது. கர்த்தர் யோபோடு பேசும்போது: ''இப்போழுதும் புருஷனைப்போல் இடைகட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு. நான் பூமியை

அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி'' என்கிறார் (யோபு383,4). அன்பரே சிந்தியுங்கள்.

யோவான் 9:26-ம் வசனத்தில் அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு என்னசெய்தான் உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள். அவன் **அதற்கு, முன்னேமே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான்.** ஒரு அருமையான போதனை செய்தான். தான் இயேசுவினிடத்தில் நன்மைபெற்றதுமல்லாமல் அநேகரை விசுவாசிக்கும்படியான வார்த்தைகளை பேச ஆரம்பித்தான். அப்பொழுது அவர்கள் அவனை திட்டி நீ அவனுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்கள் என்றார்கள். மோசேயினுடைய சீஷர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிற அவர்களுக்கே மோசேயைப் பற்றி சரிவர தெரியாமல் தாங்கள் மோசேயின் சீஷர்கள் என்று சொன்னார்கள்.

மோசே சொன்ன காரியத்தை பேதுரு தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார் ''மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப் படுவான் என்றான்'' (அப்.3:22,23). இதை அறியாத ஜனங்கள் இன்னும் மோசேயையும் அவனுடைய நியாயப்பிரமாணத்தையும் பிடித்துக்கொண்டு அந்த மார்க்கத்தில் நிலைத்திருக்கிறார்கள். அந்த பிறவிகுருடன் அவர் என் கண்களைத் திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம். பிறவிக்குருடனுடைய கண்களை ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானது முதல் கேள்விப்பட்டதில்லையே. அவர் தேவனிடத்திலிருந்து வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான். இதைக் கேட்ட பரிசேயர் பொறுக்கமுடியாமல் முழுவதும் பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ என்று சொல்லி அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள். இன்றைக்கும் கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ள மனமில்லதவர்கள் தேவசெய்தியை பிரசங்கிக்கிற தேவமக்களை புறம்பாக்கிப் போடுகிறார்கள்.

இப்படி புறம்பாக்கப்பட்ட அந்த பிறவிக்குருடனை கர்த்தர் சந்தித்து நீ தேவனுடைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்; ஆண்டவரே அவரிடத்தில் நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்றான். நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்

என்றார் உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி அவரைப் பணிந்துகொண்டான். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு வாசகரே, நீ அவரை விசுவாசிக்கிறாயா இந்த பிறவிக்குருடன் விசுவாசித்து நன்மையை பெற்றுக்கொண்டான், அத்தோடு அவருக்கு சாட்சியாக வாழ்ந்தான். அதைப்போல நீயும் வாழ்வாயா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கேள்வி நேரம்

காணாதவர்கள் இயேசுவை கண்டிருக்கிறார்கள், காண்கிறவர்கள் ஏன் இன்னும் இயேசுவைக் காணாதிருக்கிறார்கள்?

இதற்கான பதிலை இயேசுவே சொல்லியிருக்கிறார். அதை அப்போஸ்தலனாகிய யோவான் தமது சுவிசேஷ புத்தகத்தில் எழுதியுள்ளார். ''காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன்'' என்றார் (யோவா.9:39). அவருடனே கூட இருந்த பரிசேயரில் சிலர் இவைகளைக் கேட்டபொழுது; நாங்களும் குருடரோ என்றார்கள். நீங்கள் குருடராயிருந்தால் பாவமிராது; நீங்கள் காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்கிறது என்றார்.

ஆம், காண்கிறோம் என்று சொல்லுகிறவர்கள் பாவத்தில் நிலைத்திருக்கிறார்கள். உண்மையிலே பார்க்கவேண்டிய இரட்சகரை ஆவிக்குரிய கண்களாலே பார்க்கத் தவறிவிடுகிறார்கள். ஆகையால்தான் காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார். நீங்கள் அவரைக் கண்டு ஆவிக்குரிய பார்வையைப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

18. ஜீவ வழி
The Way of Life

உங்கள் யாவருக்கும் ஜீவ வழியை ஏற்படுத்திய ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாம் வாழும் இப்பூமியில் பலவிதமான மார்க்கங்கள் தோன்றி சிதைந்து கிடக்கின்றன. எது எப்படியிருந்தபோதிலும் ஜீவனுள்ள மார்க்கம் இன்றும் அழியாமல் நிலைத்திருக்கிறது. அந்த வழியை அறிவீர்களா? ஜீவனுள்ளவர்களாகிய நாம் இந்த ஜீவ வழியைப் பற்றி தெரிந்துகொள்வது மிக அவசியம். இவ்வழியை ஏற்படுத்தியவர் நம்மை உண்டாக்கின தேவனாகிய

கர்த்தர் ஆவார். தேவன் மனுஷனை தமது சாயலாகவும், தமது ரூபத்தின் படியேயும் உண்டாக்கி அவனை ஒரு இயந்திர மனிதனைப் போல வைக்காமல், தானே யோசித்து தீர்மானம் எடுக்கும் மனோபாவத்தை அவனுக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால் அவர் ''இதோ, நான் உங்கள் முன்னே ஜீவ வழியையும் மரணவழியையும் வைக்கிறேன்'' என்றார் (எரே.21:8). இந்த இருவழிகளில் ஒன்றை தேர்ந்தெடுக்க மனிதனுடைய விருப்பத்திற்கு தேவன் விட்டு விட்டார். இதிலே சிலர் ஜீவவழியையும் பலர் மரண வழியையும் தெரிந்து கொள்கிறார்கள்.

இவ்வழிகளைக் குறித்து பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிப்பது என்ன? தேவனாகிய கர்த்தர் ஜீவ விருட்சத்தையும், நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணி ''நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம்; அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று மனிதனுக்குக் கட்டளையிட்டார்'' (ஆதி.2:17). நம்முடைய ஆதி தகப்பனோ, கர்த்தர் கொடுத்த கட்டளையை மீறி பறித்து பாவத்துக்குட்பட்டு, இருவரும் ஆவியில் மரித்தார்கள். இதனால் தேவன் அவனுக்கு வைத்திருந்த ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்க தகுதியற்றவனாகப்போய்விட்டான். ஆகையால் தேவனாகிய கர்த்தர் ஜீவவிருட்சத்துக்குப் போகும் வழியைக் காவல் செய்தார். இன்றும் கோடானகோடி ஜனங்கள் ஜீவவழியைக் குறித்து கேள்விப்பட்டும், அதைக் குறித்துதெரிந்து கொள்ள முற்படாமல் பார்வைக்கு இன்பமாயிருக்கும் மரணவழியையே தெரிந்து கொள்கிறார்கள். அதன் முடிவோ மரணம்.

உலகத்தில் எத்தனையோ விதமான மார்க்கங்கள் தோன்றினாலும் அவைகளெல்லாம் ஜீவனுள்ள மார்க்கங்கள் அல்ல. ஏனென்றால் அவைகள் முதலும் முடிவுமில்லாதவைகள். சில பட்டணங்களில் நீங்கள் பயணம் செய்யும் போது முட்டுத் தெருவைப் பார்த்திருப்பீர்கள் அதனுடைய வழி தொடராமல் முட்டி நிற்கும். அதிலே போகிறவர்கள் கடைசி வரை சென்று தொடர்ந்து செல்ல வழியில்லாமல் திரும்பி வந்தவழியே வருவார்கள். இதைப் போன்ற மார்க்கங்கள் நம் சமுதாயத்தில் அநேகமுண்டு. ஆனால் ஜீவனுள்ள மார்க்கம் ஒன்றே ஒன்றுதான் உண்டு. அதை நாம் பரிசுத்த வேதாகமத்தின் துணை கொண்டு அறிந்து கொள்கிறோம். ஜீவ வழி என்ற வார்த்தையை பிரித்து படித்தால் ஜீவன் + வழி = ஜீவ வழி. இம் மார்க்கம் ஜீவனுள்ளவர்களை பட்டியலிட்டு காட்டுகிறது. அதை நீங்கள் வாசித்ததுண்டா? அது கதையல்ல, நாம் வாழும் இப்பூமியிலே உலக தோற்ற முதல் இயேசு கிறிஸ்து வரை குறிப்பாக 76 தலைமுறைகளை வைத்தியனாகிய லூக்கா பட்டியலிட்டு காட்டுகிறார். இந்த ஜீவ வழியில் வந்தவர்கள் தேவாதி தேவனை ஆராதித்தவர்கள்.

''பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் (இயேசு) மூலமாய் நமக்கும் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' (எபி.1:1,2). இன்று நீங்களும் நானும் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் கிறிஸ்துவின் ஆவிக்குரிய சந்ததியாக, ஒரே குடும்பமாக, தேவனுடைய மந்தையாக கூட்டிக் கட்டப்பட்டு வருவோம். கிறிஸ்துவானவர் ''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' என்றார் (யோவா.14:6).மேலும் ''உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்'' என்றார். ஆதாம் எச்சரிப்பின் கட்டளையை ஏற்றுக் கொள்ளாமல் பாவத்திலே மரித்தான். இன்று உயிரோடிருக்கிற நாம் கர்த்தரின் சத்தம் கேட்போம்.

''ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்'' என்று மத்.7:14-ல் வாசிக்கிறோம். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் அதன் வழி நெருக்கமுமாயிருக்கிறபடியினாலே இன்றைய திருச்சபைகளில் ஆத்துமாக்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகிறது. இந்தியாவின் ஜனத்தொகை 120கோடியை தாண்டிவிட்டபோதிலும் ஜீவனுள்ள மார்க்கத்தில் இருப்பவர்கள் குறைவாகவே இருக்கின்றனர். அதிலும் இதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர். அந்த சிலரில் நீங்கள் ஒருவராக இருக்கவேண்டும். கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்; ஆகையால் அதிக கூட்டத்தைப் பார்த்து ஏமாந்துபோய்விடாதீர்கள். ஒருவன் இயேசுவைப் பார்த்து: ''நல்ல போதகரே நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மை செய்யவேண்டும் என்று கேட்டான். அதற்கு இயேசு கொலை செய்யாதிருப்பாயாக, விபசாரஞ் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதிருப்பாயாக, பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக; உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக; உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறனிடத்திலும அன்பு கூருவாயாக என்பவைகளையே என்றார்.

அந்த வாலிபன் அவரை நோக்கி: இவைகளையெல்லாம் என் சிறுவயது முதல் கைக்கொண்டிருக்கிறேன்; இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன என்றான் அதற்கு இயேசு: நீ பூரண சற்குணனாயிருக்க விரும்பினால் போய், உனக்கு உண்டானவைகளை விற்று, தரித்திரருக்குக் கொடு. அப்பொழுது, பரலோகத்தில் உனக்கு பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு

என்னைப் பின்பற்றிவா என்றார். அந்த வாலிபன் மிகுந்த ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், இந்த வார்த்தையைக் கேட்ட பொழுது துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்'' (மத்.19:16-22). இந்த மனிதனைப் போல சிலர் ஜீவ வழியில் நடக்க விரும்பியும் கட்டளைகளையும், கற்பனைகளையும், தள்ளிவிட்டு பாரம்பரியங்களை எடுத்துக்கொண்டு தங்களுக்குத் தாங்களே போதகர்களாக மாறிக் கொண்டு கர்த்தரையும் அவருடைய வழியையும் அசட்டை செய்து பின்வாங்கிப்போகின்றனர். ''புத்திமதிகளைக் காத்துக்கொள்ளுகிறவன் ஜீவ வழியில் இருக்கிறான்'' என்ற நீதி.10:17-ன் படி வேதாகமம் எச்சரிக்கும் தவறான வழிகளை விட்டு விலகி தன்னைக் காத்துக் கொள்ளுகிறவன் ஜீவ வழியில் இருப்பான். சாலொமோன் ஞானி ''மதியீனனுடைய வழி அவன் பார்வைக்குச் செம்மையாயிருக்கும்'' என்கிறார் (நீதி.12:15). ஆனால் அதன் முடிவோ மரணம்.

மேலும் ''மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்'' என்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது பிதாவின் சித்தமல்ல எல்லோரும் மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். எந்த பெற்றோரும் தன் பிள்ளை கெட்டுப்போனால் போகட்டும் என்று விரும்ப மாட்டார்கள். அதைப் போல நம் எல்லோரையும் அநுதினமும் நேசித்து வழி நடத்தும் நம் பரம பிதாவாகிய தேவன் நாம் கெட்டுப்போவதை விரும்பாமல் எல்லோரும் மனந்திரும்பவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவர் ஒரே வழியையே ஏற்படுத்தியிருக்கிறார் அது பூர்வபாதையாயிருக்கிறது. அது ஜீவ வழியாயும் இருக்கிறது.

முதல் நூற்றாண்டு காலத்தில் ''தெயுதாஸ் என்பவன் எழும்பி, தன்னை ஒரு பெரியவனாகப் பாராட்டினான் ஏறக்குறைய நானூறுபேர் அவனைச் சேர்ந்தார்கள்; அவன் மடிந்துபோனான்; அவனை நம்பின அனைவரும் சிதறி அவமாய்ப்போனார்கள் (அப்.5:36). இன்றைக்கும் அந்தவிதமான மார்க்கங்கள் மனிதனால் தோற்றுவிக்கப்பட்டு மறைந்துபோகிறது. தெயுதாசுக்குப் பின்பு யூதாஸ் என்பவன் எழும்பி, தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்களை இழுத்தான்; அவனும் அழிந்து போனான்; அவனை நம்பியிருந்த அனைவரும் சிதறடிக்கப்பட்டார்கள்'' (அப்.5:37). இப்படி அநேகர் தங்களைப் பின்பற்றும்படி புதிய புதிய மார்க்கங்களை ஏற்படுத்தினார்கள், அவையெல்லாம் ஒன்றுமில்லாமற்போயிற்று. மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பார்கள். அநேகருக்கு பணமிருந்தால் போதும் மார்க்கம் தானாய் வந்துவிடும் என்ற எண்ணம்! இவ்விஷயத்தில் ''பிலேயாம் கூலிக்காக செய்த வஞ்சகத்திலே விரைந்தோடினான்'' என்று யூதா.11-ல் படிக்கிறோம். தன்னுடைய கழுதையின் மேல் பயணம் செய்து

கொண்டிருந்த அவனை, கர்த்தர் தம்முடைய தூதனைக் கொண்டு தடுத்தார், அப்பொழுது தன் வழியைத் தடுத்த தூதனை அறியாது கழுதையை மூன்று முறையும் அடித்தான். பின்பு பேசாத மிருகம் மனுஷர் பாஷையை பேசி, அவனுடைய மதிகேட்டைத் தடுத்தது. அநேகர் இந்த பிலேயாமைப்போலவும், மார்க்கந் தப்பி அலைகிற நட்சத்திரங்களைப் போலவும் இருக்கிறார்கள். அன்பு சகோதரரே, நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்?

ஜீவ வழியிலே நடப்பவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே தேவன் செய்த வாக்குதத்தமாயிருக்கிறது. கர்த்தர் சொல்லியும் செய்யாதிருப்பதற்கு அவர் மனுஷர் அல்ல. ஆகையால் பிரியமான சகோதரனே, சகோதரியே இவ்விஷயத்தில் நீங்கள் மற்றவர்களை பாராது ஜீவ வழியே நடக்க பிரயாசப்படுங்கள். ''அநியாயஞ் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரமாய் வருகிறேன்'' என்று கர்த்தர் திருவுளம் பற்றுகிறார் (வெளி.22:11,12). ''நீதியின் பாதையில் ஜீவன் உண்டு; அந்தப் பாதையில் மரணம் இல்லை'' உங்களுடைய வழியை சீர்தூக்கிப்பாருங்கள்.

கேள்வி நேரம்

ஜீவ வழியே செல்வதால் நமக்கு ஏதாவது நன்மை உண்டா?

ஆம், நன்மை ஏராளம் உண்டு. இயேசு சொல்கிறார்: ''நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான். அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக்கண்டடைவான்'' (யோவான் 10:9). நீங்களும் நானும் இப்புவியிலே இயேசுவின் வழியாக செல்லாமல் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியாது. ஊசியின் மீது ஏறி நீங்கள் தவம் செய்தாலும், அல்லது எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி தவம் செய்தாலும் வாசலாகிய இயேசு வழியாய் உட்பிரவேசித்தால் மட்டுமே இரட்சிக்கப்பட்டு உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைய முடியும். அதாவது ஆசீர்வாதமாக, திருப்தியுள்ளவர்களாக இருக்க முடியும். அதுமட்டுமல்ல வெளிப்படுத்தின விசேஷ புஸ்தகத்திலே குறிப்பிட்டுள்ள ஏழு சபைகளுக்கு கர்த்தர் எழுதும் போது ஒவ்வொரு சபைக்கும் ஒவ்வொரு வித்தியாசமான ஆசீர்வாதங்களை தருவதாக வாக்களிக்கிறார். எபேசு சபைக்கு எழுதும்போது ஜீவ விருட்சத்தின் கனியைக் கொடுப்பதாகவும், சிமிர்னா சபைக்கு எழுதும்போது ஜீவ கிரீடத்தை தருவதாகவும், பெர்கமு சபைக்கு எழுதும்போது வெண்வஸ்திரம் தரிப்பிப்பதாகவும், பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவதாகவும், லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது

தன்னுடைய சிங்காசனத்தில் தன்னோடே கூட உட்காரும்படிக்கு அருள் செய்வதாகவும், வாக்கு பண்ணியிருக்கிறார்.

இந்த முழுமையான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ''ஜீவ வசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப்போல பிரகாசிக்கிற நீங்கள் கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடமற்றவர்களுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்'' (பிலி.2:14-16). நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

19. நேரமில்லை
No Time

மனிதனுடைய சிந்தனைகளும், செயல்பாடுகளும் அதிவேகமாக முன்னேறி வருகிறது. ஆகையால் அவர்களுடைய பதில் I am very busy என்பதே. தேவனாகிய கர்த்தர் நாம் காண்கின்ற அனைத்தையும் ஆறு நாட்களில் சிருஷ்டித்தார் என திருமறை (விவிலியம்) கூறுகிறது. ஆறாம் நாளில் மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான். அன்று உண்டாக்கப்பட்ட மனிதன் இன்றுவரை தன் வாழ்நாட்களிலே தேவனை தேடவும், அவர் கொடுத்த பரிசுத்த வேதாகமத்தை படிக்கவும், அதற்கு கீழ்ப்படியவும், அவரால் அனுப்பப்பட்ட உலக இரட்சகர் இயேசுவை விசுவாசிக்கவும், அவரை ஆராதிக்கவும் நேரம் ஒதுக்காமல், உள்ள வேலையை பார்க்கவே போதும் போதும் என்றாகி விடுகிறது, இதிலே எங்கே தேவனை தேடுவது, அவர் அருளிச் செய்த புத்தகத்தை படிப்பது, அவரை ஆராதிப்பது என்று சலிப்போடு சொல்லிக்கொள்கின்றனர்.

பூமியிலே மனுஷனுடைய நாட்கள் எண்ணப்படுகிறது. அவன் வாழ்நாள் குறுகினவனாயிருக்கிறான். இந்நாட்களிலே அவன் தன்னை உண்டாக்கின தேவனைத் தேடவேண்டும். ''அவன் இரண்டாயிரம் வருஷம் பிழைத்திருந்தாலும் ஒரு நன்மையும் காண்பதில்லை'' என்கிறான் பிரசங்கி (பிர.6:6). ஆகையால் நீ உன் வாலிபப் பிரயாத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்கு நாட்கள் வராததற்கு முன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை என்று பிரசங்கி கூறுகிறான். கர்த்தரை கண்டடையத்தக்க சமயத்திலே தேட வேண்டும். வயதாகி ஊன்றுகோல் பிடித்து, நடக்க முடியாமல் தள்ளாடும் சமயத்தில் தேவனை தேட நினைத்தாலும் அது முடியாதுபோகும்.

ஆகவே, வாலிப பிராயத்திலே சிருஷ்டிகரை தேடு, ஆண்டவர் பார்வைக்கு ஆயிரம் வருஷம் ஒரு நாள் போலவும் ஒரு நாள் ஆயிரம் வருஷம் போலவுமிருக்கிறது. மோசே ஜெபிக்கும்போது ''எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும், சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது. நாங்களும் பறந்துபோகிறோம்'' என்கிறார் (சங்.90:10). இப்படி கடந்து போகும் மாயையான வாழ்க்கையிலே எனக்குத் தேவனை தேட நேரமில்லை என்று சொல்லலாகாது. ''முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்''.

உலகத்திலே அதிகமாக விற்பனையாகும் புத்தகம் பரிசுத்த வேதாகமமே. இந்த வேதாகமம் கிடைக்காத இடமே இல்லை என்றே சொல்லலாம். இன்று வானொலி, டெலிவிஷன், கைபிரதிகள் மற்றும் மாத இதழ் போன்றவைகளின் மூலமாக அவரவருடைய பாஷையில் வேத வசனங்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. இதை கேட்கவும், பார்க்கவும், படிக்கவும் நேரமில்லை என்று சொல்லும் மக்களுக்குப் பஞ்சமில்லை. தேவன் மனிதனுக்கு தேவையான அனைத்தையும் இப்பூமியிலே உண்டாக்கி உள்ளார். மேலும் அவனுக்கு பிரயோஜனமாக பகல் 12 மணி நேரமும், இரவு 12 மணி நேரமுமாக கொடுத்துள்ளார். இதிலே தன் சொந்த வேலைகளுக்கு முதலிடம் கொடுத்து அதற்காகவே மனிதன் வாழ்கின்றான். இதையெல்லாம் கொடுத்த தேவனுக்கு முதலிடம் கொடுக்காமல், முடியவில்லை, நேரமில்லை, Tired ஆக இருக்கிறது என்று சாக்குபோக்கு சொல்லிக்கொண்டு வேதாகமத்தை படிக்கவும், அதைக்குறித்து ஆராய்ந்து பார்க்கவும், சொற்ப நேரத்தைக் கூட ஒதுக்க அவன் முன்வருகிறதில்லை. அதே வேளையில் ஆறாயிரம் சம்பளம் கொடுக்கும் ஒரு எஜமானுக்கு ஆறுமணிநேரம் ஏற்ற ஊழியக்காரனாக உழைக்கிறான். இங்கே சற்று சிந்திக்க வேண்டுகிறேன். எந்தவித விடுமுறையும் இல்லாமல் ஒரு வருடத்திற்கு 40 மில்லியன் முறை துடிக்கும் இருதயத்தை நமக்கு தந்த தேவனுக்கு, நாம் எவ்வளவு நேரம் கொடுக்கிறோம், எந்த வகையில் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்? பூமியிலே சகலத்தையும் ஆண்டு அனுபவித்துக்கொள்ளுங்கள் என்ற அந்த பரமதேவனுக்கு நாம் என்னதான் செய்திருக்கிறோம் அல்லது கொடுத்திருக்கிறோம்? வேலை பார்க்கும் இடத்தில் ஒரு மணிநேரம் ஓ.பி. அடித்தால் வேலையை விட்டு தூக்கி விடுவார்கள் என்ற பயம் இருக்கிறது. ஆனால் தேவ சமூகத்தில் கொஞ்சமும் பயமில்லை ஏனென்றால் அவர் மன்னிப்பதற்கு கிருபை பொருந்திய தேவன் ஆயிற்றே. அன்பு நேயரே உன் தேவனுக்கு, எந்நாளும் பயத்தோடிரு.

தேவன் மனிதனிடத்தில் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். பூமியில் விளையக்கூடிய பொருள்களை நீங்கள் அள்ளி, அள்ளி கொடுத்தாலும், முதல் தரமான ஆடு, மாடுகளை பலியிட்டாலும் அவைகளில் கர்த்தர் பிரியமாயிரார். ''கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும், கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நினத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்'' என சாமுவேல் குறிப்பிடுகிறான் (1சாமு.15:22). செவி கொடுப்பதும், கீழ்ப்படிதலும் அநேகருக்கு கசப்பான கீரையைப் போல் இருக்கிறது. அதே வேளையில் குடும்பத்தையே ஆட்டிப் படைக்கும் சிலர் திருமணத்திற்குப் பின்பு மனைவிக்கு அப்படியே கீழ்ப்படிவார்கள், அதே போல் மனைவியானவளும் கணவனுக்கு அப்படியே கீழ்ப்படிவாள். இந்த கீழ்ப்படிதல் எப்படி வந்தது? யாராவது ஒரு வார்த்தை தன் மனைவியைப் பற்றியோ அல்லது கணவனைப் பற்றியோ பேசிவிட்டால் போதும் கடல் அலையைப் போல கோபம் பொங்கி வரும். இப்படி இருக்கவேண்டியதுதான்.

இப்படிப்பட்ட கீழ்ப்படிதலை ஏன் பரம தேவனிடம் காட்டக் கூடாது? இந்த விஷயத்தில் ஆதியும் அந்தமுமானவரை ஏன் புறம்பே தள்ளவேண்டும்? இஸ்ரவேலர் தேவனை புறம்பே தள்ளியதால், கர்த்தர் மோசேயைக் கொண்டு: ''இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் வைக்கிறேன். இன்று நான் உங்களுக்குக் கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும் எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியாமல், இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியை விட்டு வேறே தேவர்களைப் பின்பற்றுவீர்களானால் சாபமும் வரும்'' என்று எச்சரித்தார் (உபா.11:26-28). ஆபிரகாம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்ததால் ஆசீர்வதிக்கப்பட்டான். நீங்களும் இப்பூமியில் ஆசீர்வதிக்கப்படவும், ஆசீர்வாதத்தை சுதந்தரிக்கவும் கர்த்தருடைய சத்தத்திற்கு முதலாவது கீழ்ப்படியுங்கள்.

''விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்'' (எபி.11:6). இந்த விசுவாசத்தை தேவன் மீதும், அவர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவின் மீதும் வைக்கவேண்டும். அவராலேயன்றி வேறொருவராலும் நமக்கு இரட்சிப்பு இல்லை. ''நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார் (யோவா.8:24). இன்று மனிதன் தன் பாவத்தைப் போக்க கடவுளுக்கு பால்

அபிஷேகம் செய்கிறான். அந்த பால் நம்முடைய பாவத்தைக் கழுவாது. பாவமில்லாத இயேசுவின் பரிசுத்த இரத்தமே பாவம் நிறைந்த நம்மை சுத்திகரிக்கும். இதை நாம் விசுவாசித்தினால் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். நமது ஆண்டவரும் இதைக் குறித்து சொல்லும்போது; ''இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது'' என்றார் (மத்.26:28). ''பேலிக்ஸ் யூதஸ்தீரீயாகிய தன் மனைவி துருசில்லாளுடனே கூட வந்து பவுலை அழைப்பித்து கிறிஸ்துவைப் பற்றும், விசுவாசத்தைக் குறித்து அவன் சொல்லக் கேட்டான்'' (அப்.24:25).

பவுல் சற்று ஆழமாக போதிக்கும் போது அதாவது நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில் பேலிக்ஸ் பயமடைந்து இப்போது நீ போகலாம் எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான். இப்படித்தான் கேட்கிறவர்களுக்கு பிடித்தாற்போல் பிரசங்கியார்கள் பேசாவிட்டால் ஒன்று எழுந்துபோய் விடுவார்கள். பிரியமான நண்பரே, நாளை என்பது நம்முடைய கையில் இல்லை. ''நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சகாலம் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறது'' (யாக்.4:14). நாளைய தினத்தைக் குறித்து அறியாத நாம் இன்றே ஆயத்தப்படுவோம். இயேசுவில் விசுவாசம் வைப்போம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற சகோதரனே, சகோதரியே நீ தேவ சமூகத்தில் நேரமில்லை என்று சொல்லாதே ''அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர்'' (தானி.2:21). உங்களுக்கு நேரத்தையும் காலங்களையும் வழங்கிக்கொண்டிருக்கிறார். ஏதோ வாழ்ந்தோம் போனோம் என்று இல்லாதபடி, நம்மை உண்டாக்கின தேவனை நாம் ஆராதிக்க வேண்டும். பூமியில் உண்டாக்கப்பட்ட சகலமும் உண்மையான தேவனை ஆராதிக்கும் போது, நாம் உண்டாக்கப்பட்டவைகளை ஆராதிக்கலாமா? ஆராதனை நம்முடைய விருப்பத்தின்படியல்ல. தேவனுடைய விருப்பத்தின்படி ஆராதிக்க வேண்டும். நமது காலங்கள் அவரது கரத்திலிருக்கிறது என்கிறான் சங்கீதக்காரன் (சங்.31:15). அதிக நேரத்தை கர்த்தருக்காக செலவு செய்து அதிக ஆசீர்வாதம் பெறுங்கள்.

கேள்வி நேரம்

ஒரு சுவிசேஷகனுக்கு பவுல் கொடுக்கும் ஆலோசனை என்ன?

''சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு'' என்கிறார் பவுல் (2தீமோ.4:2).

இன்றைய சுவிசேஷகர்களில் பலர் சமயம் வாய்க்குதோ, வாய்க்கவில்லையோ, வாங்குவதிலே குறியாயிருக்கிறார்கள். எலிசாவுக்கு ஒரு வேலைக்காரன் இருந்தான் அவனை பார்த்து ''பணத்தை வாங்குவதற்கும், வஸ்திரங்களையும், ஒலிவத்தோப்புகளையும், திராட்சைத் தோட்டங்களையும், ஆடு, மாடுகளையும், வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? என்று கேட்டான் (2இரா.5:26). இன்றைய ஊழியர்களின் அவல நிலையும் இப்படித்தானிருக்கிறது. வீடுகளைக் கட்டவும், நிலங்களை வாங்கவும் விரும்புகின்றனர். தாங்கள் செய்கிற காரியத்தை கர்த்தர் ஏற்றுக்கொள்வாரா என்று கடுகளவும் சிந்திக்கிறதில்லை.

எலிசா தனக்கு இருந்த ஏர் மாடுகளில் ஓர் ஏர்மாட்டை பிடித்து அடித்து ஏரின் மரமுட்டுகளால் அவைகளை சமைத்து ஜனங்களுக்கு கொடுத்துவிட்டு பின்பு சந்தோஷத்தோடே எலியாவுக்கு பின்சென்று ஊழியம் செய்தான். ஊழியத்திற்கு ஒப்புக்கொடுக்கிற இளம் வாலிபர்களாவது எலிசாவைப்போல இருந்து கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும். மேலும் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது ''சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று'' என்கிறார். ஒவ்வொரு ஊழியனும் செய்யவேண்டிய பணி இதுவே. சுவிசேஷகன் சுவிசேஷ வேலையைச் செய்து, அதை நிறைவேற்ற பிரயாசப்படவேண்டும். நேரமில்லை என்பதோ, சாக்குபோக்கு சொல்வதோ கர்த்தருக்கு ஏற்ற காரியமல்ல. கொடுக்கப்பட்டுள்ள நேரத்தை பயன்படுத்தி கர்த்தருக்கு சாட்சியுள்ளவர்களாக நிலைத்திருந்து நேரத்தை பயன்படுத்துங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

20. யேகோவாயீரே
Jehovahjireh

விசுவாச மார்க்கத்தாரின் தகப்பனாகிய ஆபிரகாமை நாம் நன்கு அறிவோம். அவன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தன் நேசகுமாரனாகிய ஈசாக்கை மோரியாதேசத்திலுள்ள மலைகளில் ஒன்றில் தகனபலியாகப் பலியிடும்படி தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும், தன் குமாரன் ஈசாக்கையும் கூட்டிக் கொண்டு புறப்பட்டு மூன்றாம் நாளிலே தேவன் தனக்குக் குறித்த இடத்தை தூரத்திலே கண்டு, ஆபிரகாம் தன் வேலைக்காரரை நோக்கி: நீங்கள் கழுதையை நிறுத்தி இங்கே காத்திருங்கள், நானும் பிள்ளையாண்டானும் அவ்விடம் மட்டும் போய், தொழுதுகொண்டு, உங்களிடத்திற்குத் திரும்பி வருவேன் என்று சொல்லாமல் விசுவாசத்துடன் திரும்பி வருவோம் என்றான். பின்பு தகனபலிக்கு வேண்டிய கட்டைகளை

எடுத்து ஈசாக்கின் மேல் வைத்து தன் கையிலே நெருப்பையும், கத்தியையும் எடுத்துக்கொண்டு இருவரும் போனார்கள், அப்பொழுது ஈசாக்கு, தன் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கி: இதோ, நெருப்பும் கட்டையும் இருக்கிறது, தகனபலிக்கு ஆட்டுக்குட்டி எங்கே என்றான்.

''அதற்கு ஆபிரகாம்: என் மகனே, தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக் கொள்வார் என்றான்'' (ஆதி.22:7). தகனபலிக்கான ஆடு தன் மகன் என்பதை அறிந்த ஆபிரகாம் அதை அவனிடம் சொல்லாமல் தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக்குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான். தேவன் ஆபிரகாமுக்கு சொல்லி இருந்த இடத்திற்கு இருவரும் வந்தடைந்தார்கள். அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கை கட்டி, பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின் மேல் அவனை கிடத்தி பின்பு தன் குமாரனை வெட்டும்படி தன் கையை நீட்டி கத்தியை எடுத்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டு பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்.

பின்பு ஆபிரகாம் புதரிலே கொம்புகள் சிக்கிக் கொண்டிருந்த ஒரு ஆட்டுக் கடாவைக் கண்டு, அதை பிடித்து, தன் குமாரனுக்குப் பதிலாகத் தகனபலியாக செலுத்தினான். அந்த விசுவாசத்தினாலே ''அவனை பாவனையாகத் திரும்பவும் பெற்றுக்கொண்டான்'' என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.11:19). ''ஆபிரகாம் அந்த இடத்துக்கு யேகோவாயீரே என்று பேரிட்டான்; அதினாலே கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்நாள் வரைக்கும் சொல்லப்பட்டு வருகிறது'' (ஆதி.22:14). தன் மகன் ஈசாக்கு கேட்ட கேள்விக்கு ஆபிரகாம் சொன்ன பதிலை கவனித்தீர்களா! தேவன் தமக்குத் தகனபலிக்கான ஆட்டுக் குட்டியைப் பார்த்துக்கொள்வார் என்றான். அந்தப்படியே நடந்தேறியது. தேவன் தனக்கு சொன்ன படியே ஆபிரகாம் செய்தபடியினால், கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரம் வானத்திலிருந்து ஆபிரகாமைக் கூப்பிட்டு; நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல், அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால்; நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப்போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக் கொள்வார்கள் என்றும், நீ என்

சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும், ஆசீர்வதிக்கப்படும் என்றும் என் பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.

இந்த விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமிடமிருந்து நாம் கற்றுக் கொள்ளவேண்டிய காரியங்கள் அதிகம் உண்டு. அதில் குறிப்பாக இரண்டு காரியங்களை நான் உங்களோடு பகிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். **ஒன்று, தேவனுக்குப் பயப்படுகிற பயம்.** இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் நாம் அதிகமாக தேவனுக்குப் பயப்படுகிற பயத்தை பார்க்கமுடியவில்லை. தேவன் பாரார், தேவன் கவனியார் என்ற சொல் நம் செவிகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. வேதம் சொல்லுகிறது; ''காதை உண்டாக்கினவர் கேளாரோ? கண்ணை உருவாக்கினவர் காணாரோ?'' என்று (சங்.94:9). கண்ணை உருவாக்கின தேவன் ஆபிரகாமுடைய விசுவாசத்தைக் கண்டார். நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்று தேவதூதனால் சொல்லக் கேட்டான்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற தேவ ஜனமே, உன்னை தெரிந்துகொண்டவருடைய கட்டளையை இன்று நீ நிறைவேற்றிக் கொண்டிருக்கிறாயா? அல்லது தேவன் தனக்கு என்ன செய்தார் என்று சொல்லி அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறாயா? ஆபிரகாமுக்கு ஈசாக்கை கொடுத்த தேவன் உங்களுக்கும் பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார். அந்த பிள்ளைகளை சபையின் ஊழியத்தில் நீங்கள் பயிற்றுவிக்கிறீர்களா? நம்மில் எத்தனைபேர்; ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என்ற இயேசுவின் கட்டளைக்கு நம்மை அர்பணித்திருக்கிறோம் அல்லது நம்முடைய பிள்ளைகளையும் உடமை களையும் ஒப்புக்கொடுத்திருக்கிறோம்.

ஆபிரகாம் வயதான காலத்தில் தனக்குக் கர்த்தர் கொடுத்த பிள்ளையை தகனபலியாக கேட்கும்போது ஐயோ! ஒரே மகனை இப்படி கேட்கிறாரே என்று ஓலமிட்டானா? நாமோ நம் பிள்ளைகள் படித்து நல்ல நிலைமைக்கு கொண்டுவரவேண்டும், நல்ல இடத்தில் திருமணம் செய்யவேண்டும் என்று ஆவல் கொள்கின்றோம். முதல் நூற்றாண்டு காலத்தில் தங்கள் ஆஸ்திகளால் ஆண்டவருக்கு ஊழியஞ் செய்து கொண்டு வந்த ஸ்திரீகளைக் குறித்து லூக்.8:3-ல் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களில் அநேகர் தங்கள் குடும்பத்தையும், வீட்டையும், வேலைகளையும் விட்டு இயேசுவின் பின்னே வந்தார்கள். இவர்களெல்லாம் தேவனுக்குப் பயந்து கர்த்தர் வல்லவர் என்றும் அவருக்கு பணி செய்வது ஒரு பெரும் பாக்கியம் என்றும் கருதி

தங்களுக்கு கிடைத்த சமயத்தை பயன்படுத்திக் கொண்டார்கள். நாமும் தேவனுக்குப் பயந்து அவர் கட்டளைகளை நிறைவேற்ற பிரயாசப்படுவோம். ''கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் ஆசீர்வதிப்பார்'' (சங்.115:13).

ஆபிரகாமுடைய இரண்டாவது காரியம்: கீழ்ப்படிதல், ''கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ'' என்றார் (ஆதி.12:1). அந்தப்படியே அவன் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கும்போதும், அவனுக்குப் பிள்ளையில்லா திருக்கும் போதும், தேவனை நம்பி எல்லாவற்றையும் விட்டு புறப்பட்டுப் போனான். நம்மில் அநேகருக்கு உறவை விடமுடியவில்லை, சொத்தை விட முடியவில்லை, இன்னும் அநேக சம்பத்தை விட முடியவில்லை. காரணம் அந்த அளவிற்கு உலகத்தால் ஈர்க்கப்பட்டு அதற்கு அடிமையாகி உள்ளனர்.

அப்படியும் மீறி சுவிசேஷம் அறிவிக்க ஒருவர் வந்தால் என்ன கொடுப்பீர்கள், வீடு கொடுப்பீர்களா? வாகனம் வாங்கித் தருவீர்களா? அங்குள்ள ஜனங்கள் எப்படி? தண்ணீர் வசதி எப்படி? ஜீவனம் பண்ணுவதற்கு ஏற்ற இடமா? அங்கே சுவிசேஷத்தைக் கேட்பார்களா? குறிப்பாக மருத்துவ வசதி உள்ளதா? இப்படி அநேக கேள்விகளை கேட்பார்கள். இது கீழ்ப்படிதலா? அல்லது ஒப்புக்கொடுத்தலா? கர்த்தர் ஆபிரகாமை அழைக்கும்போது; இதையெல்லாம் அவன் கேட்டானா? பிரியமானவர்களே, சற்று நாம் சிந்திக்க வேண்டும்.

''தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக் கடவன்'' 1கொரி.7:17,20 வசனத்தின்படி அழைக்கப்பட்ட அழைப்பை உறுதியாக பற்றிக் கொண்டு செயல்படுங்கள். இதில் பொறாமைக்கு இடம் கொடுக்கக் கூடாது. அவனுக்கு அதிகம் கொடுக்கப்படுகிறதே இவனுக்கு குறைவாக இருக்கிறதே என்ற கவலை தேவையற்ற ஒன்று.

நமக்குத் தெரிந்தபடி இஸ்ரவேலரின் வனாந்தர பயணத்தின் போது தேவன் எல்லோருக்கும் மன்னாவைக் கொடுத்தார். அதை சிலர் மிகுதியாகவும், சிலர் கொஞ்சமாகவும் சேர்த்தார்கள் பின்பு அதை ஓமரால் அளந்தார்கள், மிகுதியாய்ச் சேர்த்தவனுக்கு மிகுதியானதுமில்லை, கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவானதும் இல்லை; அவரவர் தாங்கள் புசிக்கும் அளவுக்குத் தக்கதாகச் சேர்த்தார்கள். இதிலே மோசேயின் சொல் கேளாமல்

விடியற்காலமட்டும் கொஞ்சம் மீதியாய் வைத்தார்கள். அது பூச்சி பிடித்து நாற்றமெடுத்தது. இன்றும் இப்படித்தான் நடக்கிறது. சுவிசேஷத்தை அறிவிக்கிறேன் என்று சொல்லி சுகபோகமாக சேர்க்கிறவர்கள் அதை அனுபவிக்காது கடந்து போகிறார்கள்.

ஆகையால் பிரியமானவர்களே, ''மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான் தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்'' என்ற 1கொரி.9:27 பவுலின் கூற்றுப்படி நம்மை நாமே தாழ்த்தி கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவோம். அப்படி கீழ்ப்படிந்தபடியாலே ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்பட்டான். விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமோடு நாமும் சேர்ந்து ஆசீர்வதிக்கப்பட அவரைப்போல் ''யேகோவாயீரே'' என்ற நம்பிக்கையோடு ஒவ்வொரு நாளும் விசுவாச வீரர்களாய் வெற்றி நடைபோடுவோம். விசுவாச வீரர்களாக எந்நாளும் நம்பிக்கையோடு இருங்கள்.

கேள்வி நேரம்

காலத்திற்கேற்ப விசுவாசம் மாறுபடுமா?

விசுவாசம் என்பது ஒன்றுதான் அது காலத்திற்கேற்ப மாறுபடாது. ஆபிரகாம் வாழ்ந்த காலம் வேறு நாம் வாழும் காலம் வேறு என்று அநேகர் நினைக்கக்கூடும். காலங்கள் ஒருவேளை நம்மைப் பிரிக்கலாம். ஆனால் விசுவாசம் என்பது ஒன்றே. அன்றும் விசுவாசம் தான் இன்றும் விசுவாசம் தான். முற்பிதாக்களின் விசுவாசத்தை இன்றும் நாம் பெற்றுக்கொள்ள முடியும். அதற்கு நம்பிக்கை மிக அவசியம். ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது'' என்கிறார் எபிரெய ஆசான் (எபி.11:1). ஒன்றுமே இல்லாதிருந்து நாம் தேவனை விசுவாசிக்கும் போது நம்மைப் பார்த்து அநேகர் ஏளனம் செய்யக் கூடும்.

இயேசுவையுங் கூட சிலர் ஏளனம் செய்தார்கள். ''மற்றவர்களை ரட்சித்தான் தன்னைத் தான் ரட்சித்துக் கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கி வரட்டும் அப்பொழுது இவனை விசுவாசிப்போம்'' என்றனர் (மத்.27:42). பிரியமான சகோதரனே, நீ சோர்ந்து போகாதே ''கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார்; நீதிமானை ஒருபோதும் தள்ளாட வெட்டார்'' என்கிறான் சங்கீதக்காரன் (சங்.55:22). அந்தப்படியாக இயேசு தம்முடைய ஆவியை பிதாவினிடம் ஒப்புக்கொடுத்தார். இயேசுவை ஏளனம் செய்த அநேகர் கண்களுக்கு முன்னே மூன்றாம் நாள் தேவன் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார். உன் விசுவாசத்தை விட்டு விடாதே. உன்னை ஏளனம் செய்யும்

அநேகருக்கு முன்பாக உன்னை உயர்த்துவார். ஆபிரகாமின் விசுவாசத்தைப் பற்றிக்கொண்டவனாயிரு, உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

21. நீ என்னை நேசிக்கிறாயா?
Do You Love Me?

இக்கேள்வியை ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பன்னிரண்டு அப்போஸ்லர்களில் ஒருவனாகிய பேதுருவைப் பார்த்துக் கேட்டார். ஆனால் அவர் மற்ற அப்போஸ்தல்களைப் பார்த்து இந்த விதமான கேள்வியைக் கேட்கவில்லை. காரணம், இவனே இயேசுவை மூன்று முறை மறுதலித்தவன். ஆகையால் ஆண்டவர் இவனைப்பார்த்து இப்படிக்கேட்டிருக்கலாம். பேதுரு இயேசுவை மறுதலிக்கும் முன்பு ''ஆண்டவரே, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர, ஆயத்தமாயிருக்கிறேன்'' என்றான் (லூக்.22:23). இதைக் கேட்ட ஆண்டவர்: ''பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (லூக்.22:34). அந்தப்படியே அன்று சேனைத் தலைவர்கள் இயேசுவைப் பிடித்து பிரதான ஆசாரியனுடைய வீட்டில் வைத்திருந்தபோது, காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றிவர ஆயத்தமாயிருக்கிறேன் என்று சொன்ன பேதுரு அவரை நான் அறியேன் என்று மூன்று முறையும் மறுதலித்தான்.

இவன் இப்படி மறுதலித்தபடியால் இயேசு உயிர்த்தெழுந்தபின் மூன்றாவது முறையாக சீஷர்களுக்கு தரிசனம் ஆனபோது ''யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா? என்று கேட்டார். அதற்கு பேதுரு துக்கப்பட்டு; ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர், நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர் என்றான். இயேசு என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்'' (யோவா.21:17). முதலாவது அவர் தன்னை நேசித்து தம்முடைய ஊழியத்திற்கென்று அழைத்தபடியாலும், அவர் தன்னுடைய சகல பெலவீனங்களையும் அறிந்தபடியாலும் உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர் என்றான்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு நண்பரே, நீ யாரை நேசிக்கிறாய்? உன் தகப்பனையா, தாயையா? அல்லது உன் மகனையா, மகளையா? நேசிப்பது தவறு என்றோ அல்லது நீங்கள் நேசிக்கக்கூடாது என்றோ நான் சொல்லவில்லை. ''தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல'' என்று ஆண்டவர் இயேசு சொல்வதைக் கவனியுங்கள் (மத்.10:37). தகப்பனோ, தாயோ நம்மை

இரட்சிக்க முடியாது. ''நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' (அப்.4:12). ஆகையால் நம்முடைய குடும்பத்தாரைக் காட்டிலும் நாம் இயேசுவை அதிகமாக நேசிக்க வேண்டும். இயேசுவுக்கு முதலிடம் கொடுக்காமல் உலகத்தையும் உலகத்தில் உள்ள உறவுகளையும் அதிகம் நேசிக்க ஆரம்பிக்கும்போது அது நம்மை கொஞ்சம் கொஞ்சமாக கிறிஸ்துவின் அன்பை விட்டு பிரிந்துபோகச் செய்துவிடும். ஒரு பக்தியற்ற தகப்பன் கிறிஸ்துவுக்கு விரோதமாக வாழும்போது தன்னை நேசிக்கும் மகனையும் அவ்வழியே கொண்டு சென்றுவிடுவான். ஆபிரகாமைப் பாருங்கள்: வயது சென்ற நாட்களில் ஈசாக்கைப் பெற்றான். ஆனபடியால் அவன் மீது பாசம் வைத்திருக்கவேண்டும்.

இந்நிலையில் கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: ''உன் புத்திரனும் உன் ஏகசுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக்கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின்மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்'' (ஆதி.22:2). இதைக் கேட்ட ஆபிரகாம் என் நேசகுமாரனை நான் எப்படி பலியிடுவேன் என்று சொல்லி கலங்கவில்லை. ஏனென்றால் அவன் அவனுடைய மகனைக்காட்டிலும் அதிகமாய் கர்த்தரை நேசித்து அவரில் அன்புகூர்ந்திருந்தான். ஆகையால்தான் ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறான். இப்படிப்பட்ட நம்பிக்கை நமக்குள்ளும் எழும்பவேண்டும். ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுப் பலத்தோடும் உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து'' என வாசிக்கிறோம் (லூக்.10:27). இந்த விதமாக தேவனில் அன்புகூருகிறீர்களா? யோபு தான் நேசித்த பிள்ளைகளை இழந்தபோதிலும் கர்த்தருடைய அன்பை விட்டு விலகாதிருந்தார். கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்று சொன்னார்.

சிலர் தேவனில் அன்புகூர்ந்தும் உலகத்திலுண்டான கண்களின் இச்சைக்கு அடிபணிந்து விடுகிறார்கள். அந்த வகையில் பார்க்கும்போது, சிம்சோன் என்ற ஒரு தேவ மனிதன் பெலிஸ்த பெண்ணைக் கண்டு அவள் தன் கண்ணுக்குப் பிரியமானவள் அவளையே தனக்கு திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்று சொல்லி தன் பெற்றோரின் ஆலோசனையை தள்ளிவிட்டு அந்தப் பெண்ணை நேசித்தான். அவளோ ''நீ என்னை நேசியாமல் என்னைப் பகைக்கிறாய்'' என்று சொல்லி அவனிடத்தில் விடுகதைக்குரிய விடையைப் பெற்று, தன் இனத்தாருக்கு அதை தெரியப்படுத்தி

அவனைக் கோபக்காரனாகவும் கொலைகாரனாகவும் மாற்றினாள் (நியாயா.14:16). பின்பு சிம்சோன் தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான். அவன் அவளிடத்தில் தன் இருதயத்தில் உள்ளதையெல்லாம் வெளிப்படுத்தினான்.

''மூடன் தன் உள்ளத்தையெல்லாம் வெளிப்படுத்துகிறான்'' என்ற நீதி.29:11-ன்படி வெளிப்படுத்தி தன் தலை சிரைக்கப்பட்டு முழுபலத்தையும் இழந்து, கண்கள் பிடுங்கப்பட்டவனாய் பெலிஸ்தரோடே கூட மடிந்துபோனான். இவன் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான் கர்த்தருடைய ஆவியானவர் அவனோடிருந்தார் என பார்க்கிறோம். ஸ்திரீகளிடத்தில் தன் நேசத்தை வைத்தபடியால் தன் ஜீவனையே இழந்தான். இங்கு இயேசு சொல்வதை கவனியுங்கள்: ''உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிற வனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்'' (யோவா.11:26). இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படி விசவாசிப்பீர்கள் என்றால் மரணம் உங்களை மேற்கொள்ளாது. அப்பொழுது மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் உங்களோடிருப்பார்.

அன்பு எப்படி உண்டாயிருக்கிறது என்றால், முதலாவது தேவன் நம்மில் அன்புகூர்ந்தார் என வாசிக்கிறோம். ''அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை (இயேசுவை) அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது'' (1யோவா4:10). நம்முடைய நேசம், நம்முடைய இரட்சிப்புக்கு போதுமானது அல்ல. ஆகையால் முதலாவது அவர் நம்மில் அன்புகூர்ந்தார். ''அவர் முந்தி நம்மிடத்தில் அன்புகூர்ந்தபடியால் நாமும் அவரிடத்தில் அன்புகூருகிறோம். எனவே ''கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்'' (எபி.12:6). ஆகையால் கர்த்தருடைய சிட்சையை அற்பமாய் எண்ணாமல் உணர்வடைவோம். மோசே எங்கும் தேவனுடைய வீட்டில் உண்மை யுள்ளவனாயிருந்தான். அப்படிப்பட்ட மோசேயையே தேவன் 'கன்மலை' விஷயத்தில் சிட்சித்தார். தாம் அவனை நேசித்தபடியாலே அப்படிச் செய்தார். அது அவருடைய பார்வைக்கு நலமாயிருந்தது. அதற்காக மோசே கோபப் படவில்லை. அதை ஏற்றுக்கொண்டார்.

நேசத்திற்கு இணையானது ஜீவன் ஒன்றே. ''அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்'' (1யோவா.3;16). இந்த அன்பை ருசித்த பர்னபா, பவுல் போன்றவர்களைக் குறித்து லூக்கா எழுதும்போது அப்.15:25-ல் ''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும்

ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் என்று எழுதுகிறார். நீங்கள் இந்த பர்னபாவைப்போலவும், பவுலைப்போலவும் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பீர்களா? இயேசு சொல்கிறார்: ''என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும், வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரையும் சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்'' (மாற்.10:30,31).

ஆண்டவர் இயேசு நமக்காக ஜீவனையே கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தார். நாம் அவரை நேசிக்கிறோம் என்று சொல்லுகிறோம் ஆனால் நாம் அவருக்காக என்ன செய்திருக்கிறோம்? நாட்டுக்காக உயிர் நீத்த தியாகிகளுக்கு சிலை வைக்கிறார்கள், பல கல்லூரிகளை அவர்கள் பெயரில் துவக்குகிறார்கள். இப்படி எத்தனை எத்தனையோ, ஆனால் நமக்காக ஜீவனையே கொடுத்த இயேசுவுக்காக நாம் என்ன செய்தோம், என்ன செய்துகொண்டிருக்கிறோம்? நாட்டுக்காக உயிர் நீத்த தியாகிகளுக்கு சிலைவைப்பதுபோல இயேசுவுக்கு சிலை வைக்கவேண்டாம், அவர் பெயரில் கல்லூரிகளும் வேண்டாம். அவர் பெயரால் இயங்குகின்ற திருச்சபையின் பணிகளைச் செம்மையாக செய்வோம். இதுவே அவர் நமக்கு விட்டு சென்ற பணி. ஆகையால் தான் பேதுருவைப் பார்த்து: நீ என்னை நேசிக்கிறாயா என்று கேட்ட ஆண்டவர் என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார். இன்று அவருடைய ஆடுகள் அங்குமிங்கும் ஓடி காணாமற் போகிறது. அதை தேட வேண்டும். அவைகளை ஒன்று சேர்த்து, நொண்டியானவைகளையும், வியாதி கொண்டவைகளையும் சற்று நிதானமாக பராமரித்து காத்திட வேண்டும். இதுவே நம்முடைய வேலை, இதுவே நாம் அவரை நேசிக்கிற நேசம். உங்களுடைய நேசம் எப்படிப்பட்டது? அவருக்காக பேசிட நாவுகள் வேண்டும். ஒப்புக்கொடுப்பீர்களா?

கேள்வி நேரம்

நேசர் நம்மை கைவிடுவாரா?

அநேகருக்கு அற்பவிசுவாசம் வந்துவிடுகிறது. நாம் இப்படியாக இயேசுவை நேசிக்கிறோமே அவர் நம்மை நேசிப்பாரா? அல்லது கைவிட்டுவிடுவாரா என்ற சந்தேகம் எழும்புகிறது. அன்பு நேயரே, லாசருவை

இயேசு நேசித்தார். என்பதை நாம் அறிவோம். அவனுடைய சகோதரிகள்கூட ஆண்டவரே நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான் என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள். அவரோ இந்த வியாதி மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமாரனும் அதினால் மகிமைப்படுவார் என்று சொல்லி, லாசரு மரித்து நாலு நாட்களுக்குப் பின்பு சென்றார். ''அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்! அவர்களில் சிலர்: குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப் பண்ணவும் கூடாதா என்றார்கள்'' (யோவா.11:36,37).

இன்றைக்கு இயேசுவை நேசிக்கிற அல்லது அவரால் நேசிக்கப்படுகிற ஒவ்வொருவரையும் இந்த உலக மக்கள் இப்படியாகத்தான் கேட்கிறார்கள். இவனுக்கு ஏன் இந்தப் பாடுகள், இவனை இந்தப்பாடுகளிலிருந்து அந்த ஆண்டவர் இயேசு இவனை காப்பாற்றக்கூடாதா? இவன் எவ்வளவாய் இயேசுவை நம்பியிருந்தான். இப்பொழுது இவனை கைவிட்டுவிட்டாரே, என்று சொல்லுவார்கள். அன்பு சகோதரனே, சகோதரியே, நீ அவரை நேசிக்கிறாயா? அவர் ஒருபோதும் கைவிடார். லாசருவை உயிரோடு எழுப்பி கர்த்தர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். சோர்ந்து போகாதே அவர் உன் வேண்டுதலை கேட்பார். உன்னைக் கண்நோக்கிப்பார்ப்பார். உன் தேவைகளை சந்திப்பார். ஒருபோதும் உன்னை கைவிடார். அவர் மீது வைத்துள்ள உன் நேசத்தை விட்டுவிடாதே. உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

22. கட்டுப்பாடும் கட்டளையும்
Agreement and Commandment

இன்றைய நாட்களில் சில இடங்களில் கட்டுப்பாடு செய்து கட்டளை பிறப்பிக்கப்பட்டிருப்பதைப் போல அந்நாட்களிலும் இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்க வேண்டுமென்று யூதர்கள் கட்டுப்பாடு செய்திருந்தார்கள். இக்கட்டுப்பாடு தேவனை அறிந்த ஒரு மனிதனை கட்டுப்படுத்துமா? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து, உலக இரட்சகர் என்றும், அவர் அற்புதமானவர் என்றும், அவர் பாவிகளை இரட்சிக்க மனுகுலத்திற்கு தேவ ஆட்டுக்குட்டியாக அனுப்பப்பட்டவர் என்றும் விசுவாசிக்கின்ற ஒருவனை பார்த்தோ அல்லது அவர் மூலமாக அநேக நன்மைகளை பெற்ற ஒருவனை பார்த்தோ நீ அவரை விசுவாசிக்கக்கூடாது, அவரைப் பற்றி அறிவிக்கவும் கூடாது என்று கட்டுப்பாடு செய்தால், அவன் பயந்து போய் அறிவிக்காமல் நின்று விடுவானா? யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்று அவன் பறைசாற்றுவானல்லவா!

அதைப்போல ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலம் சுகமாக்கப்பட்ட ஒரு பிறவிக்குருடன் அவரைக் குறித்து சாட்சி கொடுப்பதை யோவான் சுவிசேஷ புத்தகத்தில் படிக்கிறோம். இன்று அதைக்குறித்து தியானிப்போம்.

அந்த பிறவிக்குருடனைப் பார்த்து, இயேசுவின் சீஷர்கள்: ''ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டாக இப்படிப் பிறந்தான்'' என்றார் (யோவா.9:2,3). மேலும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்ய வேண்டும் என்று சொல்லி, உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அதை பிறவிக்குருடனுடைய கண்களின் மேல் பூசி நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அந்தப்படியே கழுவி பார்வையடைந்தான். அவனைப் பார்வையடைந்த வனாகக் கண்ட அநேக அயலகத்தார் அவனை நோக்கி: உன் கண்கள் எப்படி திறக்கப்பட்டது என்றார்கள். அவன் இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின் மேல் பூசி, நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு என்றார் அப்படியே நான் போய் கழுவி, பார்வையடைந்தேன் என்றான். அவனை பரிசேயரிடத்திற்கு அழைத்துக்கொண்டு போனார்கள்.

அவர்கள் அவனிடத்தில் எப்படி பார்வையடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு அவன் அவர் என் கண்களின் மேல் சேற்றைப் பூசினார், நான் கழுவினேன், காண்கிறேன் என்றான். தொடர்ந்து பரிசேயர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்தானே அவனைக் குறித்து நீ என்ன சொல்லுகிறாய் என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி என்றான். பின்பு அவர்கள் அவன் தாய், தகப்பன்மாரை அழைப்பித்து கேட்டார்கள். இயேசுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கை பண்ணினால் அவனை ஜெப ஆலயத்துக்குப் புறம்பாக்க வேண்டுமென்று யூதர்கள் கட்டுப்பாடு செய்திருந்தபடியால் அவர்களுக்கு பயந்து இவன் பார்வையடைந்தவகை எங்களுக்குத் தெரியாது, இவன் வயதுள்ளவனாயிருக்கிறான் இவனையே கேளுங்கள் என்றார்கள்.

இன்றைக்கு இருக்கிற ஒரு சில பெற்றோர்கள் இப்படித்தானிருக்கிறார்கள். பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும் என்று வேதத்தில் வாசிக்கிறோம். இவர்களோ, யூதர்களுக்குப் பயந்தபடியால் அவனையே கேளுங்கள் என்றனர். பிள்ளைகளுக்கு இருக்கிற தைரியம் கூட சில பெற்றோர்களுக்கு இல்லை. அதை நினைக்கும்போது எத்தனை ஆச்சரியமாயிருக்கிறது!

அவர்கள் இரண்டாந்தரம் அவனை அழைத்து நீ தேவனை மகிமைப்படுத்து அந்த மனுஷன் பாவி என்று எங்களுக்குத் தெரியும் என்றார்கள். ''மறுபடியும் அவனை நோக்கி; உனக்கு என்ன செய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள். அவன் பிரதியுத்தரமாக: முன்னே உங்களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்; மறுபடியும் கேட்க வேண்டியதென்ன? அவருக்குச் சீஷராக உங்களுக்கு மனதுண்டோ என்றான்'' (யோவா.9:26,27). கண்பார்வையற்றவனாய் இருந்த இந்த பிறவிக்குருடனை இயேசு வெளிச்சத்தில் கொண்டு வந்தார். யூதர்கள் எப்படிப்பட்ட கட்டுப்பாடு செய்திருந்தால் எனக்கென்ன இயேசுவின் மூலமே நான் பார்வையடைந்தேன் என்று அறிவிக்க அவன் சலித்துப்போகவுமில்லை, பயந்துபோகவுமில்லை, மேலும் சோர்ந்துபோகவுமில்லை. அவனை மிகவும் நெருக்கும் போது, உங்களுக்கும் சீஷராக மனதுண்டோ? என்று கேட்டான். எத்தனை அருமையான கேள்வி பார்த்தீர்களா? நம்மில் எத்தனைபேர் இப்படிப்பட்ட அறிக்கையை செய்கிறோம். ஆண்டவர் நமக்கும் எத்தனையோ நன்மைகளை செய்திருக்கிறார். அவைகளை சொல்ல எந்தக் கட்டுப்பாடும் கட்டளையும் நம் ஒருவரையும் கட்டுப்படுத்தமுடியாது. பழைய ஏற்பாட்டின் காலத்தில் இந்த மார்க்கம் பலுகி பெருகாதபடி தடைசெய்ய எத்தனை எத்தனையோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எகிப்திய ஜனங்கள் இஸ்ரேவேல் ஜனங்களைப் பார்த்து நம்மிலும் ஏராளமானவர்களும், பலத்தவர்களுமாய் இருக்கிறார்கள் என்று கண்டு அவர்கள் பெருகாதபடிக்கு தடைசெய்ய ''எகிப்தின் ராஜா, சிப்பிராள் பூவாள் என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகளோடே பேசி: நீங்கள் எபிரெய ஸ்திரீகளுக்கு மருத்துவம் செய்யும்போது, அவர்கள் மனையின்மேல் உட்கார்ந்திருக்கையில் பார்த்து ஆண்பிள்ளையானால் கொன்றுபோடுங்கள், பெண்பிள்ளையானால் உயிரோடு இருக்கட்டும் என்றான்'' (யாத்.1:15,16). இதைக்கேட்ட மருத்துவச்சிகள் எகிப்தின் ராஜாவுக்கும் அவனுடைய கட்டளைகளுக்கும் பயப்படவில்லை. அவர்கள் தேவனுக்குப் பயந்ததினால், எகிப்தின் ராஜா தங்களுக்கு இட்ட கட்டளையின்படி செய்யாமல் ஆண்பிள்ளைகளையும் உயிரோடே காப்பாற்றினார்கள்.

புதிய ஏற்பாட்டின் காலத்தில் கட்டுண்ட அப்போஸ்தலர்களை தேவதூதன் விடுவித்து இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள் என்றான். அப்போஸ்தலர்களும் ''மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது'' என்று சொல்லி முழுதைரியமாய் பிரசங்கித்தார்கள் (அப்.5:29). அதனால் அப்போஸ்தலரை வரவழைத்து, அடித்து இயேசுவின்

நாமத்தைக் குறித்துப்பேசக் கூடாதென்று கட்டளையிட்டு அவர்களை விடுதலையாக்கினார்கள். அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமான மடைவதற்குப் பாத்திரமாக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டு புறப்பட்டுப் போய் தினந்தோறும் தேவாலயத்திலேயும், வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்து என்று பிரசங்கித்தார்கள்'' (அப்.5:40-42).

மேலும் அப்போஸ்தலர்களை கொலை செய்ய யோசனை பண்ணினார்கள். அப்பொழுது சகல ஜனங்களாலும் கனம்பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் என்னும் பேர்கொண்ட ஒரு பரிசேயன் ஆலோசனை சங்கத்தில் எழுந்திருந்து, அப்போஸ்தலரை சற்று நேரம் வெளியே கொண்டுபோகச் சொல்லி சங்கத்தாரை நோக்கி: ''இஸ்ரவேலரே, இந்த மனுஷருக்கு நீங்கள் செய்யப்போகிறதைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்... தேவனோடு போர் செய்கிறவர்களாய்க் காணப்படாதபடிக்குப் பாருங்கள் என்றான்'' (அப்.5:34-39). இன்றைக்கு தேவனால் உண்டான மனுஷன் தேவனோடு போர் செய்கிறவனாய் இந்த மார்க்கத்தை வளரவிடாமலும், அநேகர் அதன்பால் ஈர்க்கப்பட்டு போய்விடாமலும் இருக்க புதிய புதிய சட்டங்களை உண்டாக்குகிறார்கள். தேவனால் ஏற்படுத்தப்பட்ட இந்த மார்க்கத்தை ஒருவராலும் ஒழிக்க இயலாது. ''இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுங்கிப்போவான்; இது எவன்மேல் விழுமோ அவனை நசுக்கிப்போடும்'' என்று மத்.21:44-ல் வாசிக்கிறோம்.

இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிற அன்பு நேயரே, அதிகாரங்கள் தேவனுடைய கரத்திலிருக்கிறது. ''உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது'' என்று ரோம.13:1-ல் படிக்கிறோம். ஒவ்வொருவரும் தேவனால் உண்டாயிருக்கிற அதிகாரங்களுக்கும், தேவனால் நியமிக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களுக்கும் கீழ்ப்படியவேண்டும். தேவனால் நியமிக்கப்பட்ட அதிகாரத்திற்கு ஒருவன் எதிர்த்து நிற்பானேயானால் அவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான் என்று கீழுள்ள வசனங்களில் வாசிக்கிறோம். அதே வேளையில் தேவனுடைய கட்டளைகளுக்கு விரோதமான ஒரு அதிகாரம் எழும்புமேயானால் அவைகளுக்கு நாம் கீழ்ப்படியவேண்டிய அவசியமில்லை. அது நம்மை கட்டுப்படுத்தாது. நாம் தேவனால் உண்டானவர்கள். ஆகையால் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கவேண்டும்.

தேவனால் உண்டாயிராதவன் அவருடைய வசனங்களுக்குச் செவிகொடாதே போகிறான். அந்நாட்களில் தேவனுக்கு விரோதமான கட்டளையைப் பிறப்பித்தவர்கள் காணாமற்போய்விட்டார்கள் அல்லது

மனமாற்றப்பட்டார்கள். தேவனுக்கு விரோதமான கட்டளையும், கட்டுப்பாடும் எத்தனை நாட்களுக்கு! ஆகையால் பயப்படாமல் தேவ மனிதர்களாக, தேவனுடைய கட்டளைகளை உங்கள் இருதங்களில் எழுதினவர்களாக, அதை எந்நாளும் கைக்கொள்ளுகிறவர்களாக, உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்லுகிறவர்களாக இருங்கள். அப்பொழுது தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். கர்த்தர் உங்களோடு இருப்பாராக!

கேள்வி நேரம்

தேவனுக்கு விரோதமான கட்டளை ஒரு கிறிஸ்தவனை கட்டுப்படுத்துமா?

கட்டுப்படுத்தாது, இவ்விஷயத்தில் நாம் மனுஷர்களுக்கு அடிமைகள் அல்ல. தேவனுக்கும் அவருடைய கட்டளைகளுக்கும் முதலாவது கீழ்ப்படியவேண்டும். அவர் ஒருவரே நம்மை பாவத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் விடுவித்து, அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்து வைத்திருக்கிறார். அந்நாட்களில் நேபுகாத்நேச்சார் ஒரு பொற்சிலையை பண்ணி எந்த மனுஷனும் தாழ விழுந்து பொற்சிலையை பணிந்துகொள்ளவேண்டுமென்று ஒரு கட்டளையை பிறப்பித்தான். அந்நாட்களில் வாழ்ந்த தேவ மனிதர்கள் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜா நிறுத்தின பொற்சிலையை பணிந்து கொள்ளாதிருந்தனர். ராஜாவின் கட்டளை இவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை. அது தேவனுக்கு விரோதமான கட்டளை ஆகையால் துணிந்து அதை எதிர்த்தனர்.

இதனால் ராஜா கோபமடைந்து அக்கினிச்சூளையிலே அவர்களை போட்டான். அவர்கள் ஆராதித்து வந்த உன்னதத்தின் தேவன் அவர்களை அந்த எரிகிற அக்கினிச்சூளைக்குத் தப்புவித்தார். இக்காட்சியைக் கண்ட ராஜா மெய்யான தேவனை அறிந்துகொண்டான். ஒருவேளை ராஜாவின் கட்டளைக்கு பயந்து போய் ராஜா நிறுத்தின பொற்சிலையை அவர்கள் வணங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும். ராஜாவும் அந்நாட்டு மக்களும் ஜீவனுள்ள தேவனை அறியாதுபோயிருப்பார்கள். வானத்திற்கும் பூமிக்கும்மேலான தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்ட சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவின் கட்டளைக்குப் பயப்படாமல் எதிர்த்து நின்றனர். இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரரே, வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனுக்கு விரோதமான கட்டளை உன்னை கட்டுப்படுத்தாது. தேவனுடைய கட்டளைகளை உன் இருதயத்தில் எழுதிக்கொண்டு, அவரை தொழுதுகொள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

23. பொறுமை
Patience

அன்றும் சரி இன்றும் சரி அநேகர் பொறுமையை இழந்து விடுகின்றனர். இதற்கு என்ன காரணம் என்று நாம் ஆராய்ந்து பார்ப்போமானால் அன்பு இல்லாமையே என்பதை நாம் அறிந்துகொள்வோம். தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பரம வைத்தியராக இருந்து ''பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கிறார்'' (ரோ.15:6). பொறுமையை அடைய நம்முடைய சுய யுக்திகளை தவிர்த்து விட்டு, பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிக்கிறவைகளை கையாள வேண்டும். ''தேவ வசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படிக்கு, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது'' என்று ரோ.15:4-ல் வாசிக்கிறோம். ஆகையால் அவைகளை மிகுந்த கவனத்தோடு வாசித்து அவைகளில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அவைகளை நான் பார்க்கவில்லையே பின்பு எப்படி அவைகளில் நான் நம்பிக்கை வைக்க முடியும் என்று நீங்கள் கேட்கலாம். ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்'' (எபி.11:1,2). காணாததை நம்புவதே விசுவாசம்.

இப்படிப்பட்ட விசுவாசத்தை கொண்டவர் ஆபிரகாம். இவர் விசுவாச மார்க்கத்தாரின் தகப்பன் என்று அழைக்கப்படுகிறார். இவருடைய விசுவாசம் சோதிக்கப்படும்போது வெற்றி கொண்டார். இன்று அநேகர் விசுவாச பரீட்சையில் தோல்வியடைகிறார்கள். ''என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரணகிரியை செய்யக்கடவது'' என்கிறார் யாக்கோபு (யாக்.1:2-4). சோதனை வரும் போது ஏன்தான் இந்த சோதனை எனக்கு வருகிறதோ! என்று சொல்லி வருத்தப்படுவதில் பயன் ஒன்றுமில்லை, ''சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்'' என்ற யாக்.1:12-ன்படி அதை சகித்து, அந்த பரீட்சையானது நமது வாழ்வில் பொறுமையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையோடு அதை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

முழுக்க முழுக்க பொறுமையைப் பற்றி பேசும் எழுத்தாளர் யாக்கோபு. அவர் நிரூபத்தில் பொறுமைக்கு மாதிரியாக யோபுவை நமக்கு

நினைப்பூட்டுகிறார். ''என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள். இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக் குறித்து கேள்விப்பட்டிருப்பீர்கள்'' (யாக்.5:10,11). யோபுவைப் பற்றி நாம் கேள்விப்பட்டது என்ன? படித்தது என்ன? யோபு இரட்டிப்பான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டான் என்பதே.

ஆம், உண்மைதான் அதை எப்படிப் பெற்றுக்கொண்டான். அந்த விதமான பொறுமை இன்று நமக்கு இருக்கின்றதா? ''அவன் மனைவி அவனைப் பார்த்து: நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள்'' (யோபு2:9). இன்றைக்கு இருக்கக்கூடிய மனைவி தன் கணவனை இப்படி பேசுவார்களா? பேசமாட்டார்கள் ஆனால் ஒருவேளை யோபுவைப்போல கொடிய பருக்கள் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் வந்து தன் கணவன் ஒரு ஓட்டை எடுத்து தன்னை சுரண்டிக் கொண்டிருப்பதைப் பார்த்தால் இந்த மனுஷனுக்கு சாவு வந்து தொலையமாட்டேங்குது எத்தனை நாளைக்குத்தான் நான் இதை சகிப்பேன் என்பார்கள். காரணம்! அவர்களால் அதை பார்த்து சகிக்க முடியாமல் இவ்விதமான வார்த்தைகளை பேசக்கூடும். அந்தப்படியே ஒருவேளை யோபுவின் மனைவியும் பேசியிருக்கக்கூடும்.

ஆனால் யோபு தன் மனைவியைப் பார்த்து சொன்ன காரியம் என்ன? ''நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோலப் பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ என்றான்; இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ் செய்யவில்லை'' (யோபு2:11). தன் உதடுகளால் கூட பாவஞ்செய்யாத இந்த யோபுவுக்கு வந்த சோதனைதான் எத்தனை அதிகம். அவன் பிள்ளைகளையும், ஆடு, மாடுகளையும், வேலையாட்களையும் பின்னும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் ஒரே நாளில் பிசாசு அழித்துப்போட்டான். இத்தனையையும் இழந்த யோபு பொறுமையுடன் ''என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்'' என்றான் (யோபு19:25,26). இந்த யோபுவின் நம்பிக்கை எப்பேர்பட்டது பார்த்தீர்களா! சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் பொறுமையை இழக்கின்ற நமக்கு, யோபுவின் சரித்திரம் ஒரு திருப்பத்தை உண்டாகுமென்று நம்புகிறேன். பொறுத்தார் பூமி ஆள்வார் என்பது பழமொழி. ஆனால் வேதம் கூறுகிற நீதிமொழி ''நீண்ட பொறுமையினால் பிரபுவையும்

சம்மதிக்கப் பண்ணலாம்'' (நீதி.25:15). இயேசு கிறிஸ்து தம்மைப் பின்பற்றினவர்களோடு உவமைகளாகப் பேசும்போது ''ஒரு பட்டணத்திலே ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான்.

அந்தப் பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள். அவள் அவனிடத்தில் போய்: எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்ய வேண்டும் என்று விண்ணப்பம் பண்ணினாள். வெகுநாள் வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்து பின்பு அவன்: நான் தேவனுக்கு பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ள வராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார்'' என்றார் (லூக்.18:2-8). ஆண்டவர் கூறிய இந்த உவமையிலே இடம்பெறும் விதவை நீண்ட பொறுமையினால் பிரபுவையும் சம்மதிக்க பண்ணலாம் என்ற வசனத்தின்படியே தன்னுடைய விடாமுயற்சியினால் தேவனை மதியாத நியாயாதிபதியையே சம்மதிக்க பண்ணினாள். எதனால்? தன்னுடைய விடாமுயற்சியினால் (அதாவது நீடிய பொறுமையினால்). அந்தப்படியே பொறுமையோடிருந்து ஜெபிப்போமானால், பிதாவாகிய தேவன் நம் வேண்டுதலை கேட்டு சீக்கிரத்திலே நமக்கு நியாயஞ்செய்வார்.

கொடிய பருக்களிலும் பொறுமையோடிருந்த யோபுவைப்போல, முப்பத்தெட்டு வருஷம் வியாதி கொண்ட ஒரு மனுஷன் பெதஸ்தாகுளத்தை தேவதூதன் எப்பொழுது கலக்குவான் என்று பொறுமையோடு காத்திருந்து, கலக்கப்படும்போது தன்னைக் கொண்டு போய் குளத்தில் இறக்கிவிட ஒருவரும் இல்லாதிருந்தும் நீடிய பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் மண்டபத்திலே படுத்திருந்தான். அவனை இயேசு சந்தித்து, எழுந்திரு என்றார். அவன் உடனே எழுந்து தன் படுக்கையை எடுத்துக்கொண்டு போனான். இங்கே அவனுடைய பொறுமை வீணாய் போகவில்லை. ஆண்டவரால் சுகமாக்கப்பட்டான். யவீரு என்னும் பேருள்ள ஜெப ஆலயத்தலைவன் தன்னுடைய பன்னிரண்டு வயதுள்ள ஒரே குமாரத்தி மரண அவஸ்தைபடுவதைக் கண்டு இயேசுவிடம் வந்து அவரை தன் வீட்டிற்கு வரும்படி வேண்டிக்கொண்டான்.

அவரும் அதை ஏற்று போய்கொண்டிருக்கும்போது, வழியில் பெரும்பாடுள்ள ஸ்திரீ அவரை தொட்டு சுகமானாள். அதனால் அவருடைய பயணம் தாமதமானது. அதன்பின்பு ஜெப ஆலயத் தலைவனுடைய வீட்டிலிருந்து ஒருவன் வந்து யவீருவைப் பார்த்து: ''உம்முடைய குமாரத்தி மரித்துப் போனால், போதகரை வருத்தப்படுத்த வேண்டாம் என்றான். இயேசு அதைக் கேட்டு: பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார்'' (லூக்8:49,50).

இந்த வார்த்தை அவனை ஆறுதல்படுத்தியது. ஒருவேளை அவன் அவசரப்பட்டிருப்பானேயானால், மரித்துப்போன செய்தி கேட்டவுடன் மகளை பார்க்க ஓடியிருப்பான். அவன் பொறுமையுள்ளவனாக இருந்து தன்னுடைய மகளை உயிருள்ளவளாக பெற்றுக்கொண்டான். இன்று தேவ சமூகத்தில் நீங்களும் நானும் இவர்களைப்போல பொறுமையோடிருந்தால் பொன்னான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்வோம்.

''ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறுக்கவில்லை'' என்பதைப்போல அநேகர் நரை முடிவரை நல்ல பல அரிய பெரிய காரியங்களை பொறுமையுடன் செய்துவிட்டு, தள்ளாடும் வயதில் தன் மனதை அடக்காமல் டென்ஷன் ஆகி பொறுமையை இழந்து விடுகின்றனர். ''பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்'' என்று நீதி.16:32-ல் படிக்கிறோம். ''இப்படியிருக்க சகோதரரே, கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடைய வேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான்'' அதைப்போல காத்திருங்கள்.

அந்தப்படியாக நீங்களும் நித்திய ஜீவனைப் பெற கிறிஸ்தவ ஜீவியத்தில் நீடிய பொறுமையோடிருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஆகையால் நீடிய பொறுமையோடிருந்து உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள் கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறது.

கேள்வி நேரம்

வாலிபர்களுடைய ஆலோசனையும் பொறுமையும் எப்படிப்பட்டது?

''பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்'' என்ற வசனத்தை விளம்பினவன் சாலொமோன் ராஜா (பிர.7:8). இவனுடைய குமாரனாகிய ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி இஸ்ரவேலர் விருப்பம் கொண்டு, எங்கள் மேல் உமது தகப்பன் வைத்த பாரமான நுகத்தை லகுவாக்கும். அப்பொழுது உம்மை சேவிப்போம் என்றார்கள். அதற்கு அவன்

பொறுத்திருந்து மூன்று நாள் கழித்து என்னிடத்தில் திரும்பி வாருங்கள் என்றான். அதன் பின்பு தன்னிடம் உள்ள முதியோரின் ஆலோசனையை கேட்டான். அதற்கு அவர்கள் நீர் இன்று இந்த ஜனங்களுக்குச் சேவகனாகி, அவர்களுக்கு இணங்கி, அவர்கள் சொற்படி செய்து மறுமொழியாக நல்வார்த்தைகளைச் சொல்வீரானால், எந்நாளும் அவர்கள் உமக்கு ஊழியக்காராயிருப்பார்கள் என்றார்கள். அவனோ, முதியோர் தனக்குச் சொன்ன இந்த ஆலோசனையை தள்ளிவிட்டு, தன்னோடே வளர்ந்த வாலிபரோடே ஆலோசனை பண்ணினான்.

அவர்கள் அவனுக்கு பிரதியுத்தரமாக: ''நான் உங்கள் நுகத்தை அதிக பாரமாக்குவேன்; என் தகப்பன் உங்களைச் சவுக்குகளினாலே தண்டித்தார், நான் உங்களைத் தேள்களினாலே தண்டிப்பேன் என்று நீர் அவர்களோடே சொல்ல வேண்டும் என்றார்கள் (1இராஜா.12:11). மூன்று நாள் பொறுத்திருந்து வந்த இஸ்ரவேலர் இச்செய்திகேட்டு ராஜாவுக்கு விரோதமாக பொங்கி எழுந்து பிரிந்துபோனார்கள். யார் தான் இப்படிப்பட்ட வார்த்தைகளுக்கு செவிகொடுப்பார்கள். முதியோருடைய ஆலோசனையை கேட்காத வாலிபர்களுடைய ஆலோசனையும் பொறுமையும் இப்படித் தான் இருக்கிறது. உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

24. ஜீவ ஊற்று
Fountain of Life

இப்புவியில் ஊற்றுத்தண்ணீரை குடித்து உயிர்வாழுகின்ற நாம் நித்திய நித்தியமாக வாழ ஜீவ ஊற்றைக் குறித்து தியானிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஜீவ ஊற்றை உடையவர் தேவன். அவர் தம்மிடத்தில் வருகின்றவர்களுக்கு ஜீவ தண்ணீரை இலவசமாய் கொடுக்கின்றவர் என்று பரிசுத்த வேதாகமத்தின் மூலம் அறிந்து கொள்கின்றோம். எரேமியா தீர்க்கதரிசிக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி, ''என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவதண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்'' (எரே.2:13). ஒன்று அவரை விட்டுவிட்டார்கள். இரண்டு தாங்களே தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்.

இது அவர்கள் தங்களை தாங்களே ஏமாற்றிகொள்ள எடுத்த முயற்சி. கட்டையைப் பார்த்து, நீ என் தகப்பன் என்றும்; கல்லைப்பார்த்து, நீ என்னைப் பெற்றாய் என்றும் சொல்லி வழி விலகிப்போனார்கள். தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலருக்கு ஜீவதண்ணீர் ஊற்றாக இருந்து, அநேக

அடையாளங்களையும், அற்புதங்களையும் அவர்களுக்குள்ளே செய்தார். இந்த இஸ்ரவேலர்கள் தேவனுடைய அழைப்பை ஏற்று எகிப்தைவிட்டு புறப்பட்டு வரும் வழியில் தண்ணீர் இல்லாதிருந்தது; அப்பொழுது அவர்கள் மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடினார்கள். ஜனங்கள் மோசேயோடே வாக்குவாதம் பண்ணி எங்கள் சகோதரர் கர்த்தருடைய சந்நிதியில் மாண்டபோது நாங்களும் மாண்டுபோயிருந்தால் நலமாயிருக்கும் நாங்களும் எங்கள் மிருகங்களும் இங்கே சாகும்படி, நீங்கள் கர்த்தரின் சபையை, இந்த வனாந்தரத்திலே கொண்டுவந்தது என்ன; விதைப்பும் அத்திமரமும், திராட்சச்செடியும், மாதுளஞ்செடியும், குடிக்கத்தண்ணீரும் இல்லாத இந்தக்கெட்ட இடத்தில் எங்களைக் கொண்டுவரும்படி, நீங்கள் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினது என்ன என்றார்கள்'' (எண்.20:2-5).

அப்பொழுது மோசே ''தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன்கோலினால் இரண்டு தரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது; சபையார் குடித்தார்கள்; அவர்கள் மிருகங்களும் குடித்தது'' என எண்.20:11-ல் வாசிக்கிறோம். இங்கே வனாந்தரத்தில் தண்ணீர் இல்லாமல் தாகத்தால் அவர்கள் நாவறண்டபோது ஜீவ ஊற்றை உடைய தேவன் அதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிராமல் கன்மலையிலிருந்து மோசேயைக் கொண்டு தண்ணீரை புறப்படப்பண்ணினார். ''அந்த கன்மலை கிறிஸ்துவே'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் 1கொரி.10:4-ல் குறிப்பிடுகிறார்.

அந்தக் கன்மலையாக இருந்த கிறிஸ்து சமாரியா நாட்டைச் சேர்ந்த ஸ்திரீயிடம் சொல்வதை படித்திருக்கிறீர்களா? ''நீ தேவனுடைய ஈவையும் தாகத்துக்குத் தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத் தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார். அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே பின்னே எங்கேயிருந்து உமக்கு ஜீவ தண்ணீர் உண்டாகும். இந்த கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக; இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்'' (யோவா.4:10-14).

கிறிஸ்துவானவர் நமக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றை கொடுக்க வந்தவர். அவரை பிதாவாகிய தேவன் முன்குறித்திருக்கிறார். மனிதனுக்காய் தன் ஜீவனையே கொடுக்கும்படியாய் வந்தார். அவர் கொடுக்கிறதான தண்ணீராகிய ஜீவ வசனத்தை ஒருவன் பெற்றுக்கொள்ளும்போது அவன் ஜீவகாலமெல்லாம் நன்மையைக் காண்பான். அது அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாகவே இருக்கும்.

ஆண்டவர் இயேசுவைக்குறித்து சகரியா தீர்க்கன் இப்படியாக குறிப்பிடுகிறார்; ''அந்நாளிலே பாவத்தையும், அழுக்கையும் நீக்க, தாவீதின் குடும்பத்தாருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் திறக்கப்பட்ட ஒரு ஊற்று உண்டாயிருக்கும்'' என்றான் சகரி.13:1-ம் வசனத்தின்படியாக பாவத்தை நீக்கும் பழுதற்ற தேவ ஆட்டுக்குட்டியாக இயேசுகிறிஸ்து அவதரித்தார். அவர் ''நான் அல்பாவும், ஓமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்; தாகமாயிருக்கிறவனுக்கு நான் ஜீவதண்ணீரூற்றில் இலவசமாய்க் கொடுப்பேன்'' என்கிறார் (வெளி.21:6).

இன்று இஸ்ரவேல் மக்களைப்போல தேவனை விட்டு விட்டு அங்குமிங்கும் அழைந்து வருத்தத்தோடு வாழ்ந்து கொண்டு இருக்கிற உங்களை மீண்டும் அழைக்கிறார். ''ஓ தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள், நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள்'' (ஏசா.55:1). பூமியிலே ஊற்று தண்ணீரை உண்டாக்கின ஆண்டவர் மனிதனிடத்திலிருந்து எதையும் எதிர்பார்க்காமல் அவனுக்கு அதை இலவசமாகவே கொடுக்கின்றார். அதைப்போல ஜீவ ஊற்றுத் தண்ணீரையும் இலவசமாகவே கொடுக்கிறேன் என்று அழைக்கின்றார். ஆவிக்குரிய தாகமுடைய நீங்களும் நானும் அவர் கொடுக்கும் இலவச ஜீவதண்ணீரை பெற்று ஜீவகாலமெல்லாம் அவரோடுகூட நித்தியத்தில் வாழ இதுவே சந்தர்ப்பம்.

கன்மலையிலிருந்து தண்ணீரை புறப்படப்பண்ணின தேவன். எந்த சூழ்நிலையிலும் நம்மை காக்க வல்லவர் என்பதை இஸ்ரவேலர் அறிந்திருந்தார்களானால் ஜீவ ஊற்றாகிய தேவனை விட்டு விலகாமல் இருந்திருப்பார்கள். எலியாவை பாருங்கள். பஞ்சகாலத்திலும் தம்மை காக்க கர்த்தர் வல்லவர் என்ற நம்பிக்கையோடு கர்த்தருடைய வார்த்தைக்கு காத்திருந்தான். அந்தப்படியே அவர் எலியாவை நோக்கி: நீ யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு. அந்த ஆற்றின் தண்ணீரை குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார்.

அந்தப்படியே யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே தங்கியிருந்தான். காகங்கள் அவனுக்கு விடியற்காலத்தில் அப்பமும், இறைச்சியும், சாயங்காலத்தில் அப்பமும், இறைச்சியும் கொண்டுவந்தது; தாகத்திற்கு அந்த ஆற்றின் தண்ணீரைக் குடித்தான். தேசத்தில் மழை பெய்யாதபடியினால் சில நாளுக்குப் பின்பு அந்த ஆறு வற்றிப்போயிற்று. அவனோ, அமைதலோடு இருந்து, அடுத்து கர்த்தர் தம்மோடு என்ன பேசப்போகிறார் என்ற ஆவலோடு காத்திருந்தான். பின்பு கர்த்தர் நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப்போய் அங்கே தங்கியிரு உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார். அப்படியே சென்று அநேக நாள் அவர்களால் போஷிக்கப்பட்டான்.

வாழ்க்கையில் நாம் எதற்கும் அவசரப்படக்கூடாது. அதுவும் அவசரப்பட்டு தேவன் எனக்கு ஒன்றும் செய்யவில்லை என்று சொல்லிவிடக்கூடாது. தேவனுடைய திருசித்தம் நிறைவேற நம்மை முதலாவது அர்ப்பணிக்க வேண்டும். எலியாவின் ஜெபத்தைக் கேட்டு தேவன் மழையை நிறுத்தினார். பின்பு அவன் மழைக்காக ஜெபித்தபோது தேவன் மழைபெய்யக் கட்டளையிட்டார் (யாக்.5:17,18). எலியாவின் தேவன் நம்மோடிருக்கிறார். எலியாவைப் போஷித்தவர் நம்மையும் போஷிப்பார். ஆகையால் நாம் செய்ய வேண்டுவதென்ன? எலியாவைப்போல தேவவசனத்திற்கு காத்திருக்க வேண்டும். அப்படியென்றால் நாம் தனித்து வீடில் இருக்கும்போது அவர் நம்மோடு பேசுவார் என்று அர்த்தமல்ல, நமக்குக் கொடுக்கப்பட்ட வேதாகமத்தை பகுத்து படித்து, அவர் நமக்கு சொல்லுகிறதான உபதேசத்திலே நிலைத்திருப்பது.

நீங்கள் அவருடைய உபதேசத்தில் நிலைத்திருக்கிறீர்களா? ''தூரதேசத்திலிருந்து வரும் நற்செய்தி விடாய்த்த ஆத்துமாவுக்குக் கிடைக்கும் குளிர்ந்த தண்ணீருக்குச் சமானம்'' ஜீவ ஊற்று தேவனிடத்திலிருந்து புறப்படுகிறது அது மனிதனுக்கு கிடைக்கும் நற்செய்தியாகவே உள்ளது. அது எப்பொழுது வரும்? அது எப்பொழுது நமக்குக் கிடைக்கும்? என்ற ஆவலோடு காத்திருக்கும் ஆத்துமாவே விடாய்த்த ஆத்துமாவாகும். அந்த ஆத்துமாவுக்கு அந்த நற்செய்தி கிடைத்தவுடன் குளிர்ந்த தண்ணீரை பருகுவதைப்போல பருகி மகிழ்ச்சியடையும். இயேசுவின் பிறப்பு தேவனிடத்திலிருந்து மனுமக்களுக்கு தேவதூதர்களால் நற்செய்தியாக சொல்லப்பட்டது. அதை ஆவலோடு விடாய்த்த ஆத்துமாபோல எதிர்பார்த்தவர்களில் சிமியோனும் ஒருவன். அவர் பிறந்து எருசலேம் தேவாலயத்திற்கு கொண்டு வரப்பட்டபோது சிமியோன்; ''அவரைத் தன் கைகளில் ஏந்திக் கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து... தேவரீர் சகல

ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்'' (லூக்.2:28-32).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பான வாசகரே, நம்முற்பிதாக்கள் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய நம் தேவனை விட்டுவிட்டார்கள். ஆகையால் தேவன் அவர்களில் அதிகமானவர்களிடத்தில் பிரியமாயிருந்த தில்லை. தாவீதை கர்த்தர் என் தாசன் என்றழைக்கிறார். தாவீது ராஜா கர்த்தரை போற்றிப்பாடும்போது ''கர்த்தாவே, மனுஷரையும் மிருகங்களையும் காப்பாற்றுகிறீர். தேவனே, உம்முடைய கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுபுத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள். உமது ஆலயத்திலுள்ள சம்பூரணத்தினால் திருப்தியடைவார்கள்; உமது பேரின்ப நதியினால் அவர்கள் தாகத்தைத் தீர்க்கிறீர். ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்'' என்கிறான் (சங்.36:6-9). எத்தனை அருமையான நம்பிக்கை. உங்களுடைய நம்பிக்கை எத்தகையது? ஜீவ ஊற்றை பற்றிக்கொள்ளுங்கள்.

கேள்வி நேரம்

ஜீவ தண்ணீரால் நமக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?

முதலாவது ஜீவ தண்ணீரை கர்த்தர் கொடுக்கிறார். அது நம்முடைய ஜீவனை காப்பாற்றக்கூடியது. கர்த்தரிடத்திலிருந்தே அது புறப்படுகிறது. அது கடையில் கிடைக்கும் ஒரு வியாபார பொருள் அல்ல. சாலொமோன் தமது நீதிமொழிகளில் இப்படியாக குறிப்பிடுகிறார்: ''என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி; என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய், அவைகள் உன் கண்களை விட்டுப்பிரியாதிருப்பதாக; அவைகளை உன் இருதயத்துக்குள்ளே கர்த்துக்கொள். அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம். எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்'' என்கிறான் (நீதி.4:20-23).

அவைகளை ஒரு மனிதன் முதலாவது கண்டுபிடிக்கவேண்டும். ஒரு உவமையில் பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத்தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார், அந்த விலையுர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான். அதைப்போல வேதவசனத்தை ஒரு மனிதன் பெற்றுக் கொள்ளும்போது அவைகள் அவனுக்கு ஜீவனும், உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாயிருக்கிறது. நீங்களும் இந்த ஜீவதண்ணீரை பெற்றுக்கொள்ள ஜீவ ஊற்றாகிய தேவனையும், ஜீவ ஊற்றுத்தண்ணீராகிய அவருடைய வசனத்தையும் நாடுங்கள்.

25. கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்

Blessed Is That Man Who Makes The Lord His Trust

உங்களுடைய நம்பிக்கையை யார் மீது வைத்துள்ளீர்கள். நம்பினவர் நட்டாற்றில் விட்டார் என்று சொல்ல கேள்விப்பட்டிருப்பீர்கள்; ''மனுஷனுடைய உதவி விருதா'' என பரிசுத்த வேதாகமத்தில் உள்ள சங்.60:11 கூறுகிறது. மனுஷனை நம்பி நம்பி ஏமாற்றமடைந்து போவதைவிட மாறாத தேவனாகிய கர்த்தரிடம் உங்கள் நம்பிகையை வையுங்கள்.

''கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிற மனுஷன் பாக்கியவான்'' என சங்கீதக்காரன் குறிப்பிடுகிறான் (சங்.40:4). இவ்வசனத்தை தேவ ஆவியானவருடைய உதவியோடு எழுதினவன் தாவீது என்ற ராஜா. மேலும் அவன் குறிப்பிடும் வசனங்களைக் கவனியுங்கள்; ''கர்த்தருக்காகப் பொறுமையுடன் காத்திருந்தேன்; அவர் என்னிடமாய்ச் சாய்ந்து, என் கூப்பிடுதலைக் கேட்டார். பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து என்னைத் தூக்கியெடுத்து, என் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, என் அடிகளை உறுதிப்படுத்தினார்''.

தாவீது நம்பின இந்த தேவனை உங்கள் நம்பிக்கையாக கொண்டால் நீங்களும் அவரைப்போல ஆசீர்வதிக்கப்படுவீர்கள். ஒரு முறை பெலிஸ்தருக்கும் இஸ்ரவேலருக்கும் யுத்தம் நடந்தபோது பெலிஸ்திய பட்டாளத்திலே கோலியாத் என்னும் பேருள்ள ஒரு யுத்தவீரன், இஸ்ரவேலிலே தன்னோடே யுத்தம் பண்ணவும், என்னைக் கொல்லவும் சமர்த்தனானால் என்னோடே யுத்தம்பண்ண யாரையாவது அனுப்புங்கள் என்று, காலையிலும் மாலையிலுமாக நாற்பது நாள் வந்து நிற்பான். இதைக்கேட்ட இஸ்ரவேலின் ராஜா சவுலும் அவனுடைய கூட்டத்தாரும் அந்த பெலிஸ்தனுடைய வார்த்தைகளைக் கேட்டு, கலங்கிக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையிலே ஆடுமேய்ப்பனாக இருந்த தாவீது அங்கே வந்து கோலியாத்தின் வார்த்தைகளைக் கேட்டு சவுல் ராஜாவிடம் சென்று நான்போய் இந்தப் பெலிஸ்தனோடே யுத்தம் பண்ணுவேன் என்றான்.

அதற்கு சவுல்; நீ இந்தப் பெலிஸ்தனோடே எதிர்த்து யுத்தம் பண்ண உன்னால் ஆகாது; நீ இளைஞன், அவனோ தன் சிறுவயது முதல் யுத்தவீரன் என்றான். அதற்கு தாவீது; ஒரு விசை ஒரு சிங்கமும், ஒரு விசை ஒரு கரடியும் வந்து மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது, நான் அதைத்

தொடர்ந்துபோய் அதை அடித்து அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன் அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து அதை அடித்துக்கொன்று போட்டேன். என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான். அப்பொழுது சவுல்ராஜா தாவீதைப் பார்த்து போ, கர்த்தர் உன்னுடனே கூட இருப்பாராக என்றான்.

தாவீது தன் தடியைக் கையிலே பிடித்துக்கொண்டு, ஆற்றிலிருக்கிற ஐந்து கூழாங்கல்லுகளைத் தெரிந்துகொண்டு அவைகளை மேய்ப்பருக்குரிய தன்னுடைய அடைப்பப் பையிலே போட்டு தன் கவணைத் தன் கையிலே பிடித்துக்கொண்டு அந்தப் பெலிஸ்தனன்டையிலே போனான். கோலியாத் தாவீதைப் பார்த்து: நீ தடிகளோடே என்னிடத்தில் வர நான் நாயா என்று சொல்லி அவன் தன் தேவர்களைக் கொண்டு தாவீதைச் சபித்தான். அதற்கு தாவீது: கோலியாத்தை நோக்கி, நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலினுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையிலே ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லி, தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்துச் சுழற்றி கோலியாத்தின் நெற்றியிலே பட எறிந்தான். அது அவன் நெற்றியிலே பட, அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான்.

பின்பு தாவீது கோலியாத்தண்டை ஓடி அவன் பட்டயத்தை எடுத்து அதினால் அவன் தலையை வெட்டிப்போட்டான். இந்த தாவீது தன்னுடைய நம்பிக்கையினாலோ அல்லது ஜனங்களுடைய நம்பிக்கையினாலோ ராஜாவுடைய நம்பிக்கையினாலோ கோலியாத்தை வீழ்த்தவில்லை, மாறாக கர்த்தருடைய நாமத்தின் மேல் வைத்த நம்பிக்கையினாலே ஜெயித்தான். இன்று நீங்களும் எல்லாவற்றிலும் வெற்றியடைய வேண்டுமானால் உங்கள் நம்பிக்கையை கர்த்தர் மீது வையுங்கள். ''பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தினாலும் அல்ல என்னுடைய ஆவியினாலே ஆகும்'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (சகரி.4:6).

கர்த்தரை நம்பினால் சோறு தானாக வந்திடுமா? என்று சிலர் சொல்லுவார்கள். ''அவர் வானத்தை மேகங்களால் மூடி, பூமிக்கு மழையை ஆயத்தப்படுத்தி, மலைகளில் புல்லை முளைப்பிக்கிறார். அவர் மிருக ஜீவன்களுக்கும், கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங்கொடுக்கிறார். அவர் குதிரையின் பலத்தில் விருப்பமாயிரார்; வீரனுடைய கால்களில் பிரியப்படார்; தமக்குப் பயந்து தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள் மேல்

கர்த்தர் பிரியமாயிருக்கிறார்... அவர் என் வாசல்களில் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்தில் உள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். அவர் உன் எல்லைகளைச் சமாதானமுள்ளவைகளாக்கி, உச்சிதமான கோதுமையினால் உன்னைத் திருப்தியாக்குகிறார்'' (சங்.147:9-14). மரம், செடி, கொடி, புல் மற்றும் ஆகாயத்துப் பறவை முதற்கொண்டு எல்லாவற்றையும் கர்த்தர் போஷித்து, மனிதனுக்கு தேவையான உச்சிதமான கோதுமை போன்ற தானியத்தை கொடுத்து அவனைத் திருப்தியாக்குகிறார். இப்பேர்பட்ட உன்னதமான ''கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது'' என்கிறான் தாவீது (சங்.144:15).

''காகங்களைக் கவனித்துப்பாருங்கள் அவைகள் விதைக்கிறது மில்லை, அறுக்கிறதுமில்லை, அவைகளுக்குப் பண்டகசாலையுமில்லை, களஞ்சியமுமில்லை, இல்லாவிட்டாலும் அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார்; பறவைகளைப் பார்க்கிலும் நீங்கள் எவ்வளவோ விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்'' என்று லூக்.12:24-ல் ஆண்டவர் இயேசுகிறிஸ்து குறிப்பிடுவதை வாசிக்கிறோம். மனிதனை உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் பறவைகள், மிருகங்கள் போன்றவைகளை விட மனிதனை விசேஷித்தவனாக படைத்தார். குறிப்பாக தமது சாயலில் படைத்தார். அவனோ, தன்னை உண்டாக்கினவரை மறந்து அவனுக்காக உண்டாக்கப்பட்டவைகளின் மீது தன் நம்பிக்கையை வைக்கிறான்.

மேலும் கர்த்தர் கூறும் ஒரு உவமையிலே; ''ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகப் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக்குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார். தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான்'' என்றார் (லூக்.12:16-21).

உண்ணவும் உடுக்கவும் உண்டாயிருந்தால் போதுமென்றிருக்கக் கடவோம் என்ற ஆண்டவரின் வார்த்தையை நிராகரித்துவிட்டு தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்த ஐசுவரியவானுடைய நிலைமையைப்

பார்த்தீர்களா? அவன் நம்பின தானியத்தை அவனால் சாப்பிட முடியாமல் போய்விட்டது. இப்படித்தான் உலகபொருட்கள் மீது நாம் நம்பிக்கை வைத்து ஒரு நாள் அவைகளை விட்டு எடுபடும்போது எல்லாம் ஒன்றுமில்லாமற்போய்விடும். தேவனுடைய வசனங்களுக்கு செவி கொடுத்து அவரிடத்தில் ஜசுவரியமுள்ளவர்களாக இருந்தால் ''கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார்''.

கர்த்தர்மேல் என் நம்பிக்கையை வைக்க நான் என்ன செய்யவேண்டும்? என்ற கேள்வி உங்களுக்கு எழும்புமானால், அவர் அனுப்பின ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, மனந்திரும்பி உங்களுடைய பாவமன்னிப்பிற்காக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள். உங்களுடைய முழு நம்பிக்கையையும் கர்த்தர் மீது வைத்து அவரைப் பற்றிக்கொள்ளுங்கள். அப்பொழுது, ''உம்மைத் தேடுகிறவர்களை நீர் கைவிடுகிறதில்லை'' என்ற சங். 9:10-ன்படி கர்த்தர் உங்களை கைவிடாமல் காப்பார். அவரை அண்டிக்கொள்ளுகிறயாவரும் பாக்கியவான்கள். ''பிரபுக்களையும் இரட்சிக்க திராணியில்லாத மனுபுத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.

யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். அவர் வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள யாவையும் உண்டாக்கினவர்; அவர் என்றென்றைக்கும் உண்மையைக் காக்கிறவர்'' (சங்.146:3-6). இந்த தேவன் உங்களை என்றுமே கைவிடாத தேவன். தம்மிடம் வருவோரை புறம்பே தள்ளாதவர். இவர்மேல் உங்களுடைய நம்பிக்கையை வைத்து நிலையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

கேள்வி நேரம்

கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைக்கிறவர்களுக்கு வரும் ஆசீர்வாதங்கள் எப்படிப்பட்டது?

''கர்த்தரை நம்புகிறவனோ உயர்ந்த அடைக்கலத்திலே வைக்கப்படுவான்'' (நீதி.29:25). அவன் கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொள்ளும்போது உயர்ந்த அடைக்கலம் கிடைக்கிறது. அவர்களுடைய ஆரம்பம் அற்பமாக இருக்கலாம் ஆனால் அவர்களுடைய முடிவு சம்பூர்ணமாக இருக்கும். தாவீது ஆடு மேய்ப்பன். அவனோ, தேவனால் உயர்த்தப்பட்டான்.

இஸ்ரவேலை நாற்பது வருஷம் அரசாண்டான். எருசலேம் தாவீதின் நகரம் என்று அழைக்கப்பட்டது. மேலும் ''கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்'' (நீதி.28:25). யாக்கோபும் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த ஒரு தேவமனிதன் தான். அவனைத் தெரிந்துகொண்டு, அவனை ஆசீர்வதித்து பெருகப்பண்ணினார். அவன் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டான். அவனுடைய சந்ததி இஸ்ரவேலர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களுடைய கோத்திரத்தில் இயேசு ஆண்டவர் பிறந்தார்.

மேலும் ''கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு; அவன் பிள்ளைகளுக்கும் அடைக்கலம் கிடைக்கும்'' (நீதி.14:26). கர்த்தரை நம்புகிறவர்கள் திட நம்பிக்கையோடிருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிகை வீணானவதில்லை. யோசேப்பு தான் விற்கப்பட்டும் கர்த்தரை விட்டுவிடாமல் அவர் மேல் தன் நம்பிக்கையை வைத்திருந்தான். அவனுக்கு எகிப்திலே பிறந்த எப்பிராயீம், மனாசே ஆகிய இருவரும் யாக்கோபினால் என்னுடைய குமாரர்கள் என்று அழைக்கப்பட்டு அவர்கள் பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களின் அட்டவணையில் சேர்க்கப்பட்டார்கள். மேற்கண்ட வசனத்தின்படி யோசேப்பின் பிள்ளைகளுக்கு அடைக்கலம் கிடைத்தது. கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொள்ளும்போது அநேக ஆசீர்வாதங்கள் உங்களை தேடிவரும்.

26. கிறிஸ்து சகல அதிகாரம் படைத்தவர்
Christ Has All Power

நாம் வாழும் இப்புவியில் எத்தனையோ அதிகாரங்களுக்கு நாம் கீழ்ப்படிந்து வாழ்கிறோம். இவைகள் யாவும் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது என்று ரோமர் 13:1-ல் வாசிக்கிறோம். இப்படிப்பட்ட அதிகாரங்களை உண்டாக்கிய தேவன் வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் கிறிஸ்துவுக்குக் கொடுத்துள்ளார். இந்த அதிகாரத்தினாலேயே இயேசுவானவர் தாம் தெரிந்துகொண்ட அப்போஸ்தலருக்குக் கட்டளை கொடுத்து அனுப்பும்போது ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்றார்'' (மத்.28:18-20).

அந்தப்படியே அன்று முதல் இன்று வரை அநேகர் சீஷர்களாக்கப்பட்டு பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்று கர்த்தரால் சபையில் சேர்க்கப்படுகிறார்கள். மேலும் பிதாவாகிய தேவனை முழு அதிகாரமும் படைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்கிறார்கள். உங்களுடைய தொழுகை எப்படிப்பட்டதாக இருக்கிறது? யாரை நோக்கி தொழுது கொண்டு வருகிறீர்கள்?

மனிதனுடைய பாவங்களை மன்னிக்க இயேசுகிறிஸ்து ஒருவருக்கே அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மனிதன் தன் பாவங்களைப் போக்க எந்த வழியை கையாடினாலும் அது அவனது பாவத்திற்குப் பரிகாரமாக இருக்காது. ஒருவேளை மனதிருப்தியை கொடுக்கக் கூடியதாக இருக்கலாம். அப்படி மனதிருப்தியடைவதினால் பிரயோஜனமில்லையே. இயேசுவானவர் ''பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி; நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப்போ என்றார். உடனே அவன் எழுந்து, தன் வீட்டுக்குப்போனான். அதைக்கண்டு ஜனங்கள் ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப் படுத்தினார்கள்'' (மத்.9:6-8).

இன்று இப்படிப்பட்ட அதிகாரம் படைத்த யாரையாவது உலகத்தில் நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? நிச்சயமாக பார்த்திருக்க வாய்ப்பில்லை, இனிமேலும் பார்க்கவும் முடியாது. ஏனென்றால் கிறிஸ்துவானவரை அவருடைய சீஷர்களுக்கு பிதாவானவர் வெளிப்படுத்துகையில் ''இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று'' (மத்.17:5). நோவா, மோசே, சாமுவேல் போன்ற முற்பிதாக்களின் மூலமாக திருவுளம் பற்றி வந்த தேவன் இந்தக் கடைசி நாட்களில் இயேசுகிறிஸ்துவின் மூலமாக திருவுளம்பற்றுகிறார். ''இவரைச் சர்வத்துக்கும் சுதந்திரவாளியாக நியமித்தார் இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' என்று வாசிக்கிறோம் (எபி.1:2).

இன்றைக்கு அநேகர் மனித சக்திகளைக் கண்டு பயந்து ஏமாற்றமடைகின்றனர். வேதாகமத்திலே சீமோன் என்றுபேர் கொண்ட ஒரு மனுஷனைக் குறித்து படிக்கிறோம். அவன் மாயவித்தைக்காரனாயிருந்து அந்தப் பட்டணத்திலே தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரியா நாட்டு ஜனங்களைப் பிரமிக்கப் பண்ணிக் கொண்டிருந்தான். தேவனுடைய பெரிதான

சக்தி இவன்தான் என்று எண்ணி, சிறியோர் பெரியோர் யாவரும் அவனுக்குச் செவி கொடுத்து வந்தார்கள். அவன் அநேக காலமாக தன்னுடைய மாயவித்தைகளினாலே அவர்களைப் பிரமிக்கப் பண்ணினதினால் அவனை மதித்து வந்தார்கள்.

ஆனால் அவனோ தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்தபோது விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்பைப் பற்றிக் கொண்டான். இப்படி மாயவித்தை செய்தவர்களே தங்களுடைய மாயவித்தைகள் மாயாஜாலங்கள் அனைத்தும் பொய் என்று ஒத்துக்கொண்டு உண்மைக்கு செவி கொடுத்து கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று இருக்கும்போது, அப்படிப்பட்ட மாயவித்தைகளைக் கண்டு ஏமாற்ற மடைந்தவர்கள் முழுஅதிகாரம் படைத்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவண்டை திரும்புவது எவ்வளவு அவசியம்! ''குமாரனைக் கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும் என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது'' என்றார் (யோவா.6:40).

இப்பூமியில் பிசாசினால் ஏமாற்றப்படாதவர்களே இல்லை என்று சொல்லலாம். ஏனென்றால் அவன் வஞ்சிக்கிறவனும், ஆதிமுதல் மனுஷ கொலை பாதகனாகவுமிருக்கிறான். இயேசுவையே பிசாசு ஒரு முறை ஏமாற்ற நினைத்து ''அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து இவைகள் எல்லாவற்றின் மேலுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத்தருவேன். இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்'' (லூக்.4:5-8).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு தேவ ஜனமே, வானத்திலும் பூமியிலும் முழு அதிகாரம் படைத்த ஆண்டவர் இயேசுவையே பிசாசு, என்னைப் பணிந்து கொள் இவைகளை உமக்கு தருவேன் என்று சொல்லியிருக்கும்போது உறுதியில்லாத ஆத்துமாக்களைப் பிடிப்பது அவனுக்கு எவ்வளவு சுலபம்! அந்தப்படியே யூதாசை பிசாசு தன் வலையில் சிக்க வைத்தான். அவனை 30 வெள்ளிக்காசுக்கு அடிபணியவைத்து அவனைக் கொன்று போட்டான். என் அன்பு சகோதரனே, சகோதரியே உன் ஆத்துமா

விலையேறப் பெற்றது அதை இழந்துபோகாதே ''மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?'' என வேதம் கேட்கிறது (மத்.16:26).

யோபுவைப் பார்த்து தேவன் சில கேள்விகளை கேட்டார். ''மரணவாசல்களை உனக்குத் திறந்ததுண்டோ? மரண இருளின் வாசல்களை நீ பார்த்ததுண்டோ? நீ பூமியின் விசாலங்களை ஆராய்ந்து அறிந்ததுண்டோ? இவைகளையெல்லாம் நீ அறிந்திருந்தால் சொல்லு'' என்றார் (யோபு38:17,18). யோபு என்ன சொல்லி இருப்பார் என்று நினைக்கிறீர்கள். ''யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக: தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்... ஆகையால் நான் எனக்குத் தெரியாததையும், என் புத்திக்கு எட்டாததையும் நாம் அறியாததையும் அலப்பினேன் என்கிறேன்'' என்றான் (யோபு 42:1-3). முழு அதிகாரம் படைத்த ஆண்டவர் நம்மிடத்திலே இப்படியொரு கேள்விகேட்டால் நாம் என்ன மறு உத்தரவு சொல்லுவோம். இன்றைக்கு தங்களுக்கு தாங்களே ஞானிகளாக இருக்கிறவர்களை பார்த்து இருப்பீர்கள், அவர்களெல்லாம் இந்த யோபுவைப்போல தங்களுக்கு ஒன்றும் தெரியாது என்று ஒத்துக்கொள்ள மாட்டார்கள். மாறாக நாங்கள் எல்லாவற்றையும் அறிவோம் எங்களுக்கு ஒருவரும் போதிக்க வேண்டிய அவசியமில்லை என்பார்கள்.

இவர்களைக் குறித்து வேதம் இப்படியாக சொல்லுகிறது; ''இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக் கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டு தரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள். இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது'' (யூதா 12,13).

ஒரு மனிதனை காரிருளுக்கு நேரே வழிநடத்துவது தேவனுடைய வேலையல்ல ''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம் என்ற கொலோ.1:13-ன்படி பிதாவாகிய தேவன் இருளின் பிடியிலிருந்து ஒரு மனிதனை விடுவித்து தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு அதாவது (கிறிஸ்துவின் சபைக்கு) உட்படுத்துகிறார். விசுவாசியாதவர்கள் ஆக்கினை தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பார்கள். காற்றும் கடலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், அவருடைய அதிகாரத்திற்கும்

கீழ்ப்படிகிறது. ஆனால் மனிதர்களில் பலர் கிறிஸ்துவின் உண்மையான சுவிசேஷத்திற்கு கீழ்படிய மறுக்கின்றனர்.

''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை'' (அப்.4:12). உலகத்தில் நம்மை பாவத்திலிருந்து இரட்சித்து பரிசுத்தமாக்கும் நாமம் இயேசுவின் நாமமே! அவருடைய நாமமே நமக்கு விடுதலையை கொடுக்க கட்டளையிடப்பட்டுள்ளது. இதை அறிந்த நீங்களும் நானும் முழு அதிகாரம் பெற்ற இயேசுவுக்குக் கீழ்ப்படிந்து அவர் சித்தம் செய்வோம்.

கேள்வி நேரம்

அப்போஸ்தலர்கள் அந்த அதிகாரமுள்ள ஆண்டவரை பற்றி அறிவித்தார்களா?

கடைசி கட்டளையை பெற்றுக்கொண்ட அவர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷவசனத்தை பிரசங்கித்தார்கள் என்று வாசிக்கிறோம். பேதுருவும் யோவானும் தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையில் இருந்த சப்பாணியைப் பார்த்து நசரேயனாகிய இயேசுவின் நாமத்தில் எழுந்து நடவென்று தூக்கிவிட்டார்கள். அவன் குதித்தெழுந்து நடந்து தேவனை துதித்துக்கொண்டே அவர்களோடே தேவாலயத்தில் பிரவேசித்தான்.

இதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களைப் பார்த்த பேதுரு; ''இஸ்ரவேலரே, இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுயசக்தியினாலாவது, எங்கள் சுயபக்தியினாலாவது, இவனை நடக்கப்பண்ணினோமென்று நீங்கள் எங்களை நோக்கிப்பார்க்கிறதென்ன?... அவருடைய நாமத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது; அவரால் உண்டாகிய விசுவாசமே உங்களெல்லாருக்கும் முன்பாக. இந்தச் சர்வாங்க சுகத்தை இவனுக்குக் கொடுத்தது'' என்று கிறிஸ்துவை மகிமைப்படுத்தினர் (அப்.3:12,16). அப்போஸ்தலர்கள் சுய மகிமையை தேடவில்லை.

''தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம் பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள்'' (அப்.5:42). மேலும் ''கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனே பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக்

கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்'' என்று யோவான் எழுதுகிறார் (2யோவா.9,10).

27. கிறிஸ்துவின் உண்மையான ஊழியன்
A Faithful Minister of Christ

இன்று உண்மையான ஊழியக்காரர்களை பார்ப்பது அரிதாயிருக்கிறது. ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் உண்மையுள்ள ஊழியக்காரர்கள் அநேகர் இருந்ததாக நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தில் உண்மையுள்ள ஒரு ஊழியனைக் குறித்து எழுதும்போது ''எங்களுக்குப் பிரியமான உடன்வேலையாளும், உங்களுக்காக கிறிஸ்துவின் உண்மையான ஊழிக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்'' என்று எழுதுகிறார் (கொலோ.1:7).

இந்த எப்பாப்பிரா கொலோசெயசபைக்கு உண்மையுள்ள ஊழிக்காரனாயிருந்து, கிறிஸ்துவின் உபதேசத்தைக் கற்றுக் கொடுக்கிறவனாகவும் இருந்திருக்கிறான். மேலும், இவன் சபையின் வளர்ச்சிக்காக தேவனிடத்தில் யாக்கோபைப்போல போராடி ஜெபிக்கிறவனாகவும் இருந்தான் என்று கொலோ.4:12-ல் நாம் வாசிக்கிறோம்; ''இவன், நீங்கள் தேவனுக்கு சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவனர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்''. இன்றைக்கு இப்படி போராடி ஜெபிக்கக்கூடிய உண்மையுள்ள கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் சபைக்குத் தேவை. சபை கட்டப்பட பணமோ, செல்வாக்கோ இருந்தால் மட்டும் போதாது. ஜெபிக்கக்கூடிய தாகம் வேண்டும், மந்தையைக் குறித்த கரிசனை வேண்டும்.

மோசேயைப் பாருங்கள்: ''விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அனுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்'' (எபி.11:24-26).

தான் எதற்காக அழைக்கப்பட்டானோ அந்த அழைப்பை உறுதியாகபற்றிக்கொண்டு, பார்வோனுடைய சகல சம்பத்துக்களையும் வெறுத்து தள்ளி, தேவஜனங்களோடு துன்பத்தை அனுபவித்தான். பவுலும்கூட தீமோத்தேயுக்கு கொடுத்த ஆலோசனை என்னவென்றால்; ''நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழித்தை நிறைவேற்று'' என்றார் (2தீமோ.4:5). இன்றைக்கும் ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் தீங்கநுபவிக்கவும், சுவிசேஷ வேலையைச் செய்யவும் அதை நிறைவேற்றவுமே பிரயாசப்படவேண்டும். அதைவிடுத்து எலிசாவின் வேலைக்காரன் கேயாசியைப்போல வாங்குவதிலேயே இருந்தால் எப்படி? ''பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும், திராட்சத் தோப்புகளையும், ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? (2இரா.5:26).

பிரியமானவர்களே, இயேசு எதை வாங்கினார்? எதை கட்டினார்? அவருக்கு ஊழியம் செய்யும் ஒரு சீஷன் இயேசுவைப்போல செயல்பட வேண்டுமல்லவா! பவுலுடைய ஒப்புக்கொடுத்தலை அறிவீர்களா! ''அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன்'' என்கிறார் (பிலி.3:11).

ஊழியம் செய்தால் ஏதாவது ஆதாயம் வேண்டும் என்று கேயாசியைப்போல எதிர்பார்ப்பவர்கள் உண்டு. அப்படிப்பட்டவர்களைக்குறித்து வேதம் எச்சரிக்கிறது. ''கெட்ட சிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத் தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்; இப்படிப்பட்டவர்களை விட்டுவிலகு'' என பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (1தீமோ.6:5). இன்றைக்கு ஊழியம் என்ற போர்வையில் அநேகரை வஞ்சித்து, உலககாரியங்களுக்கு அடிமைகளாக இருந்து கொண்டு, ஊழியத்தை ஒரு ஆதாயத் தொழிலாக நினைத்து ஆட்டுத்தோலைப் போர்த்திய ஓநாயைப்போல உலாவருகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து பிரிந்துபோன தேமாவைப்போன்றவர்கள்தான்.

''அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதங்களை வஞ்சிக்கிறார்கள்'' (ரோம.16:18). ஒருச்சான் வயிற்றுக்காக வாழ்கின்ற இவர்களைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டுமல்லவா!

ஊழியம், மனுஷருக்கா அல்லது கர்த்தருக்கா? இந்த இடத்தில் உலக வேலையில் உள்ள ஒரு ஊழியனைப் பற்றி கேட்கவில்லை. அநேக சமயங்களில் உலக ஊழியர்கள் உலக பிரகாரமான எஜமான்களுக்குக் கீழ்ப்படிவதுபோல கிறிஸ்துவின் ஊழியர்களும் அநேக வேளையில் மனுஷர்களுக்குப் பிரியமாயிருக்க நாடுகிறார்கள். ''மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாக பார்வைக்கு ஊழியஞ் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்'' என்று எபே.6:6-8 வசனங்களில் வாசிக்கிறோம். அதாவது கர்த்தருக்கு உண்மையுள்ள ஊழியனாக இருந்த தீகுக்குவைப்போலவும் மற்றும் கிறிஸ்துவுக்கு உண்மையுள்ள சாட்சியாயிருந்து மரித்த அந்திப்பா என்பவனைப்போல சமுதாயத்திலும் சபையிலும் உண்மையுள்ள ஊழியக்காரனாயிருக்க பிரயாசப்படவேண்டும் (வெளி.2:13).

மரணத்துக்கு சமீபமாயிருந்த எப்பாபிரோதீத்துவை அறிவீர்கள் ''அவன் வியாதிபட்டு மரணத்திற்கு சமீபமாயிருந்தான்'' அதுவும் ''கிறிஸ்துவின் ஊழியத்தினிமித்தம் மரணத்திற்குச் சமீபமாயிருந்தான்'' என பிலிப்பிய சபையாருக்கு பவுல் எழுதுகிறார் (பிலி.2:27,30). அந்தப்படியே கர்த்தருடைய ஊழியத்தினிமித்தம் தங்கள் சரீரத்தைக்கூட கவனிக்காமல் உழைத்த அநேக முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப்பற்றி அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தில் படிக்கிறோம். ஊழியர் என்றால் வியாதி வராது, அவனுக்கு கஷ்டம் வராது என்பதல்ல. அவனும்பாடுள்ள மனுஷன்தானே இவையெல்லாம் ஒரு சாதாரண மனுஷனுக்கு வருவதுபோல வரக்கூடியதாகத்தான் இருக்கிறது. சொல்லப்போனால் அதிகமானபாடுகள் ஊழியனுக்குத்தான் அதிகம். இதை அறியாத சிலர் ஊழியர்களுக்கு என்னப்பா கவலை கார் இருக்கு, பங்களா இருக்கு, நல்லா சொகுசா அநுபவிக்கிறாரு என்று ஆளைப் பார்த்து எடைபோட்டு விடுவார்கள். ''மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்'' (1சாமு.16:7).

தாலந்து பற்றிய உவமையை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். அதில் அவனவனுடைய திறமைக்குத் தக்கதாக அவனவனுக்கு தாலந்துகளை பகிர்ந்து கொடுத்தார். ஐந்து தாலந்தை பெற்றவன் வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தான். இரண்டு தாலந்தை பெற்றவன் வேறு இரண்டு தாலந்தை சம்பாதித்தான். ஆனால் ஒரு தாலந்தை பெற்றவனோ அதை புதைத்துப் போட்டான். இதை அறிந்த எஜமான் ஒரு தாலந்தை புதைத்துப் போட்டவனை பாராட்டவில்லை புறம்பான இருளிலே தள்ளிப்போடுங்கள் என்றார். ஆனால் அதேவேளையில் ஐந்து தாலந்து பெற்றவனையும் இரண்டு தாலந்து பெற்றவனையும் ''நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே,

கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி'' என்றார் (மத்.25:21).

ஆம் பிரியமான சகோதரனே கர்த்தரிடம் நீ எத்தனை தாலந்து பெற்றுள்ளாய்? அதை இரட்டிப்பாக மாற்றி உள்ளாயா? அல்லது புதைத்துப்போட்டுள்ளாயா? நீ இந்த விஷயத்தில் கிறிஸ்துவில் உண்மையுள்ள ஊழியக்காரனாயிருந்தால் அவரோடேகூட நித்தியத்தில் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெறுவாய். ஆபிரகாம் பிறனுடைய சரட்டைக்கூட இச்சித்து எடுத்துக்கொள்ளவில்லை. இன்று கர்த்தருக்கு ஊழியம் செய்கிற நீ ஆபிரகாமைப்போல ஆசீர்வதிக்கப்படவும் நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய் என்று கர்த்தராலே பாராட்டைப் பெறவும் விரும்புவாயனால் உன் ஊழியத்தைக் குறித்து எச்சரிக்கையாயிரு. ''நீ மரணபரியந்தமும் உண்மையாயிரு அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்'' என்று கர்த்தர் திருவுளம்பற்றுகிறார் (வெளி.2:10).

இச்செய்தியை வாசிக்கிற அன்பான கிறிஸ்துவின் ஊழியனே உன் ஊழியம் எப்படிப்பட்டது? ''அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்'' (1கொரி.3:13). இதை நீர் அறிவீர் நானும் அறிவேன். ஆனால் ''தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார். சோர்ந்து போகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும் கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்'' என்று ரோம.2:6,7 வசனங்களில் படிக்கிறோம். கர்த்தர் தாமே உங்கள் நீதியின் விளைச்சலை ஆசீர்வதிப்பாராக!

கேள்வி நேரம்

கர்த்தருடைய ஊழியன் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யலாமா?

''எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது'' என்று ஆண்டவர் குறிப்பிடுகிறார் (லூக்.16:13). ஒரு ஊழிக்காரன் இரண்டு எஜமானுக்கு வேலைபார்ப்பதை நீங்கள் எங்கேயாவது பார்த்து இருக்கிறீர்களா? அப்படி வேலை பார்த்தால் ஒருவனைப் பகைத்து மற்றவனை

அசட்டைபண்ணுவான். இரண்டு எஜமானுக்கும் ஏற்ற ஒரு ஊழியனாக அவனால் பணி செய்ய இயலாது. கர்த்தருக்கும் உலகபொருட்களுக்கும் வேலை செய்ய ஒருவனாலும் கூடாது.

அதே வேளையில் தன் சொந்த கையால் ஒரு வேலை செய்து கொண்டு ஆண்டவருடைய ஊழியத்தை செய்யலாம். அப்போஸ்தலனாகிய பவுலும் இப்படித்தான் வேலை பார்த்ததாக சொல்லுகிறார். ''ஒருவனிடத்திலும் இலவசமாய்ச் சாப்பிடாமலும், உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு இரவும் பகலும் பிரயாசத்தோடும் வருத்தத்தோடும் வேலைசெய்து சாப்பிட்டோம்'' என்கிறார் (2தெச.3:8). கர்த்தருக்கு ஊழியஞ்செய்தால் அவனை பிதாவாகிய தேவன் கனம்பண்ணுவார்.

ஆகையால் மற்றவர்களுக்கு பாரமாயிராமல் வேலைசெய்து அதனுடைய வருவாயில் தன்னுடைய தேவைகளை சந்தித்துக்கொண்டு கர்த்தருக்கு ஊழியஞ்செய்வது மிக சிறப்பானதாகும். மற்றவர்களுடைய கையை எதிர்பார்க்கவேண்டிய அவசியமில்லை. ஆனால் ''திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும பகிர்ந்துகொடுக்கக்கடவன்'' என்ற கலா.6:6-ன்படி சுவிசேஷஊழியர்களை போஷிப்பதும், அப்படிப்பட்டவர்களை கனப்படுத்தவேண்டிய பொறுப்பு தேவ ஜனங்களுக்கு இருக்கவேண்டும். கர்த்தருக்கு ஊழியம் செய்வது ஒரு உன்னதமான வேலை. அந்த வேலையில் உண்மையும் உத்தமுமாயிருக்கிறவன் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வான். உங்களுடைய ஊழியம் எப்படிப்பட்டது? உங்களுடைய ஊழியம் சிறக்கவும், நீங்கள் தேவனுடைய சித்தம் செய்யவும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

28. கிறிஸ்து நமக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்

Christ Left Us An Example

மாதிரி என்றால் ஒன்றைப்போல் மற்றொன்று. அதையே மாதிரி என்று சொல்லுவோம். இவ்வுலகத்திலே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு மாதிரியைப் பின்வைத்துப் போயிருக்கிறார். அது எந்த விதமான மாதிரி என்பதைக் குறித்து இச்செய்தியின் மூலமாக உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இயேசுவை சரீரபிரகாரமாக பார்த்தவர்கள் அவரைப்போல சரீரத்தில் இருக்க விரும்பி இருப்பார்கள். இன்றும்கூட அவரை கற்பனை செய்து பார்த்து அவரைப்போல இருக்க விரும்புகிறார்கள்.

இது மாம்சபிரகாரமான ஆசை. ஆனால் பரிசுத்த வேதாகமம் ''இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வைப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்'' என பார்க்கிறோம் (1பேது.2:21-23). இவ்வசனங்களிலே நாம் கவனிக்கவேண்டிய முக்கிய பகுதி ''நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்'' என்பதே, அப்படியென்றால் நாம் அவருடைய அடிச்சுவடுகளை வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்து அவைகளின்படியாக அவருடைய மாதிரியைப் பின் பற்றவேண்டியது மிக அவசியமான ஒன்றல்லவா!

இயேசு தம்மை பின்பற்றி வரவிரும்புகிற ஒருவனுக்கு சொல்லும் வசனத்தைக் கவனியுங்கள்; ''ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' என்றார் (மத்.16:24). தன்னையே வெறுக்காத ஒரு மனிதன் இயேசுவை எப்படி பின்பற்ற முடியும்? சற்று சிந்தித்துப்பாருங்கள். தன்னையே வெறுப்பது என்பது தன்னையே அழித்துக்கொள்ளும் செயல் அல்ல. தன்னிலே இருக்கும் பாவச் செயல்களை களைந்து போடுவது. இன்று கிறிஸ்துவை பின்பற்றும் கிறிஸ்தவர்களில் அநேகர் கிறிஸ்துவைப் பார்ப்பதில்லை. பெயர் கிறிஸ்தவர்களை பார்த்தே தங்களை மாற்றிக் கொள்கிறார்கள்.

எங்கே நாம் இயேசுவைப் பார்த்தால் அவருக்கு கிடைத்த ஒரு வஸ்திரம் தான் நமக்கும் கிடைக்கும். பின்பு அதையும் பங்கிட்டு கொள்வார்கள் என்ற பயமோ! என்னமோ தெரியவில்லை. மேலிருந்து வந்தவருடைய மாதிரியைக் காட்டிலும், மேலை நாட்டு கலாச்சாரம் நம் ஜனங்களை தொற்றுநோயைப்போல் தொற்றிக்கொண்டிருக்கிறது. மாதிரி என்றால் அனைத்திலும் இயேசுவைப்போல மாதிரியாக ஜீவிக்க வேண்டுமல்லவா? பெயர் மட்டும் வைத்துக்கொண்டு, செய்யும் செயல் எல்லாம் பிசாசின் செயல்களாயிருந்தால் அவருடைய மாதிரி என்று சொல்லிவிட முடியுமா? அவருடைய வசனம் அனைவரையும் ஒருநாள் நியாயந்தீர்க்கும் என்ற பயத்தோடு நாம் வாழ வேண்டும்.

இயேசுவானவர் பாவமில்லாத மாதிரியாக இருக்கிறார்: ''அவர் பாவஞ்செய்யவில்லை'' என்று பேதுரு புத்தகத்தில் வாசிக்கிறோம் (1பேது.2:22).

இன்று உலகத்தில் எத்தனையோ மார்க்கங்கள் தோன்றியுள்ளன, அவைகளின் தலைவர்கள் அம்மார்க்கத்திற்கு முக்கியமானவராகவும் எல்லாருக்கும் மாதிரியாகவும் இருந்தாலும், அப்படிப்பட்ட அந்த தலைவர் பாவமில்லாதவரா? என்று நாம் கேட்போமானால் பாவத்தின் பிரதிநிதியாகத்தானிருப்பார். ஏனென்றால் ''எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள் என்று ரோ.3:23-ல் வாசிக்கிறோம்.

ஆனால் நம்மை பாவத்திலிருந்து மீட்க வந்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து; ''நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையில்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்'' (1பேது.2:24). மேலும் ''அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை'' (1யோவா.3:5). ஒரு குருடன் மற்றொரு குருடனை வழிநடத்த முடியாது என்று அறிவோம். அதைப்போல பாவம் நிறைந்த ஒரு மனிதன் ஒரு பாவியை பாவத்திலிருந்து இரட்சிக்கமுடியாது. பாவமில்லாத இயேசு கிறிஸ்துவினால் மட்டுமே முடியும். அவரை உங்களுடைய மாதிரியாகக் கொள்வீர்கள் என்றால், நித்தியம்வரை அவருடைய அடிச்சுவடுகள் உங்களை அழைத்துச்செல்லும்.

இயேசுவானவர் வாயிலே வஞ்சனையில்லாத மாதிரியாக இருக்கிறார்: ''அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை'' என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.2:22). உழைத்துச் சாப்பிடுகிறவர்கள் ஒரு கோடி, ஏமாற்றி சாப்பிடுகிறவர்கள் ஏழு கோடி என்பார்கள். உலகத்திலே ஏமாற்றுகிறவர்களே அதிகமிருக்கிறார்கள். ''கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி'' (நீதி.25:14). கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் இப்படியே இருக்கிறான். இப்படிப்பட்டவர்களுக்கு நம் நாட்டில் பஞ்சமில்லை. அதைச் செய்கிறோம் இதைச்செய்கிறோம் என்று சொல்லி கணக்குக்காக சிலவற்றை செய்து அநேகரை ஏமாற்றுவார்கள். இப்படிப்பட்டவர்கள் பொய்யர்களும் பொய்க்கு பிதாவுமாயிருக்கிறார்கள்.

இவர்கள் ''அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' (வெளி.21:8). நமது ஆண்டவரோ தம்மிடம் வந்த ஒருவரையும் புறம்பே தள்ளாமல் அவர்களை சுகமாக்கி அனுப்பினார். ''அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்'' (அப்.10:38). இன்று வியாதியின் கொடுமை தாங்கமுடியாமல் மரிக்கின்ற எத்தனையோ மனிதர்களைப் பற்றி அனுதினமும் செய்திதாள்களின் வாயிலாக

அறிகிறோம். அதேபோல் பிசாசின் தொல்லையால் அநேக குடும்பங்கள் பிரிந்தும் மரித்தும் போகிறதை அநுதின ஜீவியத்தில் காண்கிறோம். இப்படிப்பட்டவர்களை இயேசு தம்முடைய வல்லமையால் சுகப்படுத்தியும், பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்குகிறவருமாய் இருந்தார் என வேதாகமத்தில் வாசிக்கிறோம். அவரை பின்பற்றுகிறவன் அவரைப்போல நன்மை செய்து, நற்செய்தியை அறிவிக்கிறவனாகவும், மாற வேண்டுமல்லவா!

இயேசுவானவர் நியாயமானவருக்கு, தம்மை ஒப்புவித்து மாதிரியாய் இருக்கிறார்: ''அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்'' என்கிறார் பேதுரு (1பேது.2:23). நம்மக்களோடு ஒரு வார்த்தை சொன்னால் போதும் ஒன்பது வார்த்தை சொல்லுவார்கள். கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்பதைப்போல தலைமுறை தலைமுறையாக அப்படியே வந்துகொண்டு இருப்பார்கள். எதற்கெடுத்தாலும் வெட்டு, குத்து, கொலை என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. இன்னும் சொல்லப்போனால் என்று துப்பாக்கி பிடிக்க மனிதன் கற்றுக்கொண்டானோ அன்றுமுதல் இன்றுவரை யாரையாவது சுட்டால்தான் கை சும்மாயிருக்கும் என்ற முடிவுக்கு வந்து விட்டதைப் போலுள்ளது. ஆண்டவரோ! வாய்திறவாத ஆட்டைப்போல இருந்தார். அவரை மாயக்காரன் என்றனர்.

அப்படி இருப்பாரானால் அவர் தம்முடைய மாயவித்தையினால் ஒரு பெரிய டயோனசாராகமாறி பயமுறுத்தியிருக்கலாம். அப்படி யாரையும் அவர் பயமுறுத்தவில்லை. ''அந்த வழியாய் நடந்துபோகிறவர்கள் தங்கள் தலைகளைத் துலுக்கி: தேவாலயத்தை இடித்து, மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீயே ரட்சித்துக்கொள்; நீ தேவனுடைய குமாரனானால் சிலுவையிலிருந்து இறங்கிவா என்று அவரை தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம்பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான்; தன்னைத்தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை; இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்போது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும் அப்போது இவனை விசுவாசிப்போம்'' என்று சொல்லி அவரை தூஷித்து பரியாசம் பண்ணினார்கள் (மத்.27:39-43).

இவைகளை கேட்டுக்கொண்டிருந்த ஆண்டவர் அவர்களுக்கு மறுமொழியாக ஒன்றும் சொல்லாதிருந்து, ''பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்'' (லூக்.23:46). எத்தனையோ அற்புதங்களை செய்த ஆண்டவர் இங்கே ஒன்றும் சொல்லாதிருந்து தம்முடைய ஆவியை பிதாவானவருக்கு ஒப்புக்கொடுத்தார். இன்று உலகம் உலகத்தை

சிநேகிக்கிறது. ஆகையால் ஒருசில கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்போல பாடுகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இயேசுவை மாதிரியாக கொள்ளக்கூடிய கிறிஸ்தவர்கள் அவரைப்போல அமைதலாக இருக்கவேண்டியது அவசியம். ''நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்'' (ரோம.6:13). ஆகையால் ''ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக் கடவன்'' என பேதுரு நமக்கு நினைப்பூட்டி எழுதுகிறார் (1பேது.4:16).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே இவ்வளவு காலமாக நீங்கள் யாரை மாதிரியாக கொண்டிருந்தீர்கள்? ஒருவேளை உலகத்தையும் உலகத்தார்களையும் மாதிரியாக கொண்டிருந்தால் இன்றே ஒரு தருணம் இயேசுவை மாதிரியாகக் கொண்டு அவருடைய அடிச்சுவட்டை மாதிரியாக வைத்து பின் தொடருங்கள். **மாய்மாலமான மாதிரி நம்மை மயானத்திற்கு கொண்டு போகும். மனந்திரும்பி மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் மாதிரி நம்மை மத்தியஸ்தரிடம் கொண்டு செல்லும்.** நீங்கள் எம்மாதிரியை பின்பற்றிச் செல்ல விரும்பிகிறீர்கள்? ''இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' (எபி.13:8). மாறாத அவரை மாதிரியாகக் கொண்டு நீங்களும் மாறாதவர்களாயிருக்கப் பிரயாசப்படுங்கள்.

கேள்வி நேரம்

முற்பிதாக்களின் மாதிரி எப்படிப்பட்டது?

மோசேயை எடுத்துக்கொள்வோமானால் அவனுக்கு பரிசுத்த ஆசரிப்புக்கூடாரம் பண்ணும்படியாக ஒரு மாதிரியை தேவனோடு 40நாட்கள் மலையில் இருக்கும்போது காண்பித்தார். அது என்னவென்றால்; ''அவர்கள் (இஸ்ரவேலின்) நடுவிலே நான் வாசம் பண்ண, எனக்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டாக்குவார்களாக. நான் உனக்குக் காண்பிக்கும் வாசஸ்தலத்தின் மாதிரியின்படியும், அதினுடைய எல்லாத் தட்டுமுட்டுகளின் மாதிரியின்படியும் அதைச் செய்வீர்களாக'' என்றார் (யாத்.25:8,9). மோசே அந்த மாதிரியின்படியே கூடாரத்தை அமைத்து சீத்தீம் மரத்தினால் ஒரு பெட்டியைப் பண்ணினான்.

அன்பான வாசகரே, முற்பிதாக்கள் கர்த்தர் கொடுத்த மாதிரியின்படியே ஆசரிப்புக்கூடாரம் மற்றும் அதற்கு வேண்டிய பொருட்களை

செய்தார்கள். தங்களுடைய விருப்பத்தின்படியோ அல்லது மற்றவர்களின் ஆலோசனைப்படியோ செய்யாமல் பயத்தோடும் நடுக்கத்தோடும் செய்து தேவனை ஆராதனை செய்தார்கள். அதற்கு விரோதமாக செய்யதவர்கள் உடனே தண்டிக்கப்பட்டார்கள் என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். முற்பிதாக்கள் தேவன் கொடுத்த மாதிரியின்படி செய்து பரிசுத்தமுள்ள தேவனை ஆராதித்தார்கள். நாமும் அவ்விதமாக நமக்கு மாதிரியாக கொடுக்கப்பட்ட இயேசுவின் மாதியை தொடர்ந்து தேவனை ஆராதிக்க வேண்டியது எத்தனை அவசியம்! சிந்தியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

29. பிரிந்துபோகாதிருங்கள்
Do Not Be Separated

இக்காலகட்டத்தில் குடும்பத்திலும், சபையிலும் பிரிவினைகளை காணமுடிகிறது. இதற்கு வேதாகமம் கொடுக்கும் எச்சரிப்பையும் உபதேசத்தையும் இச்செய்தியின் மூலம் தியானிப்போம். ''ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருந்தால், அந்த வீடு நிலைநிற்கமாட்டாதே'' என்று நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார் (மாற்.3:25). ஒரு குடும்பத்திற்கு கணவன் தலையாயிருக்கிறான். அவனுக்கு ஏற்ற மனைவியாக ஸ்திரீயானவள் இருக்கிறாள். இவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள். ஒருவருக்கொருவர் விரோதமாகப் பேசவும், செயல்படவும் ஆரம்பித்தால் அக்குடும்பம் நிலை நிற்பது எப்படி? ''மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குக் கீழ்படியுங்கள்..... புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து....'' என எபே.5:22,25-ல் வாசிக்கிறோம்.

அந்தப்படியே தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே இருவரும் ஒரே சரீரமாயிருக்கிறபடியால் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என வேதம் மிகத்தெளிவாக போதிக்கிறது. மேலை நாடுகளில் குடும்பப் பிரிவினை சர்வசாதாரணமாகிவிட்டதாகச் சொல்லுகிறார்கள். மேலும் பல செய்திகளின் வாயிலாகவும் நாம் கேள்விப்படுகிறோம். இதற்குக் காரணம் என்ன? உங்கள் மனைவியினிடத்தில் அன்புகூருங்கள் என்ற எபே.5:33-யை புறக்கணித்து விட்டு கணவனானவனோ அல்லது மனைவியானவளோ மற்றவர்களில் அன்புகூர்ந்து அதாவது அவர்களுடைய செயல்பாடுகளில் கவரப்பட்டு, மாயைக்குக் கீழ்படிந்து போய்விடுகிறார்கள். இதுபோன்ற தொற்றுவியாதி நம் நாடுகளிலும் பரவிக்கொண்டிருக்கிறது.

''தன் வீட்டைக் கலைக்கிறவன் காற்றைச் சுதந்தரிப்பான்'' என்ற நீதி.11:29-ம் வசனத்தை நினைவுகூரவேண்டும். அதைப்போல ''புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போகிறாள்'' (வசனம்14:1). தன் வீட்டைக் கலைக்கவும், தன் வீட்டை இடிக்கவும் கணவனானவனுக்கும் மனைவியானவளுக்கும் சுயபெலன் உண்டு, ஆனால் ''தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்'' என்ற மத்.19:6-ன்படி கணவனுக்கோ அல்லது மனைவிக்கோ அல்லது மூன்றாவது நபருக்கோ தேவனால் இணைக்கப்பட்ட ஒரு குடும்பத்தை பிரிக்க அதிகாரமும், அனுமதியும் கிடையாது. ஆகையால், கூடிவாழ்ந்தால் கோடி நன்மை உண்டு என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

சபையும் குடும்பத்தைப்போலவே ஒரு கூட்டுக் குடும்பமாகும். இப்படிப்பட்ட சபையில் அதாவது நித்திய நித்திய காலமாக தேவனோடிருக்கப் போகிற அவருடைய ராஜ்யமாகிய சபையிலே பிரிவினைகள் காணப்படலாமா? ''சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப்பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்'' என்கிறார் பவுல் (1கொரி.1:10). இங்கு கொரிந்திய சபையாருக்கு பவுல் சொல்லுகிறதான புத்திமதி, பிரிவினைகளில்லாமல் சீர்பொருந்தி இருக்கவேண்டுமென்பதே. இந்த விதமான புத்திமதிகளை இன்றைய நாட்களில் உள்ள அநேக திருச்சபைகள் நிராகரித்துக்கொண்டு செயல்படுகின்றன. காரணம் என்ன? பாரம்பரியம், இழிவான ஆதாயத்திற்கு ஊழியம். சுயம், தற்பெருமை, முதன்மைத்துவம் போன்றவற்றிற்கு அடிமைகளாகி பிரிந்துபோகிறார்கள் ''பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான்''என்கிறார் சாலொமோன் (நீதி.18:1).

காலத்திய சபைக்கு பவுல் எழுதும்போது ''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்கு பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்'' என்கிறார் (கலா.1:8). அந்தப்படியே ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது ''அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்திசொல்கிறேன்'' என்கிறார் (ரோம.16:17). இங்கு பிரிவினைகளை கொண்டுவருபவர்களை விட்டு விலகவேண்டுமென்று புத்தி சொல்லுகிறார். யோவான் எழுதும்போது ''ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தை கொண்டு

வரமாலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்'' என்கிறார் (2யோவா.10). இப்படியிருக்கிறபடியால் சபைகளில் பிரிவினைகளையும் இடறல்களையும் கொண்டுவரும் கள்ளப்போதகர்களுக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டியது எத்தனை அவசியமாயிருக்கிறது.

கிறிஸ்துவை உடையவனே கிறிஸ்தவன். அவன் கிறிஸ்துவின் சபையைச் சார்ந்தவனாகவே இருக்கவேண்டும். ஏனென்றால், ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?'' என்று கேட்கிறார் பவுல் (1கொரி.1:13). கிறிஸ்துவானவர் ஒரே ஒரு சபையையே ஏற்படுத்தினார். அதுவே அவருடைய சபை. **"மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; என்கிறார்" (மத்.16:18).** சபையில் என்ன இருக்கிறது, எந்தப் பெயரை வேண்டுமானாலும் சபைக்கு வைத்துக் கொள்ளலாம் என்பர். இவர்களே பிரிவினைவாதிகள். இயேசு என்ற பெயர் யோசேப்பும் மரியாளும் வைத்தபெயரல்ல. மாறாக தேவனால் முன்குறிக்கப்பட்டு தேவதூதனாலே சொல்லப்பட்டது, ''இயேசு என்று பெயரிடுவாயாக'' என்பதாகும் (மத்.1:21). பெயரையே மாற்றுகிறவர்கள் எதைத்தான் மாற்றமாட்டார்கள். பரிசேயர், சதுசேயர் ஆகிய இரு கூட்டத்தாரும் உபதேச விஷயத்திலே பிரிந்தார்கள் என வாசிக்கிறோம். ''என்னத்தினாலென்றால், சதுசேயர் உயிர்த்தெழுதல் இல்லையென்றும் தேவதூதனும் ஆவியும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார்கள்'' (அப்.23:8). இன்றும் கிறிஸ்துவின் உபதேசங்களை தவறாக புரிந்துகொண்டு தான் பிடித்த முயலுக்கு மூன்றுகால் என்று பிரிந்துபோகிறார்கள். ''கடைசி காலத்திலே தங்கள் துன்மார்க்கமான இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று உங்களுக்குச் சொன்னார்களே. இவர்கள் பிரிந்துபோகிறவர்களும், ஜென்மசுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே'' என்கிறார் யூதா (யூதா18,19).

கிறிஸ்துவுக்கு ஒரே சரீரமே உண்டு அதுபோல அவருக்கு ஒரே ஒரு சபைதான் உண்டு. ''எப்படியெனில், சரீரம் ஒன்று அதற்கு அவயவங்கள் அநேகம்; ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும் சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது; அந்தப்பிரகாரமாக கிறிஸ்துவும் இருக்கிறார்'' (1கொ.12:12). ஆகையால் ''சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல், அவயவங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு, தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிக கனத்தைக் கொடுத்து இப்படிச் சரீரத்தை அமைத்திருக்கிறார். ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடச் சந்தோஷப்படும். நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும்,

தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்'' (1கொ.25:27). இப்படி நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள அவயவங்களாயிருக்கிறபடியால் கிறிஸ்துவில் இருந்த சிந்தையே நமக்கும் இருக்கவேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்துவின் சிந்தையில் இணைக்கப்படாத யூதாஸ் கிறிஸ்துவுக்கு விரோதமாக பிசாசானவனால் தூண்டப்பட்டு நிரந்தரமாக தேவனைவிட்டு பிரிந்துபோனதை நாம் வாசிக்கிறோம். அவனுடைய முடிவையும் அறிந்திருக்கிறீர்கள். பிரிவினை நம்மை நித்தியத்திற்கு கொண்டு செல்லாது. பிரிவு இருக்கிற இடத்தில் கர்த்தர் இருக்க மாட்டார். ''இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்'' என்கிறார் (மத்.16:18).

இச்செய்தியை வாசிக்கும் அன்பு சகோதரரே, குடும்பத்திலும், சபையிலும் பிரிவினை இல்லாது வேதம் போதிக்கிறதான மெய்யான வழியிலே நடந்து உங்கள் ஓட்டத்தை நிறைவேற்றப் பிரயாசப்படுங்கள். கர்த்தருடைய சந்நிதியிலே வளர்ந்த சாமுவேலைப் போலவும், தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்த கொண்ட மரியாளைப்போலவும் உறுதியாயிருந்து பெலப்படுங்கள். அப்பொழுது வாடாத ஜீவகிரிடத்தை பெறுவீர்கள். பவுலைப்போல நாமும் சொல்வோமா! ''கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டதென்று நிச்சயத்திருக்கிறேன்'' என்கிறார் (ரோம.8:36-39).

அன்பான நண்பரே, கிறிஸ்துவின் அன்புக்கு ஈடு இணையேது. அப்பேர்பட்ட அன்பை முறிக்கலாமா? கணவனும் மனைவியுமாக அவரால் இணைக்கப்பட்ட நீங்கள் கர்த்தருடைய சபையில் பிரிவினையை உண்டாக்காமல், குடும்பத்திலும் சபையிலும் சாட்சியுள்ள கிறிஸ்தவர்களாக வளருங்கள். அப்பொழுது தேவன் உங்களோடிருப்பார்.

கேள்வி நேரம்

ஏன் பிரிந்துபோகிறார்கள்?

யோவான் இதற்கான விளக்கத்தை நமக்கு கொடுக்கிறார்; ''அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துபோனார்கள், ஆகிலும் அவர்கள்

நம்முடையவர்களாயிருக்கவில்லை; நம்முடையவர்களாயிருந்தார்களானால் நம்முடனே நிலைத்திருப்பார்களே; எல்லாரும் நம்முடையவர்களல்லவென்று வெளியாகும்படிக்கே பிரிந்துபோனார்கள்'' என்கிறார் (1யோவா.2:19). கிறிஸ்துவினுடையவர்கள் கிறிஸ்துவோடும் அவருடைய சபையோடும் நிலைத்திருப்பார்கள். அவரோடு நிலைத்திராதவன் பிசாசினால் பிடிபட்டவனாயிருக்கிறான். எப்படியென்றால் பணப்பையை சுமந்துகொண்டு இயேசுவின் பின்னே சென்ற யூதாஸ் அவரில் நிலைக்கவில்லை அவரும் அவனில் நிலைக்கவில்லை. நீ செய்கிறதை சீக்கிரமாய் செய் என்று அவனை தம்முடைய சீஷர்களிடமிருந்து அனுப்பிவிட்டார் எனக் காண்கிறோம்.

பிரிந்துபோகிறவன் அவருடையவனாக இல்லாதபடியால் பிரிந்துபோகிறான். மேலும் எபிரெய ஆசான் எழுதும்போது; ''தேவனுடைய நல்வார்த்தைகளையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற் கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்'' என்கிறார் (எபி.6:5,6). இன்றைக்கு ஒரு சிலர் பிரிந்துபோகிறார்கள் என்றால் அவர்கள் தேவனையும் அவருடைய காரியங்களையும் ருசிபார்த்தவர்கள்தான் அப்படியிருந்தும் மறுதலித்துப் பிரிந்துபோகிறார்கள் என்றால் பிசாசு அப்படிப்பட்டவர்களை தன் வசப்படுத்திவிட்டான் என்று தான் அர்த்தம். அப்படிப்பட்டவர்களை புதுப்பிக்கிறது கூடாதகாரியம் என்று வேதம் சொல்லுகிறது. ஆகையால் பிரிவினைக்கு இடம்கொடாதிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

30. ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்

Take Heed That You Despise Not Any One

மற்றவர்களை அற்பமாய் எண்ணுகிற கூட்டம் உலகத்தில் அநுதினமும் பெருகிக் கொண்டே வருகிறது. நம்முடைய தேவனாகிய கர்த்தர் நம்மெல்லோரையும் ஒரே இரத்தத்தினாலே தோன்றப் பண்ணினார். மனிதனோ அநேக உபாயதந்திரங்களை தேடிக்கொண்டு மனிதனுக்கு மனிதன் விரோதமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட மனிதனை சரிசெய்ய பெத்லகேமிலே கன்னியின் வயிற்றில் உருவாகி, மனித குமாரனாக, ஆண்டவர் இயேசு கிறிஸ்து வெளிப்பட்டார். ''மனித குமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார்'' என பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிக்கிறது (மத்.18:11).

பெற்றோர்களை நாம் கவனித்துப் பார்போமேயானால், அவர்கள் பெற்றெடுத்த பிள்ளைகளை பராமரிக்கும் விதத்தை அறிந்து கொள்ளலாம். ஒரு பிள்ளை அழகுள்ளதாக இருக்கலாம் மற்றொரு பிள்ளை அழகில்லாமலோ அல்லது ஊனமாகவோ இருக்கலாம். அப்படியிருப்பதற்காக அந்த பெற்றோர் அப்பிள்ளைகளை வித்தியாசமாகவோ அல்லது அற்பமாகவோ எண்ணமாட்டார்கள். ஏனென்றால் அது அவர்களுடையபிள்ளை அதைப்போலவேதான் நாமெல்லாரும் தேவனுக்குப் பிள்ளைகளாகவே இருக்கின்றோம். நம்மை வேறொருவர் அற்பமாய் எண்ணுவதை கர்த்தர் விரும்பவில்லை. ஆகவே ''இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரம பிதாவின் சமுகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (மத்.18:10).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, உங்களுக்குள்ளே சந்தோஷம் வருகிறதா? உங்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்தில் பிதாவின் சமூகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்களாம். இந்த உலகத்தில் நம்மை யாரும் கண்டு கொள்ளுகிறார்களோ இல்லையோ, நம்மை நேசித்து நம்மில் அன்பு கூர்ந்து, நமக்காக ஒரு தூதரை கார்டியனாக நம் தேவன் வைத்துள்ளார். இப்பேர்பட்ட தேவன் நமக்கு மட்டுமல்ல, நம்மைப்போல மாம்சத்தில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்தியுள்ளார். ஆகையால் தான் இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

''ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். லாசரு என்னும் பேர் கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய்விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிராமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான்'' (லூக்.16:19-23).

இச்சம்பவத்தில் அற்பமாய் எண்ணப்பட்ட லாசரு என்பவன் ஐசுவரியவானுடைய மிச்சமீதியை சாப்பிட ஆசையாய் இருந்த ஒரு தரிதிதிரன். அவனோ மரித்தவுடன் தேவ தூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டு

போய் விடப்பட்டான். நாம் எத்தனையோ பேரைப் பார்த்து அற்பமாக எண்ணியிருக்கிறோம். பிச்சைக்கார நாயே என்று கூட திட்டியிருக்கிறோம். அப்படி திட்டலாமா? அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகில் இருக்கிறார்கள் அல்லவா? ஐசுவரியவானைப்போல பாதாளத்திற்குப் போய்விடாதபடி மற்றவர்களை அற்பமாய் எண்ணாதிருக்க கற்றுக்கொள்ளுங்கள்.

இயேசுவை ஒருமுறை சமாரியருடைய கிராமத்தார் ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுது அவருடைய சீஷர்களாகிய யாக்கோபும் யோவானும்; ''ஆண்டவரே, எலியா செய்தது போல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா என்று கேட்டார்கள். அவர் திரும்பிப்பார்த்து நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி, மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார்'' என்றார் (லூக்.9:54-56). மூன்றரை வருடங்களாக கற்றுக் கொண்டிருந்த சீஷர்களே தங்களை ஏற்றுக்கொள்ளாத மக்களை உடனே அழிக்க வேண்டும் என்று நினைத்தனர். நாமும் சில சமயங்களில் இப்படித்தான் கீழ்படியாத மக்களை தேவன் அழித்துப்போட்டால் நலமாயிருக்கும் அப்பொழுதாவது விசுவாசிப்பார்கள் என்று நினைக்கிறோம்.

''திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்'' என்று நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகிறார் (யோவா.10:10). இயேசு எரிகோவுக்கு சமீபமாய் வரும்போது ''ஒரு குருடன் வழியருகே உட்கார்ந்து பிச்சைகேட்டுக் கொண்டிருந்தான். ஜனங்கள் நடக்கிற சத்தத்தை அவன் கேட்டு இதென்ன என்று விசாரித்தான் நசரேயனாகிய இயேசு போகிறார் என்று அவனுக்கு அறிவித்தார்கள்.

அப்பொழுது அவன், இயேசுவே தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று கூப்பிட்டான், முன் நடப்பவர்கள் அவன் பேசாமலிருக்கும்படி அவனை அதட்டினார்கள். அவனோ தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும் என்று மிகவும் அதிகமாய்க் கூப்பிட்டான். இயேசு நின்று அவனைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி சொன்னார். அவன் கிட்ட வந்தபோது, அவர் அவனை நோக்கி நான் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்றிருக்கிறாய் என்று கேட்டார். அதற்கு அவன்; ஆண்டவரே நான் பார்வையடைய வேண்டும் என்றான். இயேசு அவனை நோக்கி நீ பார்வையடைவாயாக உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். உடனே அவன் பார்வையடைந்து தேவனை மகிமைப்படுத்திக் கொண்டே, அவருக்குப் பின் சென்றான். ஜனங்களெல்லாரும்

அதைக் கண்டு, தேவனைப் புகழ்ந்தார்கள்'' (லூக்.18:36-43). இந்தக் குருடன் எப்படிப் பார்வையடைந்தான்? அவனுடைய விடாமுயற்சி அல்லவா! எப்படியாவது இயேசுவை சந்திக்க வேண்டும் என்ற ஆவல் அவனிடம் இருந்தது. ஜனங்களோ அவனை தடை செய்தார்கள். ஏன் தடை செய்தார்கள் என்று உங்களுக்கு தெரியுமா?

ஒரு வேளை அவனை, அந்த ஜனங்கள் அற்மாய் எண்ணி தடைசெய்திருப்பார்கள். அவனோ அதிக சத்தமாய் தாவீதின் குமாரனே எனக்கு இரங்கும் என்று கூப்பிட ஆரம்பித்தான். இயேசு நின்று அவன் பார்வையடையும்படி செய்தார். இந்த உலகத்தார் உங்களை அற்பமாக எண்ணலாம். ஆனால் உங்களை உண்டாக்கிய ஆண்டவராகிய இயேசு ஒருபோதும் உங்களை புறம்பே தள்ளார். அவர் மூலமாய் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்கு செய்வார். ஆகையால் யார் உங்களை தடை செய்து புறம்பே தள்ளினாலும் மனம் தளராமல், மேற்கண்ட குருடனைப்போல உங்கள் சத்தத்தை அதிகப்படுத்துங்கள். உங்கள் நம்பிக்கையை கிறிஸ்துவின் மீது வையுங்கள், அப்பொழுது உங்களை விசாரிக்கிற தேவனாகிய கர்த்தர் உங்களை எல்லா இக்கட்டிலிருந்தும் விடுதலை செய்வார்.

சிலர் தங்களை நீதிமான்களென்றும் மற்றவர்களை பாவிகள் என்றும் எண்ணி அற்பமாய் நினைப்பார்கள். இதைக் குறித்து இயேசு ஒரு உவமையைச் சொன்னார். ''இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள் ஒருவன் பரிசேயன் மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று, தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகும் செலுத்தி வருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான்.

ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான் அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான்''... என்றார் (லூக்.18:10-14).

பரிசேயன் தன்னைத்தான் பெருமையடித்துக் கொண்டு தேவாலயத்தில் ஜெபித்தான். அது மட்டுமல்லாது அங்கே வந்து ஜெபித்துக்கொண்டிருந்த ஆயக்காரனை அற்பமாக நினைத்து ஜெபித்தான்.

இந்த ஜெபத்தைக் கேட்ட தேவன் பரிசேயனை ஆசீர்வதிக்கவில்லை மாறாக ஆயக்காரனையே ஆசீர்வதித்தார் என பார்க்கிறோம். நாம் மற்றவர்களை அற்பமாக எண்ணும் போது நம்முடைய ஜெபம், நாம் செய்த நன்மை, எல்லாம் ஒன்றுமில்லாமல் போய்விடும். ஆகவே இச்சிறியரில் ஒருவனையும் அற்பமாக எண்ணாதிருங்கள்.

மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார். ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். இளையமகன் தன் தகப்பனுடைய ஆஸ்தியை பங்கிட்டு வாங்கிக்கொண்டு போய், துன்மார்க்கமாய் வாழ்ந்து எல்லாவற்றையும் அழித்துப்போட்டு பின்பு மனந்திரும்பி வந்தான். அவனை அவனுடைய தகப்பன் அன்போடு ஏற்று அவனுக்கு வஸ்திரம் தரித்து விருந்து செய்தான். இதை அறிந்த மூத்த மகன் கோபமடைந்தான். ''அதற்குத் தகப்பன் மகனே நீ எப்பொழுதும் என்னோடிருக்கிறாய் எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது உன் சகோதரனாகிய இவனோ, மரித்தான் திரும்பவும் உயிர்த்தான் காணாமற்போனான் திரும்பவும் காணப்பட்டான். ஆனபடியினாலே, நாம் சந்தோஷப்பட்டு மகிழ்ச்சியாயிருக்க வேண்டுமே என்று சொன்னான்'' (லூக்.15:31,32). ஆண்டவர் கூறும் இந்த உவமையில் கூட கெட்டவன் கெட்டுப்போய் அழிந்தான் என்று கூறாமல் அவன் மனந்திரும்பி தகப்பனிடம் வந்தான் என்று கூறுகிறார்.

ஆம், பிரியமானவர்களே நாம் எப்பேர்பட்ட பாவியாக இருந்தாலும் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்ள நம் தேவனாகிய கர்த்தர் ஆயத்தமாயிருக்கிறார். ஆகவே இப்பூமியில் உள்ள ஒருவனையும் அற்பமாக எண்ணாது, நம்மால் முடிந்த உதவிகளை மற்றவர்களுக்குச் செய்து, அவர்களும் இரட்சிக்கப்பட பாடுபடுவோம்.

கேள்வி நேரம்

பூமியில் சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு அவை எவை?

''...அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைகாலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பும், சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும், தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டி வைக்கும் குழிமுசல்களும், ராஜா இல்லாதிருந்தும், பவுஞ்சுபவுஞ்சாய்ப் புறப்படுகிற வெட்டுக்கிளிகளும், தன் கைகளினால் வலையைப் பின்னி, அரசர் அரமனைகளிலிருக்கிற சிலந்திப் பூச்சியுமே'' என்கிறார் சாலொமோன் ஞானி (நீதி.30:24-28).

இவைகள் பூமியிலே சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் என்று வேதம் சொல்லுகிறது. பெரிய பெரிய யானை, கடல்வாழ் திமிங்கலங்களைப் பார்க்கிலும் இவைகள் மகா ஞானமுள்ளவைகள். மற்றவைகளுக்கு அற்பமான ஜெந்துவாயிருந்தும் இவைகளுக்கு தேவன் மகா ஞானத்தை கொடுத்திருக்கிறார். அதைப்போல அற்பமாய் எண்ணப் பட்டவர்களை தேவன் அதிகமாய் நேசிக்கிறார்.

31. நீங்கள் ஆயத்தமா?
Are You Ready?

நாம் அநேக காரியங்களுக்காக ஆயத்தமாக இருக்கிறோம். ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகயிருக்கிறோமா? நீங்கள் நினைக்கலாம் இயேசுவின் வருகைக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவர் வருகிறார், வருகிறார் என்று அநேக காலமாக பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள் எங்கே அவர் வந்தார். இன்று வரை அவர் வரவில்லை அவர் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று அலட்சியமாகயிருக்கலாம். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே பரிசுத்த வேதாகமத்தில் மத்தேயு எழுதின புத்தகம் 25-ம் அதிகாரம் 1-13வரையுள்ள வசனங்களைப் படிக்கும்போது 10 கன்னிகைகளைப் பற்றிய உவமையின் மூலம் கர்த்தர் தம் வருகையை விளக்குகிறார். ''ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும் ஐந்து பேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்.... மணவாளன் வரத்தாமதித்தபோது அவர்கள் எல்லாரும் நித்திரை மயக்கமடைந்து தூங்கி விட்டார்கள் நடுராத்திரியிலே இதோ, மணவாளன் வருகிறார் அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

அப்பொழுது அந்த கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள். புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங் கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்து போகிறதே என்றார்கள். புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி நீங்கள் விற்கிறவர்களிடத்தில் போய் உங்களுக்காக வாங்கிக் கொள்ளுங்கள் என்றார்கள் அப்படியே அவர்கள் வாங்கப்போனபோது மணவாளன் வந்து விட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடு கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள் கதவும் அடைக்கப்பட்டது பின்பு மற்ற கன்னிகைகளும் வந்து ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்க வேண்டும் என்றார்கள். அதற்கு

அவர்; உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்'' என்றார்.

கர்த்தருடைய வருகையின் நாளினை நாம் ஒருவரும் அறியோம். ஆனால் ஒரு நாள் அவர் நிச்சயம் வருவார் என்று விசுவாசிக்கிறோம். அவருடைய வருகையில் நாம் அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படும்படியாக, மேற்கண்ட உவமையில் பார்த்தபடி புத்தியுள்ள கன்னிகைகளைப்போல ஆண்டவருடைய வருகையை எதிர்நோக்கி ஆயத்தமாயிருக்கவேண்டும். அவர்கள் எண்ணெய்யோடு கூட ஆயத்தமாக இருந்தபடியால் மணவாளனோடு கூட பிரவேசித்தார்கள். அதுபோல இப்புவியில் வாழ்கின்ற நாம் வேதமே வெளிச்சம் என்ற வசனப்படி சகல நாளும் வேதத்தின் வெளிச்சத்திலே நடக்க வேண்டும். எல்லோரும் சபைக்குப் போவது போல நீங்களும் ஒரு வேதாகமத்தை எடுத்துக்கொண்டு போகலாம், ஆனால் அந்த வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்களா? ஆமாம் ஜெபிக்கிறேன், பாடுகிறேன், வசனம் கேட்கிறேன், காணிக்கை கொடுக்கிறேன் என்றெல்லாம் நீங்கள் சொல்லலாம்.

பரிசுத்த வேதாகமம் போதிக்கிறபடி நீங்கள் ஞானஸ்நானம் பெற்று இருக்கிறீர்களா? அல்லது பாவத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? சற்று சிந்தித்துப்பாருங்கள். நீங்கள் புத்தியற்ற கன்னிகைகளைப்போல அவர் வரும்போது ஐயோ! நான் ஆயத்தமாக இல்லையே, நான் நாளை ஞானஸ்நானம் பெறலாம் என்று இருந்தேனே, அவரோ, இன்றே வந்துவிட்டாரே. பாவத்தை இவ்வருடத்தோடு விட்டு விட்டு புது வருடத்தில் புதிய ஜீவியம் செய்யவேண்டுமென்றிருந்தேனே அவரோ, இந்த வருடமே வந்துவிட்டாரே. ஆண்டவரே, ஆண்டவரே என்று அந்த ஐந்து புத்தியற்ற கன்னிகைகளைப் போல கூப்பிட்டாலும், ஆண்டவர் உங்களை அறியேன் என்று சொல்லிவிடுவார். ஆகையால் இச்செய்தியை வாசிக்கிற நண்பரே, காலம் தாழ்த்தாது ஆண்டவருடைய இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுங்கள்.

கர்த்தர் ஒருமுறை ஆபிரகாமைப் பார்த்து; ''உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு மோரியா தேசத்துக்குப் போய், அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார். ஆபிரகாம் அதிகாலையில் எழுந்து, தன் கழுதையின் மேல் சேனங்கட்டி தன் வேலைக்காரரில் இரண்டு பேரையும் தன் குமாரன் ஈசாக்கையும்

கூட்டிக்கொண்டு, தகனபலிக்குக் கட்டைகளையும் பிளந்து கொண்டு, தேவன் தனக்குக் குறித்த இடத்திற்குப் புறப்பட்டுப் போனான்'' என்று ஆதி.22:2,3 வசங்களில் வாசிக்கிறோம். எப்படிப்பட்ட கீழ்ப்படிதல் பார்த்தீர்களா? கர்த்தர் சொன்னபடி மறுநாள் அதிகாலையில் அனைத்தையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு தாமதமில்லாமல் புறப்பட்டு சென்றான்.

இன்றைய நாட்களில் ஜீவிக்கிற நமக்கு இது ஒரு முன்மாதிரியாக இருக்கிறது. நாம் ஒரு இடத்திற்கு செல்லவேண்டுமானால் பலவிதமான சாக்கு போக்குகளைச் சொல்லுகிறோம். ஒன்று அந்த இடம் சரியில்லை என்போம் அல்லது என் மனைவியையோ, பிள்ளைகளையோ, தாய், தகப்பனையோ என்னால் விட்டு பிரிந்து இருக்க முடியாது என்போம். ஆனால் ஆபிரகாமோ அப்படி ஒன்றும் சொல்லாமல் கர்த்தருடைய வார்த்தையின்படியே சகலத்தையும் ஆயத்தப்படுத்திக் கொண்டு தன் மகனை பலியிடும்படி அவனை மலைக்கு அழைத்துக்கொண்டு சென்றான். புது உடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நாம் ''சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்'' என்ற எபே.6:15-ன்படி எப்பொழுதும் சமாதானத்தின் சுவிசேஷத்தை செல்லும் இடங்களிலெல்லாம் அறிவிக்கிறவர்களாக ஆயத்தப்படுவோம்.

முதல் நூற்றாண்டில் வாழ்ந்த சில சீஷிகள் இயேசுகிறிஸ்துவின் கல்லறைக்கு வேண்டிய சுகந்தவர்க்கங்களையும், பரிமளதைலங்களையும் ஆயத்தப்படுத்தி ஓய்வு நாளில் ஓய்ந்திருந்து வாரத்தின் முதல் நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம்பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்ட கல்லறையினிடத்தில் சென்றார்கள். இந்த ஸ்திரீகள் ஆண்டவருடைய கல்லறையை வாசனைதிரவியங்களால் நிரப்பவும் அதை பாதுகாக்கவும் அவர்கள் எடுத்துகொண்ட ஆயத்தப்பணி எவ்வளவு சிறப்பானது! நாமும் இந்த ஆபிரகாமைப்போலவும், முதல் நூற்றாண்டு சீஷிகளைப் போலவும் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டாமா? அவருடைய சரீரமான சபையை அழகுபடுத்தி, சகல பரிசுத்தவான்களோடும், எதிர்பார்ப்போடும் இருக்க வேண்டாமா? பேதுரு குறிப்பிடுவதுபோல ''நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து; இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படும் கிருபையின் மேல் பூரண நம்பிக்கையுள்ளவர் களாயிருங்கள்'' (1பேது.1:13).

''ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது'' என்ற கலா.3:6 வசனத்தின்படி நாமும் நம்முடைய விசுவாசத்தை கிறிஸ்துவின் மேல் பூரணமாக வைத்து அவருடைய இரண்டாம்

வருகையை எதிர்பார்த்து ஆயத்தமாக காத்திருக்கும்போது அவரோடு நித்தியத்தில் பிரவேசிப்போம். ''அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்'' என்கிறார் பேதுரு (1பேது.1:7).

சிலர் கர்த்தருடைய வருகையைக் குறித்துப்பேசும் போது; ''அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்றமுதல் இருந்த விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்'' (2பேது.3:4). ஏனென்றால் துன்மார்க்கன் செழித்துப்போகிறான் நீதிமான் புறம்பே தள்ளப்படுகிறான். அநேக சபைகள் இருந்த இடங்கூட இல்லாமல் போயிற்று, இயற்கைக்கு மாறான ஒரு மாற்றத்தையும் காணவில்லை. ஆனால் இயேசு மீண்டும் வரப்போகிறார் என்று பிரசங்கிக்கிறார்களே என்று பேசக்கூடும். ''வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும் வானமும் பூமியும் ஒழிந்து போவது எளிதாயிருக்கும்'' என்று லூக்.16:17-ல் வாசிக்கிறோம்.

''இதோ, சீக்கிரமாய் வருகிறேன் ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக் கொண்டிரு ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன் அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை'' (வெளி.3:11,12). நமக்குள்ள விசுவாசத்தை நாம் காத்துக்கொண்டு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக வேண்டும். தேவதூதனே வந்து கிறிஸ்துவின் வருகைக்கு விரோதமான வார்த்தைகளை சொன்னாலும் அதை நம்பாது, தவறான உபதேசங்களுக்கு செவிகொடாமல், அவைகளை மேற்கொண்டு சத்தியத்திலே உறுதியுள்ளவர்களாக இருக்கும்போது நாம் கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய நித்திய ராஜ்யத்தில் யாராலும் அசைக்கமுடியாத ஒரு தூணைப்போல நிலைநிற்போம். ''ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்திரித்துக்கொள்ளுவான், நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்'' என்கிறார் (வெளி.21:7).

அன்பு சகோதரனே, சகோதரியே இன்று நீ கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாக இருக்கின்றாயா? அல்லது உலக வாழ்க்கைக்கு உன்னை ஒவ்வொருநாளும் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாயா? நீ ஆயத்தப்படுத்தும் அநித்தியமான ஒன்றும் நித்தியத்திற்குள் வராது என்பதை நன்கு அறிந்துகொள். மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டான் ஆகையால் மண்ணுக்கே திரும்புவான் ஆவி தன்னை தந்த தேவனிடத்திற்குத் திரும்பும்.

''இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்பேர்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவ பக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்'' என வேதம்போதிக்கிறது (2பேது.3:11). மேலும் ''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' என்று எபி.12:14-ல் படிக்கிறோம். ஆகையால் நாமெல்லாரும் பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடைய முயற்சி செய்து, ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்தவர்களாயிருந்து தேவனுடைய சித்தத்தை ஒவ்வொருநாளும் நிறைவேற்ற பிரயாசப்படுவோம். நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள். கர்த்தர் தாமே உங்களை வழி நடத்துவாராக!

கேள்வி நேரம்

இயேசுவின் இரண்டாம் வருகையில் முன்பு மரித்தோரின் நிலை என்ன?

''கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்'' (1தெச.4:16,17). மேலும், பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது; ''ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்'' என்கிறார் (1கொரி.15:44). இந்த நம்பிக்கை உங்களுக்கு உண்டா? மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். கிறிஸ்துவுக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். ஆமென்.

32. தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி
A Chosen Generation

தேவனாகிய கர்த்தர் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்து அவர்களுடைய சந்ததிகளில் ஒரு குறிப்பிட்ட சந்ததியை மட்டும் தெரிந்து கொண்டு அவர்களை ஆசீர்வதித்து வந்திருக்கிறதை நாம் பரிசுத்த வேதாகமத்தின் துணை கொண்டு அறிந்து கொள்கிறோம். ''நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்து கொண்டார். சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை; நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். கர்த்தர் உங்களில் அன்பு கூர்ந்ததினாலும், உங்கள்

பிதாக்களுக்கு இட்ட ஆணையைக் காக்க வேண்டும் என்பதினாலும்; கர்த்தர் பலத்த கையினால் உங்களைப் புறப்படப்பண்ணி, அடிமைத்தன வீடாகிய எகிப்தினின்றும் அதின் ராஜாவான பார்வோனின் கையினின்றும் உங்களை மீட்டுக் கொண்டார்'' (உபா.7:6-8). மேலுள்ள வசனத்தின்படி ஆபிரகாமுக்கும், யாக்கோபுக்கும் கர்த்தர் கொடுத்த ஆணையைக் காக்கும்படிக்கும், இஸ்ரவேல் மக்களில் அன்புகூர்ந்ததினால் அவர்களைப் பரிசுத்தப்படுத்தும்படிக்கும், தமது சொந்தமான ஜனங்களாய் இருக்கும்படிக்கும் அவர்களைத் தெரிந்து கொண்டார்.

அவர்களோ பார்வோனின் சமுகத்தில் அடிமைகளாக இருந்தனர். தம்முடைய தாசனாகிய மோசேயை எழும்பப்பண்ணி அவன் மூலம், தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலரை அடிமைத் தனத்திலிருந்து விடுவித்து மாபெரும் அடையாளத்தோடும், அற்புதத்தோடும் அணியணியாய்ப் புறப்படப்பண்ணினார். எகிப்து முதல் கானான் வரை நாற்பது வருஷம் மன்னாவினால் அவர்களை போஷித்து, அவர்களது வஸ்திரம் மற்றும் பாதரட்சை முதலானவைகள் பழமையாய் போகாதபடி தமது வல்லமையுள்ள கரத்தினால் அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்தினார். இப்படி அற்புதமாக வழிநடத்தின கர்த்தரை விட்டு தங்களுக்கு ஒரு தெய்வம் வேண்டுமென்று விக்கிரகங்களை உண்டுபண்ணி தேவனுக்கு விரோதமாக நடந்தனர். மேலும் புறஜாதி முறைமைகளைக் கற்றுக் கொண்டு, தங்களுக்கு ஒரு ராஜாவைக் கேட்கும்போது தேவனாகிய கர்த்தர் சவுலை அவர்களுக்கு ராஜாவாகக் கொடுத்தார்.

சவுலை ராஜாவாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டு, பின்பு அவனுடைய ராஜ்யபாரத்தைப் பிடிங்கி ஈசாயின் மகனாகிய தாவீதுக்குக் கொடுத்தார். தாவீதோ, ஆடு மேய்ப்பனாயிருந்தான். இவனுடைய சந்ததியிலே நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். தாவீதை கர்த்தர் தெரிந்து கொண்ட சம்பவம் ஒரு ஆச்சரியமான சம்பவம். சாமுவேலை நாம் நன்கு அறிவோம். நியாயப்பிரமாண காலத்தில் வாழ்ந்த ஒரு அற்புதமான தீர்க்கதரிசி. இவன் தேவாலயத்திலே வளர்க்கப்பட்டவன். சிறு பிரயாயத்திலே கர்த்தர் தம்மோடு பேசும்போது சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று மறுமொழி கொடுத்தவன். இந்த தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் பேசி ஈசாயினிடத்திற்கு அனுப்பினார்.

இவன் அவ்வூர் மூப்பர்களோடு சென்று ஈசாயின் பிள்ளைகள் வர கட்டளையிட்டான். அப்பொழுது, ''அவன் எலியாபைப் பார்த்தவுடனே: கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்படுபவன் இவன் தானாக்கும் என்றான். கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும் இவனுடைய சரீர

வளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்: மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்'' என்றார் (1சாமு.16:6,7). ஈசாயின் மகன் எலியாபைக் கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை.

அதன்பின் ஈசாய் அபினதாபை சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணினான். கர்த்தர் அவனையும் தெரிந்து கொள்ளவில்லை. அதன்பின் சம்மாவையும் கடந்து போகப் பண்ணினான். கர்த்தர் அவனையும் தெரிந்து கொள்ளவில்லை. இப்படியே அவன் ஏழு குமாரரையும் சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப் பண்ணினான். ஏழுபேரையும் கர்த்தர் தெரிந்து கொள்ளவில்லை. பின்பு சாமுவேல் உன் பிள்ளைகள் இவ்வளவு தானா? என்று ஈசாயிடம் கேட்டான். அதற்கு அவன் இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான்; அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருக்கிறான் என்றான். உடனே ஆள் அனுப்பி அவனை அழைத்து வரச் சொன்னான். அந்தப்படியே அழைத்து வந்தபோது கர்த்தர் இவன்தான் நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு என்றார். அவ்வாறே தாவீது இஸ்ரவேல் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். சவுலினிடமிருந்த ஆவியானவர் அவனை விட்டு நீங்கினார். அந்தப்படியே அந்நாளில் கர்த்தர் தாவீதை ராஜாவாக தெரிந்து கொண்டார் என்று வேதாகமத்தின் துணைகொண்டு தெரிந்துகொள்கிறோம்.

தேவன் நம்முடைய முற்பிதாக்களுக்குக் கட்டளையிட்டபடியே பரிசுத்த ஜனமாக அவர்களை சகல நல்வழியிலும் வழிநடத்திக்கொண்டு வந்தார். ''யாக்கோபிலிருந்து ஒரு வித்தையும், யூதாவிலிருந்து என் மலைகளைச் சுதந்தரிப்பவரையும் எழும்பப்பண்ணுவேன்'' என்ற ஏசா.65:9ன் படி ஆண்டவராகிய இயேசுவை யூதா கோத்திரத்திலிருந்து எழும்பப் பண்ணினார். பிதாக்களின் காலமுதல் இயேசுவின் பிறப்புவரை ஒரு சந்ததியைத் தெரிந்துகொண்டு ஆசீர்வதித்து வந்த தேவன் இப்பொழுது புறஜாதிகளிலுமிருந்து தெரிந்து கொண்டு இருதிறத்தாரையும் ஒரே சந்ததியாக மாற்றுகிறதை நாம் புதிய ஏற்பாட்டில் படிக்கின்றோம்.

''அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல புறஜாதிகளிலுமிருந்து நம்மை அழைத்திருக்கிறாரே'' என்று பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.9:24). ''அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடியே: சேனைகளின் கர்த்தர் தமக்குள்ளே ஒரு சந்ததியை மீதியாக வைக்காதிருந்தாரானால் நாம் சோதோமைப் போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்'' என்கிறார் (ரோம.9:29). அன்பு வாசகரே அந்த சந்ததியை மட்டும் மீதியாக வைத்திராவிட்டால் இன்று நாமெல்லாம் இருப்போமா? ஏன் ஒரு சந்ததியை மட்டும் பிரித்து அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்திக் கொண்டு வந்தாரென்று

இப்போது நமக்கு நன்கு புரிகிறது. அவர் அப்படி செய்யாதிருந்திருப்பாரானால் மனித வர்க்கமே சோதோம் கொமோரா பட்டணங்களைப்போல அழிந்து போயிருக்கும். ஒரு நல்ல விவசாயி தன் நிலத்தில் விழுந்த பலனில் நல்ல விதைகளை தனியே பிரித்து வைத்து பாதுகாப்பதைப் போல தேவன் அன்று முதல் இன்று வரை ஒரு சந்ததியை தெரிந்து கொண்டு வருகிறார். அந்த சந்ததி கிறிஸ்துவே என அறிகிறோம்.

ஆண்டவராகிய இயேசுவை தெரிந்து கொண்ட தேவன், இயேசுவை அப்போஸ்தலர்களுக்கும் தாம் தெரிந்து கொள்ளவிருக்கும் ஜனங்களுக்கும் அவரைக்குறித்து வெளிப்படுத்துகையில்; ''இவர் என்னுடைய நேச குமாரன் இவருக்குச் செவி கொடுங்கள்'' என்றார் (லூக்.9:35). பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் முலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார் என்று எபிரெய ஆசான் மிகத் தெளிவாக எழுதுகிறார்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் தம்முடைய ஊழியத்திற் கென்று பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்து கொண்டார் என லூக்.6:13-ல் படிக்கின்றோம். எல்லோரும் அப்போஸ்தலர்களா? இல்லையே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் தெரிந்துகொள்ளப்பட்ட இவர்கள் அப்போஸ்தலர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

அவருடைய சீஷர்களும் பரிசுத்த ஆவியின் உதவியோடு, சபைகளுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் நிரூபங்களை எழுதும்போது, ''பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்படிதலுக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்து கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக் கடவது'' என்று எழுதுகிறார்கள். மேலும், பேதுரு குறிப்பிடும்போது நீங்களோ உங்களை அந்த காரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்த வருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயுமிருக்கிறீர்கள்'' என்கிறார் (1பேது.2:9).

பிரியமான சகோதரனே, சகோதரியே அன்பு நேயரே, நீ கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாக ஒரு கிறிஸ்தவனாக அல்லது ஒரு கிறிஸ்தவளாக இருக்கின்றாயா? இஸ்ரவேல் சந்ததியை ஆசீர்வதித்து வழிநடத்தி

வந்த தேவன் இன்று இயேசு கிறிஸ்துவின் மூலமாக உலகத்தை இரட்சிக்கத் திட்டமிட்டு பல பிரிவினை மார்க்கங்கள் நிறைந்த இவ்வுலகத்தில் இயேசுவை நமக்காக ஒரே பலியாக ஒப்புக் கொடுத்து புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணினார். இம்மார்க்கம் நம்மை நித்தியத்திற்கு நேரே வழிநடத்தும்.

இதற்கு கிறிஸ்துவே தலையாக இருக்கிறார். இங்கே சந்தோஷமும் சமாதானமும் உண்டு. இதை நீங்கள் விசுவாசித்துப் பற்றிக் கொண்டால் இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வாதம் பெறுவீர்கள். இன்றே, தேவன் தெரிந்துகொண்ட இந்த பரிசுத்த சந்ததியில் அங்கமாக முயற்சிங்கள். கர்த்தர் தாமே உங்களை, தாம் தெரிந்து கொண்ட சந்ததியில் அங்கமாக்குவாராக!

கேள்வி நேரம்

கிறிஸ்துவின் சந்ததியில் பிறக்க நான் என்ன செய்யவேண்டும்?

பேதுரு சொல்லுகிறார்; ''நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்றார் (அப்.2:38). ஒருவன் அவருடைய சந்ததியில் பிறக்க மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறவேண்டும். இயேசு சொல்கிறார்: ''நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்'' என்றார் (லூக்.13:3). ''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்'' (யோவா.3:3) ஆகவே, ஒருவன் தேவனுடைய ராஜ்யமாகிய அவருடைய சபை அதாவது அந்தச் சந்ததியில் பிறக்க, இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று மனுஷர் முன்பாக அறிக்கை செய்து ஞானஸ்நானம் பெறவேண்டும்.

எடுத்துக்காட்டாக, பிலிப்பு மந்திரி சம்பவத்தில் மந்திரி இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். ''நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்'' என்று பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.10:10). நீங்கள் அவருடைய சந்ததியில் பிறக்க ஆயத்தமாக இருக்கிறீர்களா? மறுபிறப்பு என்று சொல்லும்போது மரித்தபின் பிறக்கக்கூடிய பிறப்பு அல்ல அநேகர் தவறாக புரிந்துகொள்கிறார்கள்.

பாவத்துக்கு செத்து நீதிக்கு பிறப்பதே மறுபடியும் பிறத்தலைக் குறிக்கும். அது ஞானஸ்நானத்தில் நடைபெறும் ஒரு சம்பவம். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள்

ஒழிந்துபோகும் எல்லாம் புதிதாகும். கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவனுக்கே இந்த பாக்கியம். இதைப் பெற்றுக்கொள்ள இயேசுவை விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

33. மனுஷருடைய கோபம்
The Wrath of Man

உலகத்தில் மனுஷருடைய கோபம் குறைந்தபாடில்லை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதனால் மனிதன் தேவனுடைய நீதியை நடப்பிக்க முடியாமல் புல்லின் பூவைப் போல உதிர்ந்து போய்க் கொண்டிருக்கிறான். மனுஷருடைய இரட்சிப்புக்காக தேவன் கொடுத்த பரிசுத்த வேதாகம புஸ்தகத்தில் ''மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்க மாட்டாதே'' என்று யாக்.1:20-ல் வாசிக்கிறோம். கோபப்படுகிற ஜனங்களே எல்லா நாட்டிலும் அதிகமாக காணப்படுகிறார்கள். ஆகையினாலே தங்களை காப்பாற்றிக்கொள்ள ஆயுதங்களை குவித்துக்கொண்டிருக்கிறார்கள். நாட்டிற்கு நாடு சண்டை வரும்போது அப்பாவி மக்கள் அதிகமாக கொல்லப்படுகிறார்கள். பொருட்சேதமும் உயிர்ச்சேதமும் அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு காரணம் என்ன? கோபமே என்று காண்கிறோம்.

கோபப்படுவதினால் அழிவு மட்டுமல்ல, ஒரு மனிதனை பாவத்திற்கு நேராகவும் வழி நடத்துகிறது. கோபப்படுவதினால் ஒன்றும் சாதிக்க முடியாது. ஆனால் அது மரணத்தையும், பிரிவினையையும், சண்டையையும் ஏற்படுத்தி தேவனிடமிருந்து நிரந்தரமான பிரிவை உண்டாக்குகின்றது. ஆகையால் தான் மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாது என்று வேதம் நமக்கு போதிக்கிறது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளும்படியாக தேவன் மனிதர்களை ஏற்படுத்தவில்லை. அவர்கள் பூமியில் சமாதானத்தோடு சந்தோஷத்தோடு ஜீவிக்கும்படி படைக்கப்பட்டார்கள். அதுவும் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டார்கள். முதல் மனிதனின் பாவத்திற்கு இடம்கொடுத்தபடியால் தேவசாயலை இழந்தான்.

மனிதன் கோபப்பட்டு, கோபப்பட்டு சமாதானத்தை இழந்து தனிமனிதனாக வாழ்ந்து கொண்டு இருக்கின்றான். நெருப்பை நெருப்பு ஒருக்காலும் அணைக்க முடியாது, ஆனால் குளிர்ந்த தண்ணீர் அவைகளை அணைத்துவிடும். நிலையற்று வாழ்கிற இந்த வாழ்க்கையில் நிலையானவராகிய இயேசுகிறிஸ்து தேவ நீதியாக, புதிய உடன்படிக்கையாக நமக்கு வெளிப்பட்டிருக்கிறார். அன்பாக இருக்கும் அவரையும், அவருடைய

உபதேசத்தையும் கொதிகலம் போல் அநுதினமும் கொதித்துக்கொண்டிருக்கும் உங்கள் இருதயத்தில் ஏற்றுக் கொண்டு, தேவநீதியை நடப்பிக்க முயற்சியுங்கள். ''நியாயப்பிரமாணமில்லாமல் தேவ நீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது அது இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும், வித்தியாசமே இல்லை'' (ரோ.3:21,22).

நியாயப்பிரமாணத்தின் கட்டளை கண்ணுக்கு கண், பல்லுக்கு பல். இதனால் நியாயப்பிரமாணம் ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை என காண்கிறோம். ஆனால் தேவனுடைய நீதிப்பிரமாணம் அதாவது கிறிஸ்துவின் பிரமாணம் ஒருவனை பாவத்திலிருந்து மீட்டு எடுப்பது மாத்திரமல்ல, அவனை பரிசுத்தவானாகவும், சமாதானம் பண்ணுகிறவனாகவும், சாந்தமுள்ள வனாகவும் மாற்றுகிறது. இது முற்றிலும் அவருடைய வல்லமையான வார்த்தையின் செயல் என்று காண்கிறோம். ஒரு மனிதன் கர்த்தருடைய வசனத்தை விசுவாசித்து, அதை ஏற்று அதற்குக் கீழ்ப்படியும்போது அது அவனுக்குள்ளாக கிரியை செய்கிறது. அவன் தேவனுக்கு ஏற்றவனாகவும், குமாரனுடைய சாயலை தரித்தவனாகவும் தேவனுடைய குடும்பத்திற்குள் அங்கமாக்கப்படுகிறான்.

கோபம் ஒருவரையும் விட்டபாடில்லை. சபையின் மூப்பர் துவங்கி விசுவாசிகள் வரை கோபம் அவர்களை ஆட்டிப் படைக்கின்றது. அதேபோல் ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் தலைவர் முதல் கடை குட்டி வரை கோபம் அவர்களை ஆட்டிப்படைக்கிறது. ஒரு நிர்வாகத்தை போய் பார்த்தாலும் அங்கும் நிர்வாகி முதல் வாட்ச்மேன் வரை கோபம் அவர்களையும் ஆட்டிப்படைக்கிறது. இதற்கு முடிவு இல்லையா என்று நீங்கள் கேட்கலாம். முடிவு உண்டு. ''நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்'' (எபே.2:2,3).

நாமெல்லாரும் ஒரு காலத்தில் இப்படிப்பட்ட ஜனங்களாயிருந்தோம். இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளை, அப்படியானால் இயேசுவைப் போலவும், அவருடைய சீஷர்களைப் போலவும் கோபப்படாதிருக்க கற்றுக்கொள்ள வேண்டுமல்லவா? **இச்செய்தியை உங்களுக்குப் போதிப்பதின் நோக்கமே நீங்கள் கோபப்படக்கூடாது என்பதற்காகவே.** ''தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்'' என பவுல் எவ்வளவு நன்றாய் எழுதியிருக்கிறார் பார்த்தீர்களா? (1தெச.5:9). பாவம் செய்ததால் ஆதாமை ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டிய தேவன் அவனுடைய சந்ததிகளாகிய நம்மை அப்படியே விட்டுவிடவுமில்லை. கோபாக்கினைக் கென்று நியமிக்கவுமில்லை மாறாக இயேசுவின் மூலமாக இரட்சிக்கப் படும்படியாக அவரையே நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுத்து, நாம் நீதிமான்களாகும் பொருட்டு அவரை எழுப்பியும் இருக்கிறார். இப்பேர்பட்ட அற்புதமான திட்டத்தை உங்களுக்காவும் எனக்காவும் தேவன் ஏற்படுத்தியிருக்கிறார்.

''ஆகையால் என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்'' என்கிறார் யாக்கோபு (யாக்.1:19). ''சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள், இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்''. ஆகையால் ''நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்; சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது'' (எபே.4:26). ஆம் பிரியமான சகோதரனே, சகோதரியே, உங்கள் கோபம் சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்பே தணியவேண்டும். அதைத்தான் தேவன் உங்களில் எதிர்பார்க்கிறார். நாளையதினம் நம்முடையதல்ல என்பதை நன்கு அறிந்து செயல்படுங்கள்.

என்னதான் சொல்லுங்கள் என்னால் கோபப்படாமல் இருக்க முடியாது என்னை அறியாமலே கோபம் வந்து விடும் என்று அநேகர் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன். நீங்கள் கோபத்தை விட்டு விடுகிறீர்களோ, இல்லையோ, எனக்குத் தெரியாது. ஆனால் யோவான்ஸ்நானன் சொல்வதைக் கவனியுங்கள் ''குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்'' (யோவா.3:36). கிறிஸ்துவானவர் குறிப்பிடும்போது ''என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்'' (யோவா.12:48). தேவகோபம் எப்படி இருக்கிறது என்று பார்த்தீர்களா? தேவகோபத்திற்கு தப்பித்து கொள்ள அவர் வார்த்தைக்கு முதலாவது கீழ்ப்படியுங்கள்.

''நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, உங்கள்

அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். ....உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன் அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும், அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்தது போல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக் கொடுங்கள்'' (ரோ.6:13-19).

இப்படி செய்தால் தேவனுடைய நீதியை நடப்பிக்கிறவர் களாயிருப்பீர்கள். முன்னே கோபத்தில் உங்கள் மனைவியை அடித்து இருக்கலாம், இப்பொழுது நீங்கள் பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்களைப் போல மாம்சத்தில் உள்ள உங்கள் மனைவியினிடத்தில் அன்புகூருங்கள். ''முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப் பண்ணுகிறான்'' என்று நீதி.14:29-ல் வாசிக்கிறோம். அநேக சமயங்களில் காரணமில்லாமல் கோபித்துக் கொண்டிருக்கிறவர்களும் உண்டு. இப்படிப்பட்டவர்களே முற்கோபிகள். ''தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்'' என்கிறார் ஆண்டவர் (மத்.5:22). எதற்கெடுத்தாலும் கோபித்து கொண்டிருந்தால் குற்றவாளி கூண்டாகிய நியாயத்தீர்ப்பில் நிற்போம். ''மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்..... ஏனெனில் உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்'' (மத்.12:36,37). ஆகையால்தான் கர்த்தர் குறிப்பிடும்போது; ''உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர் களுக்காவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்'' என்றார் (மத்.5:44).

நீங்கள் இச்செய்தியின் மூலம் கோபத்தை அறவே ஒழிக்க முயற்சி எடுப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம். மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்காது. ஆகையால், கோபத்தை விட்டு விடுங்கள். ''நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது'' (1பேது.2:15). இவ் வசனத்திற்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்து தேவ நீதியையும், அவருடைய திருசித்தத்தையும் நிறைவேற்ற பிரயாசப்படுங்கள். ''கோபக்காரனுக்குத் தோழனாகாதே'' என்ற சாலொமோனின் அறிவுரைப்படி சாந்தமுள்ளவர்களோடும், சமாதானம் பண்ணுகிறவர்களோடும் ஐக்கியம் கொண்டு கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற முற்படுங்கள். கோபக்காரருக்காக ஜெபியுங்கள். உங்களுடைய மாதிரியான ஜீவியம் அநேக கோபக்காரர்களை மாற்றட்டும்.

கேள்வி நேரம்

கோபம் மாம்சத்தின் கிரியைகளில் ஒன்றா?

ஆம், ''மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன; விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே'' (கலா.5:19-21) இவைகளில் ஒன்று கோபம். இது மாம்சத்தின் கிரியையாக இருக்கிறது. ஆவிக்குரியவனிடம் மாம்சத்தின் கிரியைகள் காணப்படக்கூடாது. அப்படி காணப்படுமேயானால் அவன் ஆவிக்குரியவன் அல்ல. மாம்சத்திற்குரியவனாகவே இருக்கிறான்.

உங்களில் மாம்சத்தின் கிரியைகள் இருக்கிறதா? அப்படியிருந்தால் இன்றே அவைகளை உங்கள் அவயவங்களிலிருந்து அழித்துப்போடுங்கள் அல்லது விட்டு விடுங்கள் அல்லது பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

34. கள்ளப்போதகர்கள்
False Teachers

இன்றைய நாட்களில் கள்ளப்போதகர்கள் பெருகியிருப்பதை நாம் காண்கிறோம். பரிசுத்த வேதாகமம் இவர்களைக் குறித்து எச்சரிக்கிறது. ''கள்ளத்தீர்க்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள். அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள்; அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப் புரட்டுக்களை தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து தங்களுக்கு தீவிரமான அழிவை வருவித்துக் கொள்வார்கள். அவர்களுடைய கெட்ட நடக்கையை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்களினிமித்தம் சத்திய மார்க்கம் தூஷிக்கப்படும்'' என்று அப்போஸ்தலனாகிய பேதுரு தெளிவாக குறிப்பிடுகிறார் (2பேது.2:1).

இச்செய்தியை வாசிக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே, இப்படிப்பட்ட போதகர்கள் உங்கள் நடுவிலும் இருப்பார்கள் என்பதை அறிவீர்களா? கள்ளப்போதகர்கள் உலக முழுவதிலும் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை பிசாசு வல்லமையாக பயன்படுத்திக்

கொண்டு வருகிறான். இப்படிப்பட்டவர்களை அடையாளம் கண்டு கொண்டு அவர்களை விட்டு விலக சில வேதவசனங்களை உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறோம்.

இவர்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்போது; 2கொ.11:13-ல் அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே! என்கிறார். தங்களை அப்போஸ்தலன் என்றும், ரெவரெண்டு என்றும் ஒரு சிலர் அழைக்க விரும்புகிறார்கள். எல்லாரும் அப்போஸ்தலர்களாக மாறிவிட முடியுமா? பவுல் சொல்லுகிறார் 1கொரி.4:9-ல் எங்களுக்குத் தோன்றுகிறபடி தேவன் அப்போஸ்தலர்களாகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போல கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினார் என்கிறார். அப்படியிருக்கும்போது, இன்றைக்கு அப்போஸ்தலர்களாக எப்படியிருக்க முடியும்.

அப்படி ஒருவன் தன்னை அப்போஸ்தலன் என்று சொல்வானேயானால் அவன் கள்ள அப்போஸ்தலனாகத்தான் இருக்கமுடியும். மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது 1தீமோ.4:1-ல் ஆகிலும் ஆவியானவர் வெளிப்படையாய் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனசாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவி கொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள் என்று எழுதுகிறார். பிசாசின் உபதேசத்தைக் குறித்து உங்குளுக்குத் தெரியாத விஷயம் ஒன்றும் இல்லை. ஏவாளைப் பார்த்து பிசாசு நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாமென்று தேவன் சொன்னது உண்டோ என்றது. அதைப்போல இந்த கள்ளப்போதகர்களும் சபை ஆராதனையில் வாத்திய கருவிகள் இசைக்கக்கூடாது என்று எங்கேயாவது சொல்லியிருக்கிறாரா? இல்லையே, தாவீதைப் பாருங்கள் நடனத்தோடும் கைத்தாளத்தோடும் சுரமண்டலத்தோடும், தம்புரோடும் துதித்துப் பாடினாரே என்று விளக்கம் கொடுப்பார்கள். அதே தாவீது பலி செலுத்தினான்.

அவனைப்போல நாம் ஏன் பலி செலுத்துவதில்லை? அவன் நியாயப்பிரமாணத்தின் காலத்தின் கீழ் வாழ்ந்தான் என்று அறிகிறோம். நியாயப்பிரமாணத்தின் போதனைகள் வேறு, கிறிஸ்துவின் பிரமாணத்தின் போதனைகள் வேறு. நாம் இப்பொழுது கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ்வாழ்கிறோம். அந்த பிரமாணமே நம்மை பாவத்திலிருந்து மீட்டது.

ஆகையால் தாவீதைப்போல ஆண்டவர் இயேசுவும், அவருடைய சீஷர்களும் நடனமாடி தேவனை துதித்துப்பாடாமல் ''அவர்கள் ஸ்தோத்திரப்பாடலைப் பாடினார்கள்'' என்று மத்.26:30-ல் படிக்கிறோம். அதைப்போல ஆராதனையும் யோவான்4:24 வேதவசனத்தின்படி ஆவிக்குரிய ஆராதனையாக இருக்கிறது. ஆனால், கள்ள அப்போஸ்தலர்கள் தந்திரமாக வேத வசனங்களை புரட்டுகிறார்கள்.

ஆகையால், கள்ளப்போதகர்களைக் குறித்த விஷயத்தில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஏனெனில் பவுல் 1தீமோ.1:7-ல் தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள். இப்படிப்பட்ட போதகர்கள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே செல்கிறார்கள். பல வேலைகளுக்கு முயற்சி எடுக்கிறார்கள் ஒன்றும் கிடைக்காத சூழ்நிலையில் போதகர் வேலைக்கு சென்று படிப்போம் என்று தீர்மானம் எடுக்கின்றனர். அதற்கு வேண்டிய வேதாகம கல்லூரிகள், இன்றுள்ள நர்சரி பள்ளிகள் போல் நம்நாட்டில் அநேகமுள்ளன. அவைகளில் ஏதாவது ஒரு வேதாகம கல்லூரியில் சேர்ந்து தாங்கள் எதற்காக வேதாகமத்தை கற்கிறோம்? நாம் எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறோம்? என்ற திட்டமில்லாமல் கொடுக்கக்கூடிய உதவி தொகைக்கும், உணவுக்கும் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் வேதத்தை திறந்தவுடன் எந்த பகுதி வருகிறதோ அதிலிருந்து போதிக்கும்படியாக முற்படுவார்கள்.

குறிப்பாக சொல்லப்போனால் பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் வித்தியாசம் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். அப்படியானால் பழையஏற்பாட்டை கிழித்துப்போட்டு விடலாமா என்று சொல்லுவார்கள். அன்பானவர்களே, பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தை நமது ஆண்டவர் மிக நேர்த்தியாக விவரிப்பதைக் கவனியுங்கள். ''விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று'' என்று சொல்லுகிறார் (மத்.5:27,28). பூர்வத்தாருக்கு கொடுக்கப்பட்ட கட்டளையைக் காட்டிலும் இது மிக கடுமையாக சொல்லப்பட்டுள்ளதை கவனிக்க வேண்டும். பூர்வத்தில் விபசாரம் செய்தால்தான் குற்றம். ஆனால் இப்பொழுது ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்த்தாலே குற்றம். இதைப்புரிந்து கொள்ளத்தெரியாத அநேக ஸ்தாபனங்களில் பணியாற்றுகிற போதகர்கள் மனிதத் தலைவர்களைப் பின்பற்றி கள்ளப்போதகர்களாக மாறிவிடுகின்றனர்.

''கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்குண்டான சுயாதீனத்தை உளவு பார்த்து நம்மை நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாகும் பொருட்டாக பக்கவழியாய் நுழைந்த கள்ள சகோதரர்களினிமித்தம் அப்படியாயிற்று என்ற பவுல் கலாத்திய சபையாருக்கு எழுதுகிறார் (கலா.2:4). முதல் நூற்றாண்டு காலத்தில் கள்ளப்போதகர்களின் தாக்கம் அதிகமாக இருந்திருக்கிறது. அப்படிப்பட்டவர்களோடு இயேசுவின் சீஷர்கள் போராடியிருக்கிறதை நாம் புதிய ஏற்பாட்டில் படிக்கிறோம். ஒரு யூத மனிதனை பார்த்து, கிறிஸ்துவின் சபை ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்ளும் பள்ளி சிறுவன் ஒருவன் ஐயா, கிறிஸ்துவின் சபையார் வெளியிடும் இந்த புத்தகத்தை படித்துப்பாருங்கள் என்று அந்த யூதனிடம் கொடுத்தான். அதை ஏற்றுக்கொள்ள மறுத்த அந்த யூதன், தான் ஒரு யூதன் கிறிஸ்தவனல்ல என்று சொல்லி இயேசுவைப்பற்றி சொல்லப்பட்ட புத்தகத்தை வாங்க மறுத்துவிட்டான். யூதர்களையும் இரட்சிக்கும்படியாக இயேசுவந்தார். ஆனால் அந்த யூத ஜனங்களோ அவரையும் அவருடைய உபதேசங்களையும் ஏற்றுக்கொள்ளாமல் அவரை புறம்பாக்கிப்போட்டார்கள்.

வேதாகமத்தை சரியாக புரிந்துகொள்ளாத ஜனங்கள். புதியதையும் பழையதையும் இணைக்கிறார்கள். ஓய்வு நாளாகிய சனிக்கிழமையை இன்றைக்கு ஆராதனை நாளாக வைத்து ஆராதிக்கிறார்கள். முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்கு போதனையாக எழுதியிருக்கிறது. ''நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்துகிற உபாத்தியாயிருந்தது, விசுவாசம் வந்தபின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே'' என பவுல் தெளிவுபடபோதிக்கிறார் (கலா.3:24,25). மேலும் ''புளிப்புள்ள கொஞ்சம் மாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும். நீதியானது நியாயப்பிரமாணத்தினாலே வருமானால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே. உங்களை கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான் எழுதப்பட்டதற்கு மிஞ்சி எண்ண வேண்டாமென்று''... பவுல் 1கொரி.4:6-ல் கொரிந்து சபையாருக்கு எச்சரித்துப் புத்திசொல்லுகிறார். எழுதப்பட்ட வசனங்களை உற்றுநோக்குவோம். அவைகளுக்குக் கீழ்ப்படிவோம்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற சகோதரனே, திருச்சபையாரே, கள்ளப்போதகர்களைக் குறித்து பரிசுத்த வேதாகமம் அநேக இடங்களில் எச்சரிக்கிறது. இவர்கள் வயிற்றுக்காக ஊழியம் செய்கிறவர்கள். சுவிசேஷவேலையை ஆதாயத் தொழில் என்று எண்ணுகிறவர்கள். பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்ப்பவர்கள். ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்கள். வேதப்புரட்டர்கள். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப்

போதிப்பவர்கள். பண்டிகைகளை அநுசரிப்பவர்கள். இப்படிப்பட்டவர்களை உங்கள் வீட்டில் ஏற்றுக்கொள்ளாமலும் அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். புதுஉடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி அவரே எங்களை தகுதியுள்ளவர்களாக்கினார் என பவுல் குறிப்பிடுகிறார் (2கொரி.3:6). அந்த உடன்படிக்கைக்கு ஊழியக்காரராயிருப்பவர்களை ஏற்றுக்கொண்டு சத்தியத்தில் வளருங்கள். அப்பொழுது; ''சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' என்ற வசனம் உங்கள் வாழ்க்கையில் நிறைவேறும் (யோவா.8:32).

கேள்வி நேரம்

சபை கள்ளப்போதகர்களை அடையாளம் கண்டுகொள்வதெப்படி?

எபேசு சபையானது கள்ள அப்போஸ்தலர்களை அடையாளம் கண்டு கொண்டது. கர்த்தர் அந்த சபையின் தூதனுக்கு எழுதும்போது; ''ஏழு நட்சத்திரங்களைத் தம்முடைய வலது கரத்தில் ஏந்திக்கொண்டு, ஏழு பொன் குத்துவிளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருக்கிறவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், அப்போஸ்தரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று, சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும் அறிந்திருக்கிறேன்'' என்று எழுதுகிறார் (வெளி.2:1,2). இன்றைக்கு இருக்கிற ஒவ்வொரு சபையும் சத்தியத்தை சொல்ல வருகிறவர்கள் வேதாகமத்திலிருந்து சொல்லுகிறார்களா என்று எபேசு சபையைப்போல அவர்களை சோதித்து அறியவேண்டும். இதே யோவான்; ''ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான்'' என்று 2யோவான் வசனம்10,11-ல் எழுதியிருக்கிறார்.

ஆக, கள்ளப்போதகர்களை அடையாளம் கண்டு கொள்ள நமக்கு ஆவியானவர் வசனத்தின் மூலம் அநேக ஆலோசனைகளை கொடுத்திருக்கிறார். அவைகளை கற்றுக்கொண்டு வசனத்தை கொண்டு வராதவர்களை ஏற்றுக்கொள்ளாமலும் அப்படிப்பட்டவர்களோடு ஐக்கியம் கொள்ளாமலும் இருங்கள். அப்பொழுது தேவன் உங்களோடிருந்து பெரிய காரியங்களைச் செய்வார். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

"அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே; கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய்" நீதி. 30:6

35. பரிசுத்த வேதாகமம்
The Holy Bible

இது தேவனுடைய புத்தகம்! இந்த கிறிஸ்தவ வேதாகமத்தைக் குறித்து நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் இச்செய்தியை தொடர்ந்து வாசியுங்கள் அல்லது நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிருந்தாலும் பரிசுத்த வேதாகமத்தின் உண்மையை புரிந்துகொள்ளுங்கள். முதல் மனிதனாகிய ஆதாம் மற்றும் ஏவாள் ஆகிய இருவரும் பிசாசின் உபதேசத்திற்கு செவிகொடுத்து வீழ்ந்து போனார்கள். இவர்களை அப்படியே தேவன் விட்டுவிடாமல் அவர்களை இரட்சித்து, தம்மோடு நித்திய நித்தியமாக வைத்துக்கொள்ளும்படியாக, முற்பிதாக்களின் காலத்தில் தேவமனிதர்கள் மூலம் தம்முடைய ஜனங்களோடு பேசி வந்தார். இந்தக் கடைசி நாட்களில் தம்முடைய குமாரன் மூலமாக திருவுளம்பற்றினார் என திருமறைபோதிக்கிறது. இயேசுவானவர் பிதாவிடம் தாம் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் நமக்கு உபதேசங்களாக கொடுத்திருக்கிறார். ஆண்டவர் இயேசுவின் உபதேசத்தை புதிய ஏற்பாட்டில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் போன்ற சுவிசேஷகர்கள் கடுகளவும் மாற்றாமல் பரிசுத்த ஆவியானவரின் துணையோடு அவைகளை எழுதியிருக்கின்றனர்.

ஒட்டுமொத்தத்தில் வேதாகமம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயு என்ற உத்தம ஊழியனுக்கு எழுதும்போது ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும், இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' என்கிறார் (2தீமோ.3:16,17). நம்முடைய நன்மைக்காகவே இந்த பரிசுத்த வேதாகமம் நம்முடைய கரங்களில் கிடைக்கும்படி தேவன் கிருபை செய்திருக்கிறார். இன்றைக்கு ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சட்டைப்பையில் ஒரு பேனாவை வைத்திருப்பார்கள். சில குறிப்புகளை எடுக்கவும். மற்றவர்களுக்கு முகவரி எழுதிக்கொடுக்கவும், மற்றும் கையொப்பம் இடவும் பேனா நமக்கு உதவியாக இருக்கிறது.

அதைப்போல ஒவ்வொருவரும் ஒரு முழு வேதாகமத்தை வைத்திருக்கவேண்டும். ''வேதமே வெளிச்சம்'' என நீதி.6:23-ல் படிக்கிறோம். இருள் உள்ள இந்த உலகத்தில் நமக்கு வெளிச்சம் கொடுப்பது பரிசுத்த

வேதாகமமே! இந்த வேதாகமம் இல்லாவிட்டால் நாம் இருளில் நடக்கிறவர்களாகவே இருப்போம்.

வேதாகமம் உலகமெங்கும் அவரவருடைய பாஷைகளில் அச்சிடப்பட்டிருக்கிறது. அதிகமாக விற்பனையாகும் புத்தகம் பரிசுத்த வேதாகமம் மட்டுமே. இதை நாற்பது தேவ மனிதர்களைக் கொண்டு தேவன் எழுதியிருக்கிறார். 66 புத்தகங்களைக் கொண்டது வேதாகமம். இதில் இரண்டு பெரும் பிரிவுகள் உள்ளன. ஒன்று பழைய ஏற்பாடு மற்றொன்று புதிய ஏற்பாடு. நாம் புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆகையால் புதிய ஏற்பாட்டை ஆழமாக படித்து அதைக் கைக்கொள்ளவேண்டும். பழைய ஏற்பாட்டை வாசித்து நம்முடைய முற்பிதாக்கள் எப்படி வாழ்ந்தார்கள். அவர்களுடைய வளர்ச்சி எப்படியிருந்தது. அவர்கள் எந்தெந்த விதத்தில் விழுந்துபோனார்கள் என்பதை அறிந்துகொள்ளவும் அது நமக்கு பிரயோஜனமாக இருக்கிறது.

பரிசுத்த வேதாகமம் காட்டும் ஒரே வழி: ஜீவ வழியாக இருக்கிறது. இந்த வழியாக போகிறவர்களுக்கு மரணபயம் இல்லை. ஏனென்றால் மரணத்தை ஜெயமாக விழுங்கியவருடைய வழியில் கடந்துசெல்கிறோம். அவர் மரித்தார் மீண்டும் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அவரை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். அவருடைய வழியில் செல்கிறவன் வெட்கப்பட்டுப்போவதும் இல்லை, திசைகெட்டுப்போவதுமில்லை. ஏனெனில் அவன் ஜீவ வழியில் இருக்கிறான். இவ்வுலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஒரு சில அனுபவங்கள் உண்டு. எது எப்படியிருந்தாலும் இந்த உலகத்திலிருந்து தேவனிடத்திற்குப் போக ஒரே வழி பரிசுத்த வேதாகமத்தில் தான் உள்ளது.

அந்த வழி இயேசுவே என காண்கிறோம். ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் என்கிறார்'' (யோவா.14:6). அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் பாக்கியவான்கள். மேலும், ''நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேச்சலைக் கண்டடைவான்'' என்றார் (யோவா.10:9). வேதவசனத்தின்படி தங்களுடைய வாழ்க்கையை அமைத்துகொள்ளுகிறவர் களுடைய ஜீவியம் மிகவும் ஆசீர்வாதமானதாக மாறும். அவர்கள் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவார்கள். ''இவைகளை உணரத்தக்க ஞானமுள்ளவன் யார்? இவைகளைக் கிரகிக்கத்தக்க புத்தியுள்ளவன் யார்? கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள், நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்'' என்று ஓசியா தீர்க்கன் சொல்லுகிறான் (ஓசியா 14:9).

வேதம் எல்லாவிதமான தீமையான காரியங்களிலிருந்தும் நம்மை விடுவிக்கிறதாக இருக்கிறது. உங்களுடைய வாழ்க்கையில் சந்தோஷம், சமாதானம் பெற்று வாழ வழிசெய்கிறது. ஆகையால், சாலொமோன் ஞானி சொல்வதுபோல புதையல்களைத் தேடுவதுபோல வேத வசனங்களை தேடி உங்களை நல்வழிப்படுத்துங்கள். எடுத்துக்காட்டாக இந்தியாவில் நீங்கள் எங்கு வாகனம் ஓட்டிச்சென்றாலும் இடது புறத்திலே ஓட்டிச்செல்ல வேண்டும். இது நமது தேசத்தின் சட்டம், இது பற்றி தெரியாத ஒரு நபர் நமது நாட்டில் வலது புறத்தில் வாகனம் ஓட்டினால் என்னநடக்கும், சடிதியில் வாகனம் விபத்திற்குள்ளாகி மரணம் ஏற்படும் அல்லவா? பரிசுத்த வேதாகமம் தேவன் கொடுத்த சட்டபுத்தகமாக இருக்கிறது. இதை ஒருவர் கைக்கொள்ளும்போது வேதாகமம் போதிக்கிறபடி தன்னை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டும். சட்டத்திற்கு விரோதமாக செயல்படுவாரேயானால் இந்த வேத வசனம் ஒரு நாளில் அவரை நியாயந்தீர்க்கும். வேத சட்டத்திற்கு விரோதமாக நடக்கிற யாவரும் நித்திய மரணத்தை அடைவார்கள் என வேதம் எச்சரிக்கிறது.

மோசே காலத்தில் தேவன் பத்து கட்டளைகளை எழுதிக்கொடுத்தார். ஏனென்றால் அவர்கள் கண்போன போக்கிலே போய்கொண்டிருந்தார்கள். ஆகையால், என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம். உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக. கொலை செய்யாதிருப்பாயாக. விபசாரம் செய்யாதிருப்பாயாக. களவு செய்யாதிருப்பாயாக. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக... என்ற கட்டளைகளைக் கொடுத்தார்.

தன்வழியே செல்லும் மனிதனை சரி செய்யவும், மனிதனை தாம் உண்டாக்கின நோக்கம் கெட்டுவிடாதிருக்கவும் அவனுக்கு கட்டளைகளைக் கொடுத்தார். ''என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்'' என்று ஓசியா தீர்க்கன் மூலமாக உரைத்தார் (ஓசியா 8:12). இவைகளைப் பெற்றுக்கொண்ட அந்த ஜனங்கள் வணங்கா கழுத்துள்ளவர்களானார்கள். தேவன் அவர்களை எப்பொழுதும் வழுவிப்போகிற ஜனங்கள் என்கிறார்.

இச்செய்தியை வாசிக்கிற அன்பு நண்பரே, நீ கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொண்டு நடப்பாயானால் அவர் உன்னை அதிகமாய் நேசிப்பார். அவருடைய சமுகத்தில் இருக்கும் ஆசீர்வாதங்களை பெற்று அனுபவிக்கும் வாய்ப்பைப் பெறுவாய். இன்றைக்கு அநேகர் வேதாகமம்

புரியவில்லை என்று சொல்லுகிறார்கள். காரணம் என்ன? அவர்கள் விசுவாசத்தோடு அதை வாசிக்கவில்லை, விசுவாசத்தோடு அவைகளைத் தேடவில்லை, நாடவில்லை. மாறாக உலகப்பிரகாரமாக தேடி நாடுகிறார்கள். அவர்கள் காணல் நீரை பார்ப்பதுபோல பார்த்து ஒன்றுமில்லாதுபோகிறார்கள். பரிசுத்த எழுத்துக்களை பரிசுத்த சிந்தையோடும் பயபக்தியோடும் தேடுகிறவர்கள் அநேக நன்மைகளை தேவனிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் பாருங்கள், ஒரே வேதாகமம்தான் பலர் நன்மைகளை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள், சிலர் நன்மைகளை பெற்றக்கொள்ள முடியவில்லை.

வேதாகமம் முகம்பார்க்கும் கண்ணாடி. அதிகாலை எழுந்தவுடன் எல்லோரும் கண்ணாடியை பார்ப்பார்கள். பின்பு தன்னை சரிசெய்து கொண்டு வெளியே செல்வார்கள். என்னைப் பொறுத்தமட்டில் ஒவ்வொருவரும் காலை எழுந்தவுடன் முதலாவது வேதாகமக் கண்ணாடியை பார்க்கவேண்டும். அதன் மூலம் தேவன் நம்மை வழிநடத்துவார். சிலர் இதை தவறாக பயன்படுத்துகின்றனர். காலை எழுந்தவுடன் வரக்கூடிய வசனம் இன்று நமக்கு தேவன் கொடுத்த வசனம் என்று கருதுகின்றனர். அது தவறு. வேதாகமத்தை திறந்தவுடன் வரக்கூடிய வசனத்தை படிப்பதும் அது தனக்கு தேவன் கொடுத்த வசனம் என்று சொல்வதும், குறிசொல்லுவதற்கும், குறிபார்ப்பதற்கும் சமமாக இருக்கிறது. வேதாகமத்தை பகுத்துப்படிக்க கற்றுக்கொள்ளவேண்டும்.

யார் சொல்வது, யாருக்கு சொல்லப்பட்டது, எப்பொழுது சொல்லப்பட்டது என்ற கேள்வியோடு வேதாகமத்தை படிக்கவேண்டும். **அது நம்மை வாழ்நாளெல்லாம் வழிநடத்தும் ஜீவ புத்தகமாக இருக்கிறது.** அந்த வசனத்தை எடுத்து ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அது பலன்கொடுக்கிறது. அவன் முழுவதும் மாற்றப்படுகிறான். நீங்கள் பரிசுத்த வேதாகமத்தை பற்றி எந்த அளவு புரிந்துள்ளீர்கள்? அதை நீங்கள் மகிமைப்படுத்துவீர்களானால் உங்களை தேவன் மகிமைப்படுத்துவார்.

கேள்வி நேரம்

இந்த பரிசுத்த வேதாகமம் உலகம் முடியும் மட்டும் போதுமானதா?

ஆம், இதற்கு மேலே ஒரு வேதாகமம் நமக்கு தேவையில்லை. ஏனென்றால்; ''இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின்

வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார்'' என்று வெளி. 22:18,19 வசனங்களில் எச்சரித்துள்ளார். வேதாகமத்தின் கடைசி புத்தகமாக இதை இணைத்தவர்கள் இணைத்துள்ளனர். இது தீர்க்கதரிசன புத்தகமாக உள்ளது. கர்த்தருடைய இரண்டாம் வருகையைக் குறித்து சொல்லக்கூடிய புத்தகமாக இருக்கிறது. இதற்குமேல் ஒரு தீர்க்கதரிசனம் தேவை இல்லை என்பதை சொல்லும் புத்தகமாக இருக்கிறது.

ஆகையினாலே பரிசுத்த வேதாகமம் நம்முடைய ஜீவிய காலத்துக்கும் வருங்கால சந்ததிகளுக்கும் போதுமானதாக இருக்கிறது. முழு வேதாகமத்தை இணைத்தவர்கள் மிக நேர்த்தியாக பழை ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் இணைத்திருக்கிறார்கள். வேதாகமத்தின் கடைசி புத்தகத்தின் கீழ் புதிய ஏற்பாடு முற்றிற்று என்று அச்சிட்டுள்ளனர். அப்படியென்றால் வேறொரு ஏற்பாடு இல்லை. எழுதவும் முடியாது. இதுவே கடைசி புத்தகம் என்று காண்கிறோம். தேவன் நமக்கு கிருபையாய் கொடுத்த இந்த பரிசுத்த வேதாகமத்தை நாளும் படித்து பயன் பெறுங்கள். உங்களுக்காக நாங்கள் இடைவிடாது ஜெபிக்கிறோம். கர்த்தர் சீக்கிரம் வருகிறார். ஆயத்தமாகுங்கள்.

36. மாதிரியை நோக்குங்கள்
Note The Example

''**நா**ங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி, நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்'' என்று பவுல் பிலிப்பிய சபையாருக்கு சொல்வதை பிலி. 3:17-ல் வாசிக்கிறோம். ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்தவைகளை சொல்லுவார்கள். ஆனால் அதனுடைய முடிவு அவர்களுக்கே தெரியாது. ஆவிக்குரிய ஒரு கிறிஸ்தவன் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவி கொடுத்து, வேதாகமம் சொல்லுகிறவர்களை மாதிரிகளாக நோக்க வேண்டும்.

விசுவாச விஷயத்தில் நாம் ஆபிரகாமை நோக்கிப் பார்க்கும்போது; ''தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம்பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். ஆகையால் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டதென்பது, அவனுக்காக மாத்திரமல்ல, நமக்காகவும் எழுதப்பட்டிருக்கிறது'' என்று

அப்போஸ்தலனாகிய பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம. 4:20-23). இன்று இருக்கிற நாமும் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமை நோக்கிப்பாத்து, விசுவாச விஷயத்தில் வாக்குத்தத்தம் செய்த கர்த்தரைப் பற்றிக்கொள்ளும்போது, விசுவாசமுள்ள பிள்ளைகளாக மாறுவோம். ''விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்'' (எபி. 11:6).

கர்த்தர் தம்மைத்தேடுகிறவர்களை ஒருநாளும் கைவிடார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஆபிரகாம் அதை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. அன்பான நேயரே, இன்று தேவனை விசுவாசிப்பீர்கள் என்றால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். அவர் ஒருவரையும் புறம்பே தள்ளாதவர். ஆபிரகாமைப்போல நீங்கள் ஆசீர்வதிக்கப்பட விசுவாசவிஷயத்தில் ஆபிரகாமை நோக்கிப் பாருங்கள்.

உண்மையின் விஷயத்தில் நாம் மோசேயை நோக்கிப் பார்க்கும்போது; ''மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல'' என்று எபிரெயர் 3:2-ல் படிக்கிறோம். அப்படியானால் மோசே தேவனுடைய வீட்டில் அதாவது தேவனுடைய சபையில் எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தார் என காண்கிறோம். ஆறு லட்சம் ஜனங்களுக்கு மேலானவர்களை வனாந்தரத்தில் வழி நடத்திக்கொண்டு வந்த மோசே, அவர்களை ஏமாற்றி ஒரு வருடத்திற்கு இன்றைய மதிப்புபடி ஒரு ரூபாய் அவர்களிடத்தில் வசூலித்திருந்தாலும் நாற்பது வருடத்தில் 240 லட்சம் ரூபாய் அவர்களிடம் வசூலித்து அவர் ஒரு பெரிய பணக்காரனாக இருந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. இஸ்ரவேலை வழிநடத்தும்படியாக தம்மை தெரிந்து கொண்ட இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு உண்மையுள்ள ஊழியக்காரனாக இருந்துகொண்டு செயல்பட்டார்.

அன்பானவர்களே, ஏன் நாமும் அப்படிப்பட்ட சிந்தையுள்ளவர்களாக இருக்கக்கூடாது? இந்த மோசேயைப்போல தேவனுடைய காரியங்களிலும் சரி நம்மை நம்பி ஒப்புக்கொடுத்திருக்கிற வேலையிலும் சரி நாம் உண்மையாக இருக்கும்போது தேவனால் உயர்த்தப்படுவோம். ''தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்'' என்ற சங்கீதம் 101:6-ன்படி உண்மையாய் இருந்தால் அவரோடு வாசம்பண்ணுவோம். இந்தவிதமான நம்பிக்கை உங்களில்

இருக்குமானால், மோசேயைப்போல எங்கும் எதிலும் உண்மையாய் இருக்கப்பிரயாசம் எடுங்கள்.

துதியின் விஷயத்தில் நாம் தாவீதை நோக்கிப்பார்க்கும்போது; ''உமது நீதிநியாயங்களினிமித்தம், ஒருநாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன்'' என்கிறார் (சங்.119:164). தாவீது இளைஞனாயிருந்த காலந்தொடங்கி கர்த்தரை நன்றியுள்ள இருதயத்தோடு துதித்திருக்கிறார். அவருடைய துதியின் பாடலை அதிகமாக சங்கீதத்தில் காண்கிறோம். தாவீதுடைய வெற்றிக்கு அவருடைய துதியும் ஒரு காரணம் என்றால் அது மிகையாகாது. கர்த்தர் அவருடைய வாழ்க்கையில் செய்த நீதி நியாயங்களினிமித்தம் ஒருநாளில் ஏழுதரம் கர்த்தரை துதித்துப் பாடியிருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவோ காரியங்களை கர்த்தர் செய்கிறார். தேவைப்படும் நேரத்தில் கர்த்தரை தேடுகிறோம். நம்முடைய காரியங்கள் ஜெயபலமாக முடிந்தவுடன் கர்த்தரை அநேக வேளைகளில் மறந்துவிடுகிறோம். கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நாம் எண்ணிப்பார்ப்போமானால் நாமும் கர்த்தரை ஒருநாளில் ஏழுதரம் துதிப்போம்.

''உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்''என்கிறார் யாக்கோபு (யாக்.5:13). இங்கு யாக்கோபு இரண்டு விதமான ஆயுதத்தை நமக்கு நினைவூட்டுகிறார். துன்பப்பட்டவுடன் நண்பர்களை நாடுகிறோம். நம்முடைய துன்பத்தை சொல்லி இருதயபாரத்தை குறைக்க முற்படுகிறோம். ஆனால் குறைகிறதா அதிகரிக்கத்தான் செய்கிறது. என்ன காரணம்? சொல்ல வேண்டிய இடத்தில் சொல்லத்தவறிவிடுவதே. யாக்கோபு சொல்வதைப்போல துன்பத்தில் ஜெபிக்கவும், மகிழ்ச்சியான வேளைகளில் கர்த்தரை துதிக்கவும் ஆரம்பியுங்கள். மகத்தான வெற்றியை உங்கள் வாழ்க்கையில் காண்பீர்கள். இந்த இரண்டையும் தாவீது தன்னுடைய வாழ்க்கையில் கடைபிடித்தார்.

ஞானத்தின் விஷயத்தில் நாம் சாலொமோனை நோக்கிப்பார்க்கும்போது; ''கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்'' என்கிறான் (நீதி.1:7). சாலொமோனுடைய ராஜ்யபாரம் நிலைத்திருந்ததற்கு ஒரு காரணம் அவன் தாவீதின் தேவனை தேட ஆரம்பித்தான். ஆனபடியினால் சாலொமோனின் ராஜ்யபாரத்தை கர்த்தர் ஸ்திரப்படுத்தினார். அவன் கேட்ட ஞானத்தையும், அவன் கேட்காத செல்வத்தையும் அவனுக்கு வாரிவழங்கினார். அவனுடைய காலத்தில் எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டது. அவனுக்கு ஒத்த ஞானவான் அவனுக்கு முன்பும் அவனுக்குப் பின்பும் எழும்பினதில்லை. அவன் சொல்கிறான் கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம். நீங்கள் கர்த்தருக்குப் பயப்படுகிறீர்களா? அப்படி பயப்படும்போது ஞானத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்.

ஒரு காரியத்தை செம்மையாய் செய்வதற்கு ஞானமே பிரதானம். ''இருப்பு ஆயுதம் மழுங்கலாயிருக்க, அதை ஒருவன் தீட்டாமற்போனால், அதிகபலத்தைப் பிரயோகம்பண்ணவேண்டியதாகும்; ஆகையால் ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம்'' (பிர.10:10). ஆகையால் சாலொமோனைப்போல ஞானத்தின் விஷயத்தில் தம்மை நோக்கி வேண்டிக்கொள்கிற யாவருக்கும் சம்பூர்ணமான ஆசீர்வாதங்களைக் கொடுக்கும் பிதாவாகிய தேவனை நோக்கி ஆண்டவர் இயேசுவின் மூலம் வேண்டிக்கொள்ளுங்கள். அப்பொழுது விசேஷித்த ஞானத்தை உங்களுக்குக் கட்டளையிடுவார்.

ஜெபத்தின் விஷயத்தில் நாம் தானியேலை நோக்கிப் பார்க்கும்போது; ''தானியேலோவென்றால், அந்தப் பத்திரத்துக்குக் கையெழுத்து வைக்கப்பட்டதென்று அறிந்தபோதிலும், தன் வீட்டுக்குள்ளேபோய், தன் மேல் அறையிலே எருசலேமுக்கு நேராக பலகணிகள் திறந்திருக்க, அங்கே தான் முன் செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் தன் தேவனுக்கு முன்பாக முழங்காற்படியிட்டு ஜெபம்பண்ணி, ஸ்தோத்திரம் செலுத்தினான்'' (தானி.6:10). மாபெரும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தபோதும், அதைக்குறித்து பயப்படாமல் தான் முன்செய்துவந்தபடியே, தினம் மூன்று வேளையும் ஜெபித்தான். இதை பார்த்த எதிராளிகள் ராஜாவுக்கு தெரியப்படுத்தினர்.

ராஜாவின் அனுமதியின் பேரில் தானியேலை சிங்கங்களின் கெபியிலே போட்டார்கள். தான் இடைவிடாது ஆராதிக்கிற கர்த்தர் தானியேலை சிங்கங்களின் வாய்களுக்கு தப்புவித்தார். ஜெபம் பண்ண நேரம் இல்லை என்று லேசாக சொல்லிவிடுகிறோம். தானியேலுக்கு நேரம் இருந்ததா? இக்கட்டான சூழ்நிலையில் தன் தேவனை நோக்கி ஜெபிக்க அவன் தயங்கவில்லை. அன்பான சகோதரனே, சகோதரியே உன் தேவனை நோக்கி ஜெபிக்க மறக்காதே. அவர் உன் வேண்டுதலை கேட்பார். நம்பிக்கையோடிரு. ''இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்'' என்ற பவுல் ஆலோசனைப்படி ஜெபியுங்கள். அப்பொழுது, கர்த்தர் உங்களையும் விடுவிப்பார்.

வேத விஷயத்தில் நாம் எஸ்றாவை நோக்கிப்பார்க்கும்போது; ''கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்'' (எஸ்.7:10). இருதயம் பக்குவப்பட்டாலே எல்லாம் சரியாகும். ஆகையால் தான் முழுஇருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுமனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை என்று ஆண்டவர் சொல்லுகிறார். வேதமே தன் உயிர் மூச்சாக கொண்டவன் இந்த எஸ்றா.

அவன் கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான். இன்றைக்கு தேர்ச்சியடைகிறார்கள், கல்வியில், அழகில், சண்டையில், பணத்தில். ஆனால் தேர்ச்சியடைய வேண்டியதில் தேர்ச்சியடையாமற்போகிறார்கள். மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்ற வசனத்தை அறிந்தபடியினாலே எஸ்றா பிரமாணத்தில் தேறின வேத பாரகனாயிருந்தான். உங்களுடைய வாழ்க்கையில் வேதாகமத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா? அப்படியானால் அதை பைண்டிங்செய்து தூய்மையாக வைத்திருப்பதல்ல. அதில் உள்ள தேவனுடைய வார்த்தைகளை அநுதினமும் தியானித்து. அவைகளை தன்னுடைய வாழ்க்கையில் கைக்கொள்ளவேண்டும். எஸ்றா வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், அதை ஜனங்களுக்கு உபதேசிக்கவும் தவறவில்லை.

முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த பெரோயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தார்கள் என்று அப்.17:11-ல் வாசிக்கிறோம். நீங்களும் அந்தப்படியாக வாசித்து, எஸ்றாவைப்போல வேத விஷயத்தில் இருதயத்தை பக்குவப் படுத்திக்கொள்ளுங்கள்.

கேள்வி நேரம்

மொத்தத்தில் நாம் நோக்கிப்பார்க்கவேண்டிய ஒருவர் இருக்கிறார். அவர் யார்?

உலகத்தில் உள்ள எல்லோருக்கும் மாதிரியாக கொடுக்கப்பட்டவர் இயேசு ஒருவரே. அவரை நோக்கிப்பார்த்து நாம் பிரகாசம் அடைவோம். ''இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்'' என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.2:21). பழைய ஏற்பாட்டு புஸ்தகத்தில் சொல்லப்பட்ட ஆறு மாதிரிகளை நோக்கிப்பார்த்தோம். இவர்கள் எல்லோருமே நமக்கு உபாத்திகள்தான்.

ஆனால் ஆண்டவர் இயேசு எல்லோருக்கும் மேலானவர். நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்துபோம் என்ற வார்த்தைப்படி நிறைவானவராகிய இயேசு நமக்கு கொடுக்கப்பட்டுள்ளார். ஆகையால்தான் இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச்

செவிகொடுங்கள் என்று வானத்திலிருந்து பிதாவாகிய தேவனாலே கட்டளை பிறப்பிக்கப்பட்டது. இன்றே இயேசுவை நோக்கிப்பாருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

37. அழைக்கப்பட்டவர்கள் அநேகர்
For Many Are Called

இந்நாளில் இச்செய்தி மூலமாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு காரியங்களுக்காக அழைக்கப்படுகிறோம். திருமணம், பிறந்தநாள், இதுபோன்ற அநேக அழைப்புக்கள் நமக்கு வருகிறது. அழைக்கப்பட்டவர்களுடைய அழைப்பை ஏற்று அங்குசென்று சந்தோஷமாக அவர்களுடன் இருக்கிறோம். இதைப்போன்ற ஒரு அழைப்பைக்குறித்து நமது ஆண்டவர் இயேசு உவமையாக சொல்லுகிறதை நாம் மத்தேயு 22:1-14-ங்கு வசனங்களில் வாசிக்கிறோம்.

''பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்திற்கு வரச்சொல்லும்படி அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான்; அவர்களோ வர மனதில்லாதிருந்தார்கள். அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப் பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான். அழைக்கப்பட்டவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலைசெய்தார்கள். ராஜா அதைக் கேள்விப்பட்டு, கோபமடைந்து, தன் சேனைகளை அனுப்பி, அந்தக் கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரித்தான்'' என்றார் (மத்.22:3-7).

இந்த உவமையில் அழைக்கப்பட்டவர்கள் ராஜாவின் அழைப்பை அசட்டை பண்ணினதை காண்கிறோம். ராஜா என்றால் அத்தேசத்து குடிமக்கள் அவனுடைய ராஜ்யபாரத்தின் கீழ் இருந்திருப்பார்கள். ராஜ்யபாரம் முழுமையும் அவனுடைய ஆட்சிக்கு கட்டுப்பட்டதாக இருந்திருக்கும். அவனை எல்லோரும் மதித்து இருப்பார்கள். குறிப்பாக ராஜா அவனுக்கு மிகவும் நெருக்கமானவர்களுக்கே முதலாவது இந்த அழைப்பைக்கொடுத்திருப்பான் அல்லவா! ஆனால் அவர்களோ, வர மனதில்லாதிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். இன்றும் கூட நம்முடைய தேவனாகிய கர்த்தர் மாபெரும்

அழைப்பை நம்மெல்லோருக்கும் கொடுத்திருக்கிறார். இந்த அழைப்பை முதலாவது தம் சொந்த ஜனமாகிய இஸ்ரவேலர் புறம்பாக்கினார்கள். அநேக தீர்க்கதரிசிகளைக்கொண்டு அழைத்தார்.

அவர்களோ அதை அந்நிய காரியமாக நினைத்தனர். அந்த உவமையில் சொல்லப்பட்டபடி வேறு ஊழிக்காரரை அனுப்பி நீங்கள் போய், இதோ, என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று மீண்டும் அழைப்பு விடுத்தார். அவர்களோ அதை அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்கள் அவன் ஊழிக்காரரைப் பிடித்து, அவமானப்படுத்தி, கொலைசெய்தார்கள். தேவன் அனுப்பின அநேக தீர்க்கதரிசிகளை இவ்விதமாகவே அவர்கள் செய்தார்கள். அவர்களுக்கோ தேவனுடைய உன்னத அழைப்பை ஏற்றுக்கொள்ள மனதில்லாது, அதை அசட்டைபண்ணி, தங்களுடைய சொந்த வேலைகளுக்கு முதலிடம் கொடுத்து தேவனுடைய அழைப்பை அசட்டை பண்ணினார்கள்.

இன்றைக்கும் தேவனுடைய அழைப்பை உதாசினப்படுத்துகிற அநேகரை நாம் காண்கிறோம். தேவன் ஒவ்வொருவரையும் தம்முடைய பரிசுத்த ஸ்தலத்திற்கு அழைத்திருக்கிறார். பவுல் இது குறித்துசொல்லும்போது; ''தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்'' என்றார் (1தெச.4:7). இந்த அழைப்பு ஒரு உன்னத அழைப்பு என்றே சொல்லவேண்டும். இந்த அழைப்பை அறிந்த ஒருவன் அல்லது அழைப்புக்குப் பாத்திரவான் அதை அசட்டை பண்ணுவானேயானால் அவனுடைய வாழ்வு என்னவாகும்? உவமையிலே நாம் வாசிக்கிறபடி தன் சேனையை அனுப்பி, அந்த கொலைபாதகரை அழித்து, அவர்கள் பட்டணத்தையும் சுட்டெரிப்பார் என காண்கிறோம். மேலும் அழைக்கப்பட்டவர்கள் அபாத்திரராய் போனபடியால் அந்த ராஜா என்ன செய்தான்? தன் ஊழியக்காரரை நோக்கி: ''நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான்.

அந்த ஊழியக்காரர் புறப்பட்டு, வழிகளிலே போய், தாங்கள் கண்ட நல்லார் பொல்லார் யாவரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள்; கலியாணசாலை விருந்தாளிகளால் நிறைந்தது. விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, **கலியாண வஸ்திரம்** தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு: சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது, ராஜா பணிவிடைக்காரரை நோக்கி: இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்'' (மத்.22:9-13).

மேலும், தாம் நேசித்த ஜனங்கள் அவருடைய அழைப்பை உதாசினப்படுத்தினபடியால் யாவருக்கும் அழைப்பை விடுத்தார். இந்த அழைப்பு உங்களுக்கும் எனக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மறக்கவேண்டாம். நீங்கள் இந்த வருடத்தில் **அழைப்பின் வஸ்திரம்** தரித்தவர்களாக இருக்கிறீர்களா? பவுல் அநேக நிருபங்களில் எழுதும்போது ''...பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது'' என எழுதுகிறார் (ரோ.1:2). தேவன் பரிசுத்தத்திற்கு அழைத்திருக்கிறார். தம்முடைய குமாரன் மூலமாக நம்மை பரிசுத்தப்படுத்துகிறார். ஆக, தேவனுடைய அழைப்பு பரிசுத்த அழைப்பு. ஆகையால் ஒவ்வொருவரும் பரிசுத்த வஸ்திரம் தரித்தவர்களாக இருக்க வேண்டும்.

பரிசுத்த வஸ்திரம் என்று சொல்லும்போது வெண்மையான ஆடைகளை மட்டும் போட்டுவிட்டால் போதாது. உள்ளம் தூய்மையாக இருக்க அவருடைய வசனத்தினால் நாம் கழுவப்பட்டவர்களாகவும், கிறிஸ்து இயேசுவை நம்முடைய சரீரத்தில் தரித்தவர்களாகவும் காணப்பட வேண்டும். வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது ''நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களை என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும்'' என்று எழுதுகிறார். ஆதாமுடைய நிர்வாணத்தை மறைக்க தோல் உடைகளை உண்டாக்கிக் கொடுத்ததுபோல, பாவத்திலிருந்து மீட்கப்பட்டவர்கள் உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களை கொடுக்கிறார். இவ்வஸ்திரத்தைப் பெற்றுக்கொண்டு கர்த்தருக்குள் வளருங்கள்.

மேலும், புதிதாக அழைக்கப்பட்ட விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு, சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அல்லவா? அதற்கு அவன் என்ன மறு உத்தரவு கொடுத்தான். குற்றம் செய்கிறவர்கள் பேசாமலிருப்பதுபோல அவன் பேசாதிருந்தான். ஒருவேளை அவர் நம்மை மன்னித்துவிடுவார் என்று அவன் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அங்கே அவ்விதமாக நடக்கவில்லை. ராஜா பணிவிடைக்காரரை நோக்கி; இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற புறம்பான இருளிலே போடுங்கள் என்றான்.

ஆம், அன்பானவர்களே, அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்திரவான்களாக இல்லாத வேளையில் இவனுக்கு வந்த அதே தண்டனை தான் அழைப்பை உதாசினப்படுத்துகிறவர்களுக்கும் கிடைக்கும். கர்த்தர் நம்மை மன்னிப்பார் என்று சோம்பலாக இருந்துவிடாதீர்கள். அநேகருடைய

எண்ணம் இதுவாகத்தானிருக்கிறது. அப்பொழுது பார்த்துக்கொள்வோம் என்று மெத்தனமாக இருந்து விடுகின்றனர். ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்து இனி நியாயாதிபதியாக வரப்போகிறார்.

ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே உங்களுடைய அழைப்பை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். ''தேவன் அவனவனுக்குப் பகிர்ந்ததெப்படியோ, கர்த்தர் அவனவனை அழைத்ததெப்படியோ, அப்படியே அவனவன் நடக்கக்கடவன். எல்லாச் சபைகளிலேயும் இப்படியே திட்டம் பண்ணுகிறேன்'' என்றார் பவுல் (1கொரி.7:17). சிலர் தாங்கள் வந்த சூழ்நிலையை மறந்துவிடுகின்றனர். மோசே தன் மாமன் எத்திரோவின் ஆடுகளை மேய்த்து வருகின்ற நாட்களில் அழைக்கப்பட்டான். அவனை கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்காக அழைத்து ஆறு லட்சம் ஜனங்களுக்கு மேற்பட்டவர்களை அவனைக் கொண்டு வழிநடத்தினார். மந்தை மேய்த்துக் கொண்டும், காட்டத்திப் பழங்களைப் பொறுக்கிக் கொண்டும் வந்த ஆமோஸை அழைத்து என் ஜனமாகிய இஸ்ரவேலுக்கு விரோதமாகத் தீர்க்கதரிசனம் சொல்லு என்றார்.

இவர்கள் தாங்கள் அழைக்கப்பட்ட சூழ்நிலையை மறந்துவிட வில்லை. அதை நினைத்து எழுதியும் வைத்துள்ளனர். ஆக, ஒவ்வொருவனும் தான் அழைக்கப்பட்ட அழைப்பை நினைத்துப்பார்க்க வேண்டும். கர்த்தர் எல்லோரையும் பரிசுத்தத்திற்கு அதாவது நிலையான ராஜ்யத்திற்கு அழைத்திருக்கிறார். எல்லோரும் தீர்க்கதரிசிகள் அல்ல, எல்லோரும் அப்போஸ்தலர்கள் அல்ல அவனவனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட வரத்தின்படி நடக்கக்கடவன் என்ற வசனத்தின்படி அழைக்கப்பட்ட அழைப்பில் உறுதியாக இருந்துசெயல்படவேண்டும்.

''சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்'' (கலா.5:13). கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட ஒருவன் சுயதீனனாயிருக்கிறான். அவன் மாம்சமானவனுக்கு அடிமையானவன் அல்ல. மாம்சமானவன் அப்படிப்பட்டவனை அடிமைகொள்ளக் கூடாது. ஆனால் அநேகர் அப்படிப்பட்டவர்களை அடிமைகொள்ளுகிறார்கள்.

அது கர்த்தருக்கு விரோதமான காரியம். எப்படியென்றால், பாவத்திலிருந்து மீட்கப்பட்டவன் கர்த்தருக்கு அடிமையாயிருக்கிறான். உலகத்தில் சுயாதீனனாயிருக்கிறான். ஆகையால் அவன் அன்பிற்கு கட்டுப்பட்டவனாகையால் அன்பினாலே ஊழியம்செய்யுங்கள் என்று பவுல்

இங்கு குறிப்பிடுகிறார். அன்பு இருக்கும் இடத்தில் அடிமையில்லை. அங்கு சுயாதீனம் நிலைத்திருக்கும். பிரியமானவர்களே, நீங்கள் கர்த்தரால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள். கர்த்தருக்குப் பயந்து அவருக்கு ஊழியஞ்செய்யுங்கள். நீங்கள் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருங்கள்.

கேள்வி நேரம்

தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் சிலர் மட்டுமா?

ஆம், ''அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர்'' (மத்.22:14). For many are called, but few are chosen. என காண்கிறோம். நீங்கள் தேவனால் அழைக்கப்பட்டவர்களில் ஒருவராக இருக்கலாம். அதேவேளையில் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப் பட்டவர்களில் ஒருவராக இருக்கவேண்டுமென்பதுவே எங்களது ஜெபமாகும். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவார்கள். இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர் என்பதை மறந்து போகாதிருங்கள். உலக அழைப்பு உலகத்தோடு முடிந்துவிடும். ஆனால் உன்னதமானவருடைய அழைப்பு நம்மை உன்னதத்திற்கு கொண்டுசெல்லும். இந்த அழைப்பை விட்டுவிடாதிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

38. சொல்லிமுடியாத ஈவு
Unspeakable Gift

அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது; ''தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்'' என்று எழுதுகிறார் (2கொரி.9:15). தேவன் நமக்கு செய்தவைகளை எண்ணிப் பார்ப்போமானால், எவ்வளவாய் நமக்கு நன்மை செய்திருக்கிறார்! அதை நினைத்து பவுல் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். தேவன் உங்களுக்கு செய்தவைகளை நீங்கள் எண்ணிப்பார்த்ததுண்டா? அநேக ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக்கொள்கிறோம். ஆனால் அவைகளுக்கு நன்றி சொல்ல மறந்து விடுகிறோம். தேவன் எனக்கு என்ன செய்தார்? என்று சொல்லுவீர்களானால், வேதாகமத்திற்கு உங்களுடைய கவனத்தை திருப்பிக்கொள்ளுங்கள்.

''கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு'' என வாசிக்கிறோம் (எபே.2:8). பாவத்தில் கிடந்த நம்மை அவருடைய மிகுந்த கிருபையினாலே

நம்முடைய விசுவாசத்தைக்கொண்டு இரட்சித்தார். நம்முடைய நற்கிரியைகளினாலே நாம் இரட்சிக்கப்படவில்லை. பிதாவாகிய தேவன் நம்மீது இரக்கங்கொண்டு, தம்முடைய குமாரனை ஜீவபலியாக நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுத்து, அவருடைய இரத்தத்தினாலே நம்மை மீட்டுக்கொண்டார்.

புதை மணலில் சிக்குண்ட ஒரு மனிதனை, அவனுடைய அபயக் குரல் கேட்டு, அவனை ஒருவர் மீட்டெடுத்தார் என்றால் அவரை அவன் மறந்து விடுவானா? தான் உயிரோடு இருப்பதே அவரால் தான் என்று மற்றவர்களிடம் சொல்லுவான் அல்லவா? எவ்வளவாய் அந்த மனிதனுக்கு அவன் நன்றியுள்ளவனாயிருப்பான் என்பதை எண்ணிப்பாருங்கள். அப்படியிருக்க நம்மை பாவத்திலிருந்து மீட்டு இரட்சித்த நம் தேவனுக்கு எவ்வளவாய் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்? இதையெல்லாம் எண்ணிப்பார்த்த அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய சொல்லிமுடியாத ஈவுக்காக ஸ்தோத்திரம் செலுத்தினார். நீங்களும் தேவன் உங்களுக்கு செய்த காரியங்களை எண்ணிப்பார்த்து ஸ்தோத்திரம் செலுத்துங்கள்.

''உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அனுப்பினார்'' (யோவா.3:17). இதை அறியாத ஜனங்கள் அவரைப்பிடித்து சிலுவையில் அறைந்து கொன்றனர். தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என மேலுள்ள வசனத்தில் வாசிக்கிறோம். ''அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை'' என யோவான் குறிப்பிடுகிறார் (யோவா.1:10,11). மேலும், ''நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்'' என்கிறார் பவுல் (எபே.1:3).

ஒரு கிறிஸ்தவன் அநுதினமும் அவரால் ஆசீர்வதிக்கப்படுகிறான். சிலர் இதை மறுப்பர். நான் பல வருடங்களாக கிறிஸ்தவனாக இருக்கிறேன் இன்னும் எனக்கு பல பாடுகளும், பிரச்சனைகளும் ஓய்ந்தபாடில்லை என்று சொல்லுவார்கள். பாடுகளும் பிரச்சனைகளும் இல்லாத வாழ்க்கை கிறிஸ்தவ வாழ்க்கையில்லை என்றே சொல்லுவேன். ஏனென்றால் ''அவரோடேகூடப்

பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்'' என 2தீமோத்தேயு 2:12-ல் காண்கிறோம். மேலும் ''ஒருவன் என்னைப் பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' என்றார் (மத்.16:24). பாடுகள் என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கொடுக்கப்பட்ட ஒன்று. ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்பது கிறிஸ்துவுக்குள் வருகிறவர்களுக்கு மட்டும் கிடைக்கும் ஆசீர்வாதம். கிறிஸ்தவர்கள் எல்லோரும் கிறிஸ்தவர்களா? இல்லையே ''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' என்ற 2கொரி.5:17-ன் படி அவருக்குள் இருக்கிறவர்களே புதிதானவர்கள்.

அப்படியானால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள். இவர்களுக்கு சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களும் கிடைக்கின்றன. இவர்கள் நித்திய ஜீவனுக்காக நியமிக்கப்பட்டவர்கள். உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைகின்றனர். இவர்களே இரட்சிக்கப்பட்டவர்கள். இவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவருகிறார் (அப்.2:47).

தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் என்று பவுல் சொல்வதற்கு பல காரணங்கள் உண்டு. அவைகளில் சில. ''சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கை யாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்'' என்று சொல்கிறார் (2கொரி.1:8-10).

அவர்களுடைய நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதான சோதனை வந்தது, ஆனால் அந்த சோதனையில் வெற்றி கொண்டார்கள். எப்படி? மரித்தோரை எழுப்புகிற தேவனின் மீது தங்களுடைய விசுவாசத்தை வைத்தார்கள் என காண்கிறோம். இன்றைக்கு அநேகர் கிறிஸ்தவ ஜீவியத்தில் வீழ்ந்துபோவதற்குக் காரணம் என்ன? தன்னுடைய சுயபெலத்தின் மீது நம்பிக்கை வைத்து அல்லது மனிதன் மீது தன் நம்பிக்கையை வைத்து கடைசியில் அவன் என்னை கைவிட்டான். நான் அவனை முழுவதும்

நம்பியிருந்தேன் எனக்கு நம்பிக்கை துரோகம் செய்துவிட்டான் என்று புலம்புவார்கள். ''மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' மேலும் ''கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரையே தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்'' என எரேமியா தீர்க்கதரிசன புத்தகத்தில் வாசிக்கிறோம் (எரே.17:5-7). உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டது? பவுலைப்போல மரித்தோரை உயிரோடு எழுப்பும் தேவன்மீது உங்களுடைய நம்பிக்கையை வையுங்கள்.

பவுலை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்த கர்த்தர் அவனை கைவிடவில்லை. அவ்வப்போது தேற்றிக்கொண்டே வந்தார். ஒரு முறை பவுல் கொரிந்து பட்டணத்தில் இருக்கையில் ''இராத்திரியிலே கர்த்தர் பவுலுக்குத் தரிசனமாகி: நீ பயப்படாமல் பேசு, மவுனமாயிராதே; நான் உன்னுடனேகூட இருக்கிறேன், உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன்மேல் கைபோடுவதில்லை, இந்தப் பட்டணத்தில் எனக்கு அநேக ஜனங்கள் உண்டு என்றார். அவன் ஒரு வருஷமும் ஆறு மாதமும் அங்கே தங்கி, தேவவசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசம்பண்ணிக்கொண்டுவந்தான்'' (அப்.18:9-11). இவ்விதமாக அப்போஸ்தலனாகிய பவுலை கர்த்தர் அவருடைய ஊழியத்தில் அற்புதவிதமாக பயன்படுத்திவந்தார்.

துரோவா பட்டணத்தில் கூடிவருகிற சபையில் பவுல் நெடுநேரம் பிரசங்கம் பண்ணிக்கொண்டிருக்கையில், மிகுந்த தூக்கமடைந்து, நித்திரைமயக்கத்தினால் ஐத்திகு என்ற வாலிபன் மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து, மரித்தவனாய் எடுக்கப்பட்டான். உடனே பவுல் இறங்கிப்போய், அவன்மேல் விழுந்து, அவனை அணைத்துக்கொண்டு; கலங்காதிருங்கள், இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். அந்த வாலிபனை அவர்கள் உயிருள்ளவனாகக் கூட்டிக்கொண்டுவந்து, மிகுந்த ஆறுதலடைந்தார்கள். இப்படியாக அப்போஸ்தலனாகிய பவுலுடைய ஊழியத்தில் தேவன் அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்.

ஆனபடியினாலே பவுல், தேவன் அருளிய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம் என்று எழுதுகிறார். பவுலுக்கு மாத்திரமல்ல அவனோடு இருந்தவர்களில் எப்பாப்பிராவுக்கும் தேவன் இரங்கினார். அவனைப் பற்றி பிலிப்பிய சபையாருக்கு எழுதிய நிருபத்தில் ''அவன் வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தது மெய்தான், ஆகிலும், தேவன் அவனுக்கு இரங்கினார்; அவனுக்கு இரங்கினதுமல்லாமல், துக்கத்தின்மேல்

துக்கம் எனக்கு உண்டாகாதபடிக்கு, எனக்கும் இரங்கினார்'' என எழுதுகிறார் (பிலி.2:27). இவைகளையெல்லாம் பவுல் எண்ணிப்பார்க்கத் தவறவில்லை. பவுலுக்கும் சரீரத்தில் போராட்டம் இருந்தது, பிரச்சனைகள் இருந்தது. இதற்காக மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டார் அதற்கு அவருக்கு கிடைத்த பதில் '' என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார்'' (2கொரி.12:9).

இச்செய்தியை வாசிக்கின்ற அன்பான வாசகரே, கிறிஸ்தவ சகோதரனே, சகோதரியே, தேவனுடைய ஜனங்களே உங்களுடைய வாழ்க்கையில் தேவனாகிய கர்த்தர் எவ்வளவோ பெரிய காரியங்களை செய்திருக்கிறார். அவைகளை சொல்லால் சொல்லிவிடமுடியாது அத்துனை காரியங்களையும் நம்முடைய கர்த்தர் செய்திருக்கிறார். உங்களால் இவைகளை மறக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் கர்த்தர் அற்புதமான காரியங்களை செய்திருக்கிறார், செய்துகொண்டும் வருகிறார். நாம் இம்மட்டும் இருப்பதே அவருடைய சுத்த கிருபை என்றே சொல்லவேண்டும். நான் இன்னும் அவரை அறியவில்லையே பின்பு எப்படி எனக்கு தேவன் நலமாக காரியங்களை செய்திருக்க முடியும் என்பீர்களாகில், சற்று கவனியுங்கள்.

உங்களை தேவனாகிய கர்த்தர் உண்டாக்கினார். சரீரத்தில் ஒரு பகுதி செயல் இழந்து விட்டால், மனிதன் அநேக வைத்தியர்களை நாடிய பின் முடிவில் தன்னை உண்டாக்கின தேவனை தேட ஆரம்பிக்கின்றான். நீங்கள் ஆரோக்கியமாக இருக்கும்போதும் அவரை நினைக்க வேண்டும். ஏனென்றால் அவர் உங்களை உண்டாக்கினார். இன்று இருப்பதே அவருடைய கிருபையால் இருக்கின்றோம். நாளைக்கு நடப்பது நமக்குத் தெரியாது. ஒரு நாள் பிறப்பதை அறியாயே என வேதம் நமக்குப் போதிக்கிறது. இம்மட்டும் நம்மை சுகத்தோடும் பெலத்தோடும் வைத்த தேவனுக்கு நாம் நன்றி சொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம்.

கேள்வி நேரம்

நாம் இரட்சிக்கப்படுவது தேவனுடைய ஈவா?

ஆம், நம்மில் ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், ''கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு'' என்கிறார் அப்போஸ்தனாகிய பவுல் (எபேசி.2:8). நாம் நம்முடைய பாவத்தை கழுவமுடியாது. நாம் நீதிமான்கள் அல்ல. எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகவே

இருக்கிறோம். தேவனுடைய இரக்கத்தைக் கொண்டும் நம்முடைய விசுவாசத்தைக் கொண்டும் நாம் இரட்சிக்கப்படுகிறோம். இப்படி தேவன் செய்கின்ற சொல்லிமுடியாத ஈவுகளை நினைத்து அவருக்கு ஸ்தோத்திரங்களை ஏறெடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

39. தேவ மனிதன்
The Man of God

தேவனுடைய மனுஷன் எப்படிப்பட்டவனாயிருக்க வேண்டுமென வேதாகமம் போதிக்கிறது? இந்த உலகத்தில் உள்ள எல்லா ஜீவராசிகளும் தேவனால் படைக்கப்பட்டவைகளே. குறிப்பாக மனிதன் தேவனுடைய சாயலாக படைக்கப்பட்டான். ஆனால் மனிதன் நாளடைவில் தேவ சாயலை இழந்தான். மீண்டும் தேவசாயலைப் பெற்றுக்கொள்ளும் மனிதனே தேவ மனிதன். அவன் எப்படிப்பட்டவனாயிருக்க வேண்டும் என்பதுவே இச்செய்தியின் நோக்கமாகும்.

பரிசுத்த வேதாகமம் இப்படியாக போதிக்கிறது; ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'' (பிலிப்பியர்2:5). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தேவனால் இப்பூமிக்கு அனுப்பப்பட்டவர். அவர் மனிதனுடைய பாவத்தை போக்க மனுஷகுமாரனாக வந்தார். அவருடைய சிந்தை தேவனுடைய சித்தம் செய்வதே. அவர் சொல்லும்போது; ''என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடைய தாயிருக்கிறது. அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்'' என்றார் (யோவான்7:16,17).

அவருடைய உபதேசம், அவருடைய செயல்பாடுகள் எல்லாமே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதாகவும், தேவ மனுஷனுக்கு மாதிரியாகவும் இருந்தது. மேலும், சொல்லப்போனால் அது அவருடைய போஜனமாகவும் இருந்தது. ''அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்'' என அப்போஸ்தலர் 10:38-ல் வாசிக்கிறோம். இன்று இருக்கிற தேவனுடைய மனுஷன் அவரைப்போல நன்மைசெய்யவும், பிசாசினால் பிடிபட்டுள்ள ஜனங்களை காப்பாற்றுகிறவனாகவும் இருக்க வேண்டும். இதுவே கிறிஸ்துஇயேசுவிலிருந்த சிந்தையாகும். அவர் உலகமெங்கும் சென்று இடம் வாங்கவும், பல கல்லூரிகளைக் கட்டவும், உலகராஜ்யங்களை ஏற்படுத்தவும் இங்கு வரவில்லை பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தம் செய்கிறவராக

எங்கும் சுற்றித்திரிந்தார். இன்றைக்கு இருக்கும் ஒவ்வொரு தேவனுடைய மனுஷனுக்குள்ளும் இப்படிப்பட்ட சிந்தை காணப்படுகிறதா?

அப்படியானால் தேவனுடைய மனுஷன் கல்லூரிகளை நிறுவக்கூடாதா? இடங்களை வாங்கக்கூடாதா? என்று நீங்கள் நினைக்கலாம். ஒவ்வொருவருக்கும் தேவன் தனித்தனியே பல விதமான தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். அவரவர் தாம் பெற்றுக்கொண்ட தாலந்துகளை பயன்படுத்தவேண்டும். கல்லூரி பக்கம் தன் கவனத்தை செலுத்தும் நபர் ஆண்டவர் நன்மை செய்கிறவராய் எங்கும் சுற்றித்திரிந்தார் என்ற வசனத்தை மறக்காதவராயிருக்கவேண்டும். தொண்டு நிறுவனத்திலிருந்து வருகிறவர் களுக்கு ஏதோ ஒரு காணிக்கையை கொடுத்து விட்டு என்னுடைய கடமை தீர்ந்துவிட்டது என்று ஒருவர் எண்ணுவாரேயானால் அல்லது வருடத்திற்கு ஒருமுறை இல்லாதவர்களுடைய தேவையை சந்திப்பாரேயானால் அவர் தேவனுடைய சித்தத்தை முழுமையாக செய்கிறவர் என்று பொருள்படாது. தன்னுடைய அநுதின ஜீவியத்தில் பார்க்கிறவர்களுக்கு முன்பாக தன்னை ஒழிக்காது இயேசுவைப்போல நன்மைசெய்யக்கூடிய சிந்தை அவருக்குள் இருக்கவேண்டும்.

தேவனால் உண்டாக்கப்பட்ட எல்லாம் நல்லவைகளாகவே இருக்கிறது. ''தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார், அது மிகவும் நன்றாயிருந்தது; சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று'' (ஆதி.1:31). தேவனுடைய சிருஷ்டிப்பில் மோசமானவைகள் ஒன்றுமில்லை ஏனெனில் எல்லாம் நல்லது என்று தேவன் கண்டார். எல்லா கழிவுகளும் கலக்கும் கடல் நீரில் இருந்துதான் சுவை மிக்க உப்பு கிடைக்கிறது. அந்த உப்பை ஒருவரும் வேண்டாம் என்று விலக்குவதில்லையே. அன்பானவர்களே, தம்மிடத்தில் வருவோரை ஆண்டவர் இயேசு புறம்பாக்க வில்லை. நாம் தேவனால் உண்டாக்கப்பட்டவர்களானால் தேவனுடைய ஜனங்களை நேசித்து. அவர்களுடைய குறைபாடுகளை விசாரித்து, நலமான காரியங்களை செய்யமுன்வரவேண்டும்.

தேவனுடைய மனுஷன் பொய்யைத் தவிர்க்கவேண்டும். பொய் பேசுவது இன்றைய காலகட்டத்தில் அது தவிர்க்க முடியாத ஒன்றாகி விட்டது. பொய் சொன்னால்தான் வாழமுடியும் என்ற முடிவுக்கு வந்து விட்டார்கள். ஒரு தேவனுடைய மனுஷன் மற்றமனிதர்களைப்போல பொய் சொல்லும்போது அது எவ்வளவு பெரிய ஆபத்தை ஏற்படுத்துகிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப்பார்ப்போம். பெத்தேலுக்கு தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசியைக் குறித்து 1இரா.13-ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். அவனுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை என்னவென்றால், நீ அப்பம் புசியாமலும்,

தண்ணீர் குடியாமலும், போனவழியாய்த் திரும்பாமலும் இருவென்று கர்த்தர் சொல்லியிருந்தார். அவனோ கிழவனான தீர்க்கதரிசியின் பொய்யை நம்பி மாண்டுபோனான். இந்த கிழவனான தீர்க்கதரிசி அப்படி என்ன சொன்னான் என்று நீங்கள் கேட்கலாம். பெத்தேலுக்கு வந்த தீர்க்கதரிசியை நோக்கி: உம்மைப்போல நானும் தீர்க்கதரிசிதான், அவன் அப்பம் புசித்துத் தண்ணீர் குடிக்க, நீ அவனைத் திருப்பி, உன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவா என்று ஒரு தூதன் கர்த்தருடைய வார்த்தையாக என்னோடே சொன்னான் என்று அவனிடத்தில் பொய் சொன்னான். இவன் அந்த பொய்யை நம்பியிருக்கக்கூடாது. ஏனெனில் தேவன் ஒரு முறை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம் முறை பார்த்து திருத்துகிறவரல்லவே என்று வாசிக்கிறோம். இதை அறிந்திருந்தும் பெத்தேலுக்கு வந்த தீர்க்கதரிசி இந்த கிழவனான தீர்க்கதரிசியின் வார்த்தையை நம்பிச் சென்று, அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் செய்தான்.

இது ஒரு சாதாரண விஷயமாக நீங்கள் எடுத்துக்கொள்ளலாம் ஆனால் தேவனுடைய பார்வையில் அது மிகப்பெரிய குற்றமாக இருக்கிறது. உடனே கர்த்தருடைய வார்த்தை கிழவனான தீர்க்கதரிசிக்கு உண்டாயிற்று. அவன் அவனை நோக்கி: கர்த்தர் உனக்குக் கற்பித்த கட்டளையை நீ கைக்கொள்ளாமல் கர்த்தருடைய வாக்கை மீறி, அப்பம் புசிக்கவும் தண்ணீர் குடிக்கவும் வேண்டாம் என்று அவர் விலக்கின ஸ்தலத்திற்கு நீ திரும்பி, அப்பம் புசித்துத் தண்ணீர் குடித்தபடியினால், உன்னுடைய பிரேதம் உன் பிதாக்களின் கல்லறையில் சேருவதில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அந்தப்படியே அந்த தீர்க்கனை வழியிலே ஒரு சிங்கம் எதிர்ப்பட்டு அவனைக் கொன்றுபோட்டது. பொய் சொன்னபடியால் வந்த விபரீதத்தைப் பார்த்தீர்களா! ஒரு சின்ன பொய்தானே அதனால் என்ன? என்று மெத்தனமாக இருந்துவிடாதீர்கள். அது உங்களையும் பாதிக்கும் கேட்கிற மற்றவர்களையும் பாதிக்கும். ஏனெனில் ''பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' என்று வெளிப்படுத்தல்21:8-ல் வாசிக்கிறோம்.

ஆகையால் நாம் செய்ய வேண்டுவதென்ன சொல்லப்பட்டுள்ள கர்த்தருடைய வார்த்தையை அல்லாமல் வேறொரு வார்த்தையை ஒருவன் சொன்னால் அதை ஏற்றுக் கொள்ளாதிருங்கள். அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாக எழுதுகிறார் ''நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்'' என்றார் (கலாத்தியர்1:8). கர்த்தருடைய

வார்த்தையை போதிக்கிற எந்த ஒரு மனிதனும் அதனோடே ஒன்றை கூட்டவோ குறைக்கவோ கூடாது. தேவன் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி இப்படிச் செய்கிறார். ஆகையால் பேதுரு குறிப்பிடும்போது ஒருவன் போதித்தால் வேதவாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் என்று சொல்லுகிறார். ஆகையால் கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கவும், போதிக்கவும் முற்படுங்கள்.

முதலாவது தேவனுடைய மனுஷன் தேவனுடைய வசனங்களுக்குச் செவி கொடுக்கவேண்டும். மனிதர்கள் தேவனுடைய வசனங்களுக்கு செவிகொடுக்க தவறிவிடுகின்றனர். ஆதிமுதலாகவே இப்படியாக நடந்துவருகிறது. ஆனால் பரிசுத்த வேதம் சொல்லுகிறது; ''தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்டாயிராதபடியினால் செவிகொடாதிருக்கிறீர்கள்'' என்கிறார் யோவான் (யோவான்8:47). நீங்கள் எப்படிப்பட்டவராய் இருக்கிறீர்கள்? தேவனால் உண்டானவர்களாயிருப்பீர்கள் என்றால் சாமுவேல் சொல்வதைக்கேளுங்கள்; ''கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்'' (1சாமு.15:22). இன்று காணிக்கை கொடுத்துவிட்டால் கடமை தீர்ந்தது என்று எண்ணுகிறார்கள். இவைகளை தேவன் எதிர்பார்க்கவில்லை. நீங்கள் செலுத்தும் காணிக்கை மற்றும் நீங்கள் நேர்ந்து கொண்ட பொருட்கள் எம்மாத்திரம். வானமும் பூமியும் அவருடைய கரத்தின் கிரியைகளாயிருக்கிறது.

அவருக்காக நாம் என்னத்தை செலுத்தமுடியும். பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம் என்கிறான். கீழ்ப்படிதலையும், செவிகொடுத்தலையும் தேவன் விரும்புகிறார். லூக்கா 6:47-49 வசனங்களில் ஆண்டவர் ஒரு உவமையில் இரண்டு மனுஷர்களைப் பற்றி குறிப்பிடுகிறார். ''என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. என் வாத்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின் மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.

அநேகர் ஆண்டவரிடத்தில் வருகிறார்கள் ஆனால் அவருடைய ஆலோசனைப்படி குடும்பத்தையும் சபையையும் நடத்த தவறிவிடுகின்றனர். தேவசமுகத்துக்கு வந்தால் மட்டும்போதாது அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அவைகளின்படி செய்யவேண்டும்.

கேள்வி நேரம்

தேவனுடைய மனுஷன் பாவம் செய்வானா?

வேதாகமமே அவனைக் குறித்து சாட்சியிடுகிறது. ''தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்'' (1யோவான்3:9). அவருடைய வித்து என்று சொல்லும்போது அவருடைய வசனம் விதையாக இருக்கிறது. அந்த வித்து அவனுக்குள் விதைக்கப்படும் போது அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறான். அவன் வசனத்தினாலே பாவத்திலிருந்து மீட்கப்பட்டபடியினாலும், வசனத்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டபடியினாலும் அவன் பாவம் செய்யான். பொல்லாங்கன் அவனைத் தொடவும் முடியாது. இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து தேவமனிதனா இருக்க பிரயாசப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

40. ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும்?
How can I, Except some man should guide me?

இந்தக் கேள்வியை ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக்கொண்டிருந்த மந்திரி பிலிப்புவிடம் கேட்டான். இன்றைக்கும் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்கிறவர்கள் அதின் கருத்தை புரிந்துகொள்ள முடிவதில்லை. ஆகையால் அதை விவரித்துச் சொல்ல ஒரு சுவிசேஷகன் அல்லது ஒரு போதகன் அவசியம். எனக்கு எல்லாம் தெரியும் என்று அநேகர் சொல்லுவார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்பதுவே உண்மை.

ஒரு மனிதனுக்கு விசுவாசம் எப்படிவருகிறது? அது தானாக வந்துவிடுவது இல்லை. அவன் முதலாவது தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படவேண்டும். வேதமும் அவ்வாறே போதிக்கிறது. ''விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்''

(ரோமர்10:17). தேவனுடைய வசனத்தை அவன் கேள்விப்படும்போது அவனுக்குள் விசுவாசம் வருகிறது. அந்த விசுவாசம் அவனை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்துகிறது. ஒரு மனிதன் தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படவேண்டுமானால், ஒரு போதகனோ அல்லது ஒரு சுவிசேஷகனோ அவனுக்கு தேவனுடைய வசனத்தைப் போதிக்கவேண்டும்.

அப்பொழுது அவன் தேவனுடைய வசனத்தைக் கேள்விப்படுகிறான். ஒருவனுக்கு சொல்லப்படாவிட்டால் அது அவனுக்கு எப்படித்தெரியும். பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப் படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? என்று ரோமர் 10:14,15 வசனங்களில் வாசிக்கிறோம். ''அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கெண்ட ஒரு யூதன் எபேசுபட்டணத்துக்கு வந்தான் அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தைமாத்திரம் அறிந்தவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான். அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்'' என்று அப்போஸ்தலர் 18:24-26 முடிய உள்ள வசனங்களில் படிக்கிறோம்.

இந்த அப்பொல்லோவுக்கு, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் விவரித்துக் காண்பிக்காவிட்டால் அதைப் பற்றி அவனுக்கு எப்படித் தெரியும்? இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே, சகோதரியே, நீ வேதம் வாசிக்கலாம் அதின் கருத்து இன்னதென்று உமக்குத்தெரியுமா? மந்திரி ஏசாயா புஸ்தகத்தை வாசித்தான் அதின் கருத்து இன்னதென்று அவனுக்குத் தெரியவில்லை. பிலிப்பு அவனுக்கு பிரசங்கித்தான். அதைப்போல அப்பொல்லோ என்பவன் வேதாகமங்களில் வல்லவனாயிருந்தான். ஆனால் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப் பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்தான். அவனுக்கு மேலும் தேவனுடைய மார்க்கத்தைக் குறித்து ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் விவரித்துக் காண்பித்து அவனை கர்த்தருடைய உபதேசத்தில் வழிநடத்தினார்கள். ஆக, ஒரு சரியான போதகன் வேதாகமத்தின் சத்தியங்களை எடுத்துச்சொல்லா விட்டால் மற்றவர்களுக்கு எப்படித்தெரியும்?

இயேசு சொல்கிறார்: ''நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே

நிலைத்திருப்பீர்கள்'' என்கிறார் (யோவான் 15:10). தேவனுடைய சித்தத்தை முழுமையுமாக சிலுவையில் நிறைவேற்றிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தார். இயேசு பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருந்தது போல, கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்திருக்க உபதேசிக்கப்படுகிறான். அவன் ஏசாயா புஸ்தகத்தை வாசிப்பதினாலோ, அல்லது யோவான் கொடுத்த ஸ்நானத்தைப்போல ஒரு ஸ்நானத்தைப் பெற்றதினாலோ அவன் தேவனுடைய மார்க்கத்தில் இருக்கிறான் என்று அர்த்தமாகிவிடாது.

அவன் கிறிஸ்துவையும் அவருடைய கற்பனைகளையும் கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, பாவமன்னிபுக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது இரட்சிக்கப்பட்டு கர்த்தருடைய சபையிலே சேர்க்கப்படுகிறான். இப்படிப்பட்ட ஒருவனே தேவனுடைய மார்க்கத்தில் உள்ளவன். நீங்கள் தேவனுடைய மார்க்கத்தில் இருக்கிறீர்களா? அல்லது கர்த்தருடைய மார்க்கத்தில் உபதேசிக்கப்பட்டவர்களாக மாத்திரம் இருக்கிறீர்களா? நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணியிருக்கிறார் என்று எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் என எபிரெயர்10:19-ல் படிக்கிறோம்.

ஒரு போதகன் செய்யவேண்டுவதென்ன? இன்றைய நாட்களில் பலர் வேதாகமத்திற்கு விரோதமான காரியங்களைச் செய்து கொண்டு தாங்கள் பேசுகிறது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது; ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்'' என்று குறிப்பிடுகிறார் (1பேது4:11). அநேக பிரிவினை சபையார்கள் தங்கள் சொந்தக் கதைகளையும், கற்பனைகளையும் உபதேசங்களாக போதித்து வேதாகமத்தை விட்டு வழி விலகிப்போய் கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய மார்க்கத்தைக் குறித்து போதிக்கிற யாராக இருந்தாலும் வேதவாக்கியங்களின்படி போதிக்க அறிவுறுத்தப்படுகிறோம்.

நியாயப்பிரமாணத்தின் காலத்தின் கீழ்வாழ்ந்த எஸ்றா ''கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே

கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்'' எஸ்றா 7:10-ல் வாசிக்கிறோம். இன்றைக்கு இந்த எஸ்றாவைப்போல கர்த்தருடைய வேதத்தை ஆராய்ந்து படிக்கிற திருச்சபைகள் எழும்பவேண்டும். இவனைப்போல கர்த்தருடைய கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசிக்கிற போதகர்கள் எழும்ப வேண்டும். அப்பொழுது சபைகள் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளும்.

முதல் நூற்றாண்டு காலத்தில் ''பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷ முழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக்கொண்டிருந்தான்'' என அப்போஸ்தல நடபடிகள் 28:30,31 வசனங்களில் படிக்கிறோம். பவுலுடைய வைராக்கியத்தைப் பார்த்தீர்களா? பலர் சுவிசேஷம் அறிவிக்க கூலி கேட்கிறார்கள். எவ்வளவு சம்பளம் கொடுப்பீர்கள்? சபை, வீடு, வாகனம் கொடுத்து மாதம் எவ்வளவு கொடுப்பீர்கள்? இந்த பவுலுக்கு யார் பணம் கொடுத்தது? தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டில் தங்கிக்கொண்டு தன் சொந்தக்கையாலே உழைத்து, தன்னிடத்தில் வந்த யாருக்கும் தேவனுடைய ராஜ்யத்தைக்குறித்துப் பிரசங்கித்திருக்கிறார்.

இதே காரியத்தை நாமும் செய்யலாம் அல்லவா? ஏன் செய்யக்கூடாது. முதலாவது பவுலுக்கு இருந்த வைராக்கியம் நமக்கு வேண்டும். தான் இலவசமாய்ப் பெற்றுக்கொண்ட இரட்சிப்பை மற்றவர்களுக்கு தெரிவிக்க அவர் தயங்கவில்லை, கால தாமதம் செய்யவில்லை உடனே சுவிசேஷத்தை அறிவிக்கும்படி தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்து யாவருக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். கட்டுக் கதைகளையும் வம்ச வரலாறுகளையும் பின்பற்றி வந்த மக்களுக்கு தேவடைய ராஜ்யத்தையும் இனிவரும் நியாயத்தீர்ப்புகளையும் கர்த்தருடைய வருகையையும் முன்அறிவித்தார்.

உபதேசத்தைக் கேட்கக்கூடிய நபர் செய்யவேண்டுவதென்ன? இன்றைக்கு கேட்கக்கூடிய நபர் யாருக்கோ எவருக்கோ என்று இல்லாமல் அதைக்குறித்து ஆழ்ந்து தியானிக்கவேண்டியவராயிருக்கின்றனர். மந்திரிக்கு பிலிப்பு பிரசங்கித்தார். அப்பொழுது மந்திரி மிகுந்த கவனத்துடன் அதைக்கேட்டு சுவிசேஷ வசனத்திற்கு தன்னை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தான். ''இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி: இதோ, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான்'' (அப்.8:36).

இங்கே பிலிப்பு அவனை ஞானஸ்நானம் எடுக்கச் சொல்லி வற்புறுத்தவில்லை. அவனுடைய வேலை, போதித்தான் அதைக்குறித்து நன்கு யோசித்த மந்திரி கேள்வி கேட்க ஆரம்பித்தான். அவனுடைய விசுவாசத்தை பார்த்த பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை யென்றான். அப்பொழுது அவன்: இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான்; அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான் என்று அப்.8:37,38 வசனங்களில் வாசிக்கிறோம். இச்செய்தியில் மந்திரி கேட்ட கேள்வி உங்களுடைய வாழ்க்கைக்கு பிரயோஜனமாக இருந்திருக்குமென்று நம்புகிறோம். நீங்கள் இவ்வளவு காலமாக வேதம் வாசித்துக்கொண்டே வந்திருக்கலாம். ஆனால் அதைக்குறித்து அறியாதவர்களாகவே படித்துக்கொண்டிருப்பீர்கள். வேதம் வாசிக்கும்போது யார், யாருக்கு, எப்பொழுது என்ற கேள்வியோடு படியுங்கள். அப்பொழுது யார் சொன்னது, யாருக்கு சொன்னது, எப்பொழுது சொன்னது என்பதைப் புரிந்துகொள்வீர்கள். புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்கின்ற நமக்கு ஆண்டவர் இயேசுவின் உபதேசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு நாம் சொவிகொடுக்கவேண்டும். அந்த உபதேச சட்டத்தின்படி வாழவேண்டும். அது நம்மை பாவமற கழுவி பரலோகம் கொண்டுசேர்க்கும்.

கேள்வி நேரம்

தேவனைக்குறித்து அறியப்படுவது ஜனங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டுள்ளதா?

ஆம், வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்கிறார் பவுல். ''சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். ...அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்ததாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள். உணர்வில்லாத அவர்களடைய இருதயம் இருளடைந்தது'' என்கிறார் (ரோம.1:18-21). அந்தப்படியே இன்றும் அநேகருடைய இருதயம் இருளடைந்துள்ளது. நீங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள வசனங்களுக்கு செவிகொடுத்து, அதற்கு கீழ்ப்படியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

41. நான் பாத்திரன் அல்ல
I Am Not Worthy

இந்த வார்த்தைகளைச் சொன்ன யாக்கோபு, யோவான் மற்றும் நூற்றுக்கு அதிபதி ஆகிய மூன்று நபர்களைக் குறித்து இச்செய்தியின் வாயிலாக தியானிக்கவுள்ளோம்.

முதலாவது யாக்கோபைப் பற்றி தியானிப்போம். இந்த யாக்கோபு யார்? ஈசாக்கின் மகன். ஈசாக்கு ஆபிரகாமின் மகன். இந்த யாக்கோபை அவனுடைய தாயும் தகப்பனும் அழைத்து உன் சகோதரன் கோபம் தணியுமட்டும் சிலநாள் லாபானிடத்திலே இரு என்று அவனை ஆசீர்வதித்து நீ கானானியருடைய குமாரத்திகளில் பெண்கொள்ளாமல், லாபானின் குமாரத்திகளுக்குள் பெண்கொள் என்று சொல்லி சர்வவல்லயுள்ள தேவன் உன்னை ஆசீர்வதித்து, நீ பல ஜனகூட்டமாகும்படி உன்னை பலுகவும் பெருகவும் பண்ணி; தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்ததும் நீ பரதேசியாய்த் தங்குகிறதுமான தேசத்தை நீ சுதந்தரித்துக்கொள்ளும்படி ஆபிரகாமுக்கு அருளிய ஆசீர்வாதத்தை உனக்கும் உன் சந்ததிக்கும் அருளுவாராக என்றும் சொல்லி அவனை அனுப்பிவைத்தார்கள்.

அவன் தன் தாய் தகப்பனுடைய வார்த்தையின்படியே லாபானுடைய வீட்டிற்கு சென்று அங்கே லாபானுடைய ஆடுகளை மேய்த்துவந்தான். அவனை தேவனாகிய கர்த்தர் ஆசீர்வதித்தார் அதினால் அவன் பலுகிப்பெருகினான். பின்பு யாக்கோபு தன் பிள்ளைகளையும் தன் மனைவிகளையும் ஒட்டகங்கள்மேல் ஏற்றி, தான் பதான் அராமிலே சம்பாதித்த மிருகஜீவன்களாகிய மந்தைகள் அனைத்தையும் தன் பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, கானான்தேசத்தில் இருக்கிற தன் தகப்பனாகிய ஈசாக்கினிடத்துக்கு போனான்.

இச்செய்தியை அறிந்த லாபான் நீ ஓடிப்போவதை மறைத்து எனக்கு அறிவியாமல், திருட்டளவாய் என்னிடத்திலிருந்து வந்துவிட்டது என்ன? நான் உன்னைச் சந்தோஷமாய் சங்கீத மேளதாளம் கின்னரமுழக்கத்துடனே அனுப்புவேனே என்று வழியில் அவனை சந்தித்துச் சொன்னான். அங்கே இருவரும் உடன்படிக்கை பண்ணினார்கள். அதற்கு யாக்கோபு கலயெத் என்று பேரிட்டான். ''பின்பு யாக்கோபு: என் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும், என் தகப்பானகிய ஈசாக்கின் தேவனுமாய் இருக்கிறவரே; உன் தேசத்துக்கும் உன் இனத்தாரிடத்துக்கும் திரும்பிப்போ, உனக்கு நன்மை செய்வேன் என்று என்னுடனே சொல்லியிருக்கிற கர்த்தாவே, அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் **நான் எவ்வளவேனும் பாத்திரன்**

அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுதும் இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்.

என் சகோதரனாகிய ஏசாவின் கைக்கு என்னைத் தப்புவியும், அவன் வந்து என்னையும் பிள்ளைகளையும் தாய்மார்களையும் முறிய அடிப்பான் என்று அவனுக்குப் பயந்திருக்கிறேன். தேவரீரோ; நான் உனக்கு மெய்யாகவே நன்மைசெய்து, உன் சந்ததியை எண்ணிமுடியாத கடற்கரை மணலைப்போல மிகவும் பெருகப்பண்ணுவேன் என்று சொன்னீரே'' என்று ஜெபித்தான் (ஆதி.32:9-12). நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல என்று அவன் ஜெபிக்க காரணம் என்ன? ஏசாவுக்கு பயந்து தன் தாய் தகப்பனுடைய வார்த்தையின்படியே வீட்டையும் தன் தேசத்தையும் விட்டு லாபானிடத்திற்கு தன் கையிலே கோலோடு சென்றான் மற்றொன்றும் எடுத்துக்கொண்டு போகவில்லை. ஆனால் கானான் தேசத்துக்கு அவன் திரும்பிவரும்போது திரளான ஆஸ்தியோடும் பிள்ளைகளோடும் மனைவிகளோடும் வந்தபடியால் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல என்று ஜெபித்தான். இன்றைக்கு இருக்கிற நாம் அவனுடைய சந்ததிகளாக இருக்கிறோம். ஆனால் அவனுடைய நம்பிக்கை நமக்குள் இருக்கிறதா? யாக்கோபை ஆசீர்வதித்த கர்த்தர் உங்களையும் ஆசீர்வதிக்க சித்தமுள்ளவராயிருக்கிறார். அவன் கர்த்தருக்கு பயந்து நடந்தான். லாபானுடைய வீட்டில் உண்மையுள்ளவனாயிருந்தான். அவனுடைய சம்பாத்தியத்தை மட்டுமே எடுத்துவந்தான்.

எத்தனை அருமையான காரியம். தகுதியற்ற யாக்கோபை தேவன் தகுதிப்படுத்தினார். ஆகையால் தான் தன்னை தாழ்த்தி நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல என்று ஜெபித்தான். உங்களுடைய ஜெபம் எப்படிப்பட்டது? சூகியனான பில்தாத் சொல்லுகிறான்; ''மனுஷன் தேவனுக்கு முன்பாக நீதிமானாயிருப்பது எப்படி? ஸ்தீரீயிடத்தில் பிறந்தவன் சுத்தமாயிருப்பது எப்படி? சந்திரனை அண்ணாந்துபாரும், அதுவும் பிரகாசியாமலிருக்கிறது; நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகள் அல்ல, புழுவாயிருக்கிற மனிதனும், பூச்சியாயிருக்கிற மனுபுத்திரனும் எம்மாத்திரம் என்கிறான்'' (யோபு25:4-6). ஆகையால் நாம் ஒரு ஆசீர்வாதத்தை பெறுவதற்கு தகுதியற்றவர்கள். ஆனாலும் நாம், பிதாவாகிய தேவனுக்குப் பயப்படும்போது அவர் நம்மைத் தகுதிப்படுத்துகிறார்.

இரண்டாவதாக, இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவானைப் பற்றி படிக்கும்போது, இவன் இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன். வெட்டுக்கிளியும் காட்டுத்தேனையும் புசித்துக்கொண்டு; ''மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத்தொடங்காதிருங்கள்; தேவன்

இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடாரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது; ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்'' என்றுபிரசங்கித்தான் (லூக்.3:8,9). இவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொண்டு அநேகர் மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானத்தை பெற்றார்கள். இயேசுவும் இவனிடத்தில் ஞானஸ்நானம் பெற்றார்.

''யோவானைக்குறித்து; இவன்தான் கிறிஸ்துவோ என்று ஜனங்களெல்லாரும் எண்ணங்கொண்டு, தங்கள் இருதயங்களில் யோசனையாயிருக்கையில், யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக; நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் **நான் பாத்திரன் அல்ல**, அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது, அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, கோதுமையைத் தமது களஞ்சியத்தில் சேர்ப்பார், பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார்'' என்றான் (லூக்.3:15,16). இந்த யோவானும் தன்னை தகுதியுள்ளவன் அல்ல என்று சொல்லுகிறான். ஆனால் இயேசு யோவானைக் குறித்து சொல்லும்போது; ''ஸ்தீரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை; என்றார்'' (லூக்.7:28).

யோவான் தன்னை ஒரு பெரியவனாகக் கருதவில்லை. ஜனங்கள் அவனை கிறிஸ்து என்று சொல்லும்போது, அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல என்று சொல்லி தன்னை தாழ்த்துகிறதை நாம் படிக்கிறோம். அன்பு சகோதரனே, சகோதரியே மாபெரும் தீர்க்கதரிசியானவனே நான் பாத்திரன் அல்ல என்று சொல்லியிருக்கும்போது நாம் தேவனுக்கு முன்பாக எம்மாத்திரம். ''தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தால் புகழப்படுகிறவனே உத்தமன்'' என்று 2கொரிந்தியர் 10:18-ல் வாசிக்கிறோம். யோவான் தன்னைத்தான் உயர்த்தவில்லை, இயேசுவே இவனைக்குறித்து புகழ்ந்தார்.

மூன்றாவதாக, நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக்குறித்து நாம் பார்ப்போம். அவனுடைய வேலைக்காரன் வியாதிப்பட்டு மரண அவஸ்தையாயிருப்பதைக் கண்டு, இயேசுவிடம் யூதருடைய மூப்பரை அனுப்பி, அவனைக் குணமாக்கும்படி வேண்டிக்கொண்டான். இயேசுவிடம் வந்த யூதருடைய மூப்பர்கள் அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு; நீர் இந்தத் தயவு செய்கிறதற்கு அவன் பாத்திரனாயிருக்கிறான். அவன் நம்முடைய

ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றார்கள். இதைக்கேட்ட ஆண்டவர் இயேசு உடனே அவர்களுடனே நூற்றுக்கு அதிபதியின் வீட்டிற்குச் சென்றார்.

அவர் வீட்டிற்குச் சமீபமானபோது, ''நூற்றுக்கு அதிபதி தன் சிநேகிதரை நோக்கி: நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க **நான் பாத்திரன் அல்ல**; நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், எனக்குக் கீழ்ப்பட்டிருக்கிற சேவகருமுண்டு; நான் ஒருவனைப் போவென்றால் போகிறான், மற்றொருவனை வாவென்றால் வருகிறான்; என் வேலைக்காரனை, இதைச் செய்யென்றால் செய்கிறான் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்கள் என்று அவர்களை அவனுப்பினான். இயேசு இவைகளைக் கேட்டு அவனைக் குறித்து ஆச்சரியப்பட்டு, திரும்பி, தமக்குப் பின்செல்லுகிற திரளான ஜனங்களை நோக்கி; இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (லூக்.7:6-9).

மேற்கண்ட வசனத்தில் நூற்றுக்கு அதிபதி அவரை நோக்கி: நான் ஒருவனை போவென்றால் போகிறான் மற்றொருவனை வாவென்றால் வருகிறான் என்றான். இப்படிப்பட்ட அதிகாரத்தைப்பெற்ற அவன் தன்னை முழுவதும் தாழ்த்தி, நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல என்று சொல்லி தன்னைத் தாழ்த்துவது எத்தனை ஆச்சரியமான காரியம். ஆண்டவர், ஆச்சரியப்பட்டு இஸ்ரவேலுக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். இச்செய்தியிலே யாக்கோபைப் பற்றியும், யோவான்ஸ்நானனைப் பற்றியும் மற்றும் நூற்றுக்கு அதிபதியைக் குறித்தும் தியானித்தோம். இவர்கள் தங்களை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. தேவன் இவர்களுடைய வேண்டுதலை கேட்டார். நாமும் தேவனுடைய பார்வையில் இவர்களைப்போல நான் பாத்திரன் அல்ல என்று சொல்லக் கற்றுக்கொள்வோம்.

கேள்வி நேரம்

நாம் பாத்திரவான்களா?

''சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில்

பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்.

எழுதியிருக்கிறபடி, மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்'' என அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபைக்கு எழுதுகிறார் (1கொ.1:26-31). நம்முடைய வாழ்க்கையை நாம் சற்று திரும்பிப் பார்ப்போமானால் நாம் எந்த அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளோம் என்பதை எண்ணிப்பார்க்கமுடியும். அந்த ஆசீர்வாதங்களுக்குப் பாத்திரவானாக இல்லாத நம்மை தேவன் பாத்திரவான்களாக மாற்றினார் என்பது எத்தனை அருமையான காரியம்! அவருக்கே சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக!.

42. ஆவி ஆத்துமா சரீரம்
Spirit and Soul and Body

அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே சபையாருக்கு எழுதும்போது ''...உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படிகாக்கப்படுவதாக'' என்று எழுதுகிறார் (1தெச.5:23). இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு சகோதரனே, சகோதரியே, உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரம் எப்படிப்பட்டதாயிருக்கிறது? ஒவ்வொருவரும் தேவனிடத்திலிருந்து இவைகளைப் பெற்றவர்களாக இருக்கிறோம்.

''தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, **ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்,** மனுஷன் ஜீவாத்துமாவானான்'' (ஆதி.2:7). ஜீவசுவாசத்தை, மண்ணான மனுஷன் தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்டான். ஜீவனுள்ள நாளெல்லாம் இந்த சுவாசத்தை உடையவனாக வாழ்கின்றான். மனிதன் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டான் ஆகையால் மண்ணுக்கே திரும்புவான் என்று பிரசங்கி கூறுகிறான். ஆகையால் அவன் செய்யவேண்டுவதென்ன? ''இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன்

வாலிபப்பிராயத்திலே நினை'' (பிர.12:7). தேவன் கொடுத்த ஆவி ஒரு நாளில் மண்ணான மனுஷனை விட்டு தேவனிடமே செல்லுகிறது. இந்த ஆவியை தேவன் ஒரு மனுஷனுக்கு எப்படிக்கொடுத்தாரோ அப்படியே அந்த ஆவி அவரிடமே செல்லவேண்டும்.

''மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளையெல்லாம் ஆராய்ந்துபார்க்கும்'' என்கிறான் சாலொமோன் (நீதி.20:27). அந்த ஆவி குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்பட இப்பூமியில் செம்மையானவனாக வாழவேண்டும். சிலர் நாம் எப்படி வந்தோம், என்னசெய்கிறோம் என்று அறியாது வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமை கேள்விக்குறியாக இருக்கிறது. ஆதியிலே மனிதனை உண்டாக்கிய தேவன் அவனை செம்மையானவனாகவே உண்டாக்கினார். ''...கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்'' (1கொ.6:17). கர்த்தரோடிசைந்திருப்பது என்பது அவருடைய உபதேசத்தின்படி நடப்பது, பேசுவது, அவருடைய சரீரமாகிய சபையில் அங்கமாயிருப்பது போன்றவற்றைக்குறிக்கும்.

இரண்டாவது, ஒவ்வொருமனிதனுக்குள்ளும் வாழக்கூடியது ஆத்துமாவாகும். தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், **மனுஷன் ஜீவாத்துமாவானான்** என வாசிக்கிறோம். மண்ணான மனிதன் தேவன் கொடுத்த ஜீவசுவாசத்தைப் பெற்றுக்கொண்டவுடன் ஜீவாத்துமாவானான். வாழக்கூடிய ஒரு மனிதனாக மாறினான். எத்தனை அற்புதம் பார்த்தீர்களா? தேவன் தம்முடைய வல்லமையினால் மனிதனை இவ்விதமாக சிருஷ்டித்தார். இந்த ஆத்துமா காக்கப்பட ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை'' என்று ஆண்டவர் இயேசு வேதபாரகனைப் பார்த்து சொன்ன வசனத்தை சுவிசேஷகன் மாற்கு குறிப்பிடுகிறார் (மாற்.12:30). தேவன் கொடுத்த ஆத்துமாவில் வாழ்ந்து கொண்டிருக்கிற நீங்கள் முழு ஆத்துமாவோடு கர்த்தரைத் தொழுதுகொண்டுவருகிறீர்களா? ''என் ஆத்துமா கர்த்தருடைய ஆலயப்பிரகாரங்களின்மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது; என் இருதயமும் என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது'' என்கிறான் சங்கீதக்காரன் (சங்.84:2).

இந்த ஆத்துமா அழியாதது, நித்திய நித்திய காலமாக இருக்கும்படியாக உண்டாக்கப்பட்டது. ஒவ்வொரு ஆத்துமாவும் கர்த்தருக்குச்

சொந்தமானது. இந்த ஆத்துமாக்களை ஆதாயம் செய்கிறவன் ஞானமுள்ளவன். ஜீவனுள்ள மார்க்கம் மட்டுமே ஆத்தும அறுவடையில் கவனம் செலுத்துகிறது. மற்ற உலக மார்க்கங்கள் எல்லாம் உலகத்திலே தன்னுடைய கவனத்தைச் செலுத்துகிறது. ஜீவனுள்ள மார்க்கம் பாவம் நிறைந்த இந்த உலகத்தில் ஆத்துமாக்களை இரட்சித்து, நித்திய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்கிறது. உங்களுடைய ஆத்துமா காக்கப்பட ஜீவனுள்ள மார்க்கத்தில் உங்களுடைய ஆத்துமாவை இனைத்துக்கொள்ளுங்கள். இல்லையேல் உங்களுடைய ஆத்துமா கெட்டுப்போய்விடும்.

''உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்'' என்கிறார் ஆண்டவர் இயேசு (லூக்.21:19). அநேகர் பொறுமையில்லாமல் தங்களுடைய ஆத்துமாக்களை சேதப்படுத்துகிறார்கள். கொடைக்கானல் பகுதியில் தற்கொலைப்பாறை என்று அழைக்கப்பட்ட கிரீன் வேலியில் நூற்றுக்கணக்கான ஆத்துமாக்கள் உலகத்தை வெறுத்தும், அநேகரால் புறம்பாக்கப்பட்டும், வாழ்க்கையில் தோல்வி கண்டும், பொறுமையுடன் இருந்து தங்களுடைய ஆத்துமாக்களைக் காக்காமல் தற்கொலை செய்து கொண்டிருந்தார்கள். தற்போது அரசு அந்த இடத்திற்கு பாதுகாப்பான வேலி அமைத்துள்ளது.

இயேசு சொல்கிறார் என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது. உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள் என்கிறார். இப்படிப்பட்ட ஆறுதலான வசனங்கள் இருக்கும்போது ஏன் தங்களுடைய ஆத்துமாக்களை அழித்துக்கொள்ளவேண்டும். ஆத்துமாக்களை நமக்கு கொடுத்தவரிடம் மனந்திரும்பும்போது அந்த ஆத்துமாகாக்கப்படும். ''ஆத்துமா அறிவில்லாமலிருப்பது நல்லதல்ல'' என்கிறான் சாலொமோன் (நீதி.19:2). ஒவ்வொரு ஆத்துமாவும் குற்றமற்றதாயிருப்பதற்கு அவருடைய உபதேசத்திற்கு செவிகொடுத்து அதன்படியாக ஜீவிக்கவேண்டும். ''ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது'' என்கிறார் பேதுரு (1பேது.3:10-12).

இந்தவிதமாக பொல்லாப்புக்கு விலகி நன்மைசெய்து உங்களுடைய ஆத்துமாக்களைக் குற்றமற்றதாக காத்துக்கொள்ளுங்கள். எவ்வளவு நாட்கள்

பொறுமையோடிருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். அவருடைய வருகை பரியந்தமும் பொறுமையோடிருங்கள் உங்கள் ஆத்துமாக்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது வாடாத ஜீவகிரீடம் கிடைக்கும்.

சரீரமும் தேவனால் கொடுக்கப்பட்ட ஒன்றுதான். தேவனாகிய கர்த்தர் **மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி**, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான் என்று காண்கிறோம். உலகத்திலே வாழ்கின்ற யாராக இருந்தாலும் அவர்கள் ஒரு நாள் மரிக்கும்போது மண்ணுக்கே திரும்புகிறார்கள். அவர்கள் வசதிபடைத்தவர் களாயிருக்கலாம், பெரிய தொழில் அதிபர்களாயிருக்கலாம், படித்தமேதை களாயிருக்கலாம், அரசியல் பெருந் தலைகளாயிருக்கலாம் அல்லது ஒரு ஏழையாயிருக்கலாம் யாராக இருந்தாலும் எல்லோருக்கும் மரணம் என்பது ஒன்றே. அவர்கள் மரித்தபின்பு மண்ணுக்குத் திரும்புவார்கள். மண்ணான இந்த சரீரத்தை எந்த அளவு பேணி, பாதுகாக்கிறோம். இதைப் பாதுகாப்பதற்கு எத்தனை எத்தனை கவர்ச்சிகரமான விளம்பரப் பொருட்கள், வாசனை திரவியங்கள்! இந்த மண்ணான சரீரத்தில் ஆவி ஆத்துமாவோடு வாழ்கின்றோம். இந்த மூன்றும் தேவனுடைய பார்வையில் குற்றமற்றதாயிருக்கவேண்டும்.

மேலும் பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது; ''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர் களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்'' என்கிறார் (1கொ.6:19,20). உங்களுடைய சரீரத்தை எதற்கு பயன்படுத்திக்கொண்டு வருகின்றீர்கள்? அது தேவனுடைய ஆலயமாக இருக்கிறது. தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனையே பலியாக ஒப்புக்கொடுத்து நம்மை மீட்டெடுத்தார். ஆகையால்தான் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார். கிரயத்துக்குக்கொள்ளப்பட்ட உங்கள் சரீரமாகிய ஆலயத்தில் ஜெபதூபம் எப்பொழுதும் எரிந்துகொண்டும், தேவனை ஒவ்வொருநாளும் மகிமைப்படுத்திக்கொண்டும் இருக்க, தேவனுக்கு உடையவைகளாகிய, உங்கள் சரீரத்தை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். ''நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்'' (எபே.5:30). இந்த சரீரத்தை வேசியின் அவயவங்களாக்கலாமா? கூடாதே! கிறிஸ்துவின் சரீரத்தை எப்பொழுதும்

சுமந்துகொண்டு செல்கிறோம் என்பதை நாம் ஒருநாளும் மறந்துபோக வேண்டாம். பாவமான இடங்களுக்கு நாம் செல்வோமானால் அங்கே ஆண்டவரை அழைத்துச் செல்கிறோம். இப்படிச் செய்வோமானால் ஆவியானவர் நம்மோடு இருப்பது எப்படி? நம்மோடிருக்கும் ஆவியானவர் துக்கப்படுவார் அல்லவா?

இச்செய்தியை வாசிக்கிற அன்பு சகோதரனே சகோதரியே உன் நிலைமை எப்படிப்பட்டதாக இருக்கிறது. நீ தேவனிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஆவி ஆத்துமா சரீரத்தை எப்படிப் பராமரித்து வருகிறாய்? பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகு என வேதம் போதிக்கிறது. சமாதானத்தின் தேவன் உன்னை முற்றிலும் பரிசுத்தமாக்க ஆயத்தமாயிருக்கிறார். உன்னை முழுவதுமாக ஒப்புக்கொடு. உன்னுடைய ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கவேண்டும்.

இயேசு சீக்கிரம் வரப்போகிறார். நீ அவரை சந்திக்க ஆயத்தமாயிருக்கிறாயா? அல்லது குற்றமனதோடு வாழ்ந்து கொண்டிருக்கிறாயா? ''நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?'' என பேதுரு கேட்கிறார் (1பேது.4:18). உங்களுடைய வாழ்க்கையை சற்று சீர்தூக்கிப்பாருங்கள். உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரம் குற்றமற்றதாயிருக்க பிரயாசப்படுங்கள். தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக!

கேள்வி நேரம்

இதைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டா?

ஆம், அநேகர் நாம் எப்படி வாழ்ந்தால் என்ன? என்று நினைக்கின்றனர். அது மாபெரும் தவறு. உண்டாக்கினவர் உண்டாக்கப்பட்ட நம்மிடம் கணக்கு கேட்க வல்லவர். ''ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' என்று பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதினகடிதத்தில் படிக்கிறோம் (2கொ.5:10). இப்பொழுது மன்னிக்கிற கர்த்தராக இருக்கிறார். உலகத்தின் முடிவில் அவர் நியாயாதிபதியாக வீற்றிருப்பார். அவருக்கு நாம் சரீரத்தோடு வாழ்ந்த காலத்தில் என்ன செய்தோம், எப்படி வாழ்ந்தோம் என்ற கணக்கு கொடுக்கவேண்டும். இந்த நியாயமான தீர்ப்புக்கு ஒருவரும் தப்பமுடியாது. நியாயத்தீர்ப்பு செய்யும் அதிகாரத்தை பிதாவாகிய தேவன் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவுக்குக் கொடுத்திருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்களா?

43. விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்

I Have Kept the Faith

விசுவாசம் நம் எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் அந்த விசுவாசம் எப்படிப்பட்டது? அந்த விசுவாசத்தை காத்துக்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்? ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது'' என வேதம் போதிக்கிறது (எபி.11:1). இதுவே விசுவாசம். காணாததை ஒரு மனிதன் நம்பவேண்டும். அப்படியென்றால் ''தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன'' என யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.2:19). ஆகையால் உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டது? அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ''நல்லபோராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' என்கிறார் (2தீமோ.4:7,8).

நல்லபோராட்டம் என்று சொல்லும்போது, ஒரு மனிதன் சரியான யுத்த புருஷனாயிருந்து போராடவேண்டும். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணோன் என்று பவுல் சொல்வதைப்போல ஆகாயத்தை அடிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. எல்லாவற்றிலும் நாம் இயேசுவை மாதிரியாக நோக்குவோமேயானால்; அவருடைய பிறப்பு முதல் மரணம் வரை அவருக்குப் போராட்டம் இருந்தது. அவருடைய பிறப்பின்போது; ''கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு; ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான்'' (மத்.2:13).

அந்நாட்களில் பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலுமிருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் ஏரோது கொலைசெய்தான். மேலும் ஆண்டவருடைய ஊழிய நாட்களில் நாம் பார்க்கும்போது, ''பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச் செய்யலாமென்று வகைதேடினார்கள்'' என்று வாசிக்கிறோம் (லூக்.22:2). இயேசுவைப் பின்தொடர்ந்த சீடர்களுக்கும் அநேக போராட்டங்கள் இருந்தது. முதல் நூற்றாண்டில் பவுல் வல்லமையான ஒரு

பிரசங்கி. கர்த்தரால் சந்திக்கப்பட்டவன். அவனைக்குறித்து நாம் இப்படியாக வாசிக்கிறோம்; ''சவுல் அதிகமாகத் திடன்கொண்டு, இவரே கிறிஸ்துவென்று திருஷ்டாந்தப்படுத்தி, தமஸ்குவில் குடியிருக்கிற யூதர்களைக் கலங்கப்பண்ணினான். அநேகநாள் சென்றபின்பு, யூதர்கள் அவனைக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள்'' என்று அப்.9:22,23-ல் வாசிக்கிறோம்.

பரலோக பிதாவின் வேலைகளை செய்து கொண்டுவந்த ஆண்டவர் இயேசுவுக்கும் அவருடைய சீஷர்களுக்கும் மரணபரியந்தமும் போராட்டம் இருந்தது. இதை அப்போஸ்தலனாகிய பவுல் நல்லபோராட்டம் போராடினேன் என்கிறார். இயேசுவை பின்பற்ற விரும்புகிற ஒவ்வொருவருக்கும் இவ்விதமான போராட்டம் உண்டு. அந்த போராட்டத்தில் வெற்றியுள்ள கிறிஸ்தவனாக பயப்படாது போராடவேண்டும். ''நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்ன செய்வாய்? என்று கேள்வி எழுப்புகிறார் (எரே.12:5). ஒவ்வொரு கிறிஸ்தவனும் நல்லபோராட்டம் பண்ணும்படி அழைக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு வரும் பாடுகளும், போராட்டங்களும் அதிகம் அவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் அவனை விடுவிக்கிறார்.

இரண்டாவதாக; **ஓட்டத்தை முடித்தேன்** என்று பவுல் சொல்லுகிறார். கிறிஸ்தவ ஜீவியம் என்பது ஒரு பரிசுத்த ஓட்டம். இந்த ஓட்டத்தை முடிப்பவர்களுக்குத் தான் நீதியின் கிரீடம் கொடுக்கப்படும். ''பந்தயச் சலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்'' என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (1கொ.9:24). கிறிஸ்தவ ஓட்டத்தை முடிப்பவர்களுக்குத்தான் பரிசு. இந்நாட்களில் நாம் பார்க்கும்போது குடும்பசூழ்நிலை காரணமாக சபையை விட்டு பிரிந்துபோகிறார்கள் அல்லது வியாதினிமித்தமாகவும், பணக்கஷ்டத்தின் காரணமாகவும் கிறிஸ்துவை விட்டு பிரிந்து அல்லது மறுதலித்துப் போய்விடுகிறார்கள்.

இவர்கள் எல்லாம் தங்களுக்கு வரக்கூடிய கஷ்டத்தினால் கிறிஸ்தவ ஜீவியத்தில் நிலைத்திருக்கக்கூடாமற்போய்விடுகிறார்கள். இச் செய்தியை வாசிக்கும் அன்பு சகோதரனே, பரம அழைப்புக்கு பங்குள்ள சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள். உங்களுடைய அழைப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். பவுல் சொல்லுகிறார்; நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன் என்கிறார். ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் நிச்சயமுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஆண்டவராகிய இயேசு

தம்முடைய ஊழியத்தை நிறைவேற்றின பின்பு தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும்போது; ''பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்'' (லூக்.23:46). ஆண்டவருடைய ஒப்புக்கொடுத்தல் எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா? இன்றைக்கு மரிக்கக்கூடிய அநேகர் மரண தருவாயில் என் மகனைப் பார்க்கவேண்டும் அல்லது மகளைப் பார்க்கவேண்டும் என் ஜீவன் போவதற்குள்ளாக பார்க்கவேண்டும் என்பார்கள்.

ஆனால் இயேசு தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுக்கும்போது யோசேப்பையோ அல்லது மரியாளையோ பார்க்கவில்லை. பிதாவாகிய தேவனை நோக்கி உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்றார். அதைப்போல அவருடைய சீஷனாகிய ஸ்தேவான் வல்லமையாய் பிரசங்கித்துக் கொண்டிருக்கும்போது அதைக்கேட்ட ஜனங்கள் மூர்க்கமடைந்து, அவனைப் பார்த்துப் பல்லைக் கடித்தார்கள். ''அப்பொழுது; கர்த்தராகிய இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள்'' (அப்.7:59). அப்பொழுது ஸ்தேவான் இயேசுவை நோக்கிப் பார்த்து இயேசுவே, என் ஆவியை ஏற்றுக்கொள்ளும் என்று தொழுதுகொண்டான் என காண்கிறோம். நாமும் நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடி, ஓட்டத்தை முடித்து, கர்த்தரிடத்தில் நம்முடைய ஆவியை ஒப்புவிக்கவேண்டும்.

மூன்றாவது **விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்** என்று எழுதுகிறார். இன்று எத்தனைபேர் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள்? மிகவும் சொற்ப ஜனங்களே என்று காண்கிறோம். ஐயோ, எத்தனை சோதனை, எத்தனை வேதனை என்று ஒவ்வொருநாளும் சொல்ல கேள்விப்படுகிறோம். நம்முடைய விசுவாசம் பறிபோய்விடாது பாதுகாத்துக்கொள்ள பவுலுடைய ஆலோசனை என்னவென்றால்; நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு என்று சொல்கிறார். அநேகர் மேட்டிமைச் சிந்தையினால் விசுவாசத்தை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

''அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்'' என காண்கிறோம் (1பேது.2:22,23). பிசாசு ஆண்டவரை சோதிக்கும்படியாக பல தந்திரங்களை கையாடினான். ஆனால் ஆண்டவரோ அவனை நோக்கி; அப்பாலே போ சத்தானே என்று விரட்டியடித்தார். விசுவாசத்திற்கு அநேக சோதனைகள் வரும் அந்த

சோதனைகளை சகித்து அதை மேற்கொள்ளவேண்டும். சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான் என்று யாக்கோபு சொல்லுகிறார்.

அதிகமான ஜனங்கள் சோதனை காலத்தில்தான் பின்வாங்கிப் போகிறார்கள். யூதா எழுதும்போது; ''பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராட வேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது என்கிறார் (யூதா வசனம்3). நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்ளத்தக்கதாக போராடவேண்டும்.

உங்களுடைய விசுவாசம் காக்கப்பட்டுள்ளதா? உங்களுடைய ஜீவிய காலத்திற்குள்ளாக நீங்கள் உங்கள் விசுவாசத்தை மறுதலித்தவர்களாக இருப்பீர்கள் என்றால் உங்கள் விசுவாசம் ஒன்றுமில்லாமற்போய்விடும். உங்களுடைய விசுவாசம் விலையேறப்பெற்றது. அந்த விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுங்கள். ''நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்'' என்கிறார் (வெளி.2:10). ''இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால் அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்;...'' (2தீமோ.2:11,12).

நீங்கள் ஞானஸ்நானத்திலே அவரோடுகூட மரிக்கிறீர்கள். பின்பு அவரோடுகூட உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்படுகிறீர்கள். அவர் மூன்றரை ஆண்டுகள் அநேக பாடுகளை அநுபவித்தார். அதைப்போல நீங்கள் பூமியில் உள்ளளவும் அவர் நிமித்தமாக பாடுகளை அநுபவிப்பீர்களானால் அவரோடு ஆளுகையும் செய்வீர்கள். இந்த நம்பிக்கை உங்களுக்குள் இருக்கிறதா? இந்த விதமான நம்பிக்கையினாலே ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

கேள்வி நேரம்

விசுவாசத்தை காத்துக்கொண்டவர்களுக்கு கர்த்தர் கொடுக்கும் பரிசு?

நீதியின் கிரீடம். ஆது நல்ல போராட்டத்தை போராடி, ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுகிறவர்களுமட்டுமே கிடைக்கும். இவ்விதமாக கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டபடியால் ''எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய்

எழுந்திருப்பார்கள்'' என்ற 1 கொரி.15:52-ம் வசனத்தின்படி அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். அதன்பின்பு கர்த்தர் வாக்குத்தத்தம் செய்த வாடாத கிரீடத்தைப் பெறுவார்கள். ஆனபடியால் பவுல் மேலும் சொல்லும்போது; ''இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' என்கிறார்.

அந்த நீதியின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள நல்லபோராட்டத்தைப் போராடுங்கள் உங்களுடைய ஓட்டத்தை சந்தோஷத்துடனே முடியுங்கள். **உங்களுடைய பொன்னான விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.** ''விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்'' (எபி.12:1). கர்த்தர் தாமே உங்களுடைய விசுவாச ஓட்டத்தை காத்துக்கொள்ள உங்களைப் பெலப்படுத்தும்படியாக ஜெபிக்கிறோம்.

44. கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்கள்
You Are The Epistle of Christ

உண்மை கிறிஸ்தவத்தை நாம் கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறவர்கள் மத்தியில் காணலாம். பரிசுத்த வேதாகமமும் அதையே போதிக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் அநேக நிருபங்களை புதிய ஏற்பாட்டு காலத்தில் எழுதியுள்ளார். அவர் கொரிந்து சபைக்கு எழுதிய நிருபத்தில், ''எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே. ஏனெனில் நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளியரங்கமாயிருக்கிறது; அது மையினாலல்ல, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது'' என்றார் (2கொரி.3:2,3). பவுலுடைய ஊழியத்தில் அவரால் ஏற்படுத்தப்பட்ட சபைகள் அதிகம். ஆசியா முழுமைக்கும் கர்த்தருடைய ஊழியம் பவுல் மூலமாக பரவியிருந்தது. அவர் கர்த்தருடைய ஊழியத்திற்காக தம்மையே ஒப்புக்கொடுத்தவர். அவர் மூலமாய் ஏற்படுத்தப்பட்ட சபையாருக்கு நிருபங்களை எழுதும்போது எங்கள் நிருபம் நீங்கள்தானே என்கிறார். அப்படியானால் அவர்கள் கிறிஸ்துவின் நிருபமாயிருந்திருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு ஊழியக்காரனுக்கு அவன் மூலமாய் ஏற்படுத்தப்பட்ட சபையார் நிருபமாக இருக்கவேண்டும். அவர்களைப்

புறஜாதியார் பார்க்கும்போது கிறிஸ்துவையும், அவருடைய உன்னதமான ஊழியங்களையும், அந்த ஊழியக்காரனுடைய வேலைகளையும் அவர்கள் மூலமாக பார்ப்பார்கள்.

இவ்விதமாக நாம் ஒவ்வொருவரும் நிருபங்களாக இருப்போமானால் மற்றவர்கள் நம்மிலுள்ள நற்காரியங்களை கண்டு உலகத்தில் உள்ள அனைவரும் தேவனுடைய பிள்ளைகளாக மாறக்கூடிய வாய்ப்பு உண்டாகுமல்லவா? ஒரு விவசாயின் வேலைப்பாடுகள் அவனுடைய நிலத்திலே தெரியும். அதைப்போல பவுலுடைய வேலைப்பாடுகள் அவனால் ஏற்படுத்தப்பட்ட சபைகள் மூலம் தெரியவந்தது. ஆகையால் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய நிருபமாயிருக்கிறீர்கள் என்று எழுதுகிறார்.

மேலும் ''அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும்'' என்கிறார் (1கொரி.3:12-15).

எந்த ஒரு ஊழியக்காரனாயிருந்தாலும் அவனுடைய ஊழியம் பரிசோதிக்கப்படும். அவன் சரியானபடி அஸ்திபாரமிட்டு மூலைக்கல்லாகிய கிறிஸ்துவின் மீதும், அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களின் மீதும், புத்தியுள்ள மனுஷனைப்போல கன்மலையின் மீதும் கட்டியிருப்பானேயானால் அது நிலைக்கும். அதிலே இணைக்கப்பட்டவர்களும் நிருபங்களாக இருந்து, கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறவர்களாகவும், எல்லோருக்கும் மாதிரியாகவும் இருப்பார்கள். அப்படியில்லாத பட்சத்தில் அவர்கள் பதரைப்போல பறந்து போய்விடுவார்கள். ஆகையால்தான் கர்த்தர் சீமோனைப் பார்த்து சொல்லும்போது; ''சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்''

(லூக்.22:31,32). கோதுமைக்கு முன்பாக பதர் எம்மாத்திரம். நீங்கள் கோதுமை மணிகளாக இருக்கப்பிரயாசப்படுங்கள்.

மேலும் பவுல் சொல்லும்போது; ''நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்'' என்கிறார் (2கொரி.3:18). ஒரு உண்மை கிறிஸ்தவன் அவரைப்போல மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறான். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்று படிக்கிறோம். வெறும் பெயர் மாற்றம் மட்டும்போதாது, ஜீவியம் மாற்றப்பட வேண்டும். நாமும் அவரைப்போல மாறவேண்டும். பவுல் கர்த்தருடைய அச்சடையாளங்களை தன் சரீரத்திலே தரித்துக் கொண்டிருப்பதாக எழுதுகிறார் கலா.6:17.

உருவத்திலே அல்ல. ஆவிக்குரியவராக, ஆவிக்குரிய கனிகள் நிறைந்தவராக கிறிஸ்துவைப்போல நன்மைசெய்கிறவராக கர்த்தருடைய அச்சடையாளங்களைத் தரித்துக்கொண்டார். பொதுவாக மேலை நாட்டு கலாசாரத்தை எல்லோரும் விரும்புகிறார்கள். ஆகையால் அவர்களைப்போல உடை அணிந்து கொள்ளவும் உணவு பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளவும் விரும்புகிறார்கள். ஆனால் பவுல் கர்த்தருடைய அச்சடையளாங்களை தரித்துக்கொண்டார் என காண்கிறோம். நாம் ஒவ்வொருவரும் பரிசுத்த வேதாகமத்தின் துணைகொண்டு கர்த்தருடைய சாயலை அணிந்து கொள்ள முடியும். நீங்கள் அவ்விதமாக மாறும்போது நிருபங்களாகிறீர்கள்.

2கொரி.3:3-ன் பிற்பகுதியில் அது மையினாலல்ல ஜீவனுள்ள தேவனுடைய ஆவியினாலும் என்று எழுதுகிறார். அப்படியானால் மையினால் அநேக நிருபங்களை ஆவியானவருடைய உதவியோடுகூட எழுதின பவுல் இங்கு அந்த நிருபம் நீங்கள்தானே என்பதால், ஒவ்வொருவரும் தம்மைப்போல மாறவேண்டுமென்ற எண்ணம் உடையவராயிருந்தார். ஆகையால் தான் பிலேமோனுக்கு எழுதும்போது; ''என் உள்ளம் போலிருக்கிற அவனை நீர்

ஏற்றுக்கொள்ளும்'' என்றும் ''என்னை ஏற்றுக்கொள்வதுபோல அவனையும் ஏற்றுக்கொள்ளும் என்றும் எழுதுகிறார் (பிலே.12,17). அதைப்போல தீமோத்தேயுவின் விசுவாசத்தைப் பாராட்டும்போது, ''அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும், உன் தாயாகிய ஜனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்'' என்கிறார் (2தீமோ.1:5).

தீமோத்தேயுவின் குடும்பமே அவனுடைய பாட்டி துவங்கி, தாயார் மற்றும் தீமோத்தேயு வரை விசுவாச வீரர்களாக இருந்திருக்கிறார்கள் எனக் காண்கிறோம். அப்படியானால் அவர்கள் நிருபங்களாக திகழ்ந்திருக்கிறார்கள் அல்லவா! ''நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்'' என்று விதை விதைக்கிற உவமையிலே கர்த்தர் சொல்லியிருக்கிறார் (லூக்.8:15).

அந்தப்படியாக இந்த தீமோத்தேயுவின் குடும்பம் முழுவதும் விசுவாச விஷயத்தில் கர்த்தருடைய வார்த்தையை இருதயத்தில் எழுதினவர்களாக இருந்திருக்கிறார்கள். பரிசுத்த ஆவியானவரும் அவர்களுடைய விசுவாசத்தை குறித்து வேதாகமத்தில் நன்கு வெளிப்படுத்துகிறார். நாமும் எழுத்தோடு நின்று விடாமல், நிருபங்களாக இருந்து செயல்படுவோம். ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2தீமோ.3:16,17).

மேலும், கற்பலகைகளிலல்ல என்று எழுதுகிறார். அப்படியானால் நாம் அறிந்திருக்கிறபடி பழைய ஏற்பாடு கற்பலகைகளில் எழுதப்பட்டதாயிருந்தது. அதை இஸ்ரவேலருக்கு பிதாவாகிய தேவன் மோசேயின் மூலம் கொடுத்தார். ஆனால் புது உடன்படிக்கை அப்படியல்ல என்பதை பவுல் இங்கு விளக்குகிறார். அது சதையினால் எழுதப்படுகிறது. ஒரு தேவ மனிதன் கர்த்தருடைய வசனத்தைப்

பிரசங்கிக்கும்போது அதைக் கேட்கக்கூடிய அந்த மனுஷனுடைய இருதயத்தில் அந்த வசனம் எழுதப்படுகிறது. பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்ட ஜனங்கள் ''இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து; சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்'' (அப்.2:37). இருதயத்திலே குத்தப்பட்ட படியினாலே அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்று கர்த்தரால் சபையிலே சேர்க்கப்பட்டார்கள். இந்த உடன்படிக்கை ஆவிக்குரியது.

''புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது'' (2கொரி.3:6). மேலும், ''இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ் செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்'' என்கிறார் பவுல் (ரோ.7:6). விடுதலையாக்கப்பட்ட நாம் பழமையான எழுத்துக்கு திரும்பாமல் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உண்டு பண்ணின கர்த்தருடைய வழியே சென்று நாம் நிருபங்களாக மாறவேண்டும்.

அநேக நிருபங்களை எழுதின பவுல் நீங்களே அந்த நிருபம் என்று எழுத பல காரணங்கள் உண்டு. ஒன்று இன்றைய கால கட்டத்திற்கு பார்க்கும்போது நிருபங்களை எடுத்து பிரசங்கிக்க ஒரு பிரசங்கியார் தேவை. அறுவடை மிகுதி ஆனால் ஆளோ இல்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாமே நிருபங்களாக செயல்பட்டால் ஒவ்வொரு நாளும் நாம் நடக்கும்போதும், உட்காரும்போதும், பேசும்போதும், ஒருவேலையைச் செய்யும்போதும் நம்மூலமாக கிறிஸ்துவின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டுக்கொண்டே இருக்கும்.

இதை நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா? இன்றைக்கு கிறிஸ்துவையும் அவருடைய சுத்த சுவிசேஷத்தையும் நம்மிலே அநேகர் கண்டு படிக்கவேண்டும். அப்படியானால் நாம் செய்ய வேண்டுவதென்ன? நாம் நிருபங்களாக மாறவேண்டும். மாறுவீர்களா?

கேள்வி நேரம்

நாமே நிருபங்களாக மாறுவது சாத்தியமா?

சாத்தியமல்லாத ஒரு காரியத்தை தேவன் நம்மில் எதிர்பார்க்கமாட்டார். நாம் இந்த உலகத்திற்கு நிருபங்களாக இருக்க முடியும். ஆகையால் தான் பவுல் கொரிந்துசபைக்கு எழுதும்போது ''எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும், சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே'' என்கிறார் (2கொரி.3:2). நீங்கள் உங்களுடைய சபையிலும், சமுதாயத்திலும் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற கிறிஸ்துவின் நிருபங்களாக இருக்கிறீர்களா? அப்படியில்லை என்றால் இன்றே நிருபங்களாக செயல்பட துவங்குங்கள். முற்பிதாக்கள் விட்டு சென்ற காலச் சுவடுகள் நமக்கு எத்தனை நன்மைகளை கொண்டு வருகிறது. இன்று ஆகாயத்தில் பறக்கிறோம் என்றால் அதற்கு நம் முற்பிதாக்களின் பங்கு அதிகமாக இருக்கிறது.

இதை சிலர் மறுப்பர். முற்பிதாக்களின் அஸ்திபாரம் நமக்கு இன்று கட்டிடங்களாக இருக்கிறது. அஸ்திபாரம் இல்லாமல் எந்த ஒரு வேலையும் நடைபெறாது. ஆகையால் இச்செய்தியை தியானிக்கிற நாம் வருங்கால சந்ததிக்கு ஒரு நலமாக காரியத்தை விட்டு செல்ல வேண்டுமானால் நாமே நிருபங்களாக இருந்து செயல்பட வேண்டும். அப்படி நிருபங்களாக மாறாத பட்சத்தில். நாடும், வீடும், சமுதாயமும், சபைகளும் கெட்டுவிட வாய்ப்புகள் அநேகம் உண்டு. நிருபங்களாக மாறுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

45. அவர் மாம்சத்தில் இருந்த நாட்களில்...
When He was In The Days of His Flesh...

ஆண்டவர் இயேசு மனிதனை இரட்சிக்க மாம்சத்தோடும் இரத்தத்தோடும் வெளிப்பட்டார். ''அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்'' என எபிரெய ஆசான் மிகத்தெளிவாக எழுதியிருக்கிறார் (எபி.5:7-10). அவர் மாம்சத்திலிருந்த நாட்களில்

எப்படியிருந்தாரோ அப்படியே இன்று நீங்களும் நானும் இருப்போமானால் எத்தனை ஆசீர்வாதமாக இருக்கும்! இதை என்றாவது நீங்கள் சிந்தித்ததுண்டா? மாம்சத்தில் இருக்கும் நமக்கு அநேக மாதிரியை கர்த்தர் விட்டுச்சென்று உள்ளார்.

முதலாவது, அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணினார் என்று வாசிக்கிறோம். நாம் இவ்விதமாக பரலோகத்தின் தேவனை நோக்கி ஜெபிக்கின்றோமா? ஆண்டவர் இயேசுகிறிஸ்து மாம்சத்தில் இருந்த நாட்கள் முப்பத்தி மூன்றரை வருடங்கள். அதில் குறிப்பாக மூன்றரை வருட ஊழியங்களைப் பற்றி நான்கு சுவிசேஷகர்கள் எடுத்துரைக்கின்றனர். அந்த மூன்றரை வருட ஊழியங்களில் அவர் ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார். நாம் நம்முடைய ஜீவிய நாட்களில் ஜெபத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

காரணம் சதா வேலை, வேலை என்று அழைகின்றோம். அதில் நாம் திருப்தியடைகின்றோமா என்றால் இல்லை. அப்படியிருக்கும்போது நாம் ஏன் ஆண்டவர் இயேசுவைப்போல ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது? அவர் தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ள தேவனை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபித்திருக்கிறார். நம்முடைய கண்களில் கண்ணீர் வருகின்ற அளவிற்கு நாம் உருக்கமாக தேவனை நோக்கி ஜெபித்திருக்கிறோமா? ஆண்டவர் இயேசுவை மரணக்கட்டுகளிலிருந்து உயிரோடு எழுப்பியவர் தேவன். பேதுரு தமது பிரசங்கத்தில் குறிப்பிடும்போது; ''ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரை தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சி களாயிருக்கிறோம்'' என்கிறார் (அப். 3:15).

மேலும், பல சமயங்களில் ஆண்டவர் இயேசு, பிதாவை நோக்கி ஜெபிக்கிறதை நாம் வேதாகமத்தில் வாசிக்கிறோம். யோவான் 17-ம் அதிகாரத்தில் ''தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து: பிதாவே'' என்று ஜெபித்தார். சிலுவையின் கடைசி வேளையில் அவர் ஜெபித்தபோது; ''பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனைவிட்டார்'' என்று லூக்கா23:46-ல் வாசிக்கின்றோம்.

ஆண்டவர் எந்த ஒரு சூழ்நிலையிலும் பிதாவை நோக்கி ஜெபிக்க தவறவில்லை. இன்று நாம் முதலாவது தேவனுடைய சமுகத்திற்கு

செல்கிறோமா? அநேக வேளைகளில் நாம் முதலாவது தேவ சமுகத்திற்கு செல்ல தவறி விடுகிறோம். இதற்கு என்ன காரணமென்றால், சுயநம்பிக்கை அல்லது மற்றவர்கள் மீதுள்ள நம்பிக்கை. இந்த இரண்டுக்கும் அப்பாற்பட்டு கர்த்தர் பிதாவிடம் நம்பிக்கை கொண்டிருந்தார்.

இரண்டாவது, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார். பிதாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தவராகவும் தேவனுடைய சித்தம் செய்கிறவராகவும் இருந்தார். இன்றைக்கு கீழ்ப்படிதலை பற்றி பேசுகிறோம். ஆனால் நமதாண்டவராகிய இயேசுகிறிஸ்து பிதாவுக்கு கீழ்ப்படிந்து இருந்ததுபோல நாம் கீழ்ப்படிந்து இருக்கின்றோமா? இல்லை. மற்றவர்களை பிரியப்படுத்த அவர்களுக்கு ஏற்றார்போல வாழுகின்றோம். முக்கியமான பணிகளில் இருப்பவர்கள் மேலதிகாரிகளைப் பிரியப்படுத்த முற்படுகின்றனர்.

கணவன் மனைவிக்கு எப்படி பிரியமாய் இருக்கலாம் என்று முயற்சிக்கின்றான். மனைவி கணவனுக்கு எப்படிபிரியமாய் இருக்கலாம் என்று முயற்சிக்கின்றாள். அதைப்போல ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கு பிரியமாய் இருக்கவே முயற்சிக்கின்றனர். ஆனால் கர்த்தருக்கு எப்படிப் பிரியமாய் இருக்கலாம் என்று முயற்சிப்பவர்கள் சிலர்தான். நீங்கள் யாரை பிரியப்படுத்துகிறீர்கள்? பிள்ளைகள் பெற்றாருக்கு கீழ்ப்படிந்து இருக்கவேண்டும். வேதமும் அவ்வாறே போதிக்கிறது. ''பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது'' (கொலோ. 3:20). அந்தப்படியே ஆண்டவர் இயேசுவும் மாம்சத்தில் இருந்த நாட்களில் யோசேப்பு, மரியாள் ஆகிய இருவருடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் என லூக்கா 2:51-ல் வாசிக்கிறோம்.

ஆண்டவர் இயேசு பூமிக்குரிய பெற்றார்களுக்கு மட்டுமல்ல, பரலோக பிதாவாகிய தேவனுக்கும் கீழ்ப்படிந்திருந்தார். ''அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்'' (பிலி. 2:8). கீழ்ப்படிதல் என்பது வந்துபோகின்ற ஒன்றல்ல, அது நிலையானது. அவர் உலகத்தில் மனுஷரூபமாய் இருந்த நாட்களில் தமக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட பாடுகளை நிறைவேற்றும் வரை அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்திருந்தார். அவர் உன்னதமானவர், அதிசயமானவர், பிதாவோடு ஒன்றாயிருக்கிறவர், சமாதானகர்த்தர், வல்லமையுள்ளவர், நித்திய பிதா என்றெல்லாம் அவரைக்குறித்து வாசிக்கின்றோம்.

அப்படிப்பட்டவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார் என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல். பொதுவாக மேலான பதவியில் இருக்கும் ஒருவரை கீழான பதவிக்கு அனுப்பினால் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால் உன்னதமான கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கினார். அப்படி அவர் வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்திருக்கும்போது நாம் எம்மாத்திரம்? உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள்.

மூன்றாவது, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார் என்று வாசிக்கிறோம். ஆண்டவர் ஜெபிப்பதிலும், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதிலும் பூரணரானார். முழுமைக்கு என்றுமே முக்கியத்துவம் உண்டு. அவர் தமக்கு வந்த சோதனையில் வெற்றி கண்டார். பிதாவாகிய தேவன் என்னநோக்கத்திற்காக அவரை இப்பூமிக்கு அனுப்பினாரோ அதை அவர் செய்து நிறைவேற்றினார். அதுவே என் போஜனம் என்றார். ஒவ்வொருவருக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது. அதை நிறைவேற்றினால்தான் அவர்களுக்கு நிம்மதி.

ஆனால் ஆண்டவருக்கு பிதாவின் சித்தம் செய்வதே நோக்கமாக இருந்தது. சீஷர்கள்கூட சிலவேளைகளில் பிதாவின் சித்தத்தை புரியாதவர்களாயிருந்தனர். ஆகையால் நீங்கள் தப்பான எண்ணம் கொள்கிறீர்கள் என்றார். ஆகையால் எபிரெய ஆசிரியர் எழுதும்போது; ''பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றினதேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்'' என்று எழுதுகிறார் (எபி.1:1,2). ஆண்டவர் இயேசு பிதாவின் சித்தத்தை பூரணமாக நிறைவேற்றினபடியால் பிதாவாகிய தேவன் அவரை தம்முடைய வலது புறத்தில் வீற்றிருக்கும்படி அருள் செய்தார்.

இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு சகோதரனே, சகோதரியே, இயேசுவானவர் தமக்கும், தம்முடைய உபதேசத்திற்கும் கீழ்ப்படிகின்ற அனைவருக்கும் நித்திய இரட்சிப்பை கொடுக்க வல்லவராயிருக்கிறார். ஆகையினால் அவர் உபதேசிக்கும்போது, ''என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டென்று மெய்யாகவே

மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (யோவா.6:47). நீங்கள் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறீர்களா? இன்றைக்கு அநேகர் பிதாவாகிய தேவன் இந்த உலகத்தில் யாரை அறிமுகம் செய்திருக்கிறாரோ அவருக்குச் செவிகொடாமல், உலகத்திற்கும் கட்டுக்கதைகளுக்கும் செவிகொடுத்து தேவனுடைய வழியை விட்டு விலகிப்போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர் இல்லாமல் இரட்சிப்பு இல்லை. பேதுரு தமது பிரசங்கத்தில் ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்'' (அப்.4:12).

இந்த இரட்சிப்பு ஆத்தும இரட்சிப்பு. மனிதன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை (அதாவது தன் ஆத்துமாவை) நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன என வேதம் கேள்வி எழுப்புகிறது. மனிதனுடைய ஆத்துமா காக்கப்பட அவன் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்றுக்கொண்டு, அவர் வழி செல்லும்போது அவனுக்கு நித்திய இரட்சிப்பை கொடுக்க அவர் வல்லவராயிருக்கிறார். மேலும், ''தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுழுய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்'' (எபி.7:25).

மரித்தவர்களும் மௌனத்தில் இறங்குகிறவர்களும் கர்த்தரை துதியார்கள். ஆனால், மரித்து உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு இன்றும் என்றும் நமக்காக விண்ணப்பம் பண்ணுகிறவராயும், எந்த ஆத்துமாவையும் முற்றுமுழுய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். அழியாத ஆசாரியத்துவத்தை பிதாவாகிய தேவனிடத்தில் பெற்றிருக்கிறார். ''நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி **என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர்** என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்'' என்று எபிரெய ஆசான் தெளிவுபடுத்துகிறார் (எபி.7:17).

கேள்வி நேரம்

ஆண்டவர் இயேசுவைப்போல மாம்சத்தில் இருப்பது சாத்தியமா?

சாத்தியமே. உன்னதத்தின் தேவனுடைய குமாரன் நம்மைப்போல மாம்சத்தில் தோன்றி தம்மைத்தாமே தாழ்த்தி, பிதாவின் சித்தம் செய்கிறவராகவும், பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் ஜெபிக்கிறவராகவும், அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான

பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார் என தியானித்தோம். அவர் எல்லோருக்கும் மூத்த குமாரனாக இருக்கிறார். உயிர்த்தெழுதலில் முதற்பலனாக இருக்கிறார்.

அவரைப்போல நாமும் மாம்சத்திலிருக்கும் நாட்களில் இருப்போமானால் உன்னதத்தின் தேவன் நம்மையும் அவரோடுகூட உயிர்ப்பிப்பார். ஆண்டவர் இயேசுவுக்குக் கீழ்ப்படியும்போது அளவில்லா ஆசீர்வாதம் பெறுவோம். இன்றே அவரைப்போல பேசிடவும், ஜெபித்திடவும், கீழ்ப்படியவும், தேவசித்தம் செய்யவும் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

46. ஜாக்கிரதையாயிருங்கள்
Be Serious

நாம் ஏன் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும் என்று நினைப்பீர்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் ''எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்'' என்று போதிக்கிறது (1பேது.4:7). நாம் அநேக காரியங்களில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆனால் ஆவிக்குரிய காரியங்களில் மிகவும் மெத்தனமாகவே இருந்து விடுகிறோம். காரணம், தேவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கை. இப்படிப்பட்ட நம்பிக்கை இருப்பது நல்லதுதான்.

அதேவேளையில் **எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று** என்று சொல்லப்பட்ட வசனத்தை நாம் கவனிக்க வேண்டும். முடிவு என்று சொல்லும்போது ஒரு காரியத்திற்கு மட்டுமல்ல எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று என்று கர்த்தருடைய வேதம் நமக்குப்போதிக்கிறது. எங்குபார்த்தாலும் பூமி அதிர்ச்சிகளும், பேரழிவுகளும் காணப்படுகிறது. மேலும், நோவா காலத்தில் நடந்ததுபோலவே நடந்துகொண்டு வருகிறது. ஜனங்கள் கொள்வதற்கும் கொடுப்பதற்கும் முக்கியத்துவம் கொடுத்து தேவ பக்தியற்றவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பிரசங்கி சொல்லுகிறான்: ''ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு; வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு'' என்கிறான் (பிர.3:1). ஒவ்வொரு மனிதனுக்கும் பிறக்க ஒரு காலமுண்டு, இறக்க ஒரு காலமுண்டு.

இதை நாம் சிந்திக்கிறோமா? அதைப்போலவே ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. நாம் காண்கிற அனைத்தும் ஒரு நாளில்

அழிந்துபோகும் ஆனால் தேவனுடைய வசனமோ என்றும் அழிந்துபோவதில்லை, அந்த அழிந்துபோகாத கர்த்தருடைய வசனத்திதை நோக்கிப்பாருங்கள். மனிதன் ஒவ்வொரு நாளும் தன் வாழ்க்கையில் முன்னேற்ற பாதையில் இருக்கப் பிரயாசப்படுகிறான். ஆனால் அவன் மனதுக்கோ திருப்தியில்லை. கர்த்தர் நமக்கு எவ்வளவு பெரிய காரியங்களை செய்திருக்கிறார் என்று எண்ணிப் பார்ப்போமானால் அது சொல்லாலே சொல்லிவிடமுடியாது அவ்வளவு பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார்!

ஆண்டவர் இயேசு கிறிஸ்து ஒரு முறை தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார். ''கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்த தானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பி யிருப்பார்கள்'' என்று சொல்லத் தொடங்கினார் (மத்.11:21). ஒருவரும் தேவனுக்கு வேண்டாதவர்கள் அல்ல. ஏனெனில் நாம் அவருடைய பிள்ளைகளாயிருக்கிறோம். நாம் மனந்திரும்பும்படியாக பல சந்தர்ப்பங்களைக் கொடுக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் அநேக அற்புதமான காரியங்களை செய்கிறார். அதையெல்லாம் கண்டும், கேட்டும், பார்த்தும் மனந்திரும்பவில்லை யென்றால், அவருக்குத்தான் எத்தனை மனவேதனை இருந்திருக்கும் என்று நீங்கள் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா?

இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு நண்பரே, கிறிஸ்துவுக்குள்ளான சகோதரனே, சகோதரியே முடிவு காலத்தில் இருக்கிற நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாயிருந்து கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவும். அழிந்துபோகின்ற உலக காரியங்களை வெறுத்து என்றென்றும் அழியாதிருக்கிற வசனத்திற்கு செவிகொடுத்து, அதன்படி, நடக்கும்போது நிலையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம். ''வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (லூக்.21:33). ஆகையால், கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியதுவம் கொடுங்கள். நாம் பார்க்கிற எல்லாமே ஒரு நாள் அழிந்துபோகும். மனிதனுடைய ஆத்துமா என்றுமே அழிந்துபோவதில்லை. அதை பிதாவாகிய தேவன் நமக்குக் கொடுத்தார். அவர் அழியாதவர், ஆகையால் அவர் ''இருக்கிறவராகவே இருக்கிறவர்''. அவர் நமக்குக் கொடுத்த ஆத்துமாவும் அழியாதது. உன் ஆத்துமாவை உண்டாக்கின தேவனுக்கு அதை ஒப்புக் கொடுத்துள்ளாயா? உடனே ஒப்புக்கொடுக்கப் பிரயாசப்படு.

வாழ்க்கையில் நாம் எப்பொழுதும் தெளிவானவர்களாயிருக்க பிரயாசப்படவேண்டும். ஏனெனில் அநேகர் தெளிவில்லாமல் காரியங்களை சிறப்பாக செய்வதில்லை. பல சமயங்களில் குழப்பமான சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர். சிலர் தவறான முடிவு எடுத்துவிடுகின்றனர். ஆகையால் **தெளிந்தபுத்தியுள்ளவர்களாயிருக்க** வேதம் நம்மை எச்சரித்து புத்திசொல்லுகிறது. மத்தேயு எழுதின புத்தகம் 25:9-ல் புத்தியுள்ள ஐந்து கன்னிகைகளைக் குறித்துப் படிக்கிறோம். ''புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள்''. மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட அந்தப் பத்து கன்னிகைகளில் ஐந்துபேர் புத்தியாக பதில்சொன்னார்கள்.

ஒருவேளை அவர்கள் அந்தநேரத்தில் அதை பகிர்ந்து கொடுத்திருந்தால் அவர்களும் மணவாளனோடு சென்று இருக்கமுடியாது மற்ற ஐந்து கன்னிகைகளும் சென்று இருக்க முடியாது அல்லவா? இப்படித்தான் சிலவேளைகளில் நாம் ஞானமாக நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். ''புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்'' என்று நீதி.14:1-ல் படிக்கிறோம். நீங்கள் எப்படிப்பட்ட ஸ்திரீயாக இருக்கிறீர்கள்? புத்தியுள்ள ஸ்திரீகளாக இருந்து உங்களுடைய வீட்டைக் கட்டுங்கள். கர்த்தர் அந்தப் பொறுப்பை சகோதரிகளாகிய உங்களிடம் கொடுத்துள்ளார். ஒரு குடும்பத்திற்கு கணவன் தலையாயிருக்கிறான் (எபே.5:23). மனைவியானவள் அந்தக் குடும்பத்தைக் கட்டி வளர்க்கக்கூடிய பொறுப்புடையவளாயிருக்கிறாள்.

அநேகர் தவறான காரியங்களில் கவனமாக இருப்பார்கள். நாம் நலமான காரியங்களை செய்வதிலும், போதிப்பதிலும், மற்றவர்கள் மத்தியில் சாட்சியாக ஜீவிப்பதிலும் தெளிவானவர்களாயிருக்கவேண்டும். பேதுரு இப்படியாக சொல்லுகிறார்; ''உங்களில் இருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்து கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்'' என்கிறார் (1பேது.3:15). இந்தவிதமான ஆயத்தம் உங்களில் இருக்கிறதா? நாமே நம்பிக்கையற்றவர்களாக அல்லது கர்த்தருடைய நாமம் தூஷிக்கப்படும்படியாக நடப்போமென்றால் தெளிவில்லாதவர் களாயிருப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; ''அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்தரியாமலுமிருந்து, தங்கள்

சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது. அவர்கள் தங்களை ஞானிகளென்று சொல்லியும் பயித்தியக்காரராகி, அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள், ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றினார்கள். இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்'' (ரோம.1:21-24). இன்றைக்கு இவ்விதமாக தேவனால் ஒப்புக்கொடுக்கப்பட்ட அநேகரை பார்க்கிறோம். தேவனுடைய சித்தத்தை புரிந்துகொள்ளாத ஒவ்வொருவனும் இவ்விதமான கேடான சிந்தைக்கு அல்லது அசுத்தத்தை செய்யும்படியாக ஒப்புக் கொடுக்கப்படுகிறான்.

இச்செய்தியை வாசிக்கிற சகோதரனே, நீ தேவனை அறிந்துள்ளாயா? அல்லது நீ தேவனை அறிந்தும் அவரை தேவனென்று மகிமைப்படுத்தாதிருக்கின்றாயா? அவர் உனக்காக ஒரு அற்புதமான திட்டத்தை வைத்துள்ளார் என்பதை நீ அறிவாயா? உன்னை தம்மோடு நித்திய நித்தியமாக வைத்துக்கொள்ளும்படியாக தேவன் நித்தியமான வாசஸ்தலத்தை உனக்காக ஏற்படுத்தியிருக்கிறார். நீ அந்த வாசஸ்தலத்தில் பிரவேசிக்க கர்த்தருடைய கட்டளைகளையும் கற்பனைகளையும் கைக்கொள். அது எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமையாயிருக்கிறது.

மூன்றாவதாக அந்த வசனத்தில் ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள் என்று வாசிக்கிறோம். அநேகர் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. காரணம் என்னவென்றால், கர்த்தர் நம் தேவைகளை அறிவார் என்று சொல்லுகின்றனர். ஜெபம் நம்மை தேவனிடத்திற்கு வழிநடத்துகிறது. நம்முடைய அநுதின காரியங்களை ஆண்டவர் இயேசுவின் மூலம் ஜெபத்தினால் தேவசமுகத்திற்கு தெரியப்படுத்துகிறோம். மேலும் ஜெபம் நம்மை பாதுகாப்பு வலையத்திற்குள் கொண்டு செல்கிறது. மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் 26-ம் அதிகாரத்தில் ஆண்டவர் ஜெபிக்கும்படியாக சில சீஷர்களை அழைத்துக்கொண்டு கெத்செமனே என்னப்பட்ட இடத்திற்குச் சென்றார். ''அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி, சற்று அப்புறம்போய், முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்.

பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரை பண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா? நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்''. இன்று அநேகருக்கு ஜெபம் என்று சொல்லிவிட்டாலே தூக்கம் வந்துவிடுகிறது. ஒவ்வொரு மணித்துளியும் ஆண்டவர் எவ்வளவாய் நமக்காக பாடுபட்டார் என்பதை நினைத்து நாமும் அவரைப்போல ஜெபிக்க வேண்டும்.

கேள்வி நேரம்

நாம் ஜாக்கிரதையாயிராவிட்டால் என்ன நடக்கும்?

களைகளை சத்துரு விதைப்பான். மத்.13:24-30 வசனங்களில் ''பரலோகராஜ்யம் தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது. மனுஷர் நித்திரை பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள் களைகளை விதைத்துவிட்டுப் போனான். பயிரானது வளர்ந்து கதிர்விட்டபோது, களைகளும் காணப்பட்டது. வீட்டெஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து; ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னே அதில் களைகள் எப்படி உண்டானது என்றார்கள். அதற்கு அவன்; சத்துரு அதைச் செய்தான் என்றான். அப்பொழுது வேலைக்காரர்; நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா? என்று கேட்டார்கள். அதற்கு அவன்; வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கள்.

அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி: முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள்; கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்துவையுங்கள் என்பேன் என்று சொன்னான்''. மனுஷர் நித்திரை பண்ணுகையில் என்ன நடந்தது பார்த்தீர்களா? நாமும் ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிராவிட்டால் சத்துரு வந்து களைகளை விதைத்துவிடுவான். ஆகையால் விழிந்திருந்து ஜெபியுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

"என் கட்டளைகளையும் என் போதகத்தையும்
உன் கண்மணியைப்போல் காத்துக்கொள்,
அப்பொழுது பிழைப்பாய்" நீதி. 7:2

47. சிந்தை
Mind

உன்னுடைய சிந்தை எதைப்பற்றியதாக இருக்கிறது. பாவத்தில் கிடக்கும் மனிதனை மீட்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு பிதாவின் சித்தத்தை நிறைவேற்றும்படியாகவே சிந்தித்தார். அவர் தம்முடைய சீஷர்களுக்குப் போதிக்கும்போது; ''மனுஷகுமாரன் பல பாடுகள்பட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட்டு, மூன்றாம் நாளைக்குப்பின்பு உயிர்த்தெழுந்திருக்க வேண்டியதென்று அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கினார்'' (மாற்.8:31). இதைக் கேட்ட அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய பேதுரு என்பவன் அவரைத் தனியே அழைத்துக்கொண்டுபோய், அவரைக் கடிந்துகொள்ளத் தொடங்கினான்.

அதற்கு அவர் ''பேதுருவை நோக்கி: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்திக்காமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்று சொல்லி, அவனைக் கடிந்து கொண்டார்'' (மாற்.8:33). மனுஷகுமாரன் பாடுபட்டு, மூப்பராலும் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளப்பட்டு, கொல்லப்பட வேண்டியது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. வேதவாக்கியங்களும் அந்தப்படியே நிறைவேறுகிறது. இதை அறியாத பேதுரு மனுஷருக்கு ஏற்றபடியாக சிந்தித்து ஆண்டவர் மரிக்கக்கூடாது என்பதற்காக அவரைத் தனியே அழைத்துக் கொண்டுபோய் கடிந்துகொண்டான். இதனை கர்த்தர் ஏற்றுக்கொள்ளவில்லை. இன்றைக்கும் அநேகர் இப்படித்தான் தேவனுடைய சித்தத்தை தவறாக புரிந்து கொண்டு இது நடக்கக்கூடாது என்று நினைக்கின்றனர். பிதாவின் சித்தமில்லாமல் ஒன்றும் தரையிலே விழாது என்பதை நாம் ஒருக்காலும் மறந்துபோக வேண்டாம். தேவன் தம்முடைய சித்தத்தின்படியாக ஒவ்வொன்றையும் செய்துவருகிறார்.

ஆகையால், நாம் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்தியாமல் பிதாவுக்குரிய காரியங்களையே சிந்திக்கவேண்டும். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினுடைய சிந்தையும் அதுவாகத்தானிருந்தது. ஆனபடியால் பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதும்போது ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது என்றார்'' (பிலி.2:5). இன்று கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவருக்கும் இப்படிப்பட்ட சிந்தை இருக்குமானால் உலகமுழுவதும் தேவனுடைய ஜனங்களாகவே காணப்படுவார்கள். அது எத்தனை ஆனந்தமாக இருக்கும்.

உலகமுழுவதும் தேவனுடைய சுவிசேஷ சத்தியம் சகலஜனங்களுக்கும் அறிவிக்கப்பட்டுவருகிறது ஆகையால், ஒருவரும் அதை எனக்கு சொல்லவில்லை என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் ''சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. அவர்கள் தேவனை அறிந்தும், அவரை தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து, தங்கள் சிந்தனை களினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது'' என்று பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.1:18-21). இப்படியாக அநேகர் தங்களுடைய சிந்தனைகளினாலே வீணராக போய்க்கொண்டிருக்கிறார்கள். வீணானவைகளை நமஸ்கரித்து வீணாய் ஆராதனைசெய்கிறார்கள்.

தேவன் மனிதனுக்கு சிந்திக்கக்கூடிய ஆற்றலைக் கொடுத்திருக்கிறார். அவன் பூமியில் வாழும் நாட்களில் நலமான காரியங்களைத் தேர்வு செய்யமுடியும். தேவன் மனிதனை ஒரு மிருகத்தைப்போல படைக்கவில்லை. அப்படிப்படைத்திருப்பாரேயானால் அவனும் ஒரு மிருகத்தைப்போல வாழ்ந்துகொண்டே இருப்பான். மனிதன் தேவனுடைய சாயலினால் படைக்கப்பட்டபடியால் மிருகத்திலிருந்து வேறுபட்டவனாகவே காணப்படுகிறான். மிருகம் மிருகமாகவே இன்றுவரை இருந்து வருகிறது. மனிதன் சிந்திக்கும் திறமையுடையவன். இன்று பலவிதமான கண்டுபிடிப்புகள் வருவதற்கு என்ன காரணம்? அவனுடைய முற்போக்காக சிந்தனையே! இப்படி நவீன கண்டுபிடிப்புகள் வளர்ந்து வருகிறவேளையிலும் அழிவில்லாத தேவனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷர்கள் பறவைகள் மிருகங்கள் ஊரும் பிராணிகள், ஆகிய இவைகளுடைய ரூபங்களுக்கு ஒப்பாக மாற்றிவருகிறார்கள்.

தேவனைக்குறித்து ஜனங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டிருந்தும் மனிதனுடைய சிந்தனையானது தேவனுடைய மகிமையை, அழிவுள்ளவைகளுக்கு ஒப்பாக மாற்றி தொழுதுகொள்ளச் செய்கிறது. இதினிமித்தம் தேவன் அப்படிப்பட்டவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு

ஒப்புக்கொடுத்தார். மேலும் அவர் சொல்லும் போது; தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார் என்று பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின முதலாம் அதிகாரத்தின் பிற்பகுதியில் வாசிக்கிறோம். உங்களுடைய சிந்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது? சிந்திப்பதிலே சிலர் நலமான காரியங்களைக் குறித்து யோசிக்கிறார்கள். அநேகர் தீமையான காரியங்களைக் குறித்து யோசிக்கிறார்கள். சாலொமோன் தன்னுடைய நீதிமொழிகள் புத்தகத்தில் இவ்விதமாக சொல்லுகிறார்.

''தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்களல்லவோ? நன்மையை யோசிக்கிறவர்களுக்கோ கிருபையும் சத்தியமுமுண்டு'' என்கிறார் (நீதி.14:22). இஸ்ரவேலின் முதல் ராஜாவை நாம் அறிவோம். அவன் தாவீதை கொல்ல பல முறை முயற்சித்தான். அப்பொழுது அவனுடைய கைக்கு தாவீதை கர்த்தர் காப்பாற்றினார். ஆனால் சவுலை கொல்ல பல சந்தர்ப்பங்கள் தாவீதுக்கு வந்தது அவனோ அவர் தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டவர், கர்த்தர் அபிஷேகம்பண்ணின என் ஆண்டவன்மேல் என் கையைப் போடும்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக என்று சொல்லி சவுலைக் கொலை செய்யபயந்தான். பார்த்தீர்களா!? மேற்கண்ட வசனத்தின்படியாக நன்மையை யோசித்த தாவீதோடு கிருபையும் சத்தியமும் இருந்தது. ஆனால் சவுலுக்கோ அவைகள் கிடைக்காமல் தேவனுடைய ஆவியானவர் அவனை விட்டு விலகினார் என்று காண்கிறோம்.

அவன் தன் பட்டயத்தை நட்டு அதில் விழுந்து இறந்துபோனான். தீமையை யோசிக்கிறவர்கள் தவறுகிறார்கள் என்ற வசனத்தின்படி அவன் தேவனுடைய வழியை விட்டு தவறிப்போனான். இவைகள் எல்லாம் நாம் நலமான காரியங்களை சிந்திக்கவும் யோசிக்கவும் படிப்பினையாக இருக்கிறது. எண்ணம்போல் வாழ்வு என்று சொல்வார்கள். உண்மைதான், நாம் நலமான காரியங்களை சிந்தித்தால், நலமான வாழ்க்கை நமக்கு கிடைக்கும். இதினாலே நீடித்த நாட்கள் வாழும் பாக்கியத்தைப்பெறுவோம்.

சத்தியத்தில் பல வருடங்கள் நிலைத்திருக்கிறவர்கள்கூட சிலவேளைகளில் தவறான உபதேசங்களுக்கு செவிகொடுத்து விலகிப்போகிறார்கள். இதைக்குறித்து பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது ''நீங்கள் நன்றாய் ஓடினீர்களே; சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்குத் தடைசெய்தவன் யார்? இந்தப் போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல. புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும். நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்க

மாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக்குறித்து நம்பிக்கையாயிருக்கிறேன்; உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்'' என்கிறார் (கலா.6:7-10).

சுவிசேஷம் ஒன்றே, வேறொரு சுவிசேஷம் இல்லை. சிலர் கலகப்படுத்தும்படியாக வேற்றுமையான உபதேசங்களை போதிக்கிறார்கள், வேதாகமத்திற்கு விரோதமாக செயல்படுகிறார்கள், வேதாகமத்தில் சொல்லப்படாத காரியங்களை சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறார்கள். ஆகையால் வெளிப்படுத்தின விசேஷபுத்தகத்தில் இப்படியாக நாம் வாசிக்கிறோம். ''இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது; ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால், இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன்மேல் கூட்டுவார். ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப்போட்டால், ஜீவபுஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்தப் புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும், அவனுடைய பங்கை தேவன் எடுத்துப்போடுவார்'' என்று வாசிக்கிறோம் (வெளி.22:18,19). இந்த பயம் ஒவ்வொருவருக்கும் இருக்குமானால் யாரும் தேவனுடைய வசனங்களை கூட்டி சொல்லவோ, அல்லது குறைத்துச் சொல்லவோ முற்படமாட்டார்கள். உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்வார்கள். வேத வசனமும் அதையே நமக்குப் போதிக்கிறது.

இரண்டு வகையான சிந்தையைக் குறித்து வேதாகமம் நமக்கு மிகத்தெளிவாகப்போதிக்கிறது. ஒன்று மாம்சசிந்தை மற்றொன்று ஆவியின் சிந்தை. உங்களுடைய சிந்தை எப்படிப்பட்டதாக இருக்கிறது? ''மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்'' என்கிறது (ரோம.8:6). மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மேலும் மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல..

மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாயும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும். நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கும்போது ஆவிக்குரிய கிறிஸ்தவராக இருக்கிறீர்கள். உங்கள் சரீரம் கிறிஸ்துவின் சரீரமாயுமிருக்கிறது. கிறிஸ்து

இயேசுவிலிருந்த சிந்தை உங்களில் இருக்கும்போது உங்கள் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்படும். நீங்கள் அவருடையவர்களாயிருக்கிறீர்கள். ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. நீங்கள் ஆவிக்குரியவைகளை சிந்தித்து வளருங்கள்.

கேள்வி நேரம்

நாம் நம்முடைய சிந்தையில் பாவம் செய்ய வாய்ப்புள்ளதா?

ஆம், அதிகமாகவே உள்ளது. ஆண்டவர் இயேசு இது குறித்துப்பேசும்போது; ''விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று'' என்கிறார். பூர்வத்தில் விபசாரஞ்செய்தால்தான் பாவம். ஆனால் புதுஉடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற நாம் இருதயத்தில் இச்சைகொண்டு சிந்தித்தலே பாவம்.

எனவே நம்முடைய சிந்தையை நாம் பாதுகாக்க வேண்டிவர்களாயிருக்கிறோம். இன்றைக்கு நூற்றுக்கு தொண்ணூறு சதவீதத்தினர் தங்களுடைய சிந்தையில் பாவங்களை செய்துகொண்டே இருக்கின்றனர். இவைகளிலிருந்து நீங்கள் காக்கப்பட கிறிஸ்துவுக்கு ஏற்றவைகளையே சிந்தியுங்கள். தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக!

48. தேவன் பிரிவினையை ஏற்றுக்கொள்ளார்
God Won't Accept Division

பிரிவினையானது மிக கொடிய நோய்போன்றது. புதிது புதிதாக தோன்றும் நோய்களுக்கு மருந்து இல்லாமற்போகலாம். ஆனால் பிரிவினையை முறியடிக்க ஏற்ற மருந்து பரிசுத்த வேதாகமத்தில் உண்டு. ''பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான், எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான்'' என நீதி.18:1-ல் வாசிக்கிறோம். பிரிவினையைக் கர்த்தர் அனுமதிக்கிறதில்லை. ஏனென்றால் ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?'' என்ற கேள்வியை அப்போஸ்தலனாகிய பவுல் (1கொரி.1:13)-ல் எழுப்புகிறார்.

ஆனால் நம்மில் அநேகர் நான் அந்த ஊழியனைச் சார்ந்தவன். அந்த குரூப்பில் சேர்ந்து ஊழியஞ்செய்கிறேன். உங்களோடு பேசினால் என்னை அவர்கள் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள் என்று சொல்வார்கள்.

அந்தியோகியாவில் உள்ள சீஷர்களுக்கு முதல் முதல் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இப்பெயர் வழங்கப்பட்ட போது நான் பவுலை சேர்ந்தவன் என்றோ அல்லது நான் பேதுருவை சேர்ந்தவன் என்றோ ஒருவரும் சொல்லவில்லை. எல்லோரும் கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களாகயிருந்தபடியால் **கிறிஸ்தவர்கள் என்ற பெயர் வழங்கப்பட்டது.**

இன்றும் நம் ஆண்டவர் நமக்கு போதிக்கும் வசனம் இதுதான் ''ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்: ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்'' என்கிறார் (யோவா.12:26). நீங்கள் இயேசுவைப் பின்பற்றினால் உங்களுக்குள்ளே பிரிவினையும், பிரிவினை ஆவியும், பிரிவினை சபையும் இருக்காது.

ஆண்டவர் ஜெபிக்கும்போது ''நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்'' என்று ஜெபிக்கிறார் (யோவா.17:22). தேவன் பிரிந்து இருக்கவில்லை. பிதா குமாரன் பரிசுத்தஆவியானவர் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என வேதம் நமக்கு தெளிவாக போதிக்கிறது. தேவன் தம்முடைய சித்தத்தை குமாரன் மூலமாகவும் பரிசுத்தஆவியானவர் மூலமாகவும் வெளிப்படுத்துகிறார். கிறிஸ்துவானவர் உயிர்த்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என பார்க்கிறோம். அவரோடு அந்த நித்தியத்தில் வாழப்போகும் நாம் பிரிவினையோடு இருந்தால் எப்படி? தாவீது ராஜா பாடும்போது ''இதோ, சகோதரர் ஒருமித்துவாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?'' என்று பாடுகிறார் (சங்.133:1). உண்மைதான் ஒருமித்து வாசம்பண்ணுகிற இடத்தில் நன்மையும் இன்பமும் காணப்படும். அங்கே தேவசமுகம் இருக்கும்,

தேவ ஆசீர்வாதத்தைக் காணலாம். நீங்கள் இருக்கிற இடம் இப்படிப்பட்டதாக இருக்கிறதா? அந்தவிதமாக இருக்கிறவர்களோடு சேர்ந்து தேவனை துதியுங்கள், அவரை தொழுதுகொள்ளுங்கள். ஏனென்றால் அப்போஸ்தலனாகிய பவுல் உத்தம ஊழியனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ''அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் நாடு'' என்று எழுதுகிறார் (2தீமோ.2:22). அந்தவிதமான மக்களோடு தேவனை தொழுதுகொண்டால்தான் நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் கண்டடையமுடியும்.

பிரிவினைக்கு மூலகாரணமாயிருப்பது பகை. ''தன் சகோதரனைப்பகைக்கிற எவனும் மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது''(1யோவா.3:15). கொலை என்பது கொடுரமான செயல். இதைக்குறித்து கர்த்தர் குறிப்பிடும் போது, ''கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்'' என்று கர்த்தர் உரைக்கிறார் (மத்.5:21,22). முன்னே கொலை செய்தால்தான் குற்றம்.

ஆனால் தற்போது நியாயமில்லாமல் தன் சகோதரனை கோபித்துக்கொண்டாலே குற்றம் என்று வாசிக்கின்றோம். இப்படியிருக்க நாம் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்வதோ, மூடன் என்று சொல்லுகிறதோ மாபெரும் தவறாக இருக்கிறதல்லவா? மேலும் '' தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?''என்ற கேள்வியை யோவான் எழுப்புகிறார் (1யோவா.4:20). இங்கே தன் சகோதரனைப் பகைக்கிறவன் பொய்யன் என திருமறை விளக்குகிறது.

திருமறை ஒருக்காலும் பொய்யுரையாது என்பது நாம் அறிந்த உண்மை. ஆக, சகோதரனைப் பகைக்கிறவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை என்று அறிகிறோம். ஒருவேளை அவனுக்குள் சத்தியம் இருக்குமேயானால் பொல்லாங்கனுக்குள், அதாவது முழுவதும் பாவத்தில் கிடக்கும் பாவியை எப்படி கிறிஸ்துவானவர் மன்னித்து ஏற்றுக்கொள்கிறாரோ, அதே சிந்தை அவனுக்குள்ளும் இருக்குமல்லவா? கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே நமக்குள்ளும் இருக்கக்கடவது.

தேவ சமூகத்தில் காணிக்கை செலுத்த வரும்போது ''உன்பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைக் செலுத்து'' (மத்.5:23,24). கர்த்தர் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் முன்பு

உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து என்கிறார். இன்றைக்கு எத்தனைபேர் மற்றவர்களோடு சமாதானமாக இருந்து காணிக்கை செலுத்துகிறார்கள் என்று கணக்கிட்டால் மிகச் சொற்பமானவர்களே என்று கண்டறிவோம்.

இவ்வசனத்தை யாருக்கோ சொன்னதுபோல அனேகர் எடுத்துக்கொண்டு மெத்தனமாக இருந்து விடுகின்றனர். ஒப்புரவாகாமல் கொடுக்கும் காணிக்கையை கர்த்தர் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளார். ஒரு சகோதரனோ அல்லது ஒரு சகோதரியோ காண்கின்ற சகோதரர்களிடத்தில் கோபமாயிருப்பதற்குப் பல விதமான காரணங்களை சொல்லுவார்கள். அவைகள் எப்படிப்பட்டவை களாயிருந்தாலும் தேவசமுகத்தில் வரும்போது அவைகள் மன்னிக்கப்படவேண்டியவைகள். மேலும், ஆண்டவர் இயேசு சொல்லும் வசனங்களை கவனியுங்கள்: ''நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்கிறார்'' (மாற்.11:25,26).

''இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளி யென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிற தென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே''(ரோம.14:10). ஒருவன் நின்றாலும் விழுந்தாலும் அவன் தன் தேவனுக்கே கணக்குக்கொடுக்கவேண்டும். மற்றவர்களை குறைசொல்லுவதோ அல்லது குற்றமாக தீர்ப்பதோ நம்முடைய வேலையல்ல. நாமெல்லோரும் ஒரு நாள் தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக நிற்போம் அப்பொழுது நியாயாதிபதியாகிய கர்த்தர் இயேசு நம்மை நியாயந்தீர்ப்பார். நாம் தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும். கர்த்தர் சொன்ன காரியங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியது நமது கடமை. அதைவிடுத்து அதற்கு வியாக்கியானம் கொடுத்துக்கொண்டு காலத்தை தள்ளுவோமானால் நியாயத்தீர்ப்புக்கு எப்படி தப்புவோம்? அவருடைய வசனமே நம்மை ஒருநாளில் நியாயந்தீர்க்கும். ஆகையால் மற்றவர்களைக் குற்றப்படுத்தி பிரிவினையை உண்டாக்காமல் கிறிஸ்துவானவர் எல்லோரிடத்திலும் அன்பாயிருந்ததுபோல நாமும் அன்பாயிருப்போம். பிரிவினை பாதாளம் வரை செல்லும். ஐக்கியம் அன்பு இருக்கும் இடமட்டும் செல்லும் என்பதை அறிவீரா! நீங்கள் எதை நாடப்போகின்றீர்கள்?

பிரிந்துபோன தேமாவை குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; என்னவென்றால், ''தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்; கிரெஸ்கே கலாத்தியா நாட்டிற்கும், தீத்து தல்மாத்தியா நாட்டிற்கும் போய்விட்டார்கள். லூக்கா மாத்திரம் என்னோடே இருக்கிறான். மாற்குவை உன்னோடே கூட்டிக்கொண்டுவா; ஊழியத்தில் அவன் எனக்குப் பிரயோஜனமுள்ளவன்'' என்று எழுதுகிறார் (2தீமோ.4:10,11). இந்த தேமாவைப்போல உலக ஆசையில் இழுக்கப்பட்டு பிரிந்து போகிறவர்களை அதிகமாக காண்கிறோம். அவர்களுடைய வாழ்க்கை மிக சிறப்பானதாக இருக்கிறதா என்று கவனித்துப்பார்த்தால். பரிசுத்த வேதாகமம் போதிப்பதுபோல; ''அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்;'' (மத்.12:45).

இன்றைக்கு இப்படி ஆசீர்வாதத்தை இழந்த குடும்பங்களை நாம் காணமுடியகிறது. முந்தினோர் பிந்தினோராகவும் பிந்தினோர் முந்தினோராகவும் இருக்கின்றனர். பிரிந்துபோகிறவர்கள் மந்தையிலிருந்து சிதறடிக்கப்படுகிறார்கள். ஓநாய்கள் அவர்களை பட்சித்துப்போடுகிறது. நீங்கள் மந்தையில் இருந்து மகிமையின் கர்த்தரை நோக்கிப்பார்க்கிறீர்களா? அல்லது காணல் நீரை பார்த்து ஓடி காணாமற்போகிறீர்களா? தேவன் பிரிவினையை விரும்பவில்லை நாமெல்லோரும் ஒன்றாயிருக்கவே விரும்புகிறார். மேய்ப்பனின் சத்தம் கேட்டு மேய்ப்பனண்டை திரும்புங்கள்.

கேள்வி நேரம்

பிரிவினைக்கு மூலகாரணம் யார்?

பிசாசு என்று சொல்லப்படும் சாத்தானே எல்லாவற்றிற்கும் காரணமானவன். ''பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்பு கூராமலும் இருக்கிற எவனும் தேவனால் உண்டானவனல்ல'' என்று 1யோவான் 3:8-10 வசனங்களில் வாசிக்கிறோம்.

ஆதியிலே தேவமக்கள் மத்தியிலே பிரிவினையை விதைத்தான். அன்று முதல் இன்று வரை சகோதரர்கள் மத்தியில் பிரிவினையை

விதைக்கிறான். களைகளை விதைப்பது அவனுடைய வேலையாயிருக்கிறது. அன்று முதல் இன்று வரை தேவமனிதர்கள் பிசாசின் கிரியைகளுக்கு எதிர்த்து நின்று போராடிவருகின்றனர். நீங்களும் ''பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்'' என்கிறார் யாக்கோபு (யாக்.4:7). கர்த்தர் அதற்கு வேண்டிய பெலத்தையும் ஞானத்தையும் உங்களுக்குக் கொடுக்கும்படியாக நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

49. தேவன் மனுஷியை ஏன் உண்டாக்கினார்?
Why Did God Create Woman?

இக்கேள்வி அநேகருடைய எண்ணங்களில் இருக்கிறது. தேவன் எந்த ஒரு உயிரினத்தை நோக்கமில்லாமல் அல்லது காரணமில்லாமல் உண்டாக்கவில்லை. அவர் சகலத்தையும் தம்முடைய சித்தத்தின்படியே நேர்த்தியாக சிருஷ்டித்திருக்கிறார். தேவன் ஒரு மாபெரும் சிருஷ்டிகர்; அவர் ஒவ்வொரு சிருஷ்டியையும் ஒரு அற்புதமான நோக்கத்துடன் சிருஷ்டித்திருக்கிறார். அதிலும் மனுஷியானவள் அற்புதமான தெய்வீக நோக்கத்துடன் உருவாக்கப்பட்டாள் என்பதுதான் உண்மை. பெண்ணாய் பிறந்துவிட்டாலே அநேக குடும்பங்களில் சந்தோஷம் காணாமற் போய்விடுகிறது. சிலர் விஷம் கொடுத்து பெண் குழந்தையை கொன்று விடுகின்றனர். சிலர் குப்பையில் போட்டுவிடுகின்றனர். பெண் இல்லையேல் வருங்கால சந்ததியில்லை என்பதை அறிந்தும் தேவனை அறியாதவர்கள் பெண்பிள்ளை பிறந்துவிட்டாலே அதைப் புறம்பாக்கிப் போடுகிறார்கள்.

தேவன் வானத்தையும் பூமியையும் சகலத்தையும் சிருஷ்டித்தார் அது நல்லது என்று கண்டார். அதே வேளையில் ஆதாமை மண்ணினாலே சிருஷ்டித்துவிட்டு, அவன் தனிமையாயிருப்பதை பார்த்து, அவன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று சொல்லி ஏற்ற துணையை சிருஷ்டித்தார் என ஆதியாகமம் நமக்கு மிகத் தெளிவாக போதிக்கிறது. தேவனே மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல என்று சொல்லி அவனுக்கு ஏற்ற துணையாக ஒரு பெண்ணை சிருஷ்டித்திருக்கும்போது பெண் பிறந்துவிட்டால் பெற்றவள் முதல் குடும்பத்தில் உள்ள அனைவரும் சோகத்தில் ஆழ்ந்து விடுகின்றனர். அதை நினைக்கும்போது விந்தையாக இருக்கிறது.

தேவனே விருப்பங்கொண்டு சிருஷ்டித்த ஏவாளை ஆதாம் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொண்டு, ''இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்ட படியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான்'' (ஆதியாகமம்2:23,24).

மேலும், ஆதியாகம புஸ்தகம் இந்த ஆச்சரியமான உலகத்தினை தேவன் சிருஷ்டித்த சம்பவத்தைப் பற்றி கூறுகிறது. ஒவ்வொரு தாவரமும், பறக்கும் பறவையும் மிருகமும் இந்த அற்புதமான சிருஷ்டிப்பில் ஒரு நோக்கத்தைக் கொண்டிருந்தது. மனுஷனை தோட்டத்தைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் (ஆதி.2:15). இது காண்பதற்கு ஒரு குடியானவனுடைய வாழ்க்கையை சித்தரிக்கும் செயலாயிருக்கிறது.

தேவன் மனிதனையும் மனுஷியையும் சிருஷ்டித்து அவர்களுக்கு வேலையையும் ஏற்படுத்திக்கொடுத்தார். அவருடைய ஆசீர்வாதங்களை பெற்று அநுபவிக்கவும், பரிசுத்தமான சந்ததியை பெறவும் அவரைத் தொழுது கொள்ளவும் ஏதேன் தோட்டத்தில் வைத்தார். இருவரும் ஒருவரையொருவர் நேசிக்கவும் ஒரேசரீரமாக இருந்து செயல்படவும் அவர்களை தேவன் இணைத்தார்.

மனுஷியை தேவன் உண்டாக்கியதின் நோக்கம் மனுஷனுடைய துணையாக இருப்பதே ஆகும். சமுதாயத்தின் மிக அடிப்படை அமைப்பான குடும்பங்களை உருவாக்கவே மனுஷனையும் மனுஷியையும் தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்தார். குடும்பம் அமைதியாக செயல்படுவதில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உதவுகிறவர் களாயிருக்க வேண்டும். நான் சொன்னபடிதான் செய்யவேண்டும் நீ என்ன பெரிய ஆளா என்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டிருந்தால் தேவனுடைய சித்தத்தை இருவரும் நிறைவேற்ற முடியாது. தேவன் எதற்காக பெண்ணை சிருஷ்டித்தார் என்பதை நாம் வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்துகொண்டோம்.

அவள் கணவனுக்கு ஏற்ற துணையாக சிருஷ்டிக்கப்பட்டாள். துணை என்று சொல்லும்போது ஒரு வேலையை ஒருவர் செய்வதற்கு உதவியாளராக இன்னொருவரை நியமிக்கிறார்கள். உதவியாளர் இல்லாமல் அந்த வேலையை நியமிக்கப்பட்டவர் செய்யமுடியாது. அதைப்போல தேவனாகிய கர்த்தர் மனிதனுக்கு ஒரு மனுஷி உதவியாக தேவை என்பதை அறிந்தார். அவருடைய கணிப்பு தவறாகுமா? அதை முதலாவது இருவரும் புரிந்துகொள்வது நலமாயிருக்கும். இதைபுரிந்து கொள்ளும்போது அந்த குடும்பங்கள் தேவஆசீர்வாதத்துடன் வழிநடத்தப்படும். சில குடும்பங்களில் கணவன் துணையாக இருப்பதுபோல வழிநடத்தப்படுகிறார்கள். இது தேவனுடைய திட்டத்திற்கு எதிரான செயலாக இருக்கிறது. புல்லானாலும் புருஷன் கல்லானாலும் கணவன் என்ற பழமொழிபடி கணவன் கணவனாகவே செயல்படவேண்டும். அந்த பொறுப்பை பெண்கள் எடுத்துக் கொள்ளக்கூடாது. கணவனுக்கு ஒன்றும் தெரியாது நான்தான்

முழுபொறுப்பையும் கவனித்து வருகிறேன் என்று பெருமையாக அநேகர் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட குடும்பங்கள் நாளடைவில் வருத்தப்படுவதையும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

வேதம் போதிக்கிற சத்தியத்தின்படி குடும்பங்கள் நடத்தப்படும்போது தேவஆசீர்வாதத்தை பெறமுடியும். இல்லையேல் பிசாசு களைகளைவிதைக்க இடமுண்டாகும். இச்செய்தியை வாசிக்கிற அன்பு நண்பனே, உங்களுடைய குடும்பம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட குடும்பமாக செயல்படுகிறதா? வசனத்தின்படி ஒருவருக்கொருவர் தயவுடன் செயல்படுகிறீர்களா? ஏற்றதுணையாக பெண்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டீர்களா? கணவனுடைய சரீரத்திற்கு மனைவி அதிகாரியாகவும் மனைவியினுடைய சரீரத்திற்கு கணவன் அதிகாரியாகவும் இருக்கிறார்கள். ஆகையால் இருவரும் ஒருவரையொருவர் நேசிக்கவேண்டும்.

எபே.5:21-23, மற்றும் 1பேது.3:1-9 போன்ற வசனங்கள் **மனைவிகள் தங்களுடைய புருஷர்களுக்கு கீழ்ப்படிந்திருக்கும்படி கூறுகிறது.** கீழ்ப்படிந்திருத்தல் என்பது ''அன்புடனே புருஷனுக்குக் கீழ்ப்படிந்திருத்தல்'' அல்லது ''புருஷனுடைய முடிவெடுத்தலில் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தல்'' என்பதாகும். கீழ்ப்படிதல் என்பது அடிமையாயிருப்பது அல்லது கொடுமையாக நடத்தப்படுவது என பொருள்படாது. தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்கும்படி போதிக்கப்படுகிறார்கள். சகோதரிகளே, உங்களுடைய கணவனின் ஆளுகைக்கு உங்களை ஒப்புக் கொடுங்கள். அநேக புருஷர்கள் கிறிஸ்து சபையில் அன்புகூருகிறது போல தங்களுடைய மனைவிகளிடத்தில் அன்புகூர்ந்து தங்களுடைய கடமையினை நிறைவேற்றுகிறதில்லை,

இதனால் அநேக சகோதரிகள் தங்களுடைய கணவனை வெறுக்க ஆரம்பிக்கின்றனர். இப்படிப்பட்ட புருஷரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்கு மனைவியானவள் செய்யவேண்டியதை பரிசுத்த வேதாகமம் தெளிவாகபோதிக்கிறது ''...பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள்'' என வேதம்போதிக்கிறது. மேலும் ''... பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும் அன்புள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர் களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப்படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும் முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு'' என அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதுகிறார் (தீத்து2:3-5).

முதிர்வயதுள்ள ஸ்திரீகள் பாலிய ஸ்திரீகளுக்கு போதிக்க வேண்டிய கடமை அதிகமாக இருக்கிறது. எல்லாவகையில் பாலியஸ்திரீகளுக்கு முன்பாக மாதிரியாக ஜீவிக்கவேண்டியவர்களாக முதிர்வயதுள்ள ஸ்திரீகள் இருக்கின்றார்கள். ஆகையால் தங்களுடைய நடைகள் மூலமாகவும், ஸ்திரீகளுக்கான விசேஷகூட்டங்கள் மூலமாகவும் பாலியஸ்திரீகளுக்கு உபதேசிக்கவேண்டும். தற்போதுள்ள உலகத்தில் ஆடம்பரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து கெட்டுப்போய்க் கொண்டு இருக்கிறார்கள். இது வளர்ந்து எங்கே போய்நிற்கும் என்று தெரியவில்லை. மொத்தத்தில் ஒவ்வொருநாளும் தேவனுக்கு விரோதமாக ஜனங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நம்மால் அறியமுடிகிறது. தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு ஸ்திரீயும் எப்படி வாழவேண்டும் என்பதை வேதாகமத்தின் துணைகொண்டு கற்றுக்கொள்ளும்போது அது அவர்களுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

சகோதரிகளே, சாராள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்ததுபோல நீங்களும் பயபக்தியோடு கூடிய அன்புடன் உங்களுடைய கணவனுக்கு கீழ்ப்படிந்தால், அவர்கள் உங்களிடத்தில் விவேகத்துடன் நடந்து கொள்வார்கள் அல்லவா! ஐயோ என் கணவனா அவனைப்போல உலகத்தில் யாரும் இருக்கமுடியாது அவ்வளவு மோசமான ஒரு குடிகாரன் தினமும் என்னை அடிக்காத நாளில்லை என்று சொல்லுவீர்கள். உண்மைதான் இன்றைக்கு அநேக குடும்பங்களை நாம் சென்று பார்க்கும்போது சண்டை சச்சரவுகள் இல்லாத குடும்பமே இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

ஒருவரையொருவர் முதலாவது புரிந்து கொண்டு செயல்பட கற்றுக்கொள்ளவேண்டும். ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராள் தன்னுடைய கணவனை ஆண்டவனே என்று சொல்லி கீழ்ப்படிந்திருந்தாள் என்று 1பேது.3:6-ம் வசனத்தில் படிக்கிறோம். சாராள் எந்தஅளவு தன் கணவனை மதித்து நடந்திருக்கிறாள் பார்த்தீர்களா! ஏற்ற துணைஎன்றால் இப்படித்தான் இருக்கவேண்டும். அதை சாராள் தன்னுடைய வாழ்க்கையில் நிறைவேற்றினாள். ஆகையால் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்று மாம்சமான யாவருக்கும் தாயானாள் என்று வேதம் சொல்லுகிறது.

''இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்'' என்று காண்கிறோம். இதுவே ஸ்திரீகளுடைய அலங்கரிப்பாக இருக்கிறது. நீங்கள் உங்களை எப்படி அலங்கரித்துக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஒரு பெண்ணாக இருப்பீர்களானால் சாராளைப்போல கணவனுக்கு கீழ்ப்படிந்து ஏற்ற துணையாக இருந்து செயல்படுங்கள்.

கேள்வி நேரம்

கணவன் மனைவிக்கு செய்யவேண்டிய கடமை என்ன?

தேவன் மனிதனுக்கு ஏற்ற துணையாக மனுஷியை கொடுத்தார் என்று நாம் தியானித்தோம். தேவனுடைய கரத்திலிருந்து ஏற்றதுணையை பெற்றுக்கொண்ட கணவன் அவளுக்குச் செய்யவேண்டிய கடமை அதிகமாக இருக்கிறது. பெற்றோர்கள் திருமணம் முடித்துகொடுத்த பின்பு அவர்களுடைய கடமை முடிந்தது என்று சொல்லுகிறார்கள். ஆம் அவர்களுடைய கடமை முடிந்தது. ஏனென்றால் ஒரு பொறுப்பாளனிடம் கொடுத்துவிட்டார்கள். இனி பார்க்கவேண்டியது அவளை தன்னுடைய மனைவியாக ஏற்றுக்கொண்டவனுடைய பொறுப்பாக இருக்கிறது. ''இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்'' என வேதம் போதிக்கிறது.

மேலும், ''புருஷன் தன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குக் செய்யக்கடவள்'' என்று 1கொரி.7:3-ல் வாசிக்கிறோம். இருவரும் ஒருவரையொருவர் நேசித்து கடமையாற்ற வேண்டியவர் களாயிருக்கின்றனர். அநேக குடும்பங்களில் இதை நாம் காண முடியவில்லை. திருமணம் முடிந்தவுடன் அடிமையைப்போல வழிநடத்தப்படுகிறார்கள். அல்லது மனைவி இருக்கும்போது மற்றவர்களோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இது எத்தனை அருவருப்பான காரியமாக இருக்கிறது.

''விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்'' என எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகிறார் (எபி.13:4). ஆகையால் ஏற்றதுணையை கொடுத்த தேவனுக்குப் பயந்து செயல்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

50. கர்த்தருடைய ஊழியக்காரன்
The Servant of The Lord

கர்த்தருக்கு ஊழியம் செய்வது என்பது ஒரு சிறப்பான பணியாகும். இப்பணிக்கு நிகரான பணி இப்பூமியில் ஒன்றுமில்லை. ஆகையால் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவன் தன்னை முழுவதுமாக கர்த்தருக்கு அர்ப்பணித்தவனாயிருக்கவேண்டும். ஒவ்வொரு ஊழியக்காரனும் கர்த்தர் இயேசு சொல்லும் இந்த வசனத்தைக் கவனித்தால் நலமாயிருக்குமென்று எண்ணுகிறேன். ''ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப்

பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்'' (யோவா.12:26). இந்த வசனம் ஒவ்வொரு ஊழியக்காரனுடைய இருதயத்திலும் எழுதப்படவேண்டிய வசனம். இந்த வசனத்தின்படியே ஒருவன் கர்த்தருக்கு ஊழியஞ்செய்யும்போது அவன் பிதாவாகிய தேவனால் கனப்படுத்தப்படுகிறான். ஆண்டவர் இயேசு மிகத் தெளிவாக, ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக் கடவன் என்றார். இன்று கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிற அநேகர் மனிதர்களை பின்பற்றி ஏமாற்றப்படுகிறார்கள். இவ்வசனத்தின்படி ஒருவன் இயேசுவுக்கு ஊழியஞ்செய்யும்போது மெய்யான ஊழியக்காரனாயிருக்கமுடியும்.

அப்போஸ்தலர்கள் இயேசுவுக்கு ஊழியஞ்செய்த நாட்களில் அவர்கள் ஆண்டவருடைய உபதேசத்திற்கு கீழ்ப்படிந்திருந்தனர். அவர்கள் இயேசுவுக்கு ஆலோசனைக்காரர்களாக இருந்ததாக நாம் வேதத்தில் எங்கும் வாசிக்கமுடியாது. அவருடைய வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செய்தனர். இயேசுவானவர் பரத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பும் அவருடைய வசனங்களை மாற்றாமல் உபதேசம் செய்து வந்தனர். ஒவ்வொருநாளும் அவருடைய கட்டளைகளை நிறைவேற்றுவதில் கருத்தாக செயல்பட்டதை நாம் அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம்.

கர்த்தருடைய ஊழியக்காரனுக்கு இருக்கவேண்டிய குணத்தைக்குறித்து பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; ''கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும். பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்'' என்று எழுதுகிறார் (2தீமோ.2:24). சண்டைபண்ணுகிறவன் கர்த்தருடைய ஊழியக்காரனாயிருக்க தகுதியற்றவனாகிறான்.

ஏனெனில் புதிய ஏற்பாட்டில் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சண்டையிட்டுக்கொண்டதாக நாம் எங்கும் காணமுடியாது. அவன் எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனாயிருந்து, சமாதானம் பண்ணுகிறவனாயிருக்கவேண்டும். கலகக்காரனாகவும், கலத்தை தூண்டுகிறவனாகவுமிருக்கக் கூடாது. அவன் போதகசமர்த்தனாக இருக்கவேண்டும். ஜனங்களை சத்தியத்தின் பாதையில் கொண்டு சென்ற தேறின வேதபாரகனாகிய எஸ்றாவைப்போலும், நெகேமியாவைப்போலும்,

வேதாகமங்களில் வல்லவனாகிய அப்பொல்லோவைப்போலும் செயல்பட வேண்டும். மேலும், தனக்கு வரக்கூடிய தீமையை சகிக்கிறவனாயிருக்க வேண்டும். யாக்கோபு சொல்லுகிறார்; ''சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபுன்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின ஜீவகிரிடத்தைப் பெறுவான்'' என்கிறார் (யாக்.1:12). கர்த்தருடைய ஊழியக்காரன் நேயாளியை விசாரிக்கும் ஒரு வைத்தியனைப்போல மிக பொறுமையுடன் அவனுடைய காரியங்களை கேட்டறிந்து அவனை வழிநடத்தவேண்டியவனாயிருக்கிறான்.

அதுமாத்திரமல்ல, ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே; மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கும் உடன் படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள் என பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்ன ஆலோசனையின்படி தன்னை சுத்தவானாகக் காத்துக்கொள்ள ஜாக்கிரதையுள்ளவனாயிருந்து செயல்படவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரன் மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன் படாது அதாவது ஒத்துப்போகாது தன்னைக் காத்துக்கொள்வது அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் கர்த்தரை விட்டு விலகி வெகுதூரம் சென்ற அநேகரை கிறிஸ்துவண்டை கொண்டு வரவேண்டிய பொறுப்பு கர்த்தருடைய ஊழியக்காரனுக்கு உண்டு. ஒரு நோயாளியை சந்திக்க வேண்டிய டாக்டர் நோயாளியாகி விட்டால் நோயாளியை யார் கவனிப்பது. அதைப்போல, பாவம் செய்கிறவர்களோடு உடன்பட்டு பாவியாகி விட்டால் மற்ற பாவிகளை எப்படி கிறிஸ்துவுக்குள் கொண்டுவரமுடியும். ஆகையால் மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாது தன்னை பாதுகாத்துக்கொண்டு, கிறிஸ்துவுக்கேற்றபடி நடக்கையிலும், செய்கையிலும் முன்மாதிரியாக ஜீவிக்கவேண்டும்.

சிலவேளைகளில் மூத்த ஊழியக்காரர் செய்யும் தவறில் உடன் ஊழியக்காரர்களும் வீழ்ந்து விடுகிறார்கள். காரணம் மூத்த ஊழியக்காரர்களை எதிர்க்க முடியவில்லை. மூத்த ஊழியக்காரரை நான் எப்படி மீறிசெயல்படமுடியும் அவருக்கு தெரியாத ஒன்று உண்டா? என்று சொல்லி அவர்களுடைய தவறுகளை உடன் பணிசெய்கிற ஊழியக்காரர்களும் செய்துவிடுகிறார்கள். இது எத்தனை வேதனை அளிக்கக்கூடிய சம்பவமாகயிருக்கிறது. உண்மையுள்ள கர்த்தருடைய ஊழியக்காரன் அப்படியிருக்கக்கூடாது.

வேதாகமானது, ''அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும்'' என எச்சரிக்கிறது (1கொ.3:13). ஒவ்வொரு கர்த்தருடைய ஊழியக்காரனுக்கும் கர்த்தரே

எஜமானாக இருக்கிறார். அவர் ஒருவருக்கே கணக்கு கொடுக்கவேண்டும். மனிதர்களை பிரியப்படுத்தும்படியாக மனிதர்களுக்கு அடிமைகளாகாதிருங்கள். அவர்கள் இருக்கும்மட்டும் அவர்களை பிரியப்படுத்துவீர்கள் அவர்கள் மரித்தபின்பு யாரைப்பிரியப்படுத்துவீர்கள். என்றென்றும் மாறாதிருக்கிற ஆண்டவர் இயேசுவுக்கு பிரியமானதை செய்யும்படி ஒவ்வொருநாளும் வேலை செய்யுங்கள். ''தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார்'' (ரோ.2:6).

வேலைக்கேற்ற கூலியை இவ்வுலகத்தில் பெற்றுக் கொள்கிறோம். அதைப்போல நம்முடைய கிரியைகளுக்குத்தக்கதாய் நமக்கு பலனளிப்பார். ''நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப் பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார் (2தீமோ.4:7,8). கர்த்தர் நமக்கு நிலையான வாழ்வை வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்.

குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும்படி மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் ஏற்படுத்தவேண்டிய பொறுப்புடையவனாக கர்த்தருடைய ஊழியக்காரன் இருக்கிறான். அநேக சபைகளில் மூப்பர்கள் இல்லாமல் ஊழியக்காரர்களே எல்லா வேலைகளையும் செய்து கொண்டுவருகிறார்கள். கர்த்தருடைய சபையில் மூப்பர்கள் எழும்பவேண்டும். அதற்காக கர்த்தருடைய ஊழியக்காரன் சபையில் மூப்பர்கள் உருவாகும்வரை மூப்பர்களுக்காக தகுதியுள்ளவர்களை உற்சாகப்படுத்த வேண்டியவனாயிருக்கிறான். பலர் மூப்பர்களாவதற்கு முன்வர தயங்குகின்றனர். காரணம் என்னவெனில்; ''கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியதை யுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசையில்லாதவனுமாயிருந்து, தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து, பிசாசு

அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயுமிருக்க வேண்டும்'' (1தீமோ.3:2-7).

இத்தனை கட்டளைகளையும் எப்படி கைக்கொள்வது என்று பயந்து மூப்பர்களாவதற்கு தயங்குகின்றனர். சிலர் துணிந்து பாவம் செய்துகொண்டே மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் பணிசெய்கின்றனர். கர்த்தருடைய மந்தையை கண்காணிக்கவேண்டிய பொறுப்பு மூப்பர்களுக்கு உண்டு அவர்கள் மந்தைக்கு மாதிரிகளாக இருந்து செயல்படவேண்டும். வேலியே பயிரை மேய்ந்த கதையைப்போல பாதுகாக்கவேண்டிய மூப்பர்களே தவறு செய்வார்களானால் பிரதான மேய்ப்பர்வரும்போது என்னவாகும்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற கர்த்தருடைய ஊழியர்களே, உங்களுடைய பணிசிறக்க கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுங்கள். கர்த்தர் உங்களிடம் கொடுத்துள்ள வேலையை அசதியாய் செய்யாமல் ஜாக்கிரதையாய் செய்யுங்கள். தனக்குக் கொடுத்த வேலையை சரியாக செய்த வேலைக்காரனை பரலோக ஏஜமான் கண்டு ''நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன்; உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி'' என்றாரே அதைப்போல உங்களையும் பாரட்ட அவருடைய சித்தத்தின்படியாக தொடர்ந்து ஊழியஞ்செய்யுங்கள்.

கேள்வி நேரம்

கர்த்தருடைய ஊழியக்காரன் எப்படி போஷிக்கப்படவேண்டும்?

''சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்'' (1கொரி.9:14). ஆகையால் சபையார்கள் கர்த்தருடைய ஊழியக்காரர்களை போஷிக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். மேலும், ''திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்து கொடுக்கக்கடவன்'' (கலா.6:6). கர்த்தரையே நம்பி அவருடைய வேலையை செய்யும் கர்த்தருடைய ஊழியக்காரன் எல்லாவகையிலும் உபதேசிக்கப் படுகிறவனாலே அவனுடைய தேவைகள் சந்திக்கப்பட வேண்டும்.

இதை திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவர்கள் புரிந்து கொண்டு செயல்படவேண்டும். பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் ஆசாரிய ஊழியம்செய்யும் தேவ மக்களை தேவ ஜனங்களே போஷித்து வந்துள்ளனர்.

ஆகையால் சகல நன்மைகளிலும் உபதேசிக்கப் படுகிறவன் உபதேசிக்கிறவனுக்கு பகிர்ந்து கொடுக்கக்கடவன் என்ற வசனத்தின்படி கொடுக்கும்போது கொடுக்கிறவர்கள் கர்த்தருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று அநுபவிப்பார்கள். நீங்கள் கர்த்தருடைய ஊழியரைப் போஷிக்கிறீர்களா? அப்படி இல்லையென்றால் இன்றே அவர்களை சகல நன்மைகளிலும் தாங்குங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

51. எல்லாம் உம்மாலே கூடும்
All Things Are Possible Unto Thee

அன்பான சகோதர்களே, 'தேவனாலே எல்லாம் கூடும்' என்பது மெய்யான வார்த்தை. அண்ட சராசரங்களை உண்டாக்கின நமதாண்டவராகிய இயேசு, ''அப்பா பிதாவே, எல்லாம் உம்மாலே கூடும்; இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என்சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்'' (மாற்.14:36). நாமும் கூட பல காரியங்களுக்காக தேவனை நோக்கி உம்மாலே எல்லாம் கூடும். தேவனே, நான் பல மாதங்களாக இந்த காரியத்திற்காக உம்மிடம், முறையிடுகிறேன், உம்மால் கூடாதது ஒன்று மில்லையே, நீர் சொல்ல ஆகும், நீர் கட்டளையிட நிற்கும் என்று பல வசனங்களை சொல்லி பல வருடங்களாக ஒரே காரியத்திற்காக ஜெபித்திருக்கிறோம். நமக்குச் சொல்லவே வேண்டாம், பிரச்சனைகளும், வாழ்க்கையில் ஏற்படுகிற பூகம்பங்களுக்கும் அளவே இருக்காது.

ஆனால் அவைகளுக்காக ஜெபித்து ஜெபித்து சோர்வு ஏற்பட்டதுதான் மிச்சம் என்று சொல்லி அநேகர் தங்கள் விசுவாசத்தை விட்டுகூட விலகலாம் 'தேவனாலே எல்லாம் கூடும் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமேயில்லை' என்பது உண்மைதான், ஆனாலும் சில ஜெபங்களுக்கு 'கர்த்தருக்குக் காத்திரு' என்ற பதில் கிடைக்கிறது, இன்னும் சில ஜெபங்களுக்கு தேவனிடத்திலிருந்து எந்தவித பதிலுமே கிடைப்பதில்லை. தேவனை நோக்கி கூப்பிடுகையில் அவர் நம்மைக் காணாதவர் போலிருக்கிறார் என்றுகூட நினைக்கத் தோன்றும்.

பாருங்கள், நமதாண்டவர் இயேசு கிறிஸ்து, ''அப்பா, பிதாவே, எல்லாம் உம்மால் கூடும் இந்தபாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும்'' என்று ஜெபித்தார். தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனுடைய ஜெபத்தைக் கேட்டு அவருக்கு நியமிக்கப்பட்ட பாடுகளையும், மரணத்தையும் அவரிடமிருந்து எடுத்துப்போட்டாரா? இல்லை. இது நம்மை சிந்திக்க வைக்கிறது. கர்த்தருடைய ஜெபத்திற்கே பதில்

கிடைக்கவில்லையென்றால் நம்முடைய சில ஜெபங்களுக்கு பதில் கிடைக்காமலிருப்பது ஆச்சரியமல்ல!

அன்பு வாசகரே, உங்கள் வாழ்க்கையின் பிரச்சனைகள் தீரவில்லை, வேதனைகள் மாறவில்லை என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது என்று எண்ணி திகிலடைந்து, மிகவும் வியாகுலப்பட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இவையனைத்தையும் இயேசு அநுபவித்தார். அவரது ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டது, அவர் திகிலடைந்தார், மிகவும் வியாகுலப்பட்டார் (மாற்.14:33,34) எனவே நம்முடைய இருதயத்தின் வேதனையை அவரால் உணர்ந்து கொள்ளவும் புரிந்துகொள்ளவும் முடியும். நாம் நேசிக்கிற எந்த மஷனாலும் இதைச் செய்யமுடியாது. நம் ஜெபங்களுக்கு பதில் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் கர்த்தர் நம்மோடிருக்கிறார், ''அவர்.... நெரிந்த நாணலை முறிக்காமலும் மங்கியெரிகிற திரியை அணைக்காமலும் இருப்பார்'' (மத்.12:20). ''....அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்'' என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (ரோம.8:28).

மேலும் வேதனைகளையும், கண்ணீரையும், துக்கங்களையும் கடந்து வருகிற அநேக சகோதர, சகோதரிகள் அச்சமயத்திலே தங்களோடு யாராவது இருக்கமாட்டார்களா, தங்களுடைய பாரங்களை பகிர்ந்து கொள்ளுவதற்கு உண்மையான மக்கள் இருக்கமாட்டார்களா, நமக்காக யாராவது ஜெபிக்கமாட்டார்களா என்று ஏங்கக் கூடும். எங்களுக்கு அநேகர் போன் செய்து தன்னுடைய வேதனைகளை கண்ணீரோடு சொல்லி ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்வார்கள். அவர்கள் போனில் கண்ணீர்வடித்து காரியங்களை பகிர்ந்து கொள்ளும்போது எங்கள் இருதயமும் மிகவும் வியாகுலப்படும். இது மனித இயல்பு. மத்.26:38-ல் ''அப்பொழுது, அவர்: என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங் கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள் என்று சொல்லி, தம்மோடு அழைத்துவரப்பட்ட பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூன்று சீஷர்களை பார்த்து கர்த்தர் சொன்னார். ஆனால் அந்த மூவருமே இயேசுவோடுகூட விழித்திருந்து ஜெபிக்கவில்லை.

''....நீங்கள் ஒரு மணிநேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?'' (மத்.26:40). என்று சொல்லி மூன்று முறை ஜெபித்துவிட்டு வந்து பார்த்தபோது மூன்று முறையும் சீஷர்கள் நித்திரைப்பண்ணிக்கொண்டிருந்ததைக் கண்டார். இயேசு தன் ஆத்துமாவில் கொண்டிருந்த துக்கத்தை அந்த சீஷர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

நித்திரை மயக்கத்தினால் அவர்களால் மறுமொழிகூட கொடுக்கமுடியவில்லை. இயேசு அவர்களைப் பார்த்து, ''நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்'' என்றார். தாம் படப்போகிற பாடுகளின் போது அவர்கள் சோதனைக்குட்பட்டு விழுந்துபோகாதபடிக்கு அவ்வாறு கூறினார். நம்முடைய கஷ்டத்தின் நேரத்தில் மற்றவர்கள் நம்மோடு சேர்ந்து ஜெபிக்க விரும்புகிறோம். ஆனால் 'மனுஷனுடைய உதவி விருதா என்பதை மறந்துபோகக்கூடாது. இயேசுவோடு சீஷர்கள் ஜெபிக்கச் சென்றார்கள், ஆனால் அவரோடு கூட விழித்திருந்து, அவருடைய ஆத்துமாவியாகுலத்தை அறிந்தவர்களாயிருந்து ஜெபிக்கவில்லை.

ஆனால் தேவன் இயேசுவை பலப்படுத்தும்படி, ''அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான்'' (லூக்.22:43) என்று வாசிக்கிறோம். இது தான் தேவ அன்பு. அவரை நோக்கி கூப்பிடும்போது அவர் நம்மையும் பலப்படுத்துவாரல்லவா? நீங்கள் அவரை நோக்கி ஜெபிக்கின்றீர்களா!

இயேசுவின் ஜெபத்திலிருந்து மேலும் ஒரு பாடத்தை கற்றுக்கொள்கிறோம். ''....இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும், ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்றார்'' (மாற்.14:36). நாமும் நம் வேதனைகளை சகித்துக்கொள்ளமுடியாமல் என் கஷ்டத்தை நீக்கிவிடும், இந்த துன்பத்தின் பாத்திரத்தை என்னை விட்டு எடுத்துப்போடும் என்று ஜெபிக்கிறோம். ஆனால் 'என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய விருப்பத்தின்படியே ஆகட்டும் என்று ஜெபிப்பதில்லை.

அன்பு வாசகரே, நமக்கு முன் இருக்கிற புயலையும், காற்றையும், பூகம்பத்தையும் பார்ப்போமானால் நாம் விசுவாசத்தை விட்டு விழுந்து போவோம். நம்முடைய பாரம் சுமப்பதற்கரிதானதாக இருந்தாலும், அது எப்பேர்பட்ட இழப்பைக் கொண்டுவந்தாலும் இயேசுவைப்போல 'ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது' என்று சொல்லுங்கள். சோதனைகளும். வேதனைகளும் தேவனையறியாதவர் களுக்கு வராது. துன்மார்க்கனும், பொய்களை ஊதுகிறவர்களும் வாழ்வில் வளமுடனே இருப்பார்கள். ''தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்'' என்ற வசனத்தின்படி அவர்களே துன்பப்படுவார்கள்.

பிரியமான சகோதரனே, சகோதரியே, நீங்கள் தேவனுடைய பிள்ளையாயிருப்பீர்களென்றால் நீங்கள் துன்பப்படுவீர்கள். தேவனே உம் சித்தம் ஆகட்டும் என்று சொல்லி நம்மை அர்ப்பணிப்போம்.

இவ்வளவு, பாடுகளை சகித்து தம்முடைய ஜெபத்தின் மூலம் பல பாடங்களை நமக்குக் கற்றுகொடுத்த இயேசுவானவர் அப்படியே மரித்து மண்ணோடு மண்ணாக போய்விட்டாரா? இல்லையே. அவர் மரணத்தை தம்முடைய கீழ்ப்படிதலினாலே வென்றார். மூன்றாம் நாள் உயிரோடெழுப்பப்பட்டார். பிதாவானவர் தம்முடைய ஒரே பேறான குமாரனை மரணப்பிடியிலிருந்து விடுவித்து தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரச் செய்துள்ளார். பேதுரு இது குறித்துப்பேசும்போது; ''நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்'' (அப்.2:36).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற தேவ ஜனமே, தேவனால் எல்லாம் கூடும். இது மாற்றமுடியாதது, மறுக்க முடியாதது. ஆனால் நம்முடைய ஜெபத்தில் நம் விருப்பத்தின்படியல்ல, தேவனுடைய விருப்பத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபிக்கக் கற்றுக்கொள்வோம். இயேசுவின் ஜெபமே நமக்கு மாதிரியாக இருக்கட்டும். இயேசுவை உயர்த்தின தேவன் நம்மையும் உயர்த்துவார்.

தேவதூதன் மரியாளை சந்திக்கும்போது பயப்படாதே, நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். அதற்கு தேவதூதன் ''தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்'' (லூக்.1:37). ஆம், அன்பானவர்களே தேவனாலே கூடாதகாரியம் ஒன்றும் இல்லை. அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். இதைக்கேட்ட மரியாள் என்னசொன்னாள் தெரியுமா?

''இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்'' தேவனால் சொல்லப்பட்ட வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்தாள். அதற்கு எதிர் மறையாக அவள் ஒன்றும் சொல்லவில்லை. ஒரு முறை இயேசு கடந்துசெல்லும்போது இரண்டு குருடர் அவர் பின்னே சென்று; தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள். அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி; இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்; ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள். நாமும் நம்முடைய வாழ்க்கையில் அவர் நமக்கு நலமான காரியங்களை செய்யமுடியும் என்று விசுவாசிப்போமானால் அது அவராலே கூடும். அவரின்றி ஒரு அனுவும்

அசையாது. இப்பேர்பட்ட தேவனை தம்முடைய தெய்வமாக கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது. நீங்கள் அவரை தொழுதுகொண்டு வருகின்றீர்களா? அவருடைய சித்தம் மட்டுமே செய்ய தேவன்தாமே உங்களை பெலப்படுத்துவாராக!

கேள்வி நேரம்

சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்?

சிலர் தேவனோடே வழக்காட துணிந்து நிற்பார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்த்து வேதம் இந்தக் கேள்வியைக் கேட்கிறது. யோபு என்ற தேவ மனுஷனை நோக்கி; கர்த்தர் பெருங்காற்றிலிருந்து யோபுவோடு பேசினார். இப்போதும் புருஷனைப்போல் இடைகட்டிக்கொள்; நான் உன்னைக் கேட்பேன்; நீ எனக்கு உத்தரவு சொல்லு. நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி. வானத்தின் நியமங்களை நீ அறிவாயோ? அது பூமியையாளும் ஆளுகையை நீ திட்டம்பண்ணுவாயோ? காக்கைக்குஞ்சுகள் தேவனை நோக்கிக் கூப்பிட்டு, ஆகாரமில்லாமல் பறந்து அலைகிறபோது, அவைகளுக்கு வேண்டிய இரையைச் சவதரித்துக் கொடுக்கிறவர் யார்? சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார்.

''அப்பொழுது யோபு கர்த்தருக்குப் பிரதியுத்தரமாக; இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினாலே என் வாயைப் பொத்திக்கொள்கிறேன். நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான்'' (யோபு40:3-5). தேவனோடு வழக்காட விரும்புகிறவர்கள் முதலாவது தங்கள் வாயை பொத்திக் கொண்டு கர்த்தர் கேட்கும் கேள்விக்கு பதில் கொடுக்கக்கடவர்கள். ஆகையால் தேவனாலே எல்லாம் கூடும் என்ற நம்பிக்கையோடு காத்திருங்கள்.

52. நான் இப்பொழுது ஒரு கிறிஸ்தவன்
Now I Am A Christian

கிறிஸ்து இயேசுவுக்குள் இருப்பவர்கள்தான் நான் ஒரு கிறிஸ்தவன் என்று சொல்லமுடியும். ''ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று'' என்று அப்.11:26-ல் வாசிக்கிறோம். இப்பெயர் வெறும் பெயர்

கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தாது. ஏனெனில், கிறிஸ்துவினுடைய உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். சபையாக வாரந்தோறும் கூடி அப்பம் பிட்டு, அப்போஸ்தலர்களைப்போலவும், முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களைப் போலவும் கர்த்தருடைய உபதேசத்தில் உறுதியாய் தரித்திருந்தவர் களுக்குத்தான் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது.

இயேசு சொல்கிறார்; ''ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' என்றார் (மத்.16:24). இப்படி எவன் ஒருவன் இயேசுவை பின்பற்றுகிறானோ அவனே கிறிஸ்தவன். கிறிஸ்தவன் என்றால் கிறிஸ்துவை உடையவன், அவரை தரித்துக்கொண்டவன், அவருடைய உபதேச சட்டத்தின்படி நடப்பவன். மேலும் அவர்சொல்லுகிறார்; ''நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருபபீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்'' (யோவா.8:31,32).

ஒருவன் கர்த்தராகிய இயேசுவையும் அவருடைய உபதேச சட்டத்தையும் அறிந்து அதில் நிலைத்திருக்கும்போது அவருடைய சீஷனாகிறான். அந்த மெய்யான சத்தியம் அவனை பாவத்திலிருந்து விடுதலையாக்குகிறது. சத்தியத்தை அறியாமல் ஒருவரும் பாவத்திலிருந்து விடுதலையடைய முடியாது. அநேகர் நான் இயேசுவை கண்டுகொண்டேன் என்று சொல்லுகிறார்கள் ஆனால் அவருடைய உபதேசத்தின்படி கடுகளவும் நடக்கமாட்டார்கள். இப்படியிருக்கிற ஒரு நபர் நான் ஒரு கிறிஸ்தவன் என்று எப்படிச்சொல்லமுடியும்?

இப்பொழுது நான் ''கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்திருக்கிறேன்'' நான் ஆவியிலே வளரும்படி, 1பேது.2:2,3-ல் சொல்லப்பட்டபடி ''திருவசனமாகிய ஞானப்பாலின்மேல்'' மிகவும் வாஞ்சையுள்ளவனாக இருக்கிறேன். நான் விசுவாசத்தில் குழந்தையாகவும் பலவீனனாகவும் இருக்கையில், நான் என்னுடைய வளர்ச்சியில் பலவீனனாக இருக்கிறேன் என்பதை நான் நினைத்துப் பார்க்கிறேன். சாத்தான் என்னுடைய இருதயத்திலிருந்து வசனத்தை திருடவிரும்புகிறான், இல்லாவிடில் மத்.13:18-23-ன்படி தேவனுக்கென்று நான் கனிகொடுக்க இயலாதவனாயிருக்கப் பண்ணுகிறான். ஆனால் என்னை அழைத்துக் கொண்டு வந்தது தேவனுடைய வார்த்தை என்பதை நான் நினைக்கிறேன். மேலும் என்னை ஆவியில் தேறினவனாகவும் விசுவாசத்தில் பலப்படுகிறவனாகவும் செய்கிறவைகள் 2தீமோ.3:14-17-ன்படி தேவனுடைய வார்த்தையே என நான் நம்புகிறேன்.

நான் திரும்ப அவரை நேசிக்கவும் அவருக்கென்றுள்ள என் அன்பை நிரூபிக்கவும் விரும்புகிறேன் (யோவா.3:16; 1யோவா.4:19). யாக்கோபு 4:8-ல் தன் நிருபத்தில் தன் வாசகர்களுக்கு அறிவுறுத்துகிறதுபோல், நான் அவரைக் கிட்டிச் சேருவதன் மூலம், என் அன்பை வெளிப்படுத்த தயாராக உள்ளேன். இப்போது நான், தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த இயேசுவின் இரத்தத்தினாலே கழுவபட்டுள்ளேன், பரிசுத்தமாக்கப்பட்டுள்ளேன், நீதிமானாக்கப் பட்டுள்ளேன், 1 கொரி.6:9-11-ல் சொல்லப்பட்டபடி இனி ஒரு போதும் நான் வேசித்தனம், விபசாரம் அல்லது சுயபுணர்ச்சி, போன்ற மாம்சத்தின் கிரியைகளில் சிக்கிக்கொள்ளமாட்டேன். நான் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டபடியினால், நான் என்னுடையவனல்ல. நான் இப்போது தேவனுக்குரியவன். நான் பாவத்தின் வாழ்க்கை முறையில் தொடர்ந்து இருப்பதின் மூலம் தேவனுடைய கிருபையை உதாசினப்படுத்தும் எந்த இச்சையையும் கண்டிப்பாக செய்யமாட்டேன். நான் இப்போது பாவத்திற்கு மரித்து நீதியாகிய தேவனுடைய வல்லமைக்கென்று பிழைத்திருக்கிறேன் (ரோம.6:1,2).

இயேசு கிறிஸ்துவின் வல்லமை மற்றும் ஐக்கியம் போன்றவற்றிலிருந்து என்னை தனியே பிரிக்கின்ற எந்த ஒரு பாவம் அல்லது மாம்சத்தின் கிரியையாயிருந்தாலும் அவைகளை நிச்சயமாக என்னைவிட்டு எடுத்துப்போடுவேன். சுவிசேஷத்தின் மூலம் எல்லாவிதமான தீங்கையும் மேற்கொள்ள தேவன் உதவிடுவார். மேலும், நான் தேவனுடைய ஆலோசனையை தேடி, அதில் நடந்து அவருடைய குமாரனுக்குக் கீழ்ப்படிவேன். தேவன் அவரை கர்த்தராகவும், சபைக்குத் தலைவராகவும் எபே.1:22,23-ன்படி ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை நான் அறிந்துகொண்டேன். நான் கேள்விபடுதலில் மட்டும் திருப்தியுடையவனாக இருந்து என்னை வஞ்சித்துக்கொள்ளமாட்டேன். யாக்.1:22-ன்படி நான் தேவனுடைய வார்த்தையின் படி செய்கிறவனாயிருப்பேன் என்று உங்களால் சொல்லமுடியமா? அப்படி சொல்லுகிற வேளையில் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பீர்கள்.

ஒரு கிறிஸ்தவன் நல்ல பல தீர்மானங்களை எடுக்கவேண்டும். இயேசு என் பாவங்களை சிலுவையில் சுமந்து தீர்த்துவிட்டார் என்பதை கற்றிருக்கிறேன், நான் அவரை மென்மேலும் சிலுவையில் அறைந்து அவரை அவமானப்படுத்த மாட்டேன் (எபி.6:6; ஏசா.53:6). ஒருமுறை நம்முடைய பாவங்களை போக்க ஆண்டவர் இயேசு சிலுவையில் பாடுபட்டார். ஒருவேளை நான் மீண்டும் பாவம் செய்வேனானால் அவரை மீண்டும் மீண்டும் சிலுவையில் அறையும்படி நான் பாவம் செய்கிறவனாயிருப்பேன். ஆகையால்

அந்த காரியத்தை நான் மீண்டும், மீண்டும் செய்யமாட்டேன் என தீர்மானித்துள்ளேன் என்று சொல்லுகிறவனாயிருக்கவேண்டும். இச்செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற அன்பு தேவ ஜனமே, நீ தேவனுடைய பிள்ளை என்று சொல்லிக்கொண்டு பாவத்தில் நிலைத்திருக்கலாமா அப்படிச் செய்யலாகாதே, மனந்திரும்பி தேவனுடைய சமுகத்தில் உன்னை ஒப்புக்கொடு. பாவம் பூரணமாகும்போது அது மரணத்தை பிறப்பிக்கும் என காண்கிறோம். பாவத்துக்கு செத்து நீதிக்குப் பிழைத்த நாம் மறுபடியும் அதற்கு அடிமைப்படலாமா, கூடாதே.

நீதியின் கனிகளாகிய ஆவியின் கனிகள் ''அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்'' இப்படிப்பட்டவைகள் நிறைந்து காணப்படவேண்டும். மேலும் பரிசுத்த வேதாகமம் போதிக்கிறது ''கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்'' (கலா.5:24). நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருப்பீர்களானால் உங்களுடைய ஆசை இச்சைகளை சிலுவையில் அறைந்திருக்கவேண்டும். அப்படிச்செய்யும்போதே நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருக்கிறீர்கள். ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்துவைப்போல காணப்பட்டு, அவர் நடந்தபடியே தானும் நடக்கவேண்டும். ஆகையால் பவுல் தன்னைக்குறித்து சொல்லும்போது; ''இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன்'' என்று கலாத்திய சபையாருக்கு எழுதுகிறார் (கலா.6:17).

அவருடைய அச்சடையாளங்களை சரீரத்தில் தரித்திருப்பது என்பது அவருடைய குணநலன்கள் நம்மில் காணப்படவேண்டும். பவுலுடை ஜீவியத்தில் அது காணப்பட்டது. ஆகையால் தான் அவர் கொரிந்து சபைக்கு எழுதும்போது ''தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறது'' என்று எழுதியிருக்கிறார். இன்றைக்கு அநேகர் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சொல்லுகிறார்கள் ஆனால் அதின்படி செய்யவோ நடக்கவோ மாட்டார்கள். இதினாலே கிறிஸ்துவின் சுவிசேஷம் எல்லோருக்கும் கிடைக்காமல் அப்படிப்பட்டவர்களாலே தூஷிக்கப்படுகிறது.

ஆண்டவர் இயேசு ஒரு கிறிஸ்தவனுக்கு கொடுத்த வாக்குதத்தம் என்னவென்றால்; ''குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசி நாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்'' (யோவா.6:40). இந்த பாக்கியம் ஆண்டவர்

இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்றுகிற கிறிஸ்தவனுக்கு மட்டுமே கிடைக்கும் ஒரு மாபெரும் ஆசீர்வாதமாகும். சீஷர்கள் கூட நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உண்மைப் பின்பற்றினோமே எங்களுக்கு என்ன கிடைக்கும் என்று கேட்டனர். இன்றைக்கு அநேகருடைய கேள்வி இதுவாகத்தான் இருக்கிறது. இயேசுவை பின்பற்றினால் வீடு கொடுப்பார்களா, வாகனம் வாங்கிக்கொடுப்பார்களா, எங்களுடைய பிள்ளைகளை படிக்க வைப்பார்களா, அவர்களுடைய அலுவலகத்தில் வேலைபோட்டு கொடுப்பார்களா, என்ற கேள்வியோடு இருக்கிறார்கள்.

ஆண்டவர் இயேசு தம்மில் விசுவாசமாயிருக்கிறவர்களுக்கு நித்திய வாழ்வை கொடுப்பதாகவும், அவர்களை கடைசி நாளில் எழுப்புவதாகவும் வாக்குக்கொடுத்திருக்கிறார். இதை ஒவ்வொருவரும் விசுவாசத்தின் மூலமாகவே பெற்றுக்கொள்ளமுடியும். இது கடைகளில் வாங்கக்கூடிய பொருள் அல்ல. நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் நண்பரே நீ இயேசுவை அறியவில்லை என்றால் அறிந்துகொண்டு ஒரு கிறிஸ்தவனாயிருக்கப் பிரயாசப்படு. அப்பொழுது இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுவாய். ஒருவேளை நான் ஒரு பாரம்பரிய கிறிஸ்தவன் என்று நீ சொல்லுவாயானால், ஒரு உண்மைக் கிறிஸ்தவன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும் என்ற செய்தியை இப்போது கேட்டாய் எனவே நீ தாமதமின்றி மனந்திரும்பி தேவனோடு ஒப்புரவாகு. இயேசு கிறிஸ்துவின் அடிச்சுவடைப் பின்பற்றும் ஒரு கிறிஸ்தவனாக இருக்கப் பிரயாசப்படு. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

கேள்வி நேரம்

கிறிஸ்தவனாக இருப்பதற்கு வேதாகமம் போதிக்கும் வழி என்ன?

முதலாவது இயேசுவைக்குறித்து கேள்விப்படவேண்டும். ''விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோம.10:17). பின்பு, இயேசுவே தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்க வேண்டும் ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்.16:16). அதன்பின்பு பாவங்களுக்காக மனந்திரும்ப வேண்டும். ''பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' (அப்.2:38). பின்பு இயேசுவை அறிக்கையிட வேண்டும். ''**...இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று**

விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்'' (அப். 8:37,38).

''நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்க உபதேசம் பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்'' (மத். 28:19,20). இந்த ஐந்து படிகளை செய்து முடிப்பவர்களை கர்த்தர் இரட்சித்து தம்முடைய சபையிலே சேர்க்கிறார் (அப். 2:47). நீங்கள் ஒரு கிறிஸ்தவ சகோதரனாக, சகோதரியாக இப்பூமியில் ஜீவிக்க நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.